418

# கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்

சபா.ஜெயராசா

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 418

புத்தகத்தின் பெயர் : கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்

நூலாசிரியர் : சபா.ஜெயராசா

அனுமதிப்பத்திரம் : EPAB/02/18578

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இ
அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும்
ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பில
பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகம

2017 செப்டெம்பர் மாதம் 20
கல்வி அமைச்சு,"இசுருபாய" பத்தரமுல்ல.
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்

## EDUCATIONAL THEORIES AND ALTERNATIVE THOUGHTS

Class No:
Acc No 418

பேராசிரியர் சபா.ஜெயராசா

சேமமடு
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | கல்விக்கோட்பாடுகளும் மாற்றுச்சிந்தனைகளும் |
| நூலாசிரியர் | : | பேராசிரியர் சபா.ஜெயராசா © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பாண்டு | : | 1ம் பதிப்பு 2008, 2ம்(திருத்திய)பதிப்பு 2010, 3ம் மறுபதிப்பு 2016, 4ம் பதிப்பு 2018 |
| எழுத்து | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | x +154 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ.560.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை |
| சர்தேச நியம நூல் இலக்கம் | : | **ISBN 978-955-685-000-0** |
| கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை | : | **EPAB/02/18578** |

| | | |
|---|---|---|
| Title | : | KALVI KODPADUKALUM MATRU SINTHANAIKALUM |
| Author | : | Prof. Saba Jeyarasa © |
| Publisher | : | Stp. Pathmaseelan |
| Edition | : | 1st Edition:2008, 2nd(Recised) Edition 2010, 3rd Re-Edition 2016, 4th Edition2018 |
| Price | : | Rs.560.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai UG.50, People's Park, Colombo -11. Tel : 011-2472362, 2321905. |
| Printed by | : | Chemamadu Pathippakam, Tel : 0777 345 666, 071-2726778 mail : *chemamadu@yahoo.com* web : chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN -2011-09-01-101 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஆரம்பத்தில் இருந்து மனித சமுதாயத்தில் கல்வியும் வளர்ந்து வந்துள்ளது. மனிதராகப் பிறந்த ஒவ்வொரு ஜீவியும் கல்வி வளர்ச் சியின் பல்வேறு காலகட்டங்களிலும் தமக்குப் பொருத்தமானதைத் தேவையானதைக் கற்றுக்கொண்டே வந்துள்ளார்கள். கற்றல் என்பது மனிதரது இயல்பான பண்புகளில் ஒன்றானது. மனிதர்கள் தொடர்ந்து புதியவற்றைத் தேடியும் கண்டுபிடித்தும் கல்வியின் பல்பரிமாண விருத்திக்கும் சாதகமான தன்மைகளை உருவாக்கி வந்துள்ளார்கள்.

கல்விச் செயற்பாடு சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு, கருத்துநிலை மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்களில் மிகுந்த தாக்கம் செலுத்தத் தொடங்கின. குறிப்பாக நாடுகளின் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு வளர்ச்சியில் கல்விச்செயற்பாட்டின் பங்களிப்புக்கு பெரும் முக்கியத்துவம் வழங்கப்படும் நிலைமைகள் படிப்படியாக மேற்கிளம்பின. கல்வியின் நவீன செல்நெறிகள் மனிதாயப்பட்ட போக்குகளின் மற்றும் அவற்றின் செயல்தன்மை களின் உள்ளீடுகள் நிரம்பிய தளமாகவும் உருப்பெற்றன. இந்த நோக்கில் கல்வி பற்றிய சிந்தனைகளின் களம் மேலும் மேலும் விரிவும் ஆழமும் கண்டது, கண்டு வருகின்றது.

சமகாலத்தில் பாடசாலை மற்றும் உயர்கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள் கல்விசார் அறிவுத் தொகுதி யில் பெரும் மாற்றங்களை, பாய்ச்சல்களை உருவாக்கியுள்ளன. இன்று கல்விசார் அறிவுத்தொகுதி "கல்வியியல்" அறிவுத்தொகுதியாக கற்கைப் புலமாக வளர்ச்சியடைந்துள்ளது. சமூக அறிவியல், இயற்கை அறிவியல், மொழியியல் போன்ற பல்வேறு துறைசார்ந்த அறிவுத் தொகுதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாக கல்வியியல் அறிவுத் தொகுதியும் பெரும் பாய்ச்சலாக வளர்ச்சி கண்டுள்ளது.

இத்தகு பின்புலத்திலேயே கல்வி பற்றிய நவீன சிந்தனைகள் முகிழ்ந்துள்ளன. இவை மேலைத்தேசம், கீழைத்தேசம் சார்ந்து பல் வேறு சிந்தனைப் பள்ளிகளாக உருப்பெற்றுள்ளன. ஆனால் தேடுதல் மனித குலத்தின் பண்பு அது. தனது தொடர்ந்த தேடுதலில் எப்போதும் பின்வாங்குவதில்லை. இதன் பயனாக கல்வியியல் அறிவுத் தொகுதியும் பல்வேறு அறிவுத் தொகுதிகளுடன் ஊடாடி மேலும் வளர்ச்சி கண்டுள்ளன. வளர்ச்சி கண்டு வருகின்றன.

இதுவரை உலகின் பலபாகங்களில் இருந்தும் தத்துவார்த்த அடிப்படைகளை பல்வேறு ஆளுமைகள் விளக்கியுள்ளார்கள். இந்த விளக்கத்தின் விரிவாக்கத்தின் அடிப்படையில் கல்வியின் கருவூலங் கள் யாவும் சமூகம், மனிதர், இயற்கை பற்றிய விசாரணைகளாகவே நீட்சிப்பெற்றுள்ளன. இவை தொடர்ந்து மனித விடுதலை, சமூக மாற்றம் குறித்த தேடலுக்கும் வழிவகுத்துள்ளன. நாம் இத்தகு ஆளு மைகளை அவர்தம் சிந்தனைகளை, கோட்பாடுகளை, மாற்றுச் சிந்தனைகளை, தொடரும் உரையாடல்களை விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

இந்த நோக்கத்தின் காரணமாகவே "கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்" என்னும் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் கல்வியியல் அறிவுத்தொகுதியில் ஒரு புதுப்பரிமாணம் எனலாம். சுமார் 25 கல்விச் சிந்தனையாளர்களின் தத்துவார்த்தப் புலப்பாடுகள் தத்துவ விசாரணைகள் தொடருறு அறிவுச் சேகரமாக மையம் கொள்வதை இனங்காணலாம். பன்னாட்டுக் கல்விப் பரப்பில் கல்வியியல் தொடர்பான மரபுவழிக் கருத்துக்களையும் மாற்றுக் கருத் துக்களையும் நாம் இன்னும் ஆழமாக அறிந்து தெளிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது. இதன் பயனாகவே இந்நூல் வெளிவருகின்றது.

நாம் ஒரு தொடர் கற்றலை, விவாதத்தை, உரையாடலை நிகழ்த்த வேண்டுமானால் மிகக்குறைந்த கால அளவில் மிக அதிகமான தத்துவச் சிந்தனைகளைக் கடந்து வரவேண்டி உள்ளது. பிளேட்டோ, ரூசோ....., மார்க்ஸ்....., புறூனர்....., பூக்கோ, லியாதார்த்... போன்ற ஆளுமைகள் சார்ந்து நாம் இயங்கும் போது தான் "கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்" என்னும் பொருட்பரப்பில் ஆழமான கற்றலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடலை நிகழ்த்த முடியும். ஆகவே தமிழில் இது போன்ற நூல் தமிழ்ச்சிந்தனை மரபின் கோட்பாட்டு உறுதிப்பாடுகளையும் மதிப்பீட்டுப் பெருக்கங்களையும் உருவாக்கித் தரும் ஒரு செயல்தளமாகவும் நகர்கின்றது.

ஆக இத்தகு செயல்தளத்தை பேராசிரியர் சபா.ஜெயராசா தமிழில் எடுத்துத் தந்துள்ளார். அவருக்கேயுரித்தான மொழிநடையில் அறிவுத் தேட்டங்களை சமூகப்படுத்தலுக்கு இட்டுச் செல்லும் பாங்கில் நூலை எழுதியுள்ளார். இதன்மூலம் பல்வேறு புதிய எண் ணக்கருக்களை கருத்தாடல் செய்ய முற்படுகின்றார். நவீனத்துவம், பின்னவீனத்துவம் சார்ந்த சிந்தனைகளை அடியொற்றி மேலைத் தேசத்தில் வளம்பெறத் தொடங்கிய சொற்களஞ்சியம் தமிழிலும் வரவு கொள்ளத் தொடங்க இந்த நூல் மூலம் புதுத்தடம் அமைக்கின்றார்.

நாம் வழமைபோல் இந்த நூலுக்கும் எமது ஆதரவை வழங்கி பேராசிரியரது முயற்சி தேடல் தொடர பக்கபலமாக இருப்போம். இது எமது கடமை ஆகும்.

சேமமடு பொத்தகசாலையின் இணை நிறுவனமான · சேமமடு பதிப்பகம் துணிந்து இது போன்ற நூல்களை தமிழில் வெளியிட வந்தமைக்கு நாம் சேமமடுவை பாராட்டுவதுடன் தொடரும் அவர்களது முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம்.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

உலகக் கல்விப் பரப்பிற் கல்வியியல் தொடர்பான மரபுவழிக் கருத்துக்களையும் மாற்றுக்கருத்துக்களையும் அறிந்துகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில் இந்நூலாக்கம் முகிழ்த்துள் ளது. இவ்வாறான ஒரு நூலின் தேவையைக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நண்பர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நண்பர் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களும் என்னிடத்துக் கூறியதுடன் ஆக்க முயற்சிக்குக் காணும் போதெல்லாம் ஊக்கம் தந்தனர். இந்நூலாக்கத்துக்கு வேண்டிய உசாவல் நூல்களை அவர்கள் தந்துதவியவேளை, தேசிய கல்வி நிறு வகத்திலிருந்து மேலும் பல நூல்களை நண்பர் கலாநிதி உலகநாதர் நவரத்தினம் அவர்களும், கல்வி அமைச்சிலிருந்து நண்பர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களும் தேடிவந்து தந்தனர். இந்நண் பர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். கல்வியியலில் மாற்றுச் சிந்தனைகளின் தேவையை நூல் வடிவிலே தரும்படி வேண்டிக் கொண்ட நண்பரும் "கூடம்", "அகவிழி", "ஓலை" ஆகிய மூன்று சஞ்சிகைகளின் ஆசிரியருமாகிய தெ.மதுசூதனன் அவர்கள் உற்சாகம் தரும் நண்பராகி இயங்கிக் கொண்டிருத்தலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இத்துறையில் வளமான ஊக்கலைத் தந்துகொண்டிருக்கும் நண்பரும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபருமாகிய கலாநிதி த.முத்துக்குமாரசாமி அவர்களும் மிக்க நன்றிக்குரியவர். இந்நூலை வெளியிடும் சேமமடு வெளியீட்டு நிறுவனத்தினர் நன்றிக்குரியவர்கள்.

இந்த இரண்டாம் பதிப்பை மேலும் திருத்தங்களுடன் வெளியிடப்படுவதற்குரிய ஊக்கங்களைத் தந்த நண்பர்களுக்கு நன்றி.

**சபா .ஜெயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பதிப்புக்கான பதிப்புரை

சேமமடு பொத்தகசாலை தமிழ்நாட்டிலுள்ள தமிழ்மண் மற்றும் காந்தளகம் பதிப்பகத்தார்களுடன் இணைந்து அங்கு நூல்களை வெளியிட்டுள்ளது. 1842இல் சந்திரசேகரபண்டிதர் மற்றும் சரவணமுத்துப்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட 58 ஆயிரம் அரிய சொற்களை கொண்ட "மானிப்பாய் அகராதி" என்னும் "யாழ்ப்பாண அகராதி" பொக்கிசத்தை 2005ஆம் ஆண்டு மீள் பதிப்புச் செய்து தமிழ்கூறும் நல்உலகுக்கு அர்ப்பணித்தோம். அத்துடன் தமிழ் நூல்களை விநியோகம் விற்பனை மற்றும் ஏற்றுமதி, இறக் குமதி மூலமும் நாம் எமக்கென்று ஓர் தனித்துவமான பாதையில் இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

தற்பொழுது நாம் சேமமடு பதிப்பகம் மூலம் ஈழத்திலேயே பல்வேறு அறிவுத்துறை சார்ந்த நூல்களை வெளியிட தீர்மானித்துள்ளோம். அந்த முயற்சியில் தீவிரமாகவும் இறங்கிவிட்டோம். பல்வேறு அறிவுத்துறைகளை தமிழுக்கு கொண்டு வருவதன் மூலம் மேலும் தமிழை வளம்படுத்தும் சிறு முயற்சியில் எமக்கான பங்களிப்பை வழங்குகின்றோம்.

அகவிழி குழுவினரது ஒத்துழைப்புடனும் கல்வித்துறைசார் பெருந் தகைகளின் ஆசிகள், அறிவுரைகள் மற்றும் ஆதரவுடனும் இந்த வெளியீட்டு முயற்சியில் துணிந்து இறங்கி உள்ளோம். எமது தொடர் வெளியீடுகளுக்கு வாசகர்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

நன்றி

113, சேமமடு
பத்மகிரி
வவுனியா

சதபூ.பத்மசீலன்
சேமமடு பொத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பதிப்புரை

சேமமடு பொத்தகசாலை தனது துணை நிறுவனமான சேமமடு பதிப்பகத்தை ஆரம்பித்து தனது முதல் வெளியீடாக பேராசிரியர் சபா.ஜெயராசா எழுதிய "கல்விக்கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்" என்னும் நூலை வெளியிட்டு தமிழ் பதிப்புலகில் மெதுமெதுவாக காலடி எடுத்து வைத்தது. இன்று பேராசிரியரது பதினேழு நூல்களை எமது பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளோம்.

தற்போது "கல்விக்கோட்பாடுகளும் மாற்றுச்சிந்தனைகளும்" எனும் நூல் விரிவுபட்ட இரண்டாம் பதிப்பாக நாம் வெளியிடுவதை யிட்டு பெருமிதம் கொள்கின்றோம். எமது வெளியீடுகளுக்கு கல்விச் சமூகத்தில் பரவலான வரவேற்பு இருப்பதையிட்டு அகமகிழ்வு கொள்கின்றோம். அதேநேரம் நூல் வெளியீடுகளுக்கும் அவற்றை வாங்கும் மனோபாவத்திற்கும் இடையில் சிக்கல்களும் முரண்பாடு களும் உள்ளன என்பதை நாம் அறிவோம். இருப்பினும் சமூக தேவை கருதி காத்திரமான அடிப்படை நூல்களை தமிழில் கொண்டுவர வேண்டுமென்ற விருப்புறுதியினாலேயே இந்த வெளியீட்டுப் பணியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

கடந்த 30 மாதங்களில் நாம் மெதுமெதுவாக நகர்ந்து "கலைத்திட்ட மாதிரிகள்" எனும் நூலுடன் எழுபத்தைந்து நூல்களை பூர்த்தி செய்துள்ளோம். தற்போது எமது முதல் நூலின் இரண்டாம் பதிப்பை குறுகிய காலத்தில் வெளியிடுகின்றோம். இதன்மூலம் ஒரு பதிப்பகம் என்ற நோக்கில் இவை எமது வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அனைத்துக்கும் மேலாக எமது வெளியீடுகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் நல்லுள்ளங்களை இந்தத் தருணத்தில் நினைத்துப் பார்ப்பதும் அவர்களுக்கு நன்றி கூறுவதும் எமது கடமையாகும். இந்நூலாசிரியர் தமது நூல்களை எம்மூலம் பதிப்பித்து வெளியிட எம்மோடு தொடர்ந்து ஒத்துழைத்து வருபவர். அந்தவகையில் இந்த இடத்தில் நூலாசிரியருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வழமைபோல் வாசகர்கள் மீது நம்பிக்கை கொண்டு எமது நூலாக்கப் பணியில் தொடர்ந்து இயங்குகின்றோம்.

*113*, சேமமடு
பத்மகிரி
வவுனியா

சதபூ.பத்மசீலன்
சேமமடு பொத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| (1) | பிளேட்டோ | (427-347BC) | 01 |
| (2) | ரூசோ | (1712-1778) | 07 |
| (3) | புரோபல் | (1782-1852) | 14 |
| (4) | மார்க்ஸ் | (1818-1883) | 20 |
| (5) | ஜோன் டுயி | (1859-1952) | 27 |
| (6) | ஐசாக்ஸ் | (1885-1948) | 33 |
| (7) | வைகோட்சி | (1896-1934) | 37 |
| (8) | ரொஜர்ஸ் | (1902-1987) | 42 |
| (9) | ஏ.எஸ்.நீல் | (1883-1973) | 48 |
| (10) | ஹரோல்டு றக் | (1886-1960) | 54 |
| (11) | ஹேர்பட் றீட் | (1893-1968) | 59 |
| (12) | ரெயிலர் | (1902-1994) | 64 |
| (13) | ஸ்கின்னர் | (1904-1990) | 69 |
| (14) | புளூம் | (1913-1999) | 75 |
| (15) | புறூனர் | (1915) | 80 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (16) | கிளார்க் கேர் | (1911) | 85 |
| (17) | லியோதார்த் | (1924-1998) | 90 |
| (18) | மிசேல் பூக்கோ | (1926-1984) | 95 |
| (19) | போலோ பிறேறி | (1921-1997) | 101 |
| (20) | இவான் இலிச் | (1926-2002) | 106 |
| (21) | செய்மோர் சராசன் | (1919) | 112 |
| (22) | மிசேல் டபிள்யு அப்பிள் | (1942) | 117 |
| (23) | ஹென்றி கிறொக்ஸ் | (1943) | 122 |
| (24) | லொடோவின் பேட் | (1883-1971) | 129 |
| (25) | குழந்தைக்கல்விச் சிந்தனைகள் | | 135 |
| (26) | ஆறுமுக நாவலரதும் விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள் | | 142 |
| (27) | மீட்புக்குரிய கல்விக் கோட்பாடு | | 149 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளேட்டோவும் இலட்சியக் கருத்தியலும்
## (PLATO) (427-347BC)



"பொருளுலகம்" "கருத்துலகம்" என்பவற்றில் கருத்துலகமே முந்தியதும் முதன்மையானதுமென பிளேட்டோ விளக்கினார். பொருள்களுக்குக் காலவரையறை உண்டு. ஆனால் மூலக்கருத்துக் கள் (EIDOS - IDEAS) காலங்கடந்தவை. அவை ஆதியும் அந்தமுமற்றவை. பொருள்கள் பூரணத்து வமற்றவை. ஆனால் மூலக்கருத்துக்கள் முழு நிறைவானவை. மூலக்கருத்துக்களின் முழுமையில் உண்மையும் அழகும் நன்மையும் உன்னத நிலையிலும் சந்திப்பை நிகழ்த்துகின்றன என்பது இலட்சியவாதம். இது எண்ண முதல்வாதம் என்றும் குறிப்பிடப்படும்.

எதென்ஸ் நாட்டுச் செல்வந்தக் குடும்பத்திற் பிறந்த பிளேட்டோ தத்துவஞான சேக்கிரதீசரின் இலட்சியவாதச் சிந்தனைகளுக்கும் வினாவிடை தழுவிய அறிவுத்தேடல்களுக்கும் உட்பட்டு ஆசிரியராகவும் ஆய்வாளராகவும், அக்கடமியா கல்வி நிறுவனத்தை ஆக்கி வழிநடத்துனராகவும் எண்பது ஆண்டுகள் வரை வாழ்ந்தார். அவர் உருவாக்கிய மெய்யியற் சமுதாயத்தில் அரிஸ்டோட்டிலும் ஒரு மாணவராக இருந்தார். அறிவுத் தேடலும், நியாயித்து விடைகள் காணுதலும், கருத்தாடல் நிகழ்த்துதலும், மெய்ப்பொருளைத் தேடலும் நிறுவனமயப்பட்ட கல்வியை வழங்குதலும் பிளேட்டோவின் கல்விசார் நடவடிக்கைகளாக அமைந்தன.

தூய்மையானதும் நற்பேறு கொண்டதுமான உள்ளம் என்ற உடற்கூறினை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர். தவறான வளர்ப்பு முறைகளாலும், அணுகுமுறைகளாலும் அதனை மாசுபடுத்தி சிதைத்துவிடக்கூடாது. பிளேட்டோ கட்டமைக்க முயன்ற இலட்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசைக் கொண்டு நடத்துவதற்குரிய "மெய்யியல் அரசர்களை" (Philosopher Kings) அல்லது ஆட்சிப் பாதுகாவலர்களைக் கல்வியால் உருவாக்க முயன்றார். தருக்கவியலை அல்லது மெய்யியலைக் கற்பதற்கு முன்னதாக ஆட்சியாளர்கள் பத்து ஆண்டுகள் வரை கணிதவியலைக் கற்றல் வேண்டுமென தாம் எழுதிய "குடியரசு" என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். தமது கல்வி நிலையமாகிய அக்கடமியாவின் நுழைவாயிலில் "கேத்திர கணிதம் அறிதார் உள்ளே நுழை யாதிருப்பாராக" என்ற வாசகத்தைப் பொறித்தமை தருக்க சிந்தனைக்கு அவர் அளித்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. மெய்யியல் மேம்பாட்டுக்குரிய அருவமான நியாயித்தலைக் கணித அறிவு கையளிக்கின்றது. உண்மையைத் தேட அது கருவியாகின்றது.

உடற்பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி முதலியனவற்றுக்கும் அவரது கல்விச் சிந்தனைகளில் முக்கியத்துவம் தரப்பட்டன. "உறுதியான உடலும் உறுதியான உள்ளமும்" என்ற கோட்பாடு மீள வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்வியை வாழ்க்கை முழுவதும் தொடரும் செயல் முறையாகக் கருதினார். குழந்தை கருவாகியிருக்கும் பொழுதே தாயால் நுகர்ச்சி செய்யப்படும் இன்னிசை குழந்தைக்கு ஊட்டமாக அமைதலைக் குறிப்பிட்டார். இசை, கட்டட நிர்மாணம் முதலியவை கற்போரிடத்தே இங்கிதமான மனப்பதிவுகளை ஏற்படுத்தும். அழகிய சூழல் மனத்தின் மேம்பாட்டுக்குரிய பொருத்தமான தூண்டியாக அமைகின்றது. உளவிருத்தியே கல்வியின் உன்னதமான நோக்கமாகின்றது.

மனிதரிடத்தே பூரணத்துவத்தை ஏற்படுத்தவல்ல உடற்பயிற்சிகளை வழங்குதல், உளப்பயிற்சிகளை வழங்குதல், இசைப்பயிற்சிகளை வழங்குதல் முதலியவற்றை முக்கியத்துவப்படுத்துகின்றார்.

அவரது ஆரம்பகாலச் சிந்தனைகளில் வர்க்க சார்பான கல்விக்கே முக்கியத்துவம் வழங்கினார். சமூக ஏறுநிரல் அமைப்பை ஏற்றுக்கொண்டார். வெவ்வேறுபட்ட மனிதர்கள் சமூகத்தில் வெவ்வேறுபட்ட பணிகளைச் செய்ய வேண்டியுள்ளனர். அதனால் அவர்களுக்கு வேறுவேறு விதமான வகையிலே கல்வியளிக்கப்படல் வேண்டும். ஒவ்வொருவரும் வேறுபட்ட "உலோக வடிவில்" ஆக்கப்படு-கின்றனர். தங்க நிலைப்பட்டோர் அரசை நிர்வகிக்கும் ஆற்றலுடை-யோராகின்றனர். வெள்ளிநிலைப்பட்டோர் வர்த்தகத்துக்கும் இராணுவச் செயற்பாடுகளுக்கும் பொருத்தமானவர்கள். இரும்பு நிலைப்பட்டோர் தொழிலாளர்களாகவும் விவசாயிகளாகவும் தொழிற்பட வல்லவர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு விதமான கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதல் வேண்டும். ஆனால் ஆட்சி செய் வோருக்குரிய கல்வியே அதிக முக்கியமானது என்று "குடியரசு" நூலிலே குறிப்பிட்டவர், பிற்காலத்தில் தாம் எழுதிய "சட்டங்கள்" என்ற நூலிலே முன்னைய கருத்துக்களை மாற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஏழுவயதுக்கும் இருபது வயதுக்கும் உட்பட்ட அனைவருக்கும் கல்வி வழங்கப்படல் வேண்டும். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு-வருக்கும் தேர்வு நடத்தி அதிற் சித்தியெய்தத் தவறியவர்களை வெவ்-வேறு தொழில்களுக்குமுரிய வேலையாட்களாக அனுப்புதல் வேண் டும். சித்தியடைபவர்களை இராணுவப் பயிற்சிக்கு அனுப்பி சிலகாலம் கல்வி வழங்குதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் தேர்வில் சித்தியடைபவர்கள் அரச நிர்வாகத்திலே இணைவதற்கு அனுப்பப்படுவார்கள். ஏனையோர் தொடர்ந்து இராணுவத்திலே பணியாற்ற விடப்படுவார்கள். அரச நிர்வாகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து கல்வி வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து அவர்கள் நிர்வாகிகளாக உயர்த்தப்படுவார்கள். ஆட்சியாளராகத் தெரிவு செய்யப்பட்ட இவ்வகுப்பினர் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து கற்றுக்கொண்டேயிருத்தல் வேண்டும். போது மான அளவு உள ஆற்றல் காணப்படுமிடத்து பெண்களுக்கும் ஆண் களுக்குமுரிய கல்வியை வழங்க முடியும் என்று கூறியதன் மூலம் அக்காலத்திலே புரட்சிகரமான கல்விச் சிந்தனையாளராகவும் அவர் மதிக்கப்பட்டார்.

தமது நண்பரும் ஆசிரியருமான சோக்கிரதீசின் இலட்சியவாதச் சிந்தனைகள் பிளேட்டோவிடத்துச் செல்வாக்குகளை ஏற்படுத்தின. அறிவுத்தேடல் என்பது வினாக்களுடன் ஆரம்பிக்கின்றது. வினாக்கள் வாயிலாகத் தகவல்களைப் பரிமாற்றம் செய்தல் முக்கியமன்று ஒவ்வொருவரும் தம்முள்ளே உண்மையைத் தரிசித்துக்கொள்ளலே முக்கியமாக்கப்படுகின்றது. தன்னுணர்வை ஏற்படுத்துதல் தன்னைத்-தானே அறிந்துகொள்ளல் அங்கே மேலெழச் செய்யப்படுகின்றது. கற்றல் என்பது உண்மையைத் தேடிப் பயணித்தலாகின்றது. பிளேட்டோவின் கல்விச்சிந்தனைகளும் சோக்கிரதீசின் சிந்தனைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக காணப்படுகின்றன. சோக்கிரதீசை பிளேட்டோவின் எழுத்தாக்கங்கள் வாயிலாகவே தரிசிக்க வேண்டியுள்ளது.

பிளேட்டோவின் உரையாடல் எழுத்தாக்கங்களிலே காணப்படும் கருத்துக்கள் சோக்கிரதீசினுடையவையா அல்லது பிளேட்டோவினுடையதா அல்லது இருவரதும் ஆக்கங்களா என்ற வினாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களிடத்து எழுந்துள்ளன. பேராசிரியர் பேர்னாட் அவர்கள் இது தொடர்பான கருத்துத் தெரிவிக்கையில் முன்னர் எழுதப்பட்ட உரையாடல்கள் சோக்கிரதீஸ் அவர்களுடையதென்றும் பிற்கால உரையாடல்கள் பிளேட்டோவுடையதென்றும் குறிப்பிட்டுள்ளார். சோக்கிரதீஸ் வாழ்ந்த காலத்தில் தனக்கு வாழக் கிடைத்த பெருமையை எண்ணி மகிழ்ச்சியடையும் பிளேட்டோ தனது ஆசிரியரது உரையாடல்களை ஒழுங்கு முறையிலே தொகுத்ததன் வாயிலாக ஒரு மாணவனின் செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாக அறிவுலகத்துக்கு எடுத்துக்காட்டினார். சோக்கிரதீசுக்கு வழங்கப்பட்ட தண்டனையி லிருந்து அவரைக் காப்பாற்றுவதற்கும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் சோக்கிரதீஸ் தண்டனையை அனுபவிக்கவே விரும்பினார்.

கொடுமைகூர் எதென்ஸ் நகரத்துச் சூழலின் அவலங்களை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற பிளேட்டோ எகிப்து, சிலி மற்றும் இத்தாலி முதலிய நாடுகளில் பன்னிரண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்து மீண்டும் தமது நகரத்துக்கு வந்தார்.

பிளேட்டோவின் சிந்தனைகளில் சோக்கிரதீஸ் செல்வாக்குச் செலுத்தியமை போன்று பர்மினிடிஸ் சிந்தனைகளும் ஊட்டம் விளைவித்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். அபிப்பிராயங்கள் சார்புநிலைக்கு உட்பட்டவை. இதனால் அவை மாறுபாடுகளுக்-குரியவை. இக்காரணத்தால் முரண்பாடுகள் தோன்றுகின்றன என்று பர்மினிடிஸ் குறிப்பிட்டார். உண்மை என்பது மாறாதது என்றும், நிரந்தரமானதென்றும், முரண்படாததென்றும் அவர் விளக்கினார். உண்மை உள்ளது என்றும் உண்மை அற்றது "இல்லாதது" என்றும் அவர் மேலும் தெளிவுபடுத்தினார். உண்மை, அழகு, அறிவு, வீரம், நாட்டுப்பற்று முதலியவை பிளேட்டோவின் உரையாடல்களில் மேலோங்கியிருந்தன. அவருடைய சமகாலத்தில் வாழ்ந்த சோபிஸ்டு களின் உரையாடல்களிலும் மேற்கூறிய பொருள்களே மேலோங்கியி ருந்தன.

பிளேட்டோவின் இலட்சியவாதச் சிந்தனைகளில் மேற்கூறிய உள்ளடக்கங்களே ஆட்சி செலுத்தின. இலட்சியவாதம் ஒருவித உலக மறுப்பிலிருந்து ஊற்றெடுக்கின்றது. உலகிலுள்ள பொருட்களை உலகியற்காரணிகளைக் கொண்டு விளக்க முடியாதென இலட்சிய வாதம் வரையறை செய்கின்றது. ஒவ்வொரு பொருளையும் விளங்கு வதற்கும் விளக்குவதற்கும் அப்பொருள்கள் பற்றிய பொதுவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கருத்தே" அடிப்படையாக விளங்குகின்றது. உதாரணமாக அழகு பற்றி ஒரு பொதுவான கருத்து மக்களிடம் உள்ளது. அதனை அறிந்திருப்பதன் வாயிலாகவே குறித்த ஒரு பொருளை அழகு என்று குறிப்பிடுகின்றனர்.

தமது கருத்துக்களை விளக்கிய பிளேட்டோ இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். அவற்றுள் "குடியரசு", "சட்டங்கள்" முதலிய நூல்களிலே கல்வி தொடர்பான கருத்துக்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. கற்றல் என்பது மகிழ்ச்சியான செயற்பாடாக இருக்க வேண்டுமே, ஒறுத்தற் செயற்பாடாக இருத்தலாகாது எனக் குறிப்பிட்ட பிளேட்டோ, ஆண், பெண் இருபாலாரும் ஒன்றி ணைந்து கற்கும் "கூட்டுக் கற்றலை" வலியுறுத்தினார். பாடசாலை கள் உளம் சார்ந்த உடற்கலை அரங்காக (Mental Gymnasium) இருத் தல் வேண்டும் என்றும், நுண்மணிசார்ந்த விளையாட்டுக்களமாக (Intellectual Play Ground) இருத்தல் சிறப்புடையதென்றும் குறித்துரைத்தார். "உடல் நோய் என்பது அறியாமையினால் தோற்றம் பெறுகின்றது" என்றும், அறியாமை ஒழிக்கப்படும் பொழுது உடலின் நோய் நீங்கி உறுதியும் வலுவும் பெறும் என்பதும் அவரின் முன்மொழிவாக அமைந்தது.

பிளேட்டோவின் சிந்தனைகள் அழகியற்கல்வி தொடர்பான வீச்சுக்களையும் கொண்டிருந்தன. அழகு என்பது உள்ளத்தையே அடிப்படையாகக் கொண்டது. (Fundamentally Mental) என்பது அவரது கருத்து. கலையாக்கங்களை வடிவங்கள் (Forms) என்று குறிப்பிட்டு அவை என்றும் நிலைத்துள்ள யதார்த்தங்களின் **"தாழ்ந்த நிலைப் பிரதி"**களாகவும், **"பிரதிகளின் பிரதிகளாகவும்"** அமைதலை வெளிப்படுத்தினார். உண்மையை விட்டுவிலகிய பிரதிகளாக அவை அமைந்து விடுகின்றன. நாடகக் கவிதைகள் மனிதரின் மனவெழுச்சிக ளுடன் கலந்து அவர்களை மாசுபடுத்தி விடுவதாகவும் வலியுறுத்தி னார். மனிதரின் நாளாந்த அனுபவங்கள் நிழல்களிலும் பார்க்க மேம்பட்டதல்ல. யதார்த்தம் என்பது அவற்றால் எட்டப்பட முடியாத மேலான நிலையில் உள்ளது. தமது புலன்களாற் காட்சிகொள்ளப் படுபவற்றை மனிதர்கள் உண்மையென எண்ணுகின்றனர். ஆனால் அது மாற்றமடையக்கூடியது.

கலைகள் புலன் இன்பத்தையும் திரிபு நிலைகளையும் ஏற்படுத் துவதால் உண்மையைக் கண்டறிவதற்கு தடைகளாகவுள்ளன. கலைப்படைப்பை உருவாக்குபவர்கள் சமூக முன்னேற்றத்துக்கும் நல்லியல்பு கொண்ட சமூகத்துக்கும் தீங்கு செய்பவர்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர். இவ்வாறாக கலை இலக்கியக் கல்வியை மிகுந்த எச்சரிக்கையுடன் பிளேட்டோ நோக்கினார்.

பிளேட்டோவின் கல்வியில் ஆசிரியத்துவத்துக்கு மேலான இடமளிக்கப்படுகின்றது. ஆசிரியர் இருள் புலத்திலே ஒளியை ஏந்திச் செல்பவராக இருக்கின்றார். ஆசிரியர் வழிகாட்டியாக இருப்பதுடன் பொருண்மை கொண்ட வினாக்களை விடுப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒளிகாலும் வினாக்கள் அறியாமை இருளை ஊடறுத்துச் செல்லும்.

திறனாய்வு நோக்கில் பிளேட்டோவின் கல்விச் சிந்தனைகளை நோக்கும் பொழுது பின்வரும் மட்டுப்பாடுகளைக் குறிப்பிடலாம்.

(1) தொழிலாளி வர்க்கத்தினருக்கு சிறிதளவு கல்வியே போதும் என்று விதந்துரைத்தமை சமூக நீதியாகக் கொள்ளப்படத்தக்கது அன்று.

(2) ஒவ்வொரு பிரிவினருக்குமுரிய பொதுவான கல்வியை வலியுறுத்தினாரேயன்றி, விதம் விதமானதும் (Variety) பன்முகப் பாங்கானதுமான கல்விச்செயற்பாடுகள் பற்றிச் சிந்தித்திலர்.

(3) இலக்கியக் கல்வி பற்றிய எதிர்மறையான நோக்குகளே அவரிடத்து மேலோங்கியிருந்தது.

(4) கருத்துக்களுக்கு அதியுயர்ந்த முக்கியத்துவமளித்தவேளை, பொருள்சார் நிலைமைகளும், நடப்பியல் வாழ்வும் பின்னே தள்ளப்பட்டுவிட்டன.

(5) ஆசிரியரை நடுநாயகப்படுத்தும் கல்வியே அவரால் முன்மொழியப்பட்டுள்ளது.

(6) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் இவரது கல்வித் திட்டத்திலே புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

(7) கல்வியிலே சிறப்புத் தேர்ச்சிக்கு (Specialisation) போதுமான இடமளிக்கப்படவில்லை.

மேற்கூறிய மட்டுப்பாடுகள் அவரது கல்வித் திட்டத்திலே காணப்பட்டாலும், வரன்முறையான கல்வித்திட்டங்களை ஆய்வுக்கு எடுக்கும் பொழுதும், மெய்யியற் சிந்தனை வளர்ச்சியின் நீட்சியை நோக்கும் பொழுதும், பிளேட்டோ ஓர் ஆதார மனிதராகவே மேலெழுந்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூசோவும் இயற்பண்புக் கருத்தியலும்
## (JEAN JACQUES ) (1712-1778)



அறிவொளிக்காலத்தின் மேதகு சிந்தனைகளின் திரட்சியாக ரூசோவின் கருத்துக்கள் முற்குவிக்கப்படுகின்றன. ஜெனிவாவில் உள்ள கல்வினிஸ்டு என்ற இடத்தில் செல்வச் சூழலிலே பிறந்த ரூசோ இயற்கை நெறியினை அல்லது இயற்பண்புவாதத்தைக் கல்வியியலில் வரன்முறையாக விளக்கிய முன்னோடியாகக் கருதப்படுகின்றார்.

பாரம்பரியத்தாலும் சூழலாலும் மனித நடத்தைகள் பொறி-முறையாகத் தீர்மானிக்கப்படுதலை இயற்பண்புவாதம் வலியுறுத்து-கின்றது. மனிதரின் செயற்பாடுகளுக்கும் விலங்குகளின் செயற்பாடு-களுக்கும் ஒப்புமை காணுதல் இவ்வாதத்தின் தனித்துவமாகவுள்ளது. இயற்பண்புவாதம் ரூசோவிடத்து முகிழ்த்தெழுவதற்கு ஐரோப்பா வின் அறிவுச் சூழலும் பண்பாட்டுச் சூழலும் பின்புலங்களாக அமைந்தன. சமய குருமாரின் மிகையான ஆதிக்கமும், செல்வந்தர் களின் தன்னிச்சையான போக்குகளும், தனிமனித உரிமைகளை ஒடுக்கலாயின. இந்நிலையில் அத்தகைய அழுத்தங்களுக்கு எதிர்ப்புக் குரல் எழுப்ப இயற்பண்புவாதம் வாய்ப்பளித்தது. இயற்கையோடு இசைந்து வாழவும், தமது பிரச்சினைகளைத் தாமே பேசி விட்டுக் கொடுக்கவும் வல்ல சிந்தனைகளை "சமூக ஒப்பந்தம்" என்ற நூலிலே ரூசோ வெளியிட்டார். அழுத்தமற்றதும் கட்டற்றதுமான சுதந்திர வெளிப்பாடு இயற்கைவாதத்துடன் ஒன்றிணைந்திருப்பதாக நம்பி னார். மனித சிந்தனைகள் நம்பகரமற்ற வகையிலும் தொழிற்படலாம். ஆனால் மனிதரின் இயற்கையான மனவெழுச்சிகள் நம்பகரமா னவை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்பண்புவாதத்தின் இன்னொரு பரிமாணம் "இயற்கையோடிணைந்த வாழ்க்கையே புனைவு" என்ற வகையில் அவர் எழுதிய "எமிலி" அமைந்தது.

எமிலி நாவல் (1762) இயற்பண்பை அடிப்படையாகக் கொண்ட விருத்தி உளவியற் கருத்துக்களை உள்ளடக்கியது. எமிலி நாவலையும், சமூக ஒப்பந்தத்தையும் எரித்துவிட வேண்டுமென அக்காலத்தைய சமய அடிப்படைவாதிகள் திரண்டெழுந்தனர். மிலேச்சத்தனமானது, சமூகஒழுங்கைக் குலைப்பது, கிறீஸ்தவ சமய நம்பிக்கைகளுக்குப் பாதகமானது - என்றவாறு சமய அடிப்படைவாதிகள் குரலெழுப்பினர். பரிஸ் நகர மேற்றி இராணியார் இக்கண்டனங்களை முதன்மைப்படுத்தினார். இதற்குப் பதிலளித்த ரூசோ, மனிதர் இயற்கையாக நல்லவர்கள் என்றும், அவர்கள் நீதியையும் ஒழுங்கையும் விரும்புபவர்கள் என்றும் சமூகமே மனிதர்களை மாசுபடுத்துகின்றது என்றும் விளக்கியுரைத்தார்.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக்கொண்டு சுவிற்சலாந்திலும் இங்கிலாந்திலும் வாழ்ந்து விட்டு 1770ஆம் ஆண்டில் மீண்டும் பரிசுக்கு மீண்டார். ஆனால் அவருடைய எழுத்தாக்கங்கள் தொடர்ந்தும் கண்டனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. தமது எழுத்தாக்கங்களால் எதிர்ப்பைச் சேர்த்துக்கொண்டவர்களில் ரூசோவுக்கு சிறப்பான இடமுண்டு.

இயற்கை வாதத்துடன் இணைந்த கற்பனையான கல்விப் பரிசோதனைகள் எமிலியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒருவர் எவ்வாறு சுதந்திரமாகவும் அதேவேளை அரச கட்டுப்பாடுகளுக்குக் கீழ்படிந்து நடப்பதற்குரிய இலக்குகளை அடிப்படைகளாகக் கொண்டும் அந்நூலாக்கம் இடம்பெற்றுள்ளது. அவர் வாழ்ந்த காலத்துப் பாடசாலைகளில் மாணவர்கள் மீது சுமத்தப்பட்ட வன்முறைகளின் எதிர்வினைஞராக மாறினார். அடக்குமுறைகளின் அழுத்தங்களுக்கு உட்பட்ட மாணவரை விடுவிக்க முயன்றார்.

அறிவு புலன்களினாலே திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாகக் கற்றலிலே புலன்களின் தொழிற்பாடுகளை முதன்மைப் படுத்தியதுடன், புலன்களைத் தூண்டக்கூடிய சூழல்களைக் கட்டமைப்புச் செய்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார். கட்டமைப்புச் செய்தல் வாயிலாகக் கற்றலையும், இயற்கை விஞ்ஞானத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலையும் முதன்மைப்படுத்தினார். சுரண்டலுக்கும் பறிப்புக்கும் உள்ளாகாத இயற்கைச் சூழலில் மாணவர்கள் வளரவிடப்படல் வேண்டும். சலிப்பூட்டும் வரண்ட பாடநூல் வழியே கற்கும் முறைமை மாணவரின் இயற்கையான வளர்ச்சிக்குப் பாதகமாக அமைகின்றது என விளக்கலானார்.

ரூசோவின் மனிதவிருத்தி உளவியற் கண்ணோட்டம் பின்வருமாறு கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

(1) இயற்கைக் காலம் 0 -12 வயதுவரை

(2) காரணங்காணற் காலம் 12 -15 வயதுவரை

(3) வலுவிசையெழுங் காலம் (Age offorce) 15-20 வயது வரை

(4) ஞானம் முகிழ்க்கும் காலம் 20-25 வயதுவரை

இவற்றைத் தொடர்ந்து வாழ்க்கையின் மகிழ்ச்சியான காலம் நீடிக்கும் என்றார்.

கற்பித்தல் மற்றும் கலைத்திட்டச் செயற்பாடுகளைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

(அ) பிறப்பு முதல் ஐந்து வயது வரையான குழந்தைப்பருவத்தில் உடலின் ஒவ்வோர் உறுப்பையும் வளப்படுத்தி மேம்படுத்துவதற்கான கல்விச் செயற்பாடுகளை வழங்குதல் வேண்டும். குழந்தையின் உடற்பலம் குன்றினால் உளப்பலமும் குன்றும். உடற்பலத்தை வலுப்படுத்தும் பொழுது குழந்தை பிழையான செயற்பாடுகளைச் செய்ய முயலாது. விளையாட்டுக்களிலே குழந்தைகளை ஈடுபடுத்தும் பொழுது வீணான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார். குழந்தைகளுக்கு முழுநிறைவான சுதந்திரத்தை வழங்கும்பொழுது அவர்கள் தமது இயல்பூக்கங்களை இயற்கையாகவே வளர்த்துக் கொள்வார்கள்.

(ஆ) குழந்தைப் பருவத்தை அடுத்து வருவது பிள்ளைப் பருவம் அல்லது வளர்குழந்தை (Child Hood) பருவம். இது ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரை நீட்சிகொள்ளும். உற்றுநோக்கலாலும் அனுபவங்களாலும் அவர்களின் புலன் உறுப்புக்களையும், உணர்வுகளையும் வளம்படுத்துதலே சிறந்த அணுகுமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பன்னிரண்டு வயதுமுதல் பதினைந்து வயதுவரை நிகழும் கட்டிளமைப்பருவத்தில் உடல், உள்ள வளர்ச்சி மேம்பட்டிருத்தலால் ஒழுங்கமைந்த கல்விச் செயற்பாடுகளை வழங்க முடியும். கற்றல், கடினவேலை, வழிகாட்டல் முதலியவற்றால் அவர்களது ஆளுமைப் பரிமாணங்களை வளர்த்தல் வேண்டும்.

(ஈ) பதினைந்து தொடக்கம் இருபது வயது வரை இளமைக் காலம் இடம்பெறுகின்றது. இப்பருவத்தில் மனவெழுச்சிகளையும் உறுபற்றுக்களையும் (Sentiments) வளர்க்க உதவுதலே சாலச் சிறந்தது. இப்பருவத்தில் எமிலிக்கு "இதயத்தை வழங்குதல் வேண்டும்" (Give him a Heart) என்று ரூசோ குறிப்பிட்டுள்ளார். இப்பருவத்தில் அறச் சிந்தனைகளையும், சமூகப் பண்புகளையும் வளர்க்கத் துணை நிற்றல் அவசியமாகின்றது.

(உ) இளமைப் பருவத்துக் கல்வியில் அறம், சமயம் முதலியவற்றுக்கு இடமளித்தல் வேண்டும். இப்பருவத்தில் நூற்கல்வியையும் விரிவுரை முறைகளையும் முதன்மைப்படுத்தலாம்.

எமிலிக்குரிய கல்வியை நூல்கள் வாயிலாக அன்றி அனுபவங்கள் வாயிலாக வழங்க முயன்றார். ஆயினும் "றொபின்சன் குறுசோ" நூலே எமிலிக்கு உகந்ததென விதந்துரைத்தார். நெட்டுருச் செய்து கற்றலை அவர் நிராகரித்தார். ரூசோவின் இயற்பண்புவாதக் கல்விக்கோட்பாடுகளின் சிறப்பியல்புகளைப் பின்வருமாறு தொகுத்துக்கூறலாம்.

(1) மாணவரை மத்தியாகக் கொண்டே அனைத்துக் கல்விச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

(2) வாழ்க்கைக்குத் தயாரித்தல் கல்வியன்று - வாழ்க்கையே கல்வியென வலியுறுத்தப்படுகின்றது.

(3) கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் உளவியல் மயமாக்கப்பட்டுள்ளன.

(4) மாணவரின் கட்டற்ற தெரிவுகளுக்கு இடமளிக்கப்படுகின்றது.

(5) நேரடி அனுபவங்கள் வாயிலாகக் கற்றல் முன்னுரிமைப்படுத்தப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) தம்மைத்தாமே ஆட்சி செய்யும் நடைமுறைகள் வழங்கப்படுகின்றன.

(7) கற்பித்தலில் விளையாட்டு முறைக்கு முன்னுரிமை தரப்படுகின்றது.

(8) மாணவரின் இயல்பான வளர்ச்சிக்கு இடமளிக்கப்படுகின்றது.

(9) எதிர்மறைக்கல்வி வலியுறுத்தப்பட்டுள்ளது. தகவல்களை உள்ளத்திலே அமுத்திவைக்காமல், புலன் உறுப்புக்களைப் பயன்படுத்தியும் உடலியக்கங்களைப் பயன்படுத்தியும் கற்றலே எதிர்மறைக் கல்வியாகின்றது.

(10) விளையாட்டுவழிக் கற்றலும், செயல்வழிக் கற்றலும் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

எமிலிக்குரிய கல்வி உலகச் செயற்பாடுகளால் மாசுபடுத்தப்படாததாக இருத்தல் வேண்டும். எமிலியின் துணைவியாகவிருக்கும் சோபிக்குரிய இயற்பண்பு நெறிதழுவிய கற்றல் பற்றியும் ரூசோ விளக்கியுள்ளார். ஆண் மற்றும் பெண் என்பவர்களுக்கு இயற்கையான கல்வியை வழங்கல் வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் துணையாகவும், அனுசரணையாகவும் இருத்தல் வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுவேறான கல்வியையே ரூசோவால் முன்மொழியப்பட்டுள்ளது.

எதிர்ப்புக்களின் மத்தியிலும் ரூசோவின் இயற்பண்புவாதச் சிந்தனைகள் பின்வரும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின.

(அ) உயர் வகுப்பினர் தமது பிள்ளைகளுக்கு இயற்கையாக தாய்ப்பாலூட்டத் தொடங்கினர்.

(ஆ) வெறுங்கால்களுடன் பிள்ளைகளைப் புற்றரைகளிலும், மணல்வெளிகளிலும் நடமாடவிட்டனர்.

(இ) சிலவகையான காய்கறிகளை வேகவைக்காது பச்சையாக உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தினர்.

(ஈ) சூரியக் குளிப்பை மேற்கொள்ளலாயினர்.

(உ) அனுபவவழிக்கற்றல், விளையாட்டு வழிக்கற்றல் முதலியவற்றைத் தமது சிறாருக்கு வழங்கலாயினர்.

(ஊ) முற்போக்குக் கல்விச் சிந்தனைகள் வளர்ச்சி பெறலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூசோவுக்கு முன்னரே தமிழ் மரபிலும் இந்திய மரபிலும் இயற் பண்புவாதச் சிந்தனைகள் நிலைபேறு கொண்டிருந்தன. மனிதவுடல் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டதென்ற கருத்து, ஐம்பூதங்களோடு இசைவு கொண்டு வாழப் பழக்குதல், பச்சிலை மருத்துவம், வன வாழ்க்கை, இயற்கைப் பொருள்களை நேரடியாக ஆடை அணி கலன்களாகப் பயன்படுத்துதல், ஆநிரை அனுபவங்கள், கருவளச்சிந் தனைகள், வளப்பெருக்கு (Ferlity) சடங்குகள் முதலியவை இயற் பண்புவாதத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தன.

ஐரோப்பிய மரபில் இயற்பண்புவாதம் கல்வியியலில் மட்டு மன்றி கலை இலக்கிய ஆக்கங்களிலும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. அதேவேளை ரூசோவின் எழுத்தாக்கங்களும் இயற்பண்புவாதமும் பின்வரும் கண்டனங்களை எதிர்நோக்குகின்றன.

(1) எமிலியிற் கூறப்பட்ட கருத்துக்கள் அதீத கற்பனைப் பாங்காக இருப்பதுடன் நடைமுறைக்கு அப்பாற்பட்டதாகவுமுள்ளது. உயர்ந்தோர் குழாத்தினரின் "காற்றிலே பறக்கும் இலட்சியமாகவே" அது அமைந்துள்ளன.

(2) இயற்பண்புக் கல்வியால் உருவாக்கப்படுபவர்கள் எதிர்காலத்தில் சீரிய இசைவாக்கமும் வல்லமையும் கொள்வார்கள் என்பதற்கு உறுதியில்லை.

(3) ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறு வேறான கல்வியை வழங்குதல் ஏற்புடையதுமல்ல - சமூகநீதியுமல்ல.

(4) இயற்கையோடு இணங்கிச் செல்லல் மற்றும் போராட்டம் செய்து இயற்கையை மாற்றியமைத்தல் என்ற இருவகைச் செயற்பாடு-களுக்குமிடையே இயற்பண்புவாதிகள் தெளிவான வரையறை களைக் காட்டவில்லை.

(5) இயற்பண்புவாதத்தில் சமகாலத்துக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் எதிர்கால முன்னேற்றங்களுக்குத் தரப்படவில்லை.

(6) இவர்களால் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள இயல்பூக்கக் கோட்பாடு அண்மைக்காலமாகப் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. மக்டூகல் பதின்நான்கு வகையென இயல்பூக்கங்களை வரையறைப்படுத்தினார். அதேவேளை பேர்னாட் முந்நூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையென விளக்கினார். இந்நிலையில் இயல்பூக்கம் பற்றிய தெளிவற்ற போக்குக் காணப்படுகின்றது. "இயல்பூக்கம் என்று ஒன்றில்லை அனைத்தும் கற்கப்பட்டவையே" என்று டுயி குறிப்பிட்டார்.

(7) இயற்கையோடு கொள்ளும் இடைவினைகள் மற்றும் சமூகத் தோடு கொள்ளும் இடைவினைகள் முதலியவற்றால் மனித ஆக்கம் வளர்ச்சியடைகின்றது. ஆனால் இயற்பண்புவாதிகள் இயற்கையோடு கொள்ளும் இடைவினைகளையே முக்கியப் படுத்தியுள்ளனர்.

(8) மனிதரைப் பொறுத்தவரை சுயாதீனவிருத்தி (Free Development) என்று ஒன்றில்லை. அனைத்து விருத்திகளுக்கும் சமூக இருப்பே தளமாக அமைகின்றது. ஆனால் இயற்பண்புவாதிகளின் சுயாதீன விருத்தி வற்புறுத்தல் ஒருதலைப்பட்சமான கோட்பாடாகவே அமைகின்றது.

(9) இயற்கைக்கு அடிபணிந்து போக மாணவர்கள் பழக்கப்படும் பொழுது, இயற்கைக்கு எதிரான போராட்டம் வலுவிழந்து விடுகின்றது.

(10) மனிதரை மிருகங்களுக்கு "அண்மையில்" வைத்து நோக்குதல் இயற்பண்புவாதத்தின் அடிப்படைப் பலவீனமாகவுள்ளது.


மேற்கூறிய வரையறைகளை இயற்பண்புவாதம் தாங்கி நின்றா லும் அதன் பலமான பரிமாணங்கள் கல்வியியலுக்குரிய ஆற்றல்மிகு பங்களிப்புக்களாகவுள்ளன.

நவீன குழந்தைக் கல்விச் செயற்பாடுகளின் நுழைவாயில்களில் ரூசோவே நிற்கின்றார் என்பதும், கலைத்திட்டத்தில் மாணவரை நடுநாயகப்படுத்தலும், செயல்வழிக்கற்றலும், வளர்ச்சிப் படிநிலை களை அடியொற்றிக் கலைத்திட்ட அனுபவங்களைக் கட்டமைப்புச் செய்தலும் ரூசோவின் செல்வாக்கினை சுட்டிக் காட்டுகின்றன. தற்காலத்துச் சிறுவர் உரிமைச் சாசனங்களை வடிவமைப்பதற்குரிய கருத்தியல் முன்னோடியாகவும் ரூசோவே விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை நடுநாயகப்படுத்தும் கல்விக் கருத்தியலை வலியுறுத்திய புரோபல் (F.W.FROEBEL) (1782-1852)



புரோபலின் வாழ்க்கை குழந்தை நிலையிலேயே உளத்தாக்கங்களுக்கு உள்ளானது. வயது ஒன்பது மாதமாக இருக்கும்பொழுதே தாயாரை இழந்துவிட்டார். தந்தையார் ஒரு லூதரியன் போதகர். மீண்டும் திருமணம் செய்து கொண்டார். வீட்டுப் பணியாளர்களாலும், வயது முதிர்ந்தோராலும் வளர்க்கப்பட்ட இவர், பெண்கள் பாடசாலையிலே ஆரம்பத்திற் பயின்றவேளை ஒழுங்கற்ற பெரும் குழப்பம் மிக்கவரும் என்ற பழிச்சொல்லுக்கும் ஆளானார். தமது தாய் மாமனாரோடு வளர்ந்து வந்த இவர் பதினொரு வயதளவில் ஆண்கள் பாடசாலையொன்றிலே சேர்ந்து கற்கத் தொடங்கினார். அப்பாடசாலை இவருக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் இன்னொரு புறம் மனமுறிவுகளையும் வழங்கியது. நடப்பு வாழ்க்கையோடு பாடசாலை இணங்கி இசைவுபடாதிருந்தமையே அதற்குக் காரணமாகும். இளமைக்காலத்து இந்த மனமுறிவே இவரது கல்விச் சிந்தனைகளுக்கு அடித்தளமிட்டது.

கல்வியில் இவர் பின்னடைவு கொண்டவராகவே பள்ளிக் கூடத்தினராலும், குடும்பத்தினராலும் இனங்காணப்பட்டார். இதனால் இவருக்கு உடனடியாகப் பல்கலைக்கழகக் கல்வி கிடைக்கப்பெற வில்லை. இரண்டாண்டுகள் இவர் முன்னேற்பாடான பயிற்சிகளில் ஈடுபட்டவேளை இயற்கையோடு இணைந்து வாழ்நாள் முழுவதும் சுகம்பெறும் இசைவை அறிந்து கொண்டார். இந்த இசைவும் மனிதர் களிடத்தே காணப்படாதிருக்கும் அவலத்தையும் இடைவெளியை யும் ஆழ்ந்து நோக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1799*ஆம் ஆண்டில் கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் ஜெனா பல்கலைக்கழகத்திலே கற்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட பண நெருக்கடி காரணமாக அவர் ஒன்பது வாரகாலம் பல்கலைக்கழக சிறையில் அடைக்கப்பட்டார். தாய், தந்தையர் உறவுகளையும் துண்டித்துக்கொள்ளும் நிபந்தனைக்கும் குடும்பத்தினரால் உள்ளாக்கப்பட்டதுடன், மூன் றாண்டுகாலமாக வனத்துறையில் நில அளவையாளராகவும், தோட்ட முகாமையாளராகவும் பணிபுரிந்தார்.

*23*ஆம் வயதில் தூரத்து உறவினர் ஒருவரின் துணையுடன் பிராங்போட் பல்கலைக்கழகத்திலே கட்டடக்கலைப் பயில்வுக்கெனச் சேர்ந்துகொண்டார். இக்காலகட்டத்தில் இவருக்கு பெஸ்ட லோயி அவர்களின் கல்வி நிறுவனத்துடன் தொடர்பு ஏற்பட்டு, அங்கே ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அங்கு காணப்பட்ட விளை யாட்டு முறைக்கல்வி அவரைக் கவர்ந்ததாயினும், அந்தக் கல்வி முறை முழு நிறைவற்றதெனவும் உணர்ந்துகொண்டார்.

தொடர்ந்து கொட்டின்யென் பல்கலைக்கழகத்தில் மொழியை யும் இயற்கை விஞ்ஞானத்தையும் கற்பதற்குச் சேர்ந்தார். அங்கும் இருப்புக் கொள்ளாது பேராசிரியர் விஸ் என்பாரிடத்து இயற்கை வரலாறும் கனியவியலும் கற்பதற்காக பேர்லினுக்குச் சென்றார். புறோபலுடைய கருத்தாக்கங்களுக்குரிய அறிகை விசைகளை உருவாக்குவதிலே பேராசிரியர் விஸ் அவர்கள் பெரும் பங்காற்றினார்.

அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையாக ஒரு விதியே தொழிற் படுகின்றது. அந்த விதியே அனைத்து மேம்பாட்டு நடவடிக்கைகளுக் கும் அடிப்படையாக அமைகின்றது. என்ற கருத்தை அந்தப் பேராசி ரியர் வலியுறுத்தினார். அந்த விதியை புரோபல் **"இறை ஒன்றுபடல் விதி"** (Law of Divine Unity) என வடிவமைத்தார். இறை ஒன்றுபட லில் இருந்தே அனைத்தும் உருவெடுக்கின்றது. வளர்ச்சி பெறுகின்றது மீண்டும் அந்த இடத்தையே சென்றடைகின்றது.

பிரசியா பிரான்சோடு யுத்தப் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து இராணுவத்தில் இணைந்து கொண்ட புரோபல் மீண்டும் பேராசி ரியர் விஸ் அவர்களது கனியக்காட்சிச்சாலையில் சிறிதுகாலம் வேலை செய்த பின்னர், கல்வியியல் ஈடுபாட்டிலே முழுமையாக இணைந்து கொண்டார். வாழ்க்கையிலே இவருக்குக் கிடைத்த அவலங்களும்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No:
Acc No 418



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அலைச்சல்களும் இலட்சியங்ளைப் புடமிட்டுச் செல்லும் பட்டறிவை வழங்கின.

1816 ஆம் ஆண்டில் இவர் தமது மூதாதையரின் இல்லத்தில் "அனைத்துலக ஜேர்மன் கல்வி நிறுவகத்தை"த் துடக்கி வைத்தார். தொடக்கத்தில் ஐந்து மாணவருடன் ஆரம்பித்த அந்தக் கல்வி நிறுவகம் அறுபது மாணவர்களைக் கொண்டதாக வளர்ச்சி பெற்று வந்தவேளை பண நெருக்கடியாலும், அவரிடத்தில் காணப்பெற்ற முகாமைத்துவப் பின்னடைவுகளாலும், சூழலில் இருந்தோரின் எதிர்ப்புக்களாலும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஆயினும் அந்த நிறுவகத்தைப் பரிசீலனை செய்த அரசாங்கம் சாதகமான அறிக்கையை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் 1826ஆம் ஆண்டில் வெளியிட்ட **"மனிதருக்குரிய திகழ்கல்வி"** (The Education of Man) என்ற நூல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பொதுவான கல்விக்கோட்பாடுகள், குழந்தை விருத்தி பள்ளிக் கூடக் கற்பித்தல் முதலிய உள்ளடக்கங்களை அந்நூல் கொண்டுள் ளது. குழந்தையின் ஆரம்பகாலக்கல்வி மீது கவனக் குவிப்பை ஏற்படுத்தும் ஆழ்ந்து விரிந்த நோக்கு அதில் இடம் பெற்றுள்ளது. அருள்நிலைப்பட்ட மறைஞான மொழியிலும், குறியீட்டு ஆளுகை யிலும் அந்நூல் எழுதப்பெற்றுள்ளமையால் "விளங்கிக்கொள் வதற்குக் கடினமான நூல்" என்று கொள்ளப்படுகின்றது.

புறொபல் புரெட்டெஸ்தாந்து நெறியைச் சேர்ந்தவராக இருந்தமையால் இவரது கல்வி நடவடிக்கைகளுக்குக் கத்தோலிக்கர்கள் எதிர்ப்புக்காட்டினர். அந்நிலையில் இவர் ஜேர்மனியை விட்டு சுவிர்ச்சலாந்துக்கு இடம்பெயர்ந்து சென்றார். அங்கு இவருடைய கல்வி நிலையத்துக்கு வழங்கப்பட்ட மாளிகை கற்பித்தலுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது.

அந்த நெருக்குவாரத்துடன் தமது மனைவியாரின் உடல் நலக் குறைவு காரணமாகவும் இவர் மீண்டும் ஜேர்மனிக்கு வந்தார். அங்கு ஆரம்பித்த சிறுவர் பாடசாலைக்கு என்ன பெயர் வைப்பதென்று சிந்தித்தவேளை திடீரென இவர் மனத்திலே ஒரு பளிச்சீடு தோன்றியது. "சிறார் பூங்கா" (Kinder Garden) என்ற பெயர் பளிச்சீடு கொண்டது. முற்றிலும் உளவியல் சார்ந்த கற்பித்தல் முறைகள் அங்கே இடம்பெற்றன. விளையாட்டும் தொழிற்பாடுகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.



Class No
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமாகக் கற்றுக்கொள்ளல், தாமாகவே தொழிற்படுதல், தாமாகவே தம்மை வளர்த்துக் கொள்ளல் முதலான செயற்பாடுகள் அங்கே முன்னெடுக்கப்பட்டன. விளையாட்டின் வாயிலாகத் தொழிற்பாடு கொண்டு கற்கும் பொருட்கள் இவரால் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கு **"பரிசுகளும் தொழில்களும்"** (Gifts and Occupations) என்று பெயரிட்டார். பத்துப் பரிசுகள் இவரால் உருவாக் கப்பட்டன. மாணவரால் செயற்பாடு கொண்டு இயக்கத்தக்க சிறிய பொருட்களாக அவை அமைந்தன. ஆறு விதமான வண்ண நூற்பந்து கள், மரப்பந்துகள், சதுரக்கட்டைகள், செங்கட்டி வடிவ மரக்கட்டை கள், பல்வேறு வடிவங்களைக் கொண்ட சிறிய மரமேசைகள் முதலியவற்றினூடாகச் சிறாரின் அறிவையும், திறன்களையும் ஆற்றல்களையும் வளர்ப்பதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று கருதினார். சிறாரின் தொடர்ச்சியான நுண்மதி வளர்ச் சிக்கு இந்தப் பரிசுப் பொருட்கள் வரன்முறையான பங்களிப்பைச் செய்ய முடியுமென நம்பினார்.

"தொழில்கள்" என்று இவர் குறிப்பிட்டது, கைவினைக்குரிய பொருட்களால் மேற்கொள்ளபடக் கூடிய செயற்பாடுகளாகும். களிமண்ணாலான தொழிற்பாடுகள், காகித அட்டைகள் வாயிலான தொழிற்பாடுகள், மென்மையான மரத்தைச் செதுக்கும் தொழிற்பாடுகள், கடதாசி வேலைகள், நெய்தல், வரைதல் முதலியவை "தொழில்கள்" என்ற பிரிவில் அடக்கப்பட்டன.

1843ஆம் ஆண்டில் இவர் குழந்தைகளுக்கும், குழந்தை வளர்க் கும் தாய்மார் பாடுவதற்குமான இனிய பாடல்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். தமக்குக் கிடைத்த எதிர்ப்புக்களால் மன முடைந்து போன புரோபல், தமது குழந்தைக்கல்வி முன்னெடுப்புக் களை ஆண்களுக்குக் கூறுவதிலும் பார்க்கப் பெண்களுக்குக் கூறுதல் நலமுடையது என்று எண்ணினார். அதனைத் தொடர்ந்து குழந்தைக் கல்வியிலே பெண்களுக்குப் பயிற்சியளிக்கும் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளலானார். தமது செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக தமது மாணவியாகிய லுசிலெவின் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். புரோபல் சோசலிச நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார் என்ற தப்பெண்ணம் காரணமாக பிரசிய அரசு இவரால் உருவாக்கப்பட்ட சிறார் பள்ளிக்கூடங்களைத் தடைசெய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் உருவாக்கிய விருத்தி அல்லது மேம்பாடு தொடர்பான **"நித்திய விதியின்"** அடிப்படையில் இவர் சிறாரின் விடுதலை, தனித்துவம், தன்னிலைச் செயற்பாடுகள் முதலியவற்றை விளக்கினார். இவரது சிந்தனைகளில் கெகல், செலிங், கொமினியஸ், ரூசோ, பெஸ்டலோசி முதலானோரின் செல்வாக்குகள் ஊடுருவியிருந்தன. இவற்றின் தொடர்ச்சியாக ஜேர்மானிய எண்ணமுதல்வாத கருத்துக்களின் அடிப்படையிலேதான் புரோபலை விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

இவருடைய எண்ணமுதல்வாத (Idealism) குழந்தைக்கல்விச் சிந்தனைகள் ஜேர்மனியைக் கடந்து பிறநாடுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கின. அமெரிக்காவில் எலிசபெத்பேபொடி என்பவர் புரோபலின் சிந்தனைகளை அடியொற்றிய குழந்தைக் கல்விநிலையத்தை முதலில் நிறுவினார். குழந்தைகளைத் தோட்டத்திலே வளரும் பூஞ்செடிகளாகக் கருதிய புரோபல் அவர்கள் மீது தலையீடுகளை மேற்கொள்ளாது இயற்கையாகவும், சுதந்திரமாகவும் தொழிற்படவிடல் வேண்டுமென்று விதந்துரைத்த கருத்து பரவலான கவன ஈர்ப்பை உலகெங்கிலும் ஏற்படுத்தியது.

சிறாரின் வளர்ச்சியை இவர் இரண்டு பெருங்கட்டங்களாக வகுத்துக் கூறினார். அவை:

(1) முன் சிறார் நிலை (பிறப்பிலிருந்து எட்டு வயது வரை)

(2) அதனைத் தொடர்ந்து இடம்பெறும் கல்விப்பருவம் (Scholar Period) (எட்டுவயதுக்குப் பின்னர்)

முன்சிறார் நிலையிலே அவர்களின் நுண்மதி வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் என்பது புரோபலின் கருத்து. இப்பருவத்தில் அருவமாகக் கற்கும் செயற்பாடுகள் பெருமளவில் இடம்பெறாதிருக்கும் நிலை காணப்படும். பொருட்களுடன் இடைவினை கொண்டு இயங்கிச் சிறார் தமது நுண்மதியாற்றல்களை வளர்த்துக்கொள்வர்.

விளையாட்டுமுறைக் கற்பித்தலை இவர் தீவிரமாக வலியுறுத்தினார். நடப்பியல் உலகைச் சிறார் விளையாட்டுக்கள் வாயிலாகவே கற்றுக்கொள்ள முடியுமென்று துணிந்தார். தமது புலன்களால் அவர்கள் செயற்பாடு கொண்டு நடப்பியலை விளங்கிக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக்கே இவர் **"விளையாட்டு"** என்று பெயரிட்டார். காரணங் காணலைக் காட்டிலும் புலன்கள் வாயிலாகவே சிறார் அதிக அளவிலே கற்றுக்கொள்ளுகின்றனர். விளையாட்டின் வாயிலாகப் புறவுலகப் பொருள்களும் நிகழ்ச்சிகளும் சிறாரின் மனத்திலே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. விளையாட்டு என்பது இவர் முன்னர் குறித்த **"பரிசாகவும்", "தொழிலாகவும்"** அமைகின்றது. **"புறவுலகை விளங்கிக்கொள்ளும் கல்வி ஊடகம்"** என்ற வரைவிலக்கணம் இவரால் விளையாட்டுக்கு வழங்கப்பட்டது.

**"சிறாரை நடுநாயகப்படுத்தல்"** என்ற எண்ணக்கருவைக் கல்வியில் இவரே அறிமுகப்படுத்தினார். இவர் எழுதிய **"மனிதருக் குரிய திகழ்கல்வி"** என்ற நூலில் இந்த எண்ணக்கரு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறார் நிலையில் நுண்மதித் தொழிற்பாடு கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதனால் இவ்வாறு சிறாரைக் குவியப்படுத்திக் கல்வி ஒழுங்கமைக்கப்படல் வேண்டு மென்று கருதினார். சிறாரை நடுநாயகப்படுத்தலுக்கு (Child Centredness) அவர் இன்னொரு விளக்கத்தையும் கொடுத்தார். **சிறார் தமது வாழ்க்கையையும், தம்மையும் தொடர்புபடுத்தியே அனைத்துப் பொருட்களையும் காட்சிகொள்வதால்** சிறாரை நடு நாயகப்படுத்திக் கற்பிக்க வேண்டிய தேவை எழுவதாகக் குறிப்பிட் டார். அதாவது, அனைத்துக்கும் சிறார் தம்மையே அளவுகோலாகக் கொள்ளல் குறிப்பிடத்தக்கது.

சிறாருக்கு மகிழ்ச்சியான உலகைக் காட்டும் பூங்காவை அமைத்தமை இவர் தந்த மிகப் பெரிய பங்களிப்பு" என கில் பற்றிக் ஒரு சமயம் புரோபலுக்குப் புகழாரம் சூட்டினார். **"சிறுவருக்காக வாழ்வதற்கு அவர் மீண்டும் பிறக்க வேண்டும்"** என்ற வாசகமும் எழுதப்பட்டுள்ளது. சிறார் கல்வியை ஒடுக்குமுறைகளில் இருந்து விடுவிப்பதற்குரிய அவரது நடப்பியல் அணுகுமுறையாக "சிறுவர் பூங்கா" அமைந்தது. "சிறுவர் பூங்காவுக்குரிய ஆசிரியம்" (Pedagogy of the Kinder Garden) என்ற இவரது நூல் இக்கருத்தை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ல் மார்க்சும் பொதுவுடமைக் கருத்தியலும்
## (KARL MARX) (1818-1883)



நவீன கல்வியாக்கங்களிலும், உளவியல் நோக்குகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மார்க்சியக் கருத்துக்கள் செல்வாக்கு விசைகளை ஏற்படுத்தி வருகின்றன. பறிப்பையும் வறுமையையும் இல்லாதொழிக்காது அவற்றை விளக்குவதிலே பயனில்லை. உலகிற் காலங்காலமாக வளர்ச்சி பெற்று வந்த அறிகையும் மெய்யியலும் நியதிகளை விளக்கமுயன்றன-வேயன்றி அவற்றை மாற்றியமைக்க முயலவில்லை. சமூக இருப்பை விளக்குவதோடு நின்றுவிடாது அதனை மாற்றியமைக்கும் தருக்கச் செயற்பாடுகளைக் கார்ல்மார்க்ஸ் குவியப் படுத்தினார். இதுவே அவரது மெய்யியலின் தனித்துவத்தை மேலும் வளம்படுத்தி வலுவூட்டி நிற்கின்றது.

கல்வியால் சமூகத்தை மாற்றியமைத்துவிடலாம் என்ற இலட்சிய மிதப்பின் மாயையில் இருந்து விடுபடுவதற்கு மார்க்சின் சிந்தனை கள் விசையும் வலுவும் வழங்குகின்றன. கல்வி, பண்பாடு போன்ற துணைக்காரணிகளை மாற்றியமைப்பதாற் பயனில்லை. சமூக அடி ஆதாரத்தை மாற்றியமைக்கும் பொழுதுதான் அதன் மேலமைந்த அனைத்தும் மாற்றம்பெறும் என்பது மார்க்சின் தருக்கமாக அமைந் தது. உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமையானவர்கள் தமக்கு ஊறு வராத கல்வி நடவடிக்கைகளையே புடமிட்டுப் புதுப்பித்துக்கொண் டிருப்பார்கள் என்ற நடப்பியலை விளங்கிக்கொள்ள முடியாதவிடத்து பறிப்புக்கு உள்ளாகும் மக்களுக்குரிய கல்வியைக் கட்டியெழுப்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்ல் மார்க்ஸ் பயன்படுத்திய ஆய்வுமுறை அல்லது தருக்கம் இயங்கியற் பொருள் முதல்வாதம் (Dialectical Materialism) முரண்பாடுகளின் எதிர் எதிர் இயக்கமும் அவற்றின் இணக்கமும் இயக்கமும் இயங்கியலில் நோக்கப்படுகின்றன. முரண்பாடுகள் இயற்கையிலும் சமூகத்திலும் எங்கும் நிறைந்து சர்வ வியாபகமாகவுள்ளன. மூச்சு இழுத்தலும், விடுதலும், குருதியின் நேரோட்டமும் எதிரோட் டமும் மனித உடலில் உள்ளமைந்த முரண்பாட்டுக்கு சில எடுத்துக் காட்டுகள். பொறியியலில் தாக்கமும் எதிர்த்தாக்கமும் முரண்பாடு களாகின்றன. கல்வியியலில் அறிவும் அறியாமையும் முரண்பாடுகளா கின்றன. கணிப்பீட்டில் நேர்க்கணியமும் எதிர்க்கணியமும் முரண்பாடுகளாகின்றன.

சமூகம் பல்வேறு முரண்பாடுகளை உள்ளடக்கிய தொகுதி, வயது முரண்பாடு, ஊதிய முரண்பாடு, அந்தஸ்து முரண்பாடு, பண்பாட்டு முரண்பாடு என்பவை சில எடுத்துக்காட்டுகள் - சமூக முரண்பாடுகளில் மிகவும் பெரியதும் மிகவும் வலியதுமாக அமை வது வர்க்க முரண்பாடே. முரண்பாடுகளினாலே தூண்டப்படும் இயக்கம் வளர்ச்சியையும் மாற்றங்களையும் ஏற்படுத்திய வண்ண மிருக்கும். எந்தவொரு பொருளும் மாறாத இயல்பைக் கொண்டிருப்பதில்லை. தொன்மையான கல்வியமைப்பு மாற்றமடைந்து சமகாலக் கருத்தியல் தழுவிய தேவைக்கேற்றவாறு புதிய வடிவை எடுத்துள்ளது.

இயங்கியற் பொருள்முதல் வாதம் (Dialectical Materialism) பின்வரும் பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

(1) அளவு மாற்றங்கள் பண்புநிலையான மாற்றங்ளை ஏற்படுத்த வல்லவை. எடுத்துக்காட்டாக ஒரு கல்வி நிலையத்தின் ஆசிரியர் எண்ணிக்கையை அதிகரிக்கும்பொழுது கற்பித்தல் தரத்தில் பண்பு நிலையான அல்லது தரநிலையான மாற்றங்கள் ஏற்படும்.

(2) எதிர்மறைகளின் ஒற்றுமையும் போராட்டமும் குறித்த அமைப்பை தகர்க்கும் போராட்டமாக மாறும். கல்வி நிலையில் பறிப்பை மேற்கொள்வோர் பறிப்புக்கு உள்ளாகும் மக்களுக்குரிய கல் வியை உருவாக்கி வைத்திருப்பர். பறிப்புக்கு உள்ளாகியமைக்கள் ஒன்றிணைந்த போராட்டத்தின் வாயிலாக பொல்லா அமைப்பைத் தகர்த்து, அழித்து புதிய கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சிறிது சிறிதாக நிகழும் வளர்ச்சிகள் பெரும் உடைப்புத்தாவலாக (Leap) அல்லது மீப்பாய்ச்சலாக மாற்றமடையும். முட்டைக்குள் இருக்கும் குஞ்சு வளர்ச்சியின் முன்னேற்றத்தில் முட்டைக் கோதினை உடைத்து வெளிவருகின்றது என்பது ஓர் எளிமையான எடுத்துக்காட்டு. இந்த உடைப்பு வர்க்கப் போராட்டத்தின் போது "புரட்சி" என விளக்கப்படும். புரட்சியை நிகழ்த்துவதற்கு பறிப்புக்கு உள்ளான மக்களிடத்து பொருத்தமான கல்விக்கையளிப்பு அடிப்படையாகின்றது. இத்தகைய கல்விச் செயற்பாட்டினை லெனினும், மாவோவும் தத்தமது சூழல்களில் வினைத்திறனுடன் முன்னெடுத்தனர்.

கார்ல் மார்க்சின் சிந்தனைகளில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது வரலாற்றுப் பொருள் முதல்வாதம் (Historical Materialism) வரலாற்றைப் பொருண்மிய அடிப்படையில் விளக்குதல் இங்கு முன்னெடுக்கப்படுகின்றது. வரலாற்று வளர்ச்சி பொருளாதார விசைக-ளினால் தீர்மானிக்கப்பட்டு வந்துள்ளது. கல்வி, சமயம், ஒழுக்கம், அரசியல் முதலிய சமூக வடிவங்கள் பொருளாதார அடிப்படையில் வேர்கொண்டுள்ளன. அந்த அடித்தளத்தில் பொருளுற்பத்தி முறைமை உள்ளடங்கி நிற்கின்றது. பொருள்களே மனித எண்ணங்களை உருவாக்கின்றன. தனிச்சொத்துரிமையின் வளர்ச்சி பொருளற்றோரி டத்து அந்நியமயப்படுத்தும் உளவியல் நிலையை உருவாக்கிவிடுவ தாக மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

ஒவ்வொரு பொருளாதார முறைமையும் அதற்குரிய சொத்துரிமை இயல்புடன் தொடர்பு கொண்டதாகவும் அதற்குரிய மனித உறவுகளைக் கொண்டதாகவும் அமையும். முதலாளிய உற்பத்தி முறைமையில் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் முதலாளி வர்க்கத்தினருக்கே சொந்தமாக அமையும். தொழிலாளர்கள் தமது உழைப்பை விற்று வாழும் உறவு முறையைக் கொண்டிருப்பர். உழைப்பைப் பறிக்கும் வர்க்கம், உழைப்பைப் பறிகொடுக்கும் வர்க்கம் என்ற இருமுனைவுப் பாடுகளுக்கும் ஏற்பவே கல்விச் செயல் முறைகள் இடம்பெறும். உழைப்பைப் பறிகொடுக்கும் வர்க்கத்தினர் தரச்சிறப்பு மிக்க உயர் கல்வியின் நிராகரிப்புக்கு எளிதில் உள்ளாக்கப்படுவர்.

வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகின்றது. வர்க்கப்போராட்டம் முதிர்வடையும் பொழுது உடைப்பெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியைத் தொடர்ந்து உழைப்பின் பறிப்பு அல்லது சுரண்டல் இல்லாதொழிக்கப்படும். பறிப்பற்ற ஒரு சூழலிலேதான் ஒவ்வொரு வரும் தத்தமக்குரிய நிறைவான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியும். குறைவுபடாது தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ள முடியும். மனிதரது ஆற்றல்கள் நிறைவுபட வெளிப்படுத்தப்படும். அங்கு இயற்கையை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளும் இயற் கையை வசப்படுத்தும் நடவடிக்கைகளும் முழுவீச்சில் இடம்பெறத் தொடங்கும். மனித ஆற்றல்களை மேம்படுத்தும் தொடர்ச்சியான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மனித தேவையை நிறைவேற்றுவதற்குப் பயன்படும் பண்டங்கள் அனைத்தும் மனித அறிவு உள்ளிட்ட உழைப்பினால் உருவாக்கப் படுகின்றன. அவை பரிமாற்றம் செய்யப்படக்கூடியவை. ஒரு பொரு ளுக்குரிய பெறுமதி அப்பொருளில் அடங்கியுள்ள உழைப்பு மற்றும் நேரம் என்பவற்றினால் அளவிடப்படுகின்றது. தொழிலாளர்களது உழைப்பினால் உருவாக்கப்படும் பண்டங்களை மேலதிகப் பெறு மதிக்கு முதலாளிகள் விற்பனை செய்கின்றனர். உழைப்பினால் உருவாக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி உழைப்பவர்களுக்கே சென்றடைதல் வேண்டும். ஆனால் அதனை முதலாளிகள் தமதாக்கிப் பறித்துக்கொள்ளுகின்றார்கள். உழைப்பின் அபகரிப்பு அல்லது திருட் டுப்பற்றிய தருக்கபூர்வமான கல்வி தொழிலாளர்களுக்கு அவசியமென மார்க்ஸ் குறிப்பிட்டார்.

உழைப்பைப் பறிப்பதன் வாயிலாக தனக்குரிய அழிவை முதலா ளியம் தவிர்க்க முடியாதவாறு தானே உருவாக்கிக் கொண்டிருக் கின்றது.

மார்க்சிய சிந்தனைகளில் அரசு பற்றிய கோட்பாடு அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. சமூக வளர்ச்சியில் ஒரு படிமலர்ச்சிப் பண்பு காணப்படுகின்றது. தொன்மையான பொதுவுடைமைச் சமூகம், ஆண்டான் அடிமைமுறை சமூகம், நிலமானிய முறைச் சமூகம், முதலாளித்துவ சமூகம், பொதுவுடைமைச் சமூகம் என்ற வாறு தொடர்ச்சி இடம்பெறுகின்றது. தொன்மையான பொதுவுடைமைச் சமூகத்தில் அரசு என்ற அமைப்பு உருவாக்கம் பெறவில்லை. அரசு என்ற இயந்திரத்தின் தேவையும் இருக்கவில்லை. ஒரு வர்க் கத்தை இன்னொருவர்க்கம் கீழ்ப்படியவைக்கும் தேவை எழுந்த வேளை அரசு உருவாக்கம் பெற்றது. இந்நிலையில் அடக்குமுறைக்குரிய வலுப்பிரயோகமும் அழிப்புக்கருவிகளும் அரசுக்கு இன்றியமையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்பட்டன. வர்க்க பேதமற்ற அடக்கு முறையற்ற பொதுவுடைமைச் சமூகம் உருவாகும் பொழுது அரசு என்ற இயந்திரம் உதிர்ந்து ஒழிந்துவிடும். அடக்குமுறைக்குரிய போர்க்கருவிகள் தேவையற்றனவாகிவிடும்.

மார்க்ஸ் முன்மொழிந்த இந்தக் கருத்துக்கள் கல்வியியலுடன் இணைத்து நோக்கப்படுகின்றன. மனித இருப்பிலிருந்தே உணர்வு கள் முகிழ்த்தெழுகின்றன. மார்க்ஸ் முன்மொழிந்த பொருண்மிய அடிப்படைகள், இயங்கியற் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல்வாதம், அரசு என்ற அதிகாரத்தின் வடிவம், சமூக உறவுகள் ஆகியவற்றைக் கல்வியியலுடன் தொடர்புபடுத்தி நோக்கும் பொழுது கல்விக்குரிய தருக்க நிலைப்பட்ட புலக்காட்சியை உருவாக்கிக் கொள்ள முடியும். சுரண்டலும், பறிப்பும் நிகழும் சமூகங்களிலே கல்வியும் பறிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. மனித அன்னியப்பாடு மேலோங்குகின்றது.

முன்னைய வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றைச் சம்பவங்க ளின் தொகுப்பாகக் கண்டனர். ஆனால் கார்ல்மார்க்ஸ் வரலாற்றை உருவாக்கும் விசைகளைத் தருக்கப்படுத்தி வெளிப்படுத்தினார்.

சமத்துவம், சமசந்தர்ப்பம், கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி, சிறப்புக்கல்வி, அனைவருக்கும்கல்வி, முதலாம் தீவிரமான தொழிற் பாடுகள் வளர்ச்சி பெறுவதற்கு மார்க்சிய சிந்தனைகள் வலுவூட்டின. சமூகத்தின் மேலோங்கியவர்கள் பிடியிலிருந்த உயர்கல்வியானது சாமானியர்களுக்கும் கிடைக்கப்பெறும் விசையை மார்க்சிய சிந்த னைகள் ஏற்படுத்தின. கல்வியிலே பெருமளவு ஊடுருவி நின்ற நடப் பியல் தழுவாத கருத்து முதல்வாதம் மார்க்சியின் கருத்துக்களால் தகர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டன. சமூகக் கட்டுமானத்தில் அடிப்படை மாற்றங்களை நிகழ்த்தாது கல்விச் சீர்திருத்தங்களால் பெரும் சமூக விளைவுகளை ஏற்படுத்தலாம் என்ற கருத்து முதல்வாதத்தின் நடை முறை இயலாமையை மார்க்சிசம் துல்லியமாக வெளிப்படுத்தியது. சமூகத்தின் சமனற்ற ஏற்றத்தாழ்வுகளைக் கல்விச் செயற்பாடுகள் மீளமீள உருவாக்கி வலுவூட்டிக்கொண்டிருக்கும் நிலையைப் புலக் காட்சி கொள்வதற்குரிய அறிகை விசையை மார்க்சியம் வழங்கியது. மார்க்சியச் சிந்தனைகளை ஊறுபடுத்தாது கல்விச் செயற்பாட்டு வடிவம் கொடுத்தவர்களுள் லெனினும், மாவோவும் தனித்துவமாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியக் கருத்துக்களை மேலும் அறிகை விரிவாக்கத்துக்கு உட்படுத்தியவர்களுள் பிராங்போட் சிந்தனா கூடத்தினர் தனித்துவமானவர்கள். இவ்வகையில் ரி.டபிள்யு. அடோனா, எறிக்புறோம், கேர்பட் மாக்கோஸ், வால்டர் பென்யமின் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இறுகிய மார்க்சியச் சிந்தனை வழிவந்தோரால் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்ட உளப்பகுப்பு இயலை மார்க்சியத்துடன் இணைத்து புதிய அறிகைக்காட்சியை ஏற்படுத்தும் செயல்முறையை பிராங்போட் சிந்தனையாளர் முன்னெடுத்தனர். சமூக நிராகரிப்பை கார்ல்மார்க்ஸ் சமூக பொருளாதார நோக்கில் அணுகினார். ஆனால் உளப்பகுப்பியலாளராகிய சிக்மன்ட் பிராய்ட்டு நனவிலி மனத்தின் அமுத்தங்களாகத் தரிசித்தார். இந்த ஒப்புமையை எறிக்புறோம் தனது ஆய்வுகளிலே வெளிப்படுத்தினார். மார்க்ஸ் வெளிப்படுத்திய அன்னியமாதல் என்ற உளவியற் காட்சிக்கும் பிராய்ட் வெளிப்படுத்திய நனவிலி மனக்கோலங்களின் மறை நடத்தைகளுக்குமிடையே ஒப்புமை காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

பிராங்போட் சிந்தனா கூடத்தினர் தமது மார்க்சியப் புலக்காட்சியை விரிவுபடுத்துவதற்கு இருப்பியச் சிந்தனைகளையும் பயன்படுத்தினர். மனித இருப்பிற் கருத்துக்களின் அனுபவம் அல்லது அந்த அனுபவங்களின் பற்றாக்குறை அல்லது இயலாமை இருப்பியச் சிந்தனைகளிலே குவியமாக்கப்பட்டுள்ளது. மனிதத்தின் இழப்பு குவியப்படுத்தப்படும் வேளை அந்த இழப்புக்குரிய அடிப்படைக் காரணிகளைத் தேட மார்க்சிசம் வெளிச்சம் கொடுத்தது.

முதலாளித்துவ பொருளாதாரக் கட்டமைப்பினுள்ளே நிகழும் சமூகத் தொடர்புகளை மார்க்சிய எண்ணக்கருக்களின் அடிப்படையில் பிரங்போர்ட் சிந்தனா கூடத்தினர் ஆய்வுக்கு உட்படுத்தினர். அவற்றின் அடிப்படையில் அவர்கள் திறனறி கோட்பாட்டை (Critical Thfory) வளர்த்தெடுத்தனர். தனியுரிமை வடிவமைப்பு, பல்தேசிய நிறுவனங்கள், தொழில்நுட்பவியல் வளர்ச்சி, பண்பாட்டைக் கைத் தொழில் மயப்படுத்துதல், அவற்றின் தொகுப்பு விளைவாக தனிமனிதம் வீழ்ச்சிக்கு உட்படுதல் முதலியவற்றை இவர்கள் ஆய்வுக்குட்படுத் தினர். திறனறி கோட்பாடு கல்வியியலில் பலநிலைகளிலே செல் வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் முதலாளியம் ஊடுருவல் செய்து கட்டுப்பாடுகளையும் சுமைகளையும் ஏற்படுத்தி வருதலை மார்க் கோஸ் துல்லியமாக விளக்கினார். இக்கருத்துக்கள் பல்கலைக்கழக மாணவர்களிடத்துக் கவர்ச்சி மிக்க செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. திறன்அறி மெய்யியல், பகுப்பாய்வு மெய்யியல், மொழிப்பகுப்பாய்வு, அமைப்பியல் மற்றும் நூலியவிளக்க ஆய்வியல் (Hermeneutics) முதலாம் துறைகளில் ஹேர்ப்பர்மாஸ் காத்திரமான பங்களிப்பைச் செய்தார். கல்வி என்ற அமைப்பின் தனித்துவத்தை நோக்குதற்கும் பிற அமைப்புக்களுடன், அது கொண்டுள்ள தொடர்புகளை விளங்கிக்கொள்வதற்குமுரிய அறிகை வழிகளை இவர் விரிவுபடுத்தினார். இந்த அணுகுமுறையை நவமார்க்சிய வாதியாகிய அல்துஸ்ஸர் மேலும் நுண்மைப்படுத்தினார். கென்றி கிறொக்ஸ், மற்றும் அப்பிள் முதலானோர் நவமார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றிய கல்விக்கருத்துக்களை முன்மொழிந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன்டுயியும் பயன்கொள் கருத்தியலும்
## (JOHN DEWEY) (1859-1952)



மெய்யியல், கல்வியியல் அரசியல், அழகியல் ஆகிய துறைகளில் பயன்கொள்வாதத்தை ஊடுருவச் செய்தவர்களுள் டுயி தனித்து வமானவர். அனைத்துக் கருத்துக்களையும் செய்தல் அல்லது செய்யாது விடுதல் என்ற பொருட்பெயர்ப்புக்கு உள்ளாக்குதல் பயன்கொள் வாதத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அனுபவங்களைத் தொடர்ச்சி யாக மீள்கட்டு-மானம் செய்தல் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. விளைவுகளை அடிப்படையாகக் கொண்டே தீர்மானங்களை மேற் கொள்ளல் இவ்வாதத்திலே சிறப்பிடம் பெறுகின்றது. உலகம் என்பது ஒரு கோட்பாடன்று. இது ஒரு நிகழ்நேர்வு (Fact) பல்வேறு நிகழ்நேர்வு களின் கூட்டாகவே உலகம் ஆக்கம் பெறுகின்றது. ஒரே நிகழ்நேர்வின் அடிப்படையிலே உலகைச் சுருக்கிவிட முடியாது. அதனோடு தொடர்-புடைய வகையில் உண்மை என்பது சார்பு நிலைப்பட்டது என வலியுறுத்தப்படுகின்றது.

பயன்கொள்வாதமும் டுயிக்கு முன்னர் சார்ல்ஸ் சண்டேர்ஸ் பியேர்ஸ் (1832-1914) மற்றும் வில்லியம் ஜேம்ஸ் (1842-1910) ஆகி யோரால் வலியுறுத்தப்பட்டது. கைத்தொழிற்புரட்சியின் பொருண் மிய விளைவுகளைப் பயன் என்ற ஒருதலைப்பட்சமாக நோக்கியமையின் விரிவாக்கமாக இவ்வாதம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பேர்லிங்ரனில் பிறந்த ஜோன்டுயி விவசாயப் பண்பாட்டிலிருந்து கைத்தொழில்மயப்பாட்டுக்குத் தீவிரமாக மாறிக்கொண்டிருந்த சூழலில் வளர்ந்து வந்தார். அந்தப் பொருண்மிய அனுபவங்களை பரந்த தருக்க வழியாக அணுகாது, பயன்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடிப்படையில் மட்டும் நோக்கலானார். வேர்மொன் பல்கலைக்கழகத்திலே தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டடுயி ஆசிரியராகப் பணிபுரியலானார். விஞ்ஞானம், அட்சரக்கணிதம், இலத்தீன் முதலிய பாடங்களைக் கற்பிக்கலானார். மெய்யியல் தொடர்பாக அவர் எழுதிய மூன்று கட்டுரைகள் பிரசுரத்துக்குத் தகுந்ததென அவரது பேராசிரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து அவரது மெய்யியல் ஈடுபாடு மேலும் வளரலாயிற்று.

பயன்கொள்வாதத்தின் செல்வாக்குடன் ஸ்ராலி ஹோல் அவர்களால் வலியுறுத்தப்பட்ட விருத்திப்படிநிலைகளுக்குப் பொருத் தமான கற்பித்தல் முறையியல்களிலும் டுயி அவர்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

இமானுவேல் கான்ரினுடைய உளவியல் சிந்தனைகள் பற்றித் தமது கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு தேறிய அவர் மின்ன சொற்றா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் கற்பித்தலுக்கு ஈடுபடுத்தப் பட்டார். அதனைத் தொடர்ந்து தமக்குக் கலாநிதிப் பட்டத்தை வழங்கிய மிச்சிக்கன் பல்கலைக்கழகத்திலும் பணிபுரிந்தார். 1894ஆம் ஆண்டில் சிக்காகோ பல்கலைக்கழகத்து மெய்யியல் மற்றும் கல்வி உளவியல் துறையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவேளை தமது உளவியற் கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கும் பரிசோ தனைகளை மேற்கொள்வதற்குமென ஓர் ஆரம்பப் பாடசாலையை நிறுவினார். அப்பல்கலைக்கழகத் தலைவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அங்கிருந்து வெளியேறி கொலம்பியா பல்கலைக்கழகத் தில் இணைந்துகொண்டார். பேராசிரியராக மட்டுமன்றி பல்வேறு கல்விப்பணிகளையும், சமூக அரசியற் பணிகளையும் மேற்கொண்டார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று தமது கல்விக் கருத்தியலை வலியுறுத்தினார்.

கல்விவாயிலாக மக்களாட்சியைக் கட்டியெழுப்பல், பாடசா லையைப் பெரும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவன மாக்கல் முதலியவற்றை பயன்கொள்வாத அடிப்படையில் நோக்கி னார். தொழிற்சாலைகளிலே மூலப்பொருள் முடிவுப் பொருளாக்கப் படுதல் போன்று மாணவர்களையும் மூலப்பொருளாகக் கருதும் நிலையை மாற்றியமைக்க எண்ணினார். அவ்வாறான கற்பித்தல் முறைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்ற கணிப்பீடுகளும் மாணவரை அந்நிய மாக்கி விடுவதாகக் குறிப்பிட்டார்.

கல்விச்செயல் முறையிலே காணப்படும் "இருமைப் போக்குகளை"த் திறனாய்வுக்கு உட்படுத்தினார். கோட்பாடு நடைமுறை, தனிமனிதம் - குழு, தனியுரிமை - பொதுவுடைமை, மனம் -நடத்தை, வழிமுறை - முடிவு என்றவாறு இருமைப்போக்குகள் வளர்ச்சியடைந்துள்ளன. இந்த இருமைப்போக்குகளிடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்த முயன்றார். தொடர்ச்சியான அனுபவங்கள் வழியாகவே முரண்பாடு களை நீக்கி ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியும் என்பது அவரது துணிபு. சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பாடசாலையால் நீக்க முடியும் என எண்ணினார்.

அடிப்படையான சமூகச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபட வைப்பதன் வாயிலாக சமூக ஒழுக்கத்தையும் அறத்தையும் மேம்படுத்த முடியும் என முன்மொழிந்தார். எடுத்துக்காட்டாக பயிர்வளர்த்தல், சமைத்தல், வீடமைத்தல், ஆடை தைத்தல், படம் வரைதல், கதைபுனைதல் முதலியவற்றைக் கற்பிப்பது சமூக இயல்கள் என்ற பாடநெறியைக் கற்பிப்பதிலும் மேலானது. வினைத் திறன் மிக்க சுயநெறிப்படுத்தலுக்குரிய கருவிகளைக் கற்பதற்குச் சந்தர்ப்பங்கள் *(Instruments of effective self direction)* வழங்கப்படல் வேண்டும். இவற்றோடு வாசிப்பு, எழுத்து, பிரச்சினை விடுவித்தல் முதலிய அனுபங்களை மாணவர்க்கு வழங்குதலும் முக்கியமானது. வகுப்பறை மக்களாட்சிச் சமுதாய வாழ்க்கைக்குரிய அனுபவங்க ளைக் கொண்டிருத்தல் வேண்டும். மனித மாண்பும் விஞ்ஞானம் சார்ந்த நுண் மதியும் மேலெழச் செய்தலே சமகாலக் கல்வித் தேவையாகவுள்ளது.

தமது கல்விக்கருத்துக்கள் வழியாக அவர் மார்க்சியத்தை மறுதலிக்கும் எதிர்பாளராகக் காணப்படுகின்றார். "மார்க்சியம் என்பது விஞ்ஞானப்பூர்வமற்றதும், அடையமுடியாததுமான இலட்சியம்" என்றவாறு எழுந்தமான கருத்துக்களை முன்வைத்தார். மார்க்சியத்தை எதிர்க்கும் அமெரிக்க சிந்தனைப் போக்குகளுக்கு வலுவூட்டுபவராகவும் விளங்கினார். முதலாளியக் கட்டமைப்பில் ஏற்றத்தாழ்வுகளையும் மேலாதிக்க விசைகளையும் கல்வியால் இல்லாதொழிக்க முடியுமென எண்ணினார். இந்தப் போலி இலட்சி யப் போக்கால் அவர் முதலாளியத்தின் வளர்ச்சிக்கு வலுவூட்டுபவராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கருத்துக்களை விளக்கி அவர் எழுதிய ஆக்கங்களுள் பின்வருவன முக்கியத்துவம் பெறுகின்றன.

(1) திகழ் பாடசாலையும் சமூகமும்.

(2) திகழ் சிறாரும் கலைத்திட்டமும்.

(3) நாம் எவ்வாறு சிந்திக்கின்றோம்.

(4) மக்களாட்சியும் கல்வியும்.

(5) திகழ் பொதுமக்களும் அவர்களின் பிரச்சினைகளும்.

(6) அனுபவமும் கல்வியும்.

அறிவு பற்றிய மரபு வழிக்கருத்துக்கள் இவரால் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. விசாரணைகளாலும் *(Inquiry)* தெறித்தல் சிந்தனைகளாலும் *(Reflective)* உருவாக்கப்படுவதே அனுபவமும் அறிவும் என முன்மொழியப்படுகின்றது. அது கட்டுப்படுத்திய உற்று நோக்கலையும் பரிசோதனைகளையும், ஆய்வுகளையும் உள்ளடக்கியது. அனுமானங்களையும், பிரச்சினை விடுவித்தலையும் அறிவு உள்ளடக்கி நிற்கின்றது. சமூக முன்னேற்றத்தின் பரீட்சிப்பை அடிப் படையாகக் கொண்டே அறிவு என்பது "வலுவாக" மாற்றம் பெறும்.

டுயியின் சிந்தனைகளின் நடுநாயகப் பொருளாக "அனுபவம்" அமைகின்றது. புறவுலகுடன் மனிதர் கொள்ளும் இடைவினைகளை அனுபவம் அல்லது பட்டறிவு உள்ளடக்கி நிற்கின்றது. அனுபவங்கள் சூழமைவுடனும், சந்தர்ப்பங்களுடனும், இடைவினைகளுடனும் தொடர்புடையவை.

டுயி வழங்கிய பயன்கொள்வாதத்தில் மிகமுக்கியமானது தெறித்தல் விசாரணைப் பகுப்பாய்வாகும். *(Analysis of Reflective Inquiry)* பிரச்சினைகள் மீது தெறித்தற் சிந்தனையைச் செலுத்துவதன் வாயிலாகப் பிரச்சினை விடுவித்தற் செயற்பாடு இடம் பெறுகின்றது. தெறித்தற் சிந்தனையின் படிநிலைகள் வருமாறு:

(1) பிரச்சினையின் தோற்றத்தைக் காணல்.

(2) பிரச்சினையை வரையறை செய்தலும், தெளிவுபடுத்துதலும் அதன் செறிவைக் கண்டறிவதற்குப் போதுமான தகவல்ளைத் திரட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தீர்வுக்குரிய கருதுகோளை உருவாக்குதல்.

(4) கருதுகோள்களைத் தருக்க நிலையிலே பரிசீலித்தல்.

(5) பிரச்சினைத்தீர்வுக்குரிய பொருத்தமான கருதுகோளை இனங்காணுதலும் செயற்படுத்தலும்.

மெய்யியல் பற்றிய பயன்கொள்வாதச் சிந்தனைகளை அவர் விரிவுபடுத்தினார். மெய்யியலில் "உண்மை"யிலும் பார்க்கக் "கருத்தை" முதன்மைப்படுத்தினார். உண்மைகள் நித்தியமானவையன்று. அவை சார்புநிலைப்பட்டவை என முன்மொழிந்தார்.

பரிசோதனைவாதம், கருவிவாதம் ஆகியவற்றைத் தெறித்தல் விசாரணையுடன் தொடர்புபடுத்தி விளக்கினார். கருவிகள் "வழி முறைகள்" (Means) ஆகின்றன. சமகால வாழ்வை மேலும் வளம் படுத்தும் "மேம்பாட்டியலும்" (Meliorism) அவரால் வலியுறுத்தப்பட்டது. அனுபவங்களுக்கும் அழகுக்குமுள்ள தொடர்புகளும் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. அனுபவங்கள் தெளிவுறுத்தப்பட்டு, ஒப்பு நோக்கப்பட்டு, செறிவூட்டப்பட்டு, ஒருங்கிணைப்புக்கு உள்ளாக்கப்படும் பொழுது உருவாகும் அழகியல் அனுபவங்கள் மேலும் பொருண்மை கொண்டதாக வளர்ச்சி கொள்ளும். அழகும் பயனு டைமையும் அவரால் மேலும் விபரிக்கு உள்ளாக்காப்பட்டுள்ளது.

பயன்கொள்வாதக் கற்பித்தல் முறை பின்வரும் பரிமாணங்களைக் கொண்டது.

(1) உளவியல் மயப்பட்டது.

(2) சமூக உணர்வு கொண்டது.

(3) மக்களாட்சி மயப்பட்டது.

(4) நடைமுறைப்பாங்கானது.

(5) நெகிழ்ச்சிப் பண்புடையது.

(6) பரிசோதனை மயப்பட்டது.

(7) உடனடி வாழ்க்கையோடு இணைந்தது.

(8) ஒழுக்கத்தை வலியுறுத்தி நிற்பது.

(9) பொருண்மியப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) தனியாள் வேறுபாடுகளுக்கு முன்னுரிமை தருவது.

(11) செய்தவாயிலாகக் கற்றுக்கொள்ளலை வலியுறுத்துவது.

(12) மாற்றங்களை முன்னுரிமைப்படுத்துவது.

(13) பன்மை நிலைகளுக்கு இடமளிப்பது.

(14) மாறுபடும் கற்றல் நோக்கங்களுக்கும் விழுமியங்களுக்கும் இடமளிப்பது.

(15) மனித முயற்சிகளை முன்னுரிமைப்படுத்துவது.

பயன்கொள்வாதம் தொடர்பாகவும் டுயியினது சிந்தனைகள் தொடர்பாகவும் திறனாய்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(1) வளர்ந்துவரும் முதலாளியம் மற்றும் அதனோடு இணைந்த செல்வக் குவிப்பு, உழைப்பின் பறிப்பு முதலியவற்றைத் தருக்கபூர்வமாக அறியும் முயற்சிகள் முன்னெடுக்கப்படாது, இணங்கி வாழ்தலுக்கே முன்னுரிமை தரப்படுகின்றது.

(2) செயல்முறை வழியாக அனைத்துப் பாடங்களையும் கற்பித்தல் சாத்தியமற்றது. அருவமாகக் கற்க வேண்டிய பாடப்பரப்புக்களைச் செயல்முறைப்படுத்திக் கற்பித்தல் சாத்தியமற்றது.

(3) சராசரி நிலையையேனும் எட்டமுடியாத மாணவர்க்குரிய சிறப்பார்ந்த கற்பித்தல் முறைமைகள் பற்றி டுயி விளக்கிக் கூறாதிருத்தல் குறிப்பிடத்தக்கது.

(4) பொருண்மிய உலகியலுக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்த வேளை பண்பாட்டுப் பரிமாணங்கள் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஒரு காலகட்டத்தில் அமெரிக்கர்களால் விதந்து பாராட்டப்பட்ட டுயியின் கல்விச்சிந்தனைகள் பின்னர் "காலாவதியாகிவிட்ட" கருத்துக்களாகக் கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. விண்வெளி ஆய்வுகளிலே சோவியத்நாடு வேகமாக முன்னேறிச் சென்றவேளை அமெரிக்க மக்கள் டுயியின் கல்விச் சிந்தனைகளைத் தீவிர திறனாய்வுக்கு உட்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்குக் கல்வியில் உளப்பகுப்பு இயலை ஒன்றிணைத்த சசான் ஐசாக்ஸ்
## (SUSSAN ISAACS) (1885-1948)



முற்போக்குக் கல்வியில் உளப்பகுப்புச் சிந்தனைகளை உள்ள டக்கும் முயற்சிகளை சசான் ஐசாக்ஸ் வினையாற்றலுடன் மேற் கொண்டார். நனவிலியின் விநோதங்கள் பற்றிய இவரது ஆய்வுகள் சிறாரை விளங்கிக் கொள்வதற்குரிய வழிகளை விரிவாக்கின. பிராய்டின் சிந்தனைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலும் கேம்பிறிச் பல்கலைக்கழகத்திலும் உளவியலை ஆழ்ந்து கற்றார். உளப்பகுப்புவாதம், உளப்பிணிநீக்கல், முதலாம் துறைகளில் இவரது கவன ஈர்ப்பு ஆழச் சுவறியது. இதனால் பிரித்தானியாவிலுள்ள உளப்பகுப்பியற் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து மேலும் தீவிரமாக அத்துறையில் ஈடுபட்டார்.

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து கல்வியில் "புதிய இயக்கம்" பிரித்தானியாவில் வளர்ச்சி பெறத்தொடங்கியது. சசான் ஐசாக்ஸ் அவர்களால் நடத்தப்பட்ட மோல்டிங் கவுஸ் பாடசாலை கல்வியின் புதிய இயக்கத்தை முன்னெடுப்பதில் முன்நின்றுழைத்தது. மாணவர்க்குரிய விடுதலையை மேம்படுத்தும் பல பரிசோதனை முயற்சிகள் இவரால் அங்கு மேற்கொள்ளப்பட்டன. தமது அனுபவங்களை உள்ளடக்கிய இரண்டு நூல்கள் இவரால் முதலில் வெளியிடப் பட்டன. "இளம் சிறார்களிடத்து நிகழும் நுண்ணாற்றல் விருத்தி" மற்றும் "இளம் சிறார்களிடத்து நிகழும் சமூகவிருத்தி" ஆகிய இருநூல்களிலும் புதிய கல்விக் கருத்துக்கள் மேலோங்கி எழுந்தன. தமது செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்த வேளை ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அந்தப் பாடசாலையை விட்டு அவர் வெளி நீங்க நேர்ந்தது.

இலண்டன் கல்வி நிறுவகத்திலே பேராசிரியராகவிருந்த பேர்சி நன்பிரவுடன் இவருக்கிருந்த தொடர்புகள் கல்வி ஆளுமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்தவும், கல்விச்செயற்பாடுகளை மேலும் முன்னெடுப்பதற்கும் துணையாக அமைந்தன. இலண்டன் கல்வி நிறுவகத்தின் குழந்தை விருத்தியியல் துறையின் தலைவராக பேர்சி நன்பிரபுவால் இவர் நியமிக்கப்பட்டார். குழந்தை உளவியலிலும் கற்பித்தலியலிலும் மேலும் ஆய்வுகளைச் செய்வதற்கு இந்தப்பதவி துணையாக அமைந்தது.

சிறாரின் நுண்ணாற்றல் விருத்தி மனவெழுச்சி விருத்தியுடன் கூடிய தொடர்புகளைக் கொண்டுள்ளதென வலியுறுத்திய பியாசே யின் சிந்தனைகளுடன் முரண்பட்டுக்கொண்டார். ஐசாக்ஸின் கல்விச் செயற்பாடுகள் பின்வருமாறு அமைந்தன. கற்றலை விசைப்படுத்தவும், ஆளுமைத்திரிபுப்பாடுகளை ஒழுங்கமைக்கவும் வகுப்பறையில் மாணவர்க்கு விடுதலை அவசியமாகின்றது. "விடுதலைப் பண்பாடு" (Culture of Freedom) வகுப்பறையிலே கட்டியெழுப்பப்பட வேண்டி யுள்ளது. இயல்பூக்கக் கோலங்களை ஆக்கநிலையில் வெளிப்படுத்து வதற்கு விளையாட்டு முறையை ஊக்கப்படுத்த வேண்டியுள்ளது. அடக்கப்பட்ட திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கும் உலகைக் கண்டுபிடித்து தமது ஆற்றலை மீத்திறன் பெறச்செய்வதற்கும் விளையாட்டுக்கள் தூண்டுகோல்களாக அமையும் என அவர் கருதினார்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டற்ற சுதந்திரத்தின் காரண-மாக அவர்களிடத்தே போட்டிகளும், குழப்பங்களும், வன்செயல்களும் தோற்றம் பெற்றன. இதனால் தமது அணுகுமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இயல்பூக்க உந்தல்கள் அதீதமாகத் தொழிற்படும் பொழுது மாணவர்களிடத்தே இடர்ப்பாடுகள் மேலோங்குகின்றன. அவர்களிடத்தே மேலெழும் குறியீடுகள் கற்றற் செயற்பாடுகளிலே தடைகளையும் குறுக்கீடுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. இந்நிலையில் சிறாரை விளங்கிக்கொள்வதற்குரிய உளப்பகுப்பு ஆய்வு இரண்டு வழிகளிலே கிளைகள் பரப்பி வளரலாயிற்று. பாரம்பரியமான உளப்பகுப்பு ஆய்வு-களை அடியொற்றி அனாபிராய்டின் அணுகுமுறைகள் வளர்ச் சிய-டைந்தன. அதனிலும் வேறுபட்ட வகையில் மெலானி கிலீன் (Melanie Klein) மேற்கொண்ட அணுகுமுறைகள் அமைந்தன. கிலீனுடைய அணுகுமுறைகளை ஐசாக் பின்பற்றத் தொடங்கினார். அதுவே சரியானதென அவருக்குப் புலனாகியது.

சிறார்களின் இயல்பான வெளியீட்டுச் செயற்பாடுகளின் அடிப்படையாகவும் விளையாட்டுக்கள் வாயிலாகவும் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்மனத்தைப் புரிந்துகொள்ளல் கிலீனுடைய அணுகுமுறையா யிற்று. விளையாட்டுக்களின் போது ஒவ்வொரு சிறுவரும் தமக்குரிய வன்செயல் உந்தல்களை நெறிப்பாடு செய்யும் பண்புகள் காணப்படுகின்றன. சிறு வயதிலிருந்தே மீஅகம் (Super Ego) தொழிற்படத் தொடங்கி விடுகின்றது. வன்செயல் உந்தல்களுக்குத் தரப்படும் கட்டற்ற சுதந்திரம் மீ அகத்தின் தொழிற்பாட்டினால் சிறாருக்கு ஒருவித கவலையை வழங்கி விடுகின்றது. இதனால் கட்டற்ற சுதந்திரத்தினால் உந்திவிடப்படும் கவலை கற்றலுக்குக் குறுக்கீடாகி விடுகின்றது. இக்கருத்துக்கள் அனாஓவின் கருத்துக்களில் இருந்து வேறுபடுத்துகின்றன.

ஆசிரியர்கள் மாணவர்கள் மீது அதீத சகிப்புத் தன்மையைக் காட்டும்பொழுது, அது அவர்களது ஆழ்மனத்திலே ஒருவித குற்ற-வுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. அந்தக் குற்றவுணர்ச்சியின் சுழல்-வட்டமான இயக்கம் கற்றலைப் பாதிப்படையச் செய்கின்றது. இந்நிலையில் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உள்ளடக்கிய விளை யாட்டுச் செயற்பாடுகளுக்கும் அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக் கைகளுக்குமிடையே ஒருவித சமநிலைப்பாட்டினைப் பாடசாலை களிலே மேற்கொள்ளல் வேண்டுமென ஐசாக்ஸ் தீர்மானித்தார். சிறார்க் கல்வியில் மீஅகத்தின் தொழிற்பாட்டுக்கு அவர் முக்கியத்துவம் வழங்கினார்.

விளையாட்டுக்கள் கற்றலுக்கு உதவுதலுடன் வேறுபல தொழிற் பாடுகளையும் முன்னெடுக்கத் துணை நிற்கின்றன. ஆழ்மனத்தே உறைந்து நிற்கும் விநோதங்களுக்கு அவை வெளியீட்டு வடிவம் கொடுக் கின்றன. அதன் வழியாக சிறாரின் விருத்திக்கு அவை உதவுகின்றன. விளையாட்டுக்கள் வாயிலாக உயிரியல் சார்ந்த இயல்பூக்கங்கள் வெளியீட்டு வினைப்பாடுகளாக மாற்றம் பெறுகின்றன. சிறாரின் கற்பனை விநோதங்களே நனவிச் செயல்முறையின் ஆழ்ந்த உள்ள டக்கமாயிருத்தலை ஐசாக்ஸ் சுட்டிக்காட்டினார்.

உளப்பகுப்பு இயலையும் கல்வியியலையும் ஒன்றிணைத்தல் இருபதாம் நூற்றாண்டின் சிறப்பார்ந்த நடவடிக்கையாக அமைந்தது. அதனூடாக கற்றலுக்கும், சமூக மயமாக்கலுக்கும், மனவெழுச்சி விருத்திக்குமிடையேயுள்ள தொடர்புகள் கூடுதலான வலியுறுத்தல்-களுக்கு உள்ளாக்கப்பட்டன.

உளப்பகுப்பு இயலையும் கல்வியியலையும் தொடர்புபடுத்திய ஆய்வுகளைப் பலர் முன்னெடுத்துச் சென்றனர். சிக்மன் பிராய்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளாகிய அனாஓ ஆசிரியராக இருந்ததுடன், உளப்பகுப்பியலை அடியொற்றிய கற்பித்தலியலையும் ஆசிரியத்துவத்தையும் முன்னெடுத்தார். வியன்னாவில் இருந்த வேறுபல உளப்பகுப்பு இயலாளர் சிறாரின் இயல்பூக்க விருத்திக் கோட்பாட்டைக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பிரயோகித்தனர். குழந்தை நிலையில் நிகழும் இயல்பூக்க நெறிப்பாடுகள் கற்றலில் ஏற்படுத்தும் வகிபாகமும் ஆழ்ந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. நுண்மதிசார்ந்த கற்றற் செயற்பாடுகளுக்கும், திறன்களை அறியும் செயற்பாடுகளுக்கும், மீஅகத்தின் தொழிற்பாட்டுக்குமுள்ள முத்தரப்பு இணைப்புக்களும் ஆய்வுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டன.

அடக்கப்பட்ட இயல்பூக்கங்களைச் சமூக அங்கீகரிப்புக்குரிய வெளிப்பாடுகளாக மாற்றும் செயற்பாடுகளிலே கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இரண்டு பெரும் உலகப்போரின் போதும் பாதிப்புக்கு உள்ளான சிறுவர்களினதும் இடப்பெயர்ச்சியினாற் பாதிக்கப்பட்ட சிறுவர்களினதும், நனவிலி மனக்கோலங்களை அறி வதிலும், அவர்களுக்குரிய கல்வியை உளப்பகுப்பு இயலடிப்படையிலே மேம்படுத்து தலிலும் இவர் வினையாற்றல் மிக்க பங்களிப்புக்களைச் செய்தார்.

"இளம் சிறார்களின் நுண்மதி விருத்தி", "இளம் சிறார்களின் சமூகவிருத்தி", "சிறார்விருத்தியின் உளவியற்பண்புகள்", "குழந்தைமையும் அதற்குப் பின்னரும்", "விநோதமான கற்பனைகளின் இயல்பும் தொழிற்பாடும்", "பெற்றாரிடத்தும், சிறாரிடத்தும் நிகழும் பிரச்சினைகள்" முதலிய நூலாக்கங்கள் வாயிலாக இவர் தமது ஆழ்ந்த கல்வியியற் கருத்துக்களை வெளியிட்டார். பொதுமக்களிடத்தே தமது கல்வியியற் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் "உர்சலா வைஸ்" என்ற புனை பெயரிலே பல ஆக்கங்களைப் புகழ் பெற்ற வெகுசன சஞ்சிகைகளிலே வெளியிட்டார்.

சிறார்கள் தமது வேட்கைகளையும் உணர்வுகளையும் நனவிலி மனத்திலே அடக்கியும், அழுத்தியும் வைத்தல், அழுத்திய உணர்வுகளைச் சமூகம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலே புடமிடும் (Sublimation) நடவடிக்கைகள் முதலியவை கற்றலில் ஏற்படுத்தும் விளைவு களை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தியவர்கள் வரிசையிலே ஐசாக்ஸ் அவர்களுக்குச் சிறப்பார்ந்த இடம் வழங்கப்படுகின்றது. நனவிலி மனம் மற்றும் ஆளுமையின் பிரதான கூறாக விளங்கும் மீ அகம் முதலிய தளங்களை அடியொற்றிய இவரது முற்போக்குக் கல்விச் செயற்பாடுகள் இங்கிலாந்தின் நவீன கல்விக்கு விசையூட்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிய தருக்கத்தைக் கல்வி உளவியலுடன் ஒன்றிணைப்புச் செய்த எல்.வி.வைக்கோட்சி

## (L.V.VYGOTSKY) (1896-1934)



விருத்தி உளவியல், சிறப்புக்கல்வி, பேச்சுத்தொடர்பாடல், தொழிற்கல்வி, முதியோர் கல்வி, மனித உணர்வுகளின் கட்டுமானம், மொழிக்குறியீடுகள் முதலாம் துறைகளிலே தனித்துவமான பங்களிப்பைச் செய்தவர் வைக்-கோட்சி (விக்கோட்சி) ரூசிய நாட்டு உளவியலாளர் வரிசையில் இவருக்குச் சிறப்பார்ந்த இடம் உண்டு. மருத்துவம், சட்டம், வரலாறு, மெய்யியல், மொழியியல், உளவியல் முதலாம் துறைகளில் பரந்துபட்ட அறிவைத் திரட்டிக்கொண்ட இவர் ஆசிரியராகத் தமது தொடர் தொழிலை ஆரம்பித்தார். ஆசிரியராக இருந்துகொண்டு தொடர்ந்து தமது கல்வியை முன்னெடுத்துச் சென்ற அவர் மொஸ்கோ உளவியல் நிறுவகத்தில் "கலையின் உளவியல்" என்ற தலைப்பில் ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

உளவியல் ஆய்வுகள் தொடர்பான மாற்றுவகைக் கருத்தை முன்வைத்தார். கொலைக் குற்றத்தைப் புலனாய்வு செய்தல் போன்று நேரடிச்சாட்சிகளையும், சூழமைவு இயல்புகளையும் ஆய்வு செய்யும் முறைகளை உளவியலிலே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து அவரால் முன்மொழியப்பட்டது. கோட்பாட்டு விவாதங்களும், மானிடவியல் தரவுகளும் இங்கு அதிக முக்கியத்துவப்படுத்தப்படவில்லை.

மனிதரிடத்து நிகழும் இயற்கையான உளவியல் தொழிற்பாடுகள், மேலான உளத்தொழிற்பாடுகளாக "நிலை மாற்றம்" பெறுமாற்றைத் தமது ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். அதாவது, தருக்க வழியான ஞாபகம், தெரிவு செய்து கவனம் செலுத்துதல், தீர்மானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளல், ஆழ்ந்து கற்றல், மொழி வழியான கிரகித்தல் முதலியவை உயர்நிலையான உளத்தொழிற்பாடுகளாகக் கொள்ளப்-படுகின்றன. நிலைமாற்றம் பற்றிய ஆய்வுகளை அடியொற்றியே விருத்தி உளவியலில் அவரின் பங்களிப்பு மேலோங்கி நிற்கின்றது.

சிறாரின் மொழிவிருத்தியும், பேச்சுவிருத்தியும் அவர்களது சிந்தனைத் தொழிற்பாட்டுடன் "சிந்தனையும் மொழியும்" என்ற நூலில் புகழ் பெற்ற ஆக்கமாக அமைந்தது. மாற்று வகையான உளவியற் கருத்துக்களை அவர் சங்கமமாக்கினார்.

உளச்செயல் முறையின் சமூகத்தளத்தை வெளியிட்டமை இவரது ஆய்வின் முக்கியமான வெளிப்பாடாக இருந்தது. மார்க்சிய நோக் கில் உளவியலைத் தரிசித்தமை இந்த ஆய்வுகளிற் காணப்பெற்ற சிறப்புப் பண்பாகக் கருதப்படுகின்றது. மார்க்சிய உளவியலின் வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. தனிமனிதரின் உளவியலை குறித்தநபர் வாழும் சமூகச் செயல் முறையை ஆராய்வதன் வாயிலாகவே விளங்கிக் கொள்ள முடியும் என்று முன்மொழியப்பட்டது, தனிமனிதரிடத்து மட்டும் கட்டுப்பட்டு நின்ற மேலைப்புல உளவியலைத் தகர்ப்புக்கு உள்ளாக்கினார். முதலாம் உளச்செயற்பாடுகளை அறிகை, ஞாபகம், மனம் குறித்த மனிதரை அடிப்படையாக வைத்து ஆராய முடியாது. அந்த நபரை உருவாக்கிக்கொண்டிருக்கும் சமூக இருப்பையும், சமூக விசைகளையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. தனிமனிதர் மட்டுமல்ல குறிப்பிட்ட பண்பாட்டுக் கோலமும் சமூக இருப்பாலும், தொழிற்பாடுகளினாலும் உருவாக்கப்படுகின்றன.

உளவியலிலும் கற்பித்தலியலிலும் இவரால் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான கோட்பாடு "அண்மை விருத்தி வலயம்" *(Zone of Proximal Development)* என்பதாகும். உளவிருத்தியும், கற்பித்தலும் சமூகச் சார்புடையவை என்ற முன்மொழிவிலிருந்து இந்தக் கோட் பாடு உருவாக்கப்படுகின்றது. மாணவர்கள் தாமாகக் கற்றுக்கொள் வதிலும் பார்க்க ஆற்றலுள்ளவர்களின் வழிப்படுத்தலிலே கற்கும் பொழுது வேகமாகவும் வினைத்திறனுடனும் கற்றுக்கொள்ள முடிகின்றது.

சிறாரின் நட்பியல் நிலைப்பட்ட விருத்திமட்டத்துக்கும், ஆற்றலுள்ளோரால் நெறிப்படுத்தப்பட்டு உருவாக்கம் பெறக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலின் விருத்திமட்டத்துக்குமிடையேயுள்ள இடைவெளியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அண்மைவிருத்தி வலயக் கோட்பாட்டினால் விளக்கினார். கல்வி உளவியலையும், விருத்தி உளவியலையும் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான கருத்தாக விளங்குகின்றது.

பாடங்களைத் திட்டமிடுவதற்கும், மாணவர்களுக்குரிய அனுபவங்களை ஒழுங்கமைப்பதற்கும் அண்மைவிருத்தி வலயம் ஒரு பயனுள்ள கோட்பாடாக அமைகின்றது.

இவரது ஆய்வுகளில் இருந்து மேலெழுந்த இன்னொரு கண்டுபிடிப்பாக அகநிலைப் பேச்சு (Inner Speech) அமைப்பாகின்றது. ஒருவர் தனக்குள்ளே தான் மௌனமாக உரையாடிக்கொள்வது அகநிலைப்பேச்சு எனப்படும். சிந்தனைக்கும் மொழிக்குமுள்ள தொடர்புகளை ஆராய்வதற்குரிய மத்திய எழுபொருளாக அகநிலைப் பேச்சு அமைகின்றது. சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்குமாறு மனித உள்ளம் படிமலர்ச்சி கொண்டுள்ளது. பிறருடன் தொடர்புகொள்ளும் செயல் மனித உணர்வின் கட்டமைப்பைத் தோற்றுவிக்கின்ற சமூக இடைவினைகள் இன்றி அகநிலை பேச்சு உருவாக்கம் பெறமாட்டாது. சமூக இயல்புக்கேற்றவாறு நடத்தை களை ஒழுங்கமைக்குமாறு ஆரம்பநிலைத் தொடர்பாடல் குறியீடு கள் அகத்திலே பொருத்தமான முறையில் நிலைமாற்றம் செய்யப்படு கின்றன. மார்க்சின் வரலாற்றும் பொருள்படுகின்றன. மார்க்சின் வரலாற்றும் பொருள்முதல்வாதத் தருக்கம் இவரது உளவியலாக்க ளில் ஊடுருவி நின்றமைக்கு அகநிலைப் பேச்சு தொடர்பான அணுகு முறையும் சான்றாதாரமாக அமைகின்றது.

இவரது உளவியல் அணுகுமுறைகள் பின்வந்த உளவியலாளர் பலரிடத்துச் செல்வாக்குகளை ஏற்படுத்தின. டவிடோ, என்கெஸ்றோம், கோல் முதலிய உளவியலாளர்கள் இவ்வகையிலே குறிப்பிடத்தக்க வர்கள். தனிமனித நடத்தைகளையும் கூட்டு நடத்தைகளையும் விளக்கு வதற்கு கோல் மற்றும் என்கெஸ்றோம் இணைந்து "செயற்பாட்டுத் தொகுதி" (Activity System) என்ற கோட்பாட்டை உருவாக்கினார்கள். மனித ஊடாட்டங்களைப் பகுத்தாராய்வதற்கு உருவாக்கப்பட்ட மேற்கூறிய செயற்பாட்டுச் செயலமைப்புத் தொகுதி பின்வரும் அடிப்படைகளில் உருவாக்கப்பட்டது.

(1) தெளிவான இலக்குகளைக் கருத்திற் கொண்டமை.

(2) வரலாற்று நிபந்தனைப்பாடுகளுடன் இணைத்து நோக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மார்க்சிய இயங்கியலின் அடிப்படையாகக் கட்டுமை செய்யப்பட்டமை.

ஒரு பாடசாலையை அல்லது ஒரு குடும்பத்தை, அல்லது ஒரு குழுவை அல்லது ஒரு வாண்மையை இதனடிப்படையில் ஆராய்ந்து அங்கு நிகழும் இடைவினைகளை விளங்கிக்கொள்ள முடியும். பௌதிக மற்றும் அறிகைக் கருவிகளைப் பயன்படுத்தி செயற்பாட்டுத் தொகுதிகள் தொடர்ச்சியாக, வடிவமைக்கப்பட்டும், மீள்வடிவமைக்கப்பட்டும் அவற்றிலே பங்குபற்றுவோரால் நிர்மாணம் செய்யப்படும் வைக்கோட்சியின் மார்க்சிச உளவியலை அடிப்படை யாகக் கொண்டு உருவாக்கப்பட்ட செயற்பாட்டுத் தொகுதிக் கோட்பாடு இந்த நூற்றாண்டின் பல்வேறு துறைகள் சார்ந்த ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

கல்வியியல், மொழியியல், தொடர்பாடலியல், கணனி விஞ்ஞானம், வாண்மையியல் முதலாம் துறைகளில் ஆய்வுகளை மேற்கொள் வதற்கு இந்த ஆய்வுமுறை பயன்படுத்தப்படுகின்றது.

இந்த ஆய்விலே பயன்படுத்தப்படும் கருவிகள் (Tools) குறிப்பிட்ட செயற்பாட்டுத் தொகுதியில் உள்ளோரை இலக்குகளின் அடிப்படை யிலும், வரலாற்று நியதிகளின் அடிப்படையிலும் கூட்டுறவுடன் செயற்படுதலையும், போட்டியிட்டுக் கொள்வதையும் விளங்கிக் கொள்வதற்குத் துணையாகவுள்ளன. சமூக வேலைப் பிரிவினை அடிப்படையாகவுள்ளன. சமூக வேலைப் பிரிவினை அடிப்படை யாகக் கொண்டு உருவாக்கப்படும் ஆய்வுக்கருவிகள் சிறப்பார்ந்த தொழிற்பாடுகளைப் புரிகின்றன.

மேற்கூறிய கருத்தை மேலும் விளக்கிக் கூறலாம். உறுப்பினர்கள் ஒருபுறம் கூட்டாக இயங்கும் வேளை இன்னொரு புறம் ஒருவரோடு ஒருவர் பேட்டியில் முரண்பட்டுக் கொள்ளுகின்றார்கள். இந்தத் தோற்றப்பாட்டை விளங்கிக்கொள்வதற்கு சமூக வரலாறும், அதனோ டிணைந்த குறிப்பிட்ட நிறுவனத்தின் வரலாறு, மார்க்சிய இயங்கியல் விளக்கம், சமூகத் தொழிற்பிரிவின் அடிப்படையில் உருவாக்கப்படும் ஆய்வுக்கருவிகள் முதலியவை துணையாக இருக்கும். இவ்வாறாக, மார்க்சிய உளவியல் கருத்துக்களை வளமுடன் வளர்ப்பதற்குரிய முன்னோடியாக வைக்கோட்சி விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சிய உளவியலை வளம்படுத்தும் பின்வரும் முக்கிய நூலாக்கங்களை இவர் மேற்கொண்டார். "சிந்தனையும் மொழியும்", "கலையின் உளவியல்", "சமூகத்தில் மனம்", "திரட்டிய எழுத்தாக்கங்கள்", உயர் உளத்தொழிற்பாட்டின் மேதாவித்தமை" என்பன இவரது நூலாக்கங்கள்.

கல்வியியற் கோட்பாடு, கல்வியியல் ஆய்வு மற்றும் கல்வியியல் நடைமுறைகளில் வைக்கோட்சியின் ஆழ்ந்த செல்வாக்குகளை டவிடோவ் என்பவர் விரிவாக ஆராய்ந்துள்ளார். விருத்தி உளவியல், குழந்தை உளவியல் முதலாம் துறைகளில் சமூகம் தழுவிய புதிய புலக்காட்சிகளை ஏற்படுத்துவதில் வைக்கோட்சியின் ஆய்வுகள் கனதியான பங்களிப்பைச் செய்துள்ளன. இவரது ஆய்வுகள் பியாசே, புறூனர் முதலாம் அறிகை உளவியலாளர் மீதும் செல்வாக்குகளை ஏற்படுத்தியுள்ளன. பண்பாடு, தொடர்பாடல், அறிகை முதலாம் துறைகளில் வைக்கோட்சியின் அணுகுமுறைகளை வேட்செக் (Sewrtch) என்ற ஆய்வாளர் மேலும் விரிவாக விளக்கியுள்ளார்.

வைகோட்சி வாழ்ந்த காலத்து மொஸ்கோ நகரத்தின் சூழல் அறிவு நோக்கி ஒளியூட்டுவதாக இருந்தது. சல்வோக்கி, ஜகுபின்ஸ்கி, ஜக்கோப்சன் முதலியோர் கலை இலக்கிய ஆய்வுகளில் உருவாக்கிய வரனியல் உருவவாதம் (Formalism) எழுச்சி கொண்டிருந்தது. இன்னொருபுறம் அரங்கியலில் ஸ்ரனிஸ் லெவிஸ்கி மேற்கொண்ட புத்தாக்க முயற்சிகள் முதலியவை சிந்தனையின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்குரிய தூண்டிகளை வழங்கின. பிறிதொருபுறம் கலை இலக்கிய ஆய்வுகளில் மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கி சோசலிச நடப்பியற் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இவ்வாறாக நிகழ்ந்து கொண்டிருந்த பன்முகமான நுண்மதித் தொழிற்பாடுகளின் வெளிப்பாடுகளை உள்வாங்கி அவற்றை உளவியல் ஆய்வுப் புலத்திலே பயன்படுத்தினார். இதனால் மேலைப்புல உளவியலாய்வாளர்களுக்கு எட்டாத தொடு வானத்தை இவரால் எட்ட முடிந்தது.

மேலைப்புல ஆய்வாளர்கள் இவரை ஒரு "விருத்தி" உளவியலாளராகக் கருதுகின்றார்களேயன்றி, மார்க்சிய தருக்கத்தை உளவியலுடன் ஒன்றிணைத்த இவரது முயற்சியின் முழுமையை வெளிப்படுத்துவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம் தொடர்பான மாற்றுவகைச் சிந்தனைகளை முன்வைத்த கால் ரொஜர்ஸ்

## (CARL ROGERS) (1902-1987)



கல்வியின் வழியாகத் "தன்னியல் நிறைவு" கொண்டவர்களை உருவாக்குவதற்குரிய மானிடப்-பண்பு தழுவிய அணுகுமுறைகளை இவர் முன்வைத்தார். ஆசிரியரின் வகிபங்கினைக் கற்பதற்குரிய வளம்மிகல் வழங்குனர் (Facilitator) என்ற நிலைக்கு இட்டுச் செல்வதிலும் பங்குகொண்டு உழைத்தவர். சீர்மிய நடவடிக்கைகளில் "பணிப்புரையற்ற" நடவடிக்கைகளை மேற்கொண்டவர். நடத்தை வாதம் மற்றும் உளப்பகுப்புவாதம் ஆகியவற்றுக்கு மாறுபாடான மூன்றாவது விசையை உளவியலிலும், சீர்மியத்திலும் முன்வைத்தவர். கல்விச் செயற்பாட்டிலே பணிப்பும் அழுத்தங்களும் இருத்தலாகாது என்பது இவரால் வலியுறுத்தப்பட்டது.

ஐ.அமெரிக்காவிருள்ள இலினொய் மாநிலத்திலே பிறந்த இவரது தாய், தந்தையர் தீவிர கிறீஸ்தவ நெறிகளைப் பின்பற்றுவோராயிருந்தனர். அந்தப் பின்னணியில் இவர் கண்டிப்பாக வளர்க்கப் பட்டதுடன், கடினமான பணிகளைச் செய்யுமாறும் பயிற்றுவிக்கப் பட்டார். நியூயோர்க்கிலுள்ள இறையியற் கல்லூரியில் பயின்று ஓர் இறைபோதகராக வருமாறு அனுப்பப்பட்டார். ஆனால் அவரது ஆற்றல்கள் சமயத்தோடு மட்டும் கட்டுப்பட்டிருத்தல் தகாது என்று அவரிடம் பலர் வலியுறுத்தினர். அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ரோஜர்ஸ் கொலம்பியாவிலுள்ள ஆசிரியர் கல்லூரியிலே சேர்ந்து பட்டம் பெற்றுக்கொண்டார். கொலம்பியாவில் பயின்று கொண்டிருக்கும் பொழுது ஜோன்டுயி, கில்பற்றிக் மற்றும் ஹொலிங் வோர்த் முதலியோரின் கல்விச் சிந்தனைகளின்பால் ஈர்க்கப்பட்டார். தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயோர்க்கில் உள்ள சமுதாய நெறிப்படுத்தல் சிகிச்சை நிலையத்தின் உளவியலாளர் என்ற பதவியுடன் அவரது தொழில் வாழ்க்கை ஆரம்பமாகியது.

மேற்குறிப்பிட்ட நிலையத்திலே பணிபுரிந்த வேளை மரபுவழி உளப்பகுப்பு உளவியலை விமர்சனத்துக்கு உள்ளாக்கிய ஒட்டோ றாங் அவர்களின் தொடர்புகளுடன் அவரின் செல்வாக்கும் ரோஜர்ஸ் மீது விரவத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் ஒட்டோ றாங் அவர்களது விமர்சன அணுகுமுறைகள் காரணமாக அவர் மரபுவழி உளப்பகுப்புச் சமுதாயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இந்த நிகழ்ச்சியும் ரோஜர்ஸ் மீது செல்வாக்கினை ஏற்படுத்தியது. றாங் அவர்களாற் குறிப்பிடப்பட்ட "மனிதரின் மாற்றமுறும் அகம்", "மனித அகத்தின் (Self) வளர்ச்சியிலே ஒத்துணர்வு ஏற்படுத்தும் நேர்ச்செல்வாக்குகள்" முதலியவை ரோஜர்சுக்குப் புலமைக் கவர்ச்சியை ஏற்படுத்தின.

சீர்மிய செயற்பாட்டில் சீர்மிய நாடியின் அல்லது வேண்டுனரின் உரையாடலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கல் வேண்டுமென்பது உறுதியான கருத்தாக அமைந்தது. உளப்பிணி நீக்கற் செயல் முறையில் சீர்மிய நாடியே மனச் சுகத்தை ஏற்படுத்துவதற்குரிய திறவுகோலைத் தருகின்றார் என்பது செறிவான விளக்கமாக அமைந்தது. இச்சந்தர்ப் பத்திலே சீர்மியர் ஒரு விஞ்ஞானியாகச் செயற்படாது, தாய்ம்மைப் பண்பு கொண்ட ஒரு தாதியாகச் செயற்பட வேண்டும் என்பதே அவரின் வற்புறுத்தலாக அமைந்தது. தான் மேற்கொண்ட உளப்பிணி நீக்கல் உபாயங்களை அவர் பாடசாலைகளுக்கும் பிறநிறுவனங்க ளுக்கும் விரிவுபடுத்தினார்.

ஒகியோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவிருந்த காலத்தில் (1940) "சீர்மியமும் உளப்பிணி நீக்கலும்" என்ற நூலை எழுதினார். மானிட உளவியலை அடிப்படையாகக் கொண்ட சீர்மிய நடவடிக்-கைகள் பற்றிய விரிவான விளக்கங்களை அந்நூல் உள்ளடக்கியிருந்தது. சிக்காகோ பல்கலைக்கழகத்துச் சீர்மிய நிலையத்திலே பணிபுரிந்த வேளை "வேண்டுனரை நடுவனாகக் கொண்ட பிணிநீக்கல்" (Client - Centred Therapy) என்ற நூலை எழுதினார். (1957) தமது உளப் பிரச்சினைகளை சீர்மியநாடிகள் தாமே தீர்த்துக் கொள்வதற்குரிய ஆற்றலைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தை இந்த நூலிலே மீள வலியுறுத்தினார். நவீன சீர்மிய நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இது ஒரு மிக முக்கியமான கருத்தாகப் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விஸ்கொன்சின் பல்கலைக்கழகத்திலே பணியாற்றிய வேளை மேற்கூறிய கருத்தை மேலும் வலிமையாக்குவதற்குரிய ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஒருவருடைய ஆளுமை வளர்ச்சியிலும் ஆக்கத்திறன் மேம்பாட்டிலும் குறித்தநபரே நடுவன் நிலைப்பாட்டில் (Centrality) இருத்தலை வலியுறுத்தினார்.

கல்வியியலிலும், உளவியலிலும், சீர்மியத்திலும் வேண்டுனரை (Client) நடுநாயகப்படுத்தியவை இவர் வழங்கிய சிறப்பார்ந்த பங்களிப்பாகக் கருதப்படுகின்றது. மரபுவழிச் சீர்மிய நடவடிக்கைகள் வேண்டுனரைப் பிரச்சினைக்குள்ளனவராகக் கருதி சீர்மியம் வழங்கு னரையே அதிமுக்கியத்துவப்படுத்தின. இந்த அடிப்படையிலேதான் உளப்பகுப்புவாதம் மற்றும் நடத்தைவாதம் ஆகியவை மேற்கொண்ட சீர்மிய நடவடிக்கைகளை அவர் நிராகரித்தார்.

சீர்மியநாடியின் கருத்துக்களை மீளத் தெறிக்கும் கண்ணாடி போன்றே சீர்மியர் இருத்தல் வேண்டுமென ரொஜர்ஸ் குறிப்பிட்டார். இங்கே சீர்மிய நாடியின் தன்னிலை (Self) குவியப்படுத்தப்படு கின்றது. மனிதத் தன்னிலையை நேர்ப்பண்புகளுடன் நோக்கினார். ஆனால் சிக்மன் பிராய்ட் தன்னிலை என்பது பிறப்புரிமையுடன் கூடிய வன்குணம் உடையதெனக் கருதினார். முன்னர் நிகழ்த்தப்பட்ட மீளவலியுறுத்தல்களினால் தன்னிலை ஆக்கம் பெற்றது என நடத்தைவாதிகள் கருதினர்.

ஒவ்வொருவரிடத்தும் தன்னை அறிந்துகொள்ளலை வளர்ப் பதற்கும் ஆசிரியரும் சீர்மியரும் உதவுதல் வேண்டுமென்பது ரோஜர்ஸ் வழங்கிய சிறப்பார்ந்த கருத்தாகும். மானிட உளவியலை வலியுறுத் திய சீர்மியத்திலும், கற்பித்தலியலிலும் பணிப்புரை அல்லாத (Non - Directive) அணுகுமுறை முன்வைக்கப்பட்டது. தமது சீர்மியக்கருத் துக்களை கல்வியியலுக்கும் விரிவுபடுத்தினார். கற்பித்தலில் அறிகை யையும், மனவெழுச்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டிய முக்கி யத்துவம் மீளவலியுறுத்தப்படுகின்றது. ஒவ்வொருவரும் தன்னியல் நிறைவை அடைவதற்கு இந்த அணுகுமுறை அவசியமாகின்றது. கல்வியின் சிறப்பார்ந்த இலக்கு ஒவ்வொருவரும் சுயாதீனமும் தன்னியல் நிறைவும் ஈட்டப்பெறுவதற்கு உதவுதலாகும்.

மனிதருக்குரிய பிரச்சினைகளும் உளப்பாதிப்புக்களும் தன்னி லையின் மோதல்களின் விளைவாகவே தோற்றம் பெறுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். அதாவது, நடப்புநிலையான தன்னிலைக்கும் (Real Self) இலட்சிய வடிவிலான தன்னிலைக்குமிடையே நிகழும் மோதல்களும் உராய்வுகளுமே உள நலத்தைப் பாதிப்படையச் செய்கின்றன. இரண்டுக்குமிடையே இணக்கத்தையும் இசைவுப்பாட்டையும் ஏற்படுத்துவதற்குக் கல்விச் செயற்பாடுகளும் அனுபவ ஒழுங்கமைப்புக்களும் உதவுதல் வேண்டுமென்ற கருத்து முன்மொழியப்பட்டது.

இவருடைய கருத்துக்கள் நிகழ்மியம் (Phenome Nology) அல்லது தோற்றப்பாட்டு வாதத்தைத் தழுவி மேலெழுந்தன. ஒவ்வொருவரும் யதார்த்த நிலையில் எவ்வாறு அனுபவங் கொள்கின்றனர் என்பதை ஆழ்ந்து அறிதல் இவ்வாதத்தில் முதன்மை கொள்கின்றது.

மாணவர்களது கல்வி பிறரது அழுத்தங்களுக்கும், விருப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் உட்படாதிருத்தல் வேண்டுமென்ற கருத்தை முக்கியத்துவப்படுத்தினார். கல்வியில் பெற்றோரின் விரும்பங்களும், அழுத்தங்களும் மேலோங்கியிருந்த வேளை மாணவரின் தன்னிலை ஓங்கலுக்கும் சுயாதீனப்பாட்டுக்குமுரிய விதந்துரைகளை முன்வைத்தார். மாணவர்களது தனித்துவங்களைக் கருத்திலே கொள்ளாது அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான போதனை முறை ஒழுங்கப்படுதல் பொருண்மையற்றதென சுட்டிக் காட்டினார். ஆசிரியரது மேதாவித்தனமான மேலாட்சியையும், மாணவர் செயலூக்கம் குன்றிய அறிவின் நுகர்வோராயிருத்தலையும் திறனாய்வுக்கு உட்படுத்தினார்.

கல்விச் செயல்முறையிலே மாணவரின் தனியாள் பரிமாணங்களுக்கு அதீத முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மாணவர் தமது முன்னேற்றத்துக்கு ஆசிரியரை முற்று முழுதாகத் தங்கியிருக்கும், இறுகிய சார்ந்திருக்கும் நிலையையும் தவறானதென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. மாணவரின் தன்னியல்பான வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் புற அழுத்தங்கள் நீக்கப்பட வேண்டும் என்பது மானிட அணுகுமுறையாயிற்று.

சீர்மியத்துறையிலும் கல்வியியலிலும் இவர் வழங்கிய பங்களிப்புக்களில் அறைகூவர் குழு (Encounter Group) பற்றிய கருத்துக்களும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. தனது மனத்தை ஒருவர் தாமே தனது முயற்சியால் வலுப்படுத்தவும், வளம்படுத்த வும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரணையாக அமையக்கூடிய அறை கூவற்குழு பற்றிய நூலை 1970ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

ஐக்கிய அமெரிக்காவில் தீவிரமாக வளர்ச்சிபெறத் தொடங்கிய கைத்தொழிலாக்கம், நகரவளர்ச்சி, நவீன சேவைத்துறைகளின் வளர்ச்சி, பின்னைய முதலாளியத்தின் எழுச்சி முதலியவை மனித உணர்வுகளை அந்நிய மயப்படுத்தியதுடன் மனித மனங்களைச் சிதைத்து சீர்மியத்தின் தேவைகளை வலியுறுத்தின. சமூக இருப்பிலிருந்தும் இயக்கத்திலிருந்தும் தோன்றிய இந்தத் தோற்றப்பாட்டினை சமூக நிலையில் அணுகாது தனிமனித நிலையில் அணுக முயன்றார்.

மாணவரை நடுவனாகக் கொண்ட கல்விச் செயற்பாடுகளுக்கு அளவுக்கு மீறிய அதீத அழுத்தங் கொடுத்துவிட்டார் என்று மரபுவாதிகள் சுட்டிக்காட்டப்படுமளவுக்கு இவரது மாணவர் மையக் கல்விச் சிந்தனைகள் அமைந்தன. மார்க்சிய திறனாய்வாளராகிய கிறிதோப்பர் லாஸ் (Lasch) என்பார் ரொஜர்சின் அணுகுமுறைகளைத் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தினார். ஆசிரியரும், சீர்மியரும் மாணவர் சொல்வதைச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் "செயலூக்கமற்ற பௌவிய நிலை" கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பொருத்தமற்றது என லாஸ் திறனாய்வு செய்தார். சரியானவற்றைக் கற்பிப்பதற்கும், முன்னெடுப்பதற்கும் ஆசிரியரின் செயலூக்கமுள்ள தொழிற்பாடு முக்கியமானது. சொன்னதை மீளச் சொல்லும் கிளிப்பிள்ளையாக மட்டும் சீர்மியரோ ஆசிரியரோ தொழிற்பட முடியாது. சீர்மியநாடி கூறுபவற்றை நெறிப்படுத்த வேண்டியுள்ளது. மேலதிக சூழமைவு களை இணைக்க வேண்டியுள்ளது. துருவும் (Probing) வினாக்களைக் கேட்க வேண்டியுள்ளது.

மாணவர் மீது புதிய திறன்களையும், புதிய அறிகைக் கோலங்களையும் பதியச் செய்வதற்கு ஆசிரியர் தமது மேலாண்மைப் புலமைவலுவைப் பிரயோகித்தல் தவறு என்று கூறமுடியாது. இந்த வகிபங்கை மேற்கொள்ளாதவிடத்து மாணவரின் அறிவுத் திரட்டல் தாமதமாகிவிடும் அல்லது மந்தமாகி விடும். ஆசிரியர்கள் மேற்கொள்ளும் நெறிப்பாடுகளும் கட்டுப்பாடுகளும் மாணவரின் கற்றல் நடவடிக்கைகளை வலுவூட்டும் பரிமாணங்களைக் கொண்டிருத் தலை நிராகரித்துவிட முடியாது. தமது கற்றலில் எழும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அனைத்து வளங்களும் மாணவரிடத்து காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறமுடியாது. இந்நிலையில் ஆசிரியரது அறிவுறுத்தல் அழுத் தங்கள் தவிர்க்க முடியாது வேண்டப்படுகின்றன. ரோஜர்சின் முன்மொழிவுகளுக்குத் திறனாய்வுகளும் பொருத்தமான திருத்தங் களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான குறைபாடுகள் ரோஜர்ஸ் மீது சுட்டிக்காட்டப்-பட்டாலும், கற்பித்தலிலும், சீர்மியத்திலும் அவர் ஆழ்ந்து வலியுறுத்திய ஒத்துணர்வு (Empathy) என்ற எண்ணக்கரு வலுவான இடத்தைப் பெற்றுள்ளது. மாணவரையும், சீர்மியநாடிகளையும் அவர் "வேண்டுனர்" (Client) என்ற நிலைக்கு உயர்த்தி அவர்களைத் தனித்துவமுள்ள நடுவன் நிலைக்கு மேலோங்கச் செய்தமை நடைமுறைப் பயன்தரக்கூடிய சீர்மிய நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் மாணவரின் அகமோதலைக் குவியப்படுத்திய ஏ.எஸ்.நீல்

## (A.S.NEILL) (1883-1973)



புதிய கல்வியியல் சிந்தனை வளர்ச்சியில் ஏ.எஸ்.நீலுக்கு தனித்துவமான இடம் உண்டு. இஸ்கொத்திலாந்தின் வாழ்க்கை முறையும், ஆசிரியராக இருந்த அவரது தந்தையார் தந்த கல்வி-யியல் ஊட்டங்களும், ஆசிரியராக இருந்து தாம் பெற்ற அனுபவங்களும், கல்வி பற்றிய அழுத்தமான சிந்தனைகளை முன்வைப்பதற்குரிய பிற்குவி நிலைகளாக அவருக்கு அமைந்தன. கல்வியியலில் நேர்நிலைப் பண்புகளை அதீதமாக வலியுறுத்திய இவர் எடின்பறோ பல்கலைக் கழகத்திலே தனது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு அரசர் அல்பிரட் பாடசாலை என்ற புதிய பரிசோதனைப் பாடசாலை ஒன்றிலே சிறிதுகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

தன்னை உருவாக்கிய பாரம்பரியமான கல்வி முறைமையை உதறித்தள்ளி, வித்தியாசமானதும் புதுவிதமானதுமான கல்வியமைப்பை உருவாக்க வேண்டுமென்ற ஆதங்கம் அவரிடத்தே விசையுடன் முகிழ்த்தெழுந்தது. ஜேர்மனிய நாட்டில் உள்ள டிறிஸ் டென் என்னுமிடத்தில் உருவாக்கப்பட்ட முற்போக்குப் பாடசாலையில் 1923ஆம் ஆண்டு இவர் ஆசிரியராகச் சேர்ந்தார். உள்ளூர் மக்களுக்கும் அந்தப் பாடசாலைக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக வியன்னாவுக்கு அண்மையில் உள்ள கைவிடப்பட்ட ஒரு மடாலயத்துக்கு அது மாற்றப்பட்டது. 1924ஆம் ஆண்டில் இங்கிலாந்-துக்கு மீண்டு வந்த அவர் சம்மர் ஹில் என்ற இடத்திலே புதியதொரு பாடசாலையை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடசாலையிலே அவர் கல்வியியல் தொடர்பான தமது முற்போக்குச் சிந்தனைகளை நடைமுறைப்படுத்தலானார். ஆசிரியரின் எதேச்சாதிகாரக் கட்டுப்பாடுகளை நீக்குதலும், மாணவர்களுக்கு விடுதலையளித்தலும் அவரது மேலோங்கிய குறிக்கோள்களாக அமைந்தன. 1927ஆம் ஆண்டில் அவர் தமது பாடசாலையை லெய்ஸ்டன் என்ற இடத்துக்கு மாற்றினார். அவர் உருவாக்கிய இந்தப் பாடசாலை ஆங்கிலம் பேசும் உலகின் ஒரு முற்போக்குப் பாடசாலையாகக் கருதப்பட்டது.

தாம் எழுதிய இருபது நூல்கள் வாயிலாக அவர்தமது கல்விக்கருத்துக்களை விரிவாக விளக்கினார். மாணவரின் சுயாதீனத்துக்கும் விடுதலைக்கும், தன்னிச்சையான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் தந்த அவர் எந்தவயதுப் பிள்ளையாக இருப்பினும் பாடங்களுக்கு வருகை தருதல் கட்டாயத்துக்கு உள்ளாக்கப்படாதிருத்தல் வேண்டுமென வலியுறுத்தினார். பாடங்களுக்கு வருகை தருதல் அவர்களது விருப்பத்துக்கு உரியதாக இருத்தலை வழங்குதலே பொருண்மை கொண்ட செயற்பாடாக இருக்கும். கற்பதற்கு ஆயத்தமாக இருக்கும் பொழுது தாம் எவ்வாறு செயற்பட வேண்டுமென்ற தெளிவு மாணவர்களிடத்தே பொருத்தமான வகையில் முகிழ்த்தெழுமென அவர் நம்பினார்.

பாடசாலையில் வழங்கப்படும் புற அழுத்தங்களால் மாணவர்கள் மகிழ்ச்சியை இழந்துவிடுகின்றனர். மகிழ்ச்சி மனத்திலே நிறைவு பெற்று நிற்கும் பொழுதுதான் கற்றலும் மேலோங்கிச் செல்லும். சிக்மன்ட் பிராய்டின் கருத்துக்களால் கவரப்பட்டிருந்த இவர், அதனை அடியொற்றிய கற்றலையும் கற்பித்தலையும் உருவாக்க முயன்றார். மாணவரின் ஆழ்மனத்திலே நிகழும் மோதலை பெற்றாரிடமோ அதிகாரிகளிடமோ வெளிப்படுத்தி விடமுடியாது. இந்நிலையில் உள்ளார்ந்த அக மோதல் மேலோங்கி தம்மைத்தாமே வெறுக்கும் நிலைக்குத் தள்ளி விடுகின்றது. இந்நிலையில் "கற்குமாறு" அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் திணிப்புக்கள் மேலும் சிக்கலான நிலையை உருவாக்கி விடுகின்றது.

ஒருவருக்கு நிறைவான சுதந்திரம் வழங்கப்படும் பொழுதுதான், உள்ளார்ந்த உணர்வுகள், நல்வாழ்வுக்குரிய உணர்வுகளாக எழுகை பெறும். கல்விச் செயல்முறையின் வழியாக மிகையான தகவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்குத் தரப்படுகின்றன. ஆனால் அத்தகைய பெருந்திரளான அறிவு உள்ளார்ந்த மன உணர்வுகளுக்கு நிறைவு தருவதாக அமையவில்லை. மனவெழுச்சி வெளிப்பாடுகளுக்கு சுதந்திரமளிக்கப்படும் பொழுது, அது கற்றலைத் தானாகவே கவனித்துக்கொள்ளும் என்பது அவரது அனுபவம்.

அவரது சம்மர் ஹில் பாடசாலையில் மரபுவழிப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆனால் அவை வலியுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படுதல் இல்லை. அழகியற் பாடங்கள் கலைத் திட்டத்தில் வேண்டியளவு இடம்பெறச் செய்யப்பட்டன. அவை ஆக்கத்திறன், கற்பனை, மற்றும் நல்வாழ்வுக்குரிய மனவெழுச்சிகளைக் கட்டியெழுப்புதலுக்குத் துணைநிற்கும் என்று கருதினார். இந்தப் பாடங்களூடாக மேற்கொள்ளப்படத்தக்க உளப்பிணி நீக்கல் திறன்களையும் அவர் அறிந்துகொண்டார். வரையறுக்கப்பட்ட புலமைப் பாடங்களிலே பின்னடைவு கொண்ட மாணவர்கள் அழகியற் பாடங்களின் வழியாகத் தமது ஆற்றல்களை வெளிக்கொண்டுவர முடியும் என அவர் நம்பினார்.

சிறுவர்கள் உள்ளார்ந்த மனவோட்டங்கள் புத்திசாலித்தனமுள்ளவையாயும், நடப்பியற் பண்பு கொண்டவையாயும் காணப்படும். வளர்ந்தவர்கள் அவற்றிலே தலையிடாவிட்டால் மாணவர்கள் உரிய முறையிலும், நிறைவாகவும் தமது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள முயல்வார்கள். மாணவர்களுக்குச் சமயக் கல்வியையும் அறக்கல்வியையும் வழங்கவேண்டியதில்லை. தம்மிடமுள்ள நற்பண்புகளை மாணவர்கள் வளர்த்துக்கொள்வதற்கு அறக்கல்வி தடையாகவே யுள்ளது.

தன்னை ஒழுங்குபடுத்தியும் நெறிப்படுத்தியும் மாணவர்கள் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது தண்டனைகள் எதிர்விளைவுகளையே உண்டாக்கி விடுகின்றன. அப்படியானால் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் ஏற்படும்பொழுது எவ்வாறு கட்டுப்படுத்துதல் என்ற வினா எழலாம். அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தி ஆசிரியராயினும் மாணவராயினும் அனைவருக்கும் ஒரே வாக்கு என்பதை நடைமுறைப்படுத்தி, மக்களாட்சி மயப்படுத்தும் பொழுது ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு இல்லை. தவறுகள் செய்யும் மாணவர்களுக்கு என்ன செய்வது என்பது ஆசிரி யரால் தீர்மானிக்கப்படுதல் இல்லை. மாணவரையும் ஆசிரியரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கிய குழுவே மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கும், அவ்வேளையிற் கூட அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் மென்போக்கைக் கொண்டவையாகவே அமையும். எடுத்துக்காட்டாக சினிமாவுக்குப் போகவிடாது தடை விதித்தலைக் குறிப்பிடலாம். இந்த நடவடிக்கை அவரது பாடசாலை யில் வெற்றியைக் கொடுத்தது.

ரூசோவின் இயற்பண்புச் சிந்தனைகள் இவர் மீது செல்வாக்குச் செலுத்தியதாயினும், ரூசோவின் கருத்துக்களோடு இவர் முரண்பட்டுக் கொண்டார். ஆசிரியர் உருவாக்கிய சூழலிலேதான் ரூசோவின் எமிலிக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆனால் தாம் உருவாக்கிய சம்மர் ஹில் பாடசாலையில் தனி ஓர் ஆசிரியர் சூழலை உருவாக்குவதற்கு அனுமதிக்கப்படுதல் இல்லை. இங்கு ஆசிரியரையும் மாணவரையும் உள்ளடக்கிய மக்களாட்சிக் குழுவே சூழலை உருவாக்கிக் கொள்கின்றது. இதுவே உன்னதமான விடுதலையை வழங்கக் கூடியது.

தவறு செய்யும் மாணவர் மீது அன்பையும் பாசத்தையும் காட்டுதல் வாயிலாக அந்த மாணவரைத் தவறு செய்யாது திருத்தி நெறிப்படுத்த முடியும். இந்தச் செயல் செய்பவருக்கு வழங்கப்படும் ஒருவகை வெகுமதியாகின்றது. இந்நிலையில் வில்கெம்றிச் மற்றும் கோமர் லேன் முதலியோரது செல்வாக்குகள் நெயிலின் மீது விரவி இருந்ததாகக் கூறப்படுகின்றது.

சம்மர் ஹில் பாடசாலைக்கு சார்பானதும் எதிரானதுமான திறனாய்வுகள் இங்கிலாந்தில் முன்மொழியப்பட்டன. அதனை ஒரு பரிசுத்தமான இடம் (Holy Place) என ஒருசாரார் வாழ்த்திப் போற்றினர். அங்கு தமது சிறார்களை அனுப்புதல் அபத்தம் என எதிர்ப்பாளர் கூறினர்.

தமது வாழ்நிலை அனுபவங்களையும் சிக்மன்ட் பிராங்டின் உளப்பகுப்புவாத அனுபவங்களையும் அடியொற்றியே நெயில் தமது கல்விச் சிந்தனைகளை உருவாக்கினார். அவரது சிந்தனைகளிலே கல்வியியல் எண்ணக்கருக்கள் சார்ந்த தெளிவின்மை இருத்தலும் குறிப்பிடத்தக்கது. விடுதலை (Freedom) செய்வதற்கான அனுமதி (Licence) என்ற இரு எண்ணக்கருக்களையும் நுண்ணியதாக வேறுபடுத்த முடியாத பொதுமைப்பாடுகளும் அவரிடத்தே காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலான கல்விச் செயற்பாடுகளையும், குவியலான தனியாள் நடத்தைகளையும் அவர் அளவுக்கு அதிகமான முறையில் எளிமைப் படுத்தியும், பொதுமைப்படுத்தியும் விட்டார் என்ற திறனாய்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. அவரது பட்டறிவு முனைப்புக்கள் மேம் பட்டவையாய் இருக்கின்றன. அறிவின் இயல்பு, கற்றல், ஒழுக்கம், மனித இயல்பு, சமூகம் முதலாம் துறைகளில் உயர்நிலையான விளக்கங்களைப் பெறுவதற்கு வாழ்நிலை அனுபவங்களுடன் ஒழுங்கமைந்த மெய்யியற் கோட்பாடுகளையும், கல்வியியற் கோட்பாடுகளையும் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. இவை தொடர்பான இடைவெளிகள் நெயிலின் அணுகுமுறைகளிலே காணப்படுகின்றன.

அகமன மோதல்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதே வேளை அறிவின் உள்ளடக்கத்தைக் கொண்ட புலமைப்பாடங்க ளைக் கற்றுக்கொடுப்பதில் போதுமான விசையை அவர் பிரயோகிக் கவில்லை என்ற திறனாய்வும் முன்வைக்கப்படுகின்றது. "எதிர்ப்புல மைப்பாங்கு" அவரது பாடசாலையில் நிலவியதா என்ற வினாவும் எழுப்பப்படுதல் உண்டு. "பாடநூல்கள் முக்கியத்துவம் குறைந்தவையா?" என்ற வினாவும் அவர் மீது விடுக்கப்பட்டுள்ளது.

சிக்கல்மிக்க கல்விப் பிரச்சினைகள் அனைத்திற்கும் அவரது பாடசாலை தீர்வுகளைத் தரவேண்டும் என்று கேட்பதும் சரியாகாது. அந்தப் பாடசாலையிலே படித்தவர்களிடம் செவ்விகாணப் பெற்ற- வேளை பல நேர்ப்பண்புகளை அவர்கள் குறித்துரைத்து விதந்து பாராட்டினார்கள். தமக்குக் கிடைத்த சுதந்திரத்தினால், தம்மிடத்தே சகிப்புத்தன்மை மேம்பட்டு வளர்ந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். தமது வாழ்க்கையின் இக்கட்டான படிநிலைகளைத் தாண்டுவதற்கு அந்தப் பாடசாலை உதவியதென வேறு சிலர் குறிப்பிட்டனர். சில மாணவர்களின் கருத்து ஆளுமை உளவியல் தொடர்புடையதாக அமைந்தது. அதாவது, அந்தப் பாடசாலை புறமுகப்படுத்துனர்க்கு (Extroverts) உதவியமை போன்று அகமுகப்படுத்துனர்க்கு உதவவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

பாரம்பரியமான பாடசாலைச் செயல்முறையை வேறுபடுத்தும் மாற்று வகையான கருத்தை இவரது செயற்பாடுகள் முன்வைத்தன. அந்த மாற்றுவகைப்பண்புகள் தீவிரத்தன்மை கொண்டவையாக அமைந்தன. சம்மர்ஹில் பாடசாலைக்கு எதிரான பல முன்மொழிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்துக் கல்வியின் தரத்தைப் பாதுகாக்கும் பணிமனை (Ofsted) 1999ஆம் ஆண்டில் முன்வைத்தது. பல்வேறு மாற்று நடவடிக்கைகளை வலியுறுத்தி அந்தப் பணிமனை கட்டளைகளை விதித்தது. அந்தக் கட்டளைகளுக்கு எதிரான நீதிமன்ற வழக்கில் பாடசாலையே வெற்றிபெற்று தனக்குரிய அடிப்படைக் கோட்பாடுகளை நிலைநிறுத்திக் கொண்டது.

வழக்கு முடிவுகள் 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்தன. நீலின் மறைவுக்குப் (1973) பின்னரும் அவரது சிந்தனைகள் அங்கு வழுவாது கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. அவர் எழுதிய "திகழ் விடுதலைச் சிறுவர்" (The Free Child), "அனுமதியல்ல விடுதலை" (Freedom not Licence), "சமர்ஹில் பற்றிப் பேசுதல்" மற்றும் தமது தொண்ணூறு ஆண்டு வாழ்க்கைக் காலம் பற்றி எழுதிய நூல் முதலியவற்றில் அவரின் கல்விக் கருத்துக்கள் பதிவு கொண்டுள்ளன.


முரண்பாடுகள் கூர்ப்பு அடையும் பொழுது மாற்று வகையான கருத்துக்களும், மாற்று வகையான சிந்தனைகளும் தோன்றுதல் வெளிப்படையான சமூக நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்குக் கல்வியை முன்மொழிந்த ஹரோல்டு றக்

## (HAROLD RUGG) (1886-1960)



ஐக்கிய அமெரிக்காவில் முற்போக்குக் கல்வியை முன்னெடுத்தவர்களுள் ஹரோல்டு றக் தனித்துவமானவர். "சமூக முன்னேற்றத்தில் ஆழ்ந்த கரிசனையுடைய நிறுவனமாகப் பாடசாலைகள் இயங்க வேண்டும்" என்ற சிந்தனையுடன் தொடர்புபட்டு நின்றவர். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மச்சூட்சில் பிறந்த இவர் கல்வி மீதும் ஆசிரி யத்துவத்தின்மீதும் கொண்ட ஈடுபாடு காரணமாக இலினோய்ஸ் பல்கலைக்கழகத்தில் இணைந்து கல்வியியலிலே கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கல்வியை முற்றுமுழுதாக விஞ்ஞானச் செயற்பாடுகளுக்குச் சரணடையச் செய்யாது தனிமனித ஆக்கமலர்ச்சியுடனும் கலைகளுடனும் ஒன்றிணைத்து முன்னேற்றம் பெறச் செய்தல் வேண்டும் என்பது இவரது முன்மொழிவாக அமைந் தது. நியுயோர்க் பல்கலைக்கழகம், சிக்காக்கோ பல்கலைக்கழகம், கொலம்பிய பல்கலைக்கழகம் முதலியவற்றில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் இவரது கல்விச் சிந்தனைகளுக்குரிய தளங்களாக அமைந்தன.

ஐக்கிய அமெரிக்காவின் முற்போக்குக்கல்விச் செயற்பாடுகள் சிறாரை நடுநாயகப்படுத்தி நின்றன. முன்திட்டமிடப்பட்ட கறாரான கலைத்திட்டச் செயற்பாடுகளை நோக்கிப் பொறி முறையாக நகர்ந்து செல்வதைக் காட்டிலும், மாணவரது ஆக்கத்திறன்களையும் உள்ளுணர்வுகளையும் வளர்க்க வேண்டுமென்பது றக் அவர்களின் நோக்கமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் சமூக மாற்றத்துக்குரிய முகவராக தொழிற்படல் வேண்டுமென இவர் வலியுறுத்தினார். கைத்தொழிற் சமூகத்தில் வெகுஜனக் கல்வியின் பொருத்தப்பாடு பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள் இவரிடத்தே காணப்பெற்றன. நவீன கைத்தொழிற் சமூகத்தால் உருவாக்கம் பெற்ற புதிய வாழ்க்கை முறைக்கேற்ற கல்வி மீது அவர் கூடுதலான கவனத்தை மேற்கொண்டார். நடைமுறையிலிருந்த கல்வி புதிய அறைக்கூவல்களுக்கு முகம்கொடுக்கத்தக்கவாறு அமைக்கப்-படவில்லை. குறைபாடுகளை உள்ளடக்கிய பரிமாணங்களுடன் அது செயற்பட்டுக்கொண்டிருந்தது. புதிய சமூகத்தை ஒழுங்குற விளங்கிக்-கொள்ள முடியாத துண்டாடப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டதாகக் கல்வி முறைமையும் கலைத்திட்டமும் அமைந்திருந்தன.

கலைத்திட்டத்தில் இடம்பெற்றிருந்த உடல்சார் கல்வியும், ஆக்கத்தொழிற்பாடுகளும், கணிதமும் மற்றும் திறன்களுமே ஓரளவு திருப்தி தரக்கூடியவையாகக் காணப்பட்டன. புதிய சமூக விஞ்ஞா னக்-கல்வியின் தேவையை அவர் வலியுறுத்தினார். அறிவுத்துறை களின் ஒன்றிணைப்பு அவரது வற்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டது. சமகாலப் பிரச்சினைகள், செல்வத்தின் சமனற்ற பங்கீடு, பொருளாதாரத் திட்டமிடலின் தேவை, விவசாயத்துறையின் மந்தநிலை, பண்பாட்டுப் புரிந்துணர்வும் தொடர்புகளும், சர்வதேச ஒத்துழைப்பு முதலியவை கலைத்திட்டத்தில் இணைக்கப்படல் வேண்டுமென அவர் வலியுறுத்தினார். மரபு வழியான வரலாறு மற்றும் புவியியல் பாடங்களுக்குப் பதிலாக இவற்றைக் கற்பிக்கும் பொழுது நவீன உலகின் அறைகூவல்களுக்கு மாணவரால் இலகுவாக முகம்கொடுக்கப்பட முடியும்.

துண்டாடப்பட்ட தகவல்களைக் கற்றுக்கொள்வதனால் மாணவர்களுக்கு உரிய பயன்கிடைக்கப்போவதில்லை. எண்ணக்-கருக்களை ஆழ்ந்து கற்றலும், பொதுமைகாணும் திறன்களை வளர்த்துக்-கொள்ளலும் அவசியமானவையென்றும் அவர் கருதினார். கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கென அவரால் எழுதி வெளியிடப்பட்ட பாடநூல்கள் இலட்சக்கணக்கிலே விற்பனையாகின. ஒன்றிணைப்பும் சமூகத்துக்கு வேண்டப்படும் புதிய கருத்துக்களும் அவற்றில் இடம்பெற்றிருந்தன.

இவரது அணுகுமுறைகள் முதலாளித்துவத்துக்கு எதிரானவை யாயும் அமெரிக்காவின் மரபுவழி நியதிகளுக்கு மாறுபட்டவையாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன. அதனால் பழைமைவாதிகளினதும், பிற்போக்குவாதிகளினதும் எதிர்ப்புக்களுக்கு இவரது செயற்பாடுகள் உள்ளாக்கப்பட்டன.

கல்விவாயிலாக உண்மைகளை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும் என்பது அவரது இலட்சியமாக இருந்தது. நவீன பிரச்சினைகளைக் குவியப்படுத்தி அவர் எழுதிய பாடநூல்கள் பிற்போக்காளர்களின் கண்டனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. ஒரு புதிய சமூக ஒழுங்கமைப்பைக் கல்வியாற் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை அவரிடத்து மேலோங்கியிருந்தது. அதற்குரிய செயற்பாடுகளையும் எழுத்தாக்கங்களையும் அவர் முன்னெடுத்து வந்தார். ஐக்கிய அமெரிக்காவில் ஆழ்ந்து வளர்ச்சிபெற்ற பிற்போக்குச் சிந்தனைகளுக்கு எதிராக நீச்சலடிக்கும் போக்கினை துணிவுடன் மேற்கொண்டு வந்தார். தொடர்ந்து அவர் முற்போக்கான சமூகச் சிந்தனைகள் பற்றியும் அரசியற் சிந்தனைகள் பற்றியும் துணிவுடன் எழுதி வந்தார். சமூகச் சிந்தனைகளையும் அரசியற் சிந்தனைகளையும் கல்வியுடன் ஒன்றிணைக்க முயன்றார்.

முற்போக்கான கல்விச்சிந்தனையாளர்கள் மத்தியில் றக் அவர்கள் முன்னோடியாக விளங்கினார். இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவிலே தோன்றிய சமூக மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கல்விச்செயல்முறையை உருவாக்கும் தாராண்மை வாதம் அவரிடத்து மேலோங்கியிருந்தது. அவருடைய எழுத்தாக் கங்கள் கல்வியிலே புது மலர்ச்சியை வேண்டி நின்ற ஆசிரியர்களி டத்துப் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தலாயின. அவற்றினூடாக திறனாய்வு நோக்கும், பொருத்தமான தீர்ப்புக் கூறும் திறன்களும் ஆசிரியர்களிடத்தே வளர்க்கப்படலாயின. ஆசிரியர்கள் றக் அவர்களை நவீனகல்வியின் முன்னோடியாகத் தரிசிக்கத் தொடங்கினர்.

ஆக்கத்திறன் மிக்க கலைத்திட்டத்தை உருவாக்குதலிலும், ஆக்கத்திறன் கொண்ட ஆசிரியர்களை உருவாக்குதலிலும் றக் அவர்களின் கல்வியியல் எழுத்தாக்கங்கள் வினையாற்றலுடன் செயற்படலாயின.

சமூகத்துக்குப் பொறுப்பியம் கூற வல்ல கலைத்திட்டத்தை உருவாக்குவதிலும், கல்வியியலாளர்களை உருவாக்குதலிலும் தீவிர கவனம் செலுத்தினார். கல்வி பற்றிய ஒடுங்கிய கண்ணோட்டத்தை விரிவுபடுத்துவதற்குரிய விசைகள் அவரது கல்வியியல் எழுத்தாக் கங்களிலே காணப்பட்டன. நூல்கள், கட்டுரைகள் எழுதுதலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் நின்றுவிடாது, கற்பித்தலுக்குரிய முன்னேற்றகரமான சாதனங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டார். கொலம்பியாப் பல்கலைக்கழகத்து ஆசிரியர் கல்லூரியில் உள்ள மில்பாங் நினைவு நூலகத்தில் அவர் தயாரித்த போதனைச் சாதனங்கள் இன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

றக் அவர்களும் ஜோன்டுயி அவர்களும் சமகாலத்திலே வாழ்ந்தவர்கள். இருவரதும் கல்விச் சிந்தனைகளிலே பல ஒப்புமைகள் காணப்படுகின்றன. இருவரும் கல்வியின் நடைமுறைப் பயனுடைமையை வலியுறுத்தினர். மாறிவரும் உலகின் அறைகூவல்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்குதலில் கல்வியின் முக்கியத்துவத்தை இருவரும் முன்மொழிந்தனர். அறிவினதும், மெய்மையினதும் சார்பு நிலைகள் இருவராலும் வற்புறுத்தப்பட்டன. ஆனால் றக் அவர்கள் கல்வியின் சமூகச் செயற்பாட்டினை பொறுத்தவரை தீவிரத்தன்மைகள் கொண்டவராகக் காணப்பட்டார்.

1930 ஆம் அண்டளவில் அமெரிக்கக் கலை இலக்கிய உலகில் வளர்ச்சிபெறத் தொடங்கிய **"சமூக நடப்பியல்"** (Social Realism) சிந்தனைகளுக்கும் றக் அவர்களின் சமூக நோக்குக் கல்விச் சிந்தனைகளுக்குமிடையே ஒப்புமைகள் காணப்படுகின்றன. 1930 ஆம் ஆண்டில் அமெரிக்க ஓவியர்கள் வறுமை, ஊழல், வேலையின்மை, நீதிமறுப்பு போன்ற கருத்துக்களை உள்ளடக்கிய ஓவியங்களை வரைந்து சமூக நடப்பியல் அணுகுமுறைக்கு வலுவூட்டினர். முதலாளியத்தின் விகாரமான போக்குகளால், சமூகத்தில் ஏற்பட்ட பன்முகத்தாக்கங்களைக் கல்வியால் எவ்வாறு அணுகுதல் என்பதே றக் அவர்களுக்குரிய முக்கிய பிரச்சினையாக அமைந்தது.

இவர் தனியாகவும், ஆய்வாளர்களுடன் இணைந்து கூட்டாகவும் பல நூல்களை எழுதினார். கல்விசார்ந்த எழுத்தாக்கங்களிலும் கல்வியோடிணைந்த பிற துறைகள் சார்ந்த எழுத்தாக்கங்களிலும் ஈடுபட்டார்.

"குழந்தையை மத்தியாகக் கொண்ட பாடசாலை", "அமெரிக்காவின் பண்பாடும் கல்வியும்", "அமெரிக்க வாழ்க்கையும் பாடசாலைக் கலைத்திட்டமும்", "அமெரிக்கக் கல்வியின் அடிப்படைகள்", "அமெரிக்க வரலாறு பற்றிய கருத்துக் குறிப்புக்கள்", "தேசப்பட இடநிலையங்களிற் புறவயக்கற்கை முறைமை" "அந்தமனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொள்வார்கள்" முதலிய நூல்களில் இவரது கருத்தாடல்கள் வெளிவந்தன.

மூன்றாம் உலக நாடுகளின் கல்வி மற்றும் கலைத்திட்டக் கற்கைகளில் ஜோன் டுயி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கரோல்ட் றக் அவர்களுக்குக் கொடுக்கப்படாமை ஒரு கல்விப் புதிராகவே உள்ளது. ஜோன் டுயி அவர்களது கல்விச் சிந்தனைக ளையும் செயற்பாடுகளையும் விரிவாக விளங்கிக் கொள்வதற்கு றக் அவர்களையும் தொடர்புபடுத்திக் கற்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜோன் டுயி அவர்களது கல்விக் கொள்கையினைத் திறனாய்வுக்கு உட்படுத்தியவர்கள் வரிசையில் றக் அவர்களுக்குச் சிறப்பான இடமிருத்தலையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

ஜோன் டுயி முன்மொழிந்த பரிசோதனைவாதம் (Experimentalism) **"அறிவதற்குரிய ஒரே வழிமுறை"** என்று கூறப்படுதல் (The Sole Method of Knowing) மிகவும் ஒடுங்கியதும், சுருங்கியதுமான ஓர் அணுகுமுறை என்ற திறனாய்வை முன்வைத்த றக் அவர்கள், டுயி பற்றிய திறந்த ஆய்வுகளுக்கும் பரிசீலனைகளுக்கும் வழிவகுத்தார்.

ஒன்றிணைந்த கலைத்திட்டம், செயன்முறைக் கலைத்திட்டம், முதலியவற்றை உருவாக்குவதில் இவரது நடவடிக்கைகள் சமூகம் தழுவிய முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன. சமூகத்தையும் சமூகப் பிரச்சினைகளையும் கலைத்திட்டம் உட்கொண்டிருத்தல் வேண்டும் என்ற இவரது மீள வலியுறுத்தல், கல்வி நோக்கில் பயனுடைய முயற்சியாக அமைகின்றது. தெளிந்த சிந்தனையு-டையவர்கள், சமூகத்தூண்டிகளுக்குத் துலங்கலை ஏற்படுத்தக் கூடியவர்கள், பயமற்றவர்கள், நம்பிக்கை உடையவர்கள் என்போரைக் கலைத்திட்டத்தினால் உருவாக்கப்படல் வேண்டுமென்பது இவரது ஊன்றிய விருப்பாக அமைந்தது. இதனை மரபு வழியான பாடங்களை உள்ளடக்கிய கலைத்திட்டத்தினால் நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்ற அவதானிப்பை அவர் முன்மொழிந்தார். பாடங்களை மத்தியாகக் கொண்ட கலைத்திட்டம் முக்கியமன்று. சமூகத்தையும், மாணவரையும் மத்தியாகக் கொண்ட கலைத்திட்டமே ஏற்புடையது என்பதை வலியுறுத்திய றக் அவர்களின் கலைத்திட்டச் சிந்தனைகள் "பயனுடைமை" என்ற ஒடுங்கிய பாதையினையே வலியுறுத்தியது என்ற திறனாய்வும் முன்வைக் கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையே கல்வியின் அடிப்படை என வலியுறுத்திய ஹேர்பட் றீட் (HERBERT READ) (1893-1968)



கல்வியியலாளர், திறனாய்வாளர், கவிஞர், சட்டத்தரணி என்ற பல பரிமாணங்களைக் கொண்ட இவர் அறுபது நூல்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் முதலாவது நுண்கலைத்துறைப் பேராசிரியராக இருந்த இவரது அனுபவங்களும், புகழ்பூத்த றவுட்லெஜ் கேகன்போல் வெளியீட்டு நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த பட்டறிவும் இவரது கல்வியியற் சிந்தனைகளின் ஆக்கங்களுக்குத் துணையாக அமைந்தன.

கலைத்திட்டத்தில் அழகியற் கல்வியின் முக்கியத்துவம் இவரால் வலியுறுத்தப்பட்டுள்ளது. "ஓவியக் கலையூடான கல்வி" என்ற நூல் அழகியலுக்கும் கல்விக்குமுள்ள தொடர்புகளை மீள வலியுறுத்தியது. அறிவொளி பெற்ற சமூகத்தின் அதியுன்னதமான இணைப்பாக இருப்பது கலை என்பது இவரது கருத்தாகும். அறிவொளி பெற்ற சமூகத்தை உருவாக்குவதில் அழகியற் கல்வி மிகமுக்கியமான வகிபங்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சமூகத்தின் முடிவற்ற வன்செயல்களையும் அடாத்துக்களையும், எதிர்கொள்வதற்குக் கலைகளிலே பொதிந்துள்ள ஆக்கத்திறன் மற்றும் கற்பனை மலர்ச்சி சார்ந்த வலுக்களைப் பயன்படுத்தல் வேண்டும் என்பது றீட்டினுடைய கருத்தாக அமைந்தது. மனிதரிடத்தே உட்பொதிந்துள்ள அக விழுமியங்களைப் பிரக்ஞை கொள்ளச் செய்வதற்குக் கலைஞர்களே பொருத்தமான வகை மாதியினராக இருக்கின்றனர். கலைஞர்களும், ஆசிரியர்களும் சமூகத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைகளை முனைப்பெழச் செய்யும் குறுகிய உணர்வுகளை நிலைமாற்றம் செய்வதற்குத் துணை நிற்றல் வேண்டுமென வலியுறுத்தினார்.

அழகியற் கல்விக்குரிய கோட்பாட்டு அடிப்படைகளை அவர் தாம் எழுதிய "ஓவியக்கல்வியினூடான கல்வி" என்ற நூலிலே தந்துள்ளார். அந்நூலில் இடம்பெற்றுள்ள "கற்பனையும் புலக் காட்சியும்", "ஒருங்கிணைப்பின் நனவிலிப்பாங்குகள்", "ஒழுக்கவியல் மற்றும் அறவியலுக்குரிய அழகியல் அடிப்படைகள்" முதலாம் கட்டுரைகள் அழகியற் கல்விக்குரிய கோட்பாட்டு அடிப்படைகளைத் தந்துள்ளன. அழகியலுக்கும் உளவியலுக்குமுள்ள தொடர்புகளை வலியுறுத்தும்வேளை நடத்தைவாத அணுகுமுறைகளை முக்கியத்துவப்படுத்தி உளப்பகுப்பு உளவியலையும் தேவைக்கேற்ற படி பயன்படுத்தியுள்ளார்.

சிறாரின் ஓவியங்களின் பன்முகப்பட்ட முக்கியத்துவம் இவரால் வலியுறுத்தப்படுகின்றது. சிறாரின் நடத்தைகளை விளங்கிக் கொள்வதற்கு அவர்களால் வரையப்படும் ஓவியங்கள் எத்துணை முக்கியமானவை என்பதைப் புலப்பாடு கொள்ளச் செய்தார். நவீனத்துவம் பெற்று விரைந்து வளர்ச்சியுற்ற பிரித்தானியாவின் கைத்தொழில் வளர்ச்சிக்குரிய வடிவமைப்புக்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், மறுபுறம் தனது கவிதை அழகியற் கோட்பாட்டைப் பொறுத்தவரை பழைமையிலும் செவ்வியற் (Classicism) பண்புகளிலும் தோய்ந்து நின்றார்.

ஜோன் ரஸ்கின் மற்றும் வில்லியம் மொறிஸ் ஆகியோரின் எழுத்தாக்கங்கள் மீது இவருக்கு மிகுந்த ஈடுபாடு காணப்பட்டது. கலைக்கும் வாழ்க்கைக்குமிடையே காணப்படும் இடைவெளிகள் நீக்கப்படல் வேண்டும் என்ற அவர்களது கருத்துக்களுடன் ஒன்றுபட்டு நின்ற றீட் சமூக விழுமியங்களைக் கண்டறிவதற்கு கலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சமூக அவலங்களை நீக்கிக் கொள்வதற்கு கலைகளின் உட்பொதிந்துள்ள விழுமியங்கள் துணையாக இருக்குமென்பது அவரது கருத்துக் கலைகள் வழியாகவே நல்ல சமூகத்தை உருவாக்க முடியும் என்ற கருத்து மீள வலியுறுத்தல்களுக்கு உள்ளாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் தொடர்ச்சியையும், மரபுகள் மற்றும் வழமைகளின் இங்கிதங்களையும்தமது கவிதைகளிலே புனைந்துரைத்தார். இவ்வாறாகப் பழைமையிலே காலூன்றி நின்ற இவர் கட்புலக்கலைகளில் கியூபிசம், சர்ரியலிசம், அருவ வெளிப்பாட்டியல் முதலியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கலைஞர்களது ஊக்கலுக்கும் கலைப்படைப்பின் கருத்தாடலுக்குமுள்ள தொடர்புகள் இவரால் ஆழ்ந்த பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. கலையாக்கங்களுக்கும் கூட்டு நனவிலிக்குமுள்ள தொடர்புகளை கார்ல் யுங் தமது உளப் பகுப்பு ஆய்வுகளின் வழியாக வெளிப்படுத்தினார். அந்த அணுகுமுறை றீட் அவர்களுக்கும் ஏற்புடையதாக அமைந்தது. கலைப் படைப் புக்களிலே காணப்படும் புத்தாக்கங்களை விளங்கிக் கொள்ளவும், சுவைத்துக் கொள்ளவும் கல்வியும் கற்பித்தலும் உதவுதல் வேண்டு மென்பது இவரது கருத்து.

இவர் சமூக அழகியலுக்கு முக்கியத்துவம் வழங்கினார். கலையின் உருவாக்கத்திலே கலைஞரின் ஆளுமை முக்கியத்துவம் பெறுகின்றது. கலைஞரின் ஆழ்மன உணர்வுகள் கலைப்படைப்பின் வழியாக வெளிவருகின்றன. ஆழ்மனப் புதையல்களைச் சமூகம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையிலே புடமிட்டுக் கலைஞர்கள் வெளிப்படுத்துகின்றனர். கலைப்படைப்பின் உருவாக்கம் கற்பனையுடனும் கண்டுபிடிப்புக்களுடனும் தொடர்புடையதாக இருப்பதனால் கல்வியில் அதன் முக்கியத்துவம் தவிர்க்க முடியாததாகவுள்ளது.

கலைப்படைப்புக்கள் சுவையுடன் தொடர்புடையவை. கலையின் நியமங்கள் சுவையைத் தூண்டிவிடுகின்றன. நுகர்வோரின் கலை ஈடுபாட்டுக்குச் சுவையே அடிப்படையாக அமைகின்றது. சிந்தித்தலும் நியாயித்தலும் கலை அனுபவத்தின் வாயிலாகவும், சுவைத்தல் வாயிலாகவும் வெளிவருகின்றன. கலையினூடாக வெளிப்படும் சிந்திக்கத் தூண்டும் செயற்பாடு மாணவரது அறிவு வளப்பாட்டுக்குத் துணையாக அமையும்.

றீட் இலக்கியத் திறனாய்வுத்துறையிலும் கவனம் செலுத்தினார். அத்திறனாய்வு அனுபவங்களும் அழகியற் கல்விக்குரிய அவரின் பங்களிப்பை வளப்படுத்தின. கலைப்படைப்புப் பற்றிய விளக்கமும், வியாக்கியானமும், தீர்ப்புக் கூறலும் திறனாய்வில் முன்னெடுக்கப்படுகின்றன. றீட் அவர்கள் புலமைநிலைத் திறனாய்வாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினார். அவரது கல்விப் பின்புலம் புலமைநிலைத் திறனாய்வுக்கு வளமூட்டியது. அறிவு நோக்கிலும், புலமை நோக்கிலும் இலக்கியங்களை விளங்கிக்கொள்ளலும், மதிப்பீடு செய்தலும் அந்தத் திறனாய்வு மரபில் முன்னெடுக்கப்பட்டது. கலைப்படைப்புப் பற்றிய விளக்கமும் மதிப்பீடும், தீர்ப்புக்கூறலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பது புலமைநிலைத் திறனாய்விலே வலியுறுத்தப்படுகின்றது. இத்திறனாய்வில் மதிப்பீட்டுக்கும், தீர்ப்புக் கூறலுக்கும் அடிப்படையான நியாயங்கள் வரன் முறையாக வழங்கப்படும். றீட்டினுடைய அழகியற் கல்வி அணுகுமுறைகள் வரன்முறையான நியாயங்களை உள்ளடக்கியதாக கட்டுமானம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

றீட் எழுதிய பின்வரும் நூல்களில் அவரின் கல்விச் சிந்தனைகள் விரிவாக இடம்பெற்றிருந்தன.

"ஓவியக் கலையின் வழியான கல்வி", "காரணமும் மீக்கவர்ச்சி யியலும்", "இன்றைய ஓவியக்கலை", "நவீன ஓவியமும் சிற்பமும் பற்றிய கோட்பாட்டுக்கு ஓர் அறிமுகம்", "அப்பாவித் தனமான கண்" (The innocent eye), "பச்சைக் குழந்தை" (The Green Child), "சர்ரியலிசம்", "இலக்கியத்திறனாய்வு தொடர்பான கட்டுரைகளின் திரட்டு", "பண்பாட்டோடு நரகத்துக்கு" (To Hell with Culture), "ஓவியக்கலையின் அடிப்படை வேர்கள்", "ஓவியமும் கைத்தொழிலும்", "சமாதானக் கல்வி," "சமகால பிரித்தானிய ஓவியம்", "கட்டமைப்பு உருவமும் கருத்தும்", "சமகால அனுபவம்", "நவீன சிற்பங்களின் வரலாறு", "கலையின் தோற்றமும் வடிவமும்", "கலையும் அந்நியமாதலும்", "கவிதையும் அனுபவமும்".

கலைத்திட்டத்தில் கைத்தொழில் வடிவமைப்புப் பற்றிய அறிவை உட்பொதிய வைத்தலும் இவரின் முக்கியமான கல்வியியற் பங்களிப்பாகக் கருதப்படுகின்றது. யுத்த அழுத்தங்கள் காணப்படும் சூழலில் சமாதானக் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும் என்ற இவரது கருத்தும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சமாதானக் கல்வியின் பல்வேறு பரிமாணங்களையும் விளக்கி எழுதிய நூல் பாடசாலைக் கலைத்திட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

கலைத்திட்டத்திலே கவிதை கற்பித்தலையும், கவிதையின் அனபவங்களை மாணவர்களுக்குக் கையளிக்க வேண்டிய தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் வலியுறுத்தினார். கவிதையை மாணவர்கள் பொறிமுறை யாகக் கற்றுக்கொள்ளாது அனுபவங்கள் வழிக்கற்றுக் கொள்ள வேண்டிய தேவை உணர்த்தப்பட்டுள்ளது. கவிதை அனுபவங்கள் மாணவரின் வாழ்க்கைநிலை அனுபவங்களுக்கு மாற்றப்பட முடியும். நல்ல நடத்தைகளையும் நல்ல ஒழுக்கத்தையும் மாணவர்க ளிடத்து வளர்த்தெடுப்பதற்குக் கவிதை அனுபவங்கள் உறுதுணையாக அமையும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியற் கல்வி, சிறப்பாக ஓவியக் கல்வியும், கவிதை கற்பித்தலும் எழுச்சி பெறுவதற்குரிய கோட்பாட்டுப் பின்புலத்தை றீட் வலிமை பெறச் செய்தார். விஞ்ஞானக் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டிய இங்கிலாந்தின் கல்விச் சூழலில் றீட்டினுடைய முன்மொழிவுள் கலைத்திட்டத்திலே சமநிலைப் பண்புகளை ஏற்படுத்துவதற்குரிய விசைகளைக் கொடுத்தன. அவரை ஒரு வரலாற்றுப் பொருளாகக் காட்சிப்படுத்தாது, சமகாலக் கல்விக்குரிய சமநிலைக் கருத்துக்களை வழங்கியவராகக் கருதும் மரபு இங்கிலாந்திலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி இலக்குகளின் ஒன்றிணைந்த முக்கியத்துவத்தை வலியுறுத்திய ரெயிலர்

## (RALPH WINIFRED TYLER) (1902-1994)



கல்வி இலக்குகளை அடிப்படையாக வைத்தே பாட உள்ளடக்கம் தெரிவு செய்யப்படு கின்றது. - கற்பித்தற் சாதனங்கள் உருவாக்கப்படு-கின்றன. கற்பிக்கும் செயல்முறை வடிவமைக்கப் படுகின்றது - பரீட்சைகளும் கணிப்பீடுகளும் திட்டமிடப்படுகின்றன. கலைத்திட்ட இயக்கம் முழுவதுமே கல்வி இலக்கை அடியொற்றி இயக்க வைக்கப்படுகின்றது. இவ்வாறாக கல்வி இலக்குகள் பல தளங்களிலும் பல நிலைகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

கல்வி இலக்குகளின் பொருண்மை நிலைகளை விளக்கிய ரெயிலர் சிக்காகோ நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அங்குள்ள பல்கலைக்கழகத்திலே கலாநிதிப்பட்டம் பெற்றவர். ஒகியோ அரச பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆய்வு மற்றும் சேவைத்துறையில் பணியாற்றியவர். சிக்காகோ பல்கலைக்கழகத்திலே கல்வியற் பேராசிரியராகக் கடமை புரிந்ததோடு, பல்கலைக்கழகப் பரீட்சகராகவும் செயலாற்றினார். அவற்றைத் தொடர்ந்து சமூக விஞ்ஞானப் பிரிவின் பீடாதிபதியாகவும் பணிபுரிந்தார். இவற்றின் தொடர்ச்சியாக ஸ்ரான் போர்ட்டுக்குச் சென்று அங்கே புதிதாக நிறுவப்பட்ட நடத்தை விஞ்ஞானங்கள் தொடர்பான உயர் கற்கை நிலையத்தின் பணிப்பாளராகக் கடமை புரிந்தார். இவ்வாறாக அவருக்குக் கிடைக் கப் பெற்ற உயர்நிலை அனுபவங்கள், கல்வியியற் பங்களிப்புக்கு வளமூட்டின.

கல்வியியலில் இவரை ஒரு "கலைத்திட்டக் கோட்பாட்டா ளராக"க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவர். கல்வியினதும் கலைத்திட்டத்தினதும் நடைமுறைப் பயனுடைமைக்கு இவரால் முக்கியத்துவம் தரப் பட்டது. மாணவரின் அனுபவங்களின் தரமேம்பாடும் வலியுறுத்தப்பட்டது. "கற்றல் அனுபவங்கள்" மற்றும் "கற்றற் செயற்பாடுகள்" என்ற எண்ணக்கருக்கள் வேறுபட்ட கருத்துப் பரிமாற்றங்களைக் கொண்டவையென்றும் கலைத்திட்டத்தில் கற்றல் அனுபவங்களையே மேம்படுத்தல் வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

கலைத்திட்டப் பாடவாக்கம் பற்றிய இவரது பங்களிப்பு கல்வியியலிலே விதந்து பாராட்டப்படுவதுடன், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும், பல்வேறு நாடுகளிலே பின்பற்றப்பட்டும் வருகின்றது. நடத்தைவாதத்தை முன்னிலைப்படுத்திய தெளிவான கலைத்திட்ட மாதிரிகை முன்வைக்கப்பட்டது. இவரால் உருவாக்கப் பட்ட இலக்குகள் கலைத்திட்ட மாதிரிகை கல்வி ஏற்பாட்டில் தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், நவீன கற்பித்தலை வடிவமைப்பதற்கும் உதவி வருகின்றது. ரெயிலருடைய கலைத்திட் டச் சிந்தனைகளில் அவருடைய அறிவாற்றுனரான (Mentor) சி.எச்.ஜட் என்பாரின் கருத்துக்களும், தோண்டைக்கின் நடத்தைவாத அணுகுமுறைகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை சுட்டிக்காட் டப்பட வேண்டியுள்ளது.

பாடசாலைகள் கல்வியியல் ஆய்வுக்கூடங்களாகத் தொழிற்படல் வேண்டும் என்ற கருத்தை இவர் வலியுறுத்தினார். இது ஒருவகையிலே பயன்கொள்வாதியாகிய டூயி அவர்களின் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது.

மாணவரின் அடைவுகளை மதிப்பீடு செய்யும் நுட்பவியல்களிலும் இவரது பங்களிப்பு முக்கியமானது. கணிப்பீடுகள் துல்லியமாகவும் திட்பநுட்பமாகவும் இருத்தல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க மதிப்பீட்டு முறைகள் புள்ளி விபரவியல் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன. மாணவர்களைப் பொறுத்தவரை உயர் நிலையான பரீட்சிப்பு, தாழ்நிலையான பரீட்சிப்பு ஆகியனவற்றை வேறுபடுத் திக்காட்ட முடியாத சோதனை உருப்படிகள் தவிர்த்து விடப்படுகின் றன. இவை தொடர்பான ரெயிலறின் முக்கிய கருத்து என்னவென் றால் கணிப்பீடுகள் கல்வியின் இலக்குகளை நோக்கிக் குவியப்படுத் தப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் கல்வியின் இலக்குகளை நோக்கி எவ்வளவு தூரம் நகர்ந்துள்ளனர் என்பதை அவை துல்லியமாகக் காட்டல் வேண்டும்.

கணிப்பீடு ஒரு செவ்வன்பரவலை வெளிப்படுத்தும் என புள்ளிவிவரவியலாளர் குறிப்பிடுவர். ஆனால் இது முக்கியமல்ல என்று குறிப்பிடும் ரெயிலர், கல்வியின் இலக்குகளை நோக்கிய மாணவரின் நகர்வுகளை முன்னெடுப்பதற்குரிய கருவியாகவும், வழிகாட்டியாகவும் கணிப்பீடுகள் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

புள்ளிவிபரவியலிற் குறிப்பிடப்படும் நியமங்களை முக்கியப்படுத்தாது, மாணவரின் இலக்கு நோக்கிய முன்னேற்றங்களைக் குவியப்படுத்தப்படல் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. இலக்கு நோக்கிய முன்னேற்றங்களை இனங்காணுவதற்குரிய முனைப்புக்களே கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொருளாதார நலனை விளக்குவதற்குத் துல்லியமான சுட்டிகள் இருத்தல் போன்று கல்வி நலன்களை விளக்குவதற்கும் துல்லியமான சுட்டிகள் அவசியம் என்ற கருத்தையும் அவர் முன்வைத்தார். தேசிய மட்டத்தில் கல்வியின் நலப்பாடுகள் பற்றிய கணிப்பீடுகள் முன்னெடுக்கப்படும் பொழுதுதான் கல்விச் செயற்பாடுகளின் விளைவுகள் பற்றிய தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஐக்கிய அமெரிக்காவின் கல்வி தொடர்பான தேசிய மதிப்பீட்டுத் திட்டங்களின் மட்டுப்பாடுகளைச் சுட்டிக்காட்டிய ரெயிலர் அவை பாடங்களினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட மாணவரின் புலமைத்திறன்களை அடிப்படையாகக் கொண்டுள்ள வேளையன்றி, அவற்றில் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு இடம் கொடுக்கக் கூடிய செயற்பணிகள் எவையும் இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

ரெயிலர் தீவிர பயன்கொள்வாதியாகச் செயற்பட்டார். கல்வியிலும், கலைத்திட்டத்திலும், கணிப்பீடுகளிலும் பயன்பாடுகள் இருத்தல் வேண்டும் என்பதைத் தீவிரமாக வலியுறுத்தினார். கலைத்திட்ட வடிவமைப்பு பயன்பாடுகளை அடியொற்றியே கட்டுமை செய்யப்படல் வேண்டும். பயன் கொள்வாதத்தையும் தரமேம்பாட்டையும் கல்வியிலே ஒன்றிணைப்பதற்கு அவர் விடா முயற்சிகளை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியஅமெரிக்காவின் புகழ்பூத்த கல்வி நிறுவனமாகிய ஐக்கிய அமெரிக்க கல்வி தொடர்பான தேசிய அக்கடமியை உருவாக்குவதிலே தீவிரபங்குகொண்டிருந்ததுடன், அதன் முதலாவது தலைவராகவும் பணிபுரிந்தார். அமெரிக்க ஆட்சி மாநிலங்களில் இருந்தும் உலகின் பலபாகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட நூறு உறுப்பினர்களைக் கொண்டதாக அந்த அக்கடமி செயற்பட்டது.

தனித்து ஒரு நோக்கில் மட்டும் சிந்தித்துச் செயற்பட்ட கல்விப் புலமையாளராக அவர் இருக்கவில்லை. கல்விச் செயற்பாட்டின் அனைத்துப் பரிமாணங்களையும் அவர் ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்தினார். கல்விக்கோட்பாடு, கலைத்திட்டம், கற்பித்தலியல், மதிப்பீட்டியல், கல்விமுகாமைத்துவம் என்ற அனைத்துத் துறைகளின் வழியாகவும் பயன்கொள்வாதத்தையும், தரச்சிறப்புக்களையும் முன்னெடுக்க முயன்றார். மேற்கூறிய கல்வியின் அனைத்துப் பரிமாணங்களும் கல்வியின் இலக்குகளுடன் நேரடியான இணைப்பும், தொழிற்பாடும் கொண்டிருக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தீவிரமாக வலியுறுத்தினார்.

ரெயிலரின் கல்வி மற்றும் கலைத்திட்டம் தொடர்பான அணுகு முறையும் திட்டமிடலும் "வழிமுறை - முடிவுகள்" (Means - Ends) மாதிரிகையை அடிப்படையாகக் கொண்டவை. நடத்தைவாத இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட இந்த மாதிரி "ரெயிலரின் நியாயிப்பு" (The Tyler Rationale) எனப்படும். இலக்குகள் தெளிவாக குறிக்கப்படும் பொழுதுதான் கல்விச் செயற்பாடுகள் பொருண்மை கொண்டவையாயும் பயனுள்ளவையாயும் அமையும். இலக்குகளைத் துண்டாடுவதற்கோ அவற்றின் செறிவை மலினப்படுத்துவதற்கோ அவர் விரும்பவில்லை.

இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு கலைத்திட்டத்திலே பொருத்தமானஅனுபவங்கள் திட்டமிடப்படல் வேண்டும். திட்டமிடப்பட்ட அனுபவங்கள் உரிய முறையிலே நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் இலக்குகளை நோக்கி உரிய முறையிலே முன்னேறி வந்துள்ளனரா என்பதை மதிப்பீடு செய்து, மீண்டும் இலக்குகளுக்கு வரும் காட்டுரு கலைத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இவருடைய இந்த மாதிரி கையே சில சிறிய மாற்றங்களுடன் இன்றும் நடைமுறைப்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைத்திட்டம் மற்றும் போதனை தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள்" "தேசிய கணிப்பீடு தொடர்பான அறைகூவல்கள்" "அமெரிக்கக் கல்விக்குரிய புதிய மாதிரிகைகள்" முதலானவை இவர் எழுதிய நூல்களுள் முக்கியமானவை. வேறுபல ஆசிரியர்களுடன் இணைந்தும் இவர் நூலாக்கங்களை மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரன் போர்ட் பல்கலைக்கழத்திலுள்ள நடத்தை விஞ்ஞானம் தொடர்பான உயர்கற்கை மத்திய நிலையத்தின் பணிப்பாளராக இருந்த-வேளை பன்முகப்பட்ட ஆய்வுமுயற்சிகளுக்கு ஊக்கமளித் தார். ஆய்வாளர்கள் எதுவித கட்டுப்பாடுகளின்றியும், எதுவித அழுத் தங்களுமின்றி சுயாதீனமாக தொழிற்படுவதற்குரிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. இந்த நிறுவனத்திலேதான் தோமஸ்கூன் அவர்கள் தமது சிறப்புமிக்க ஆய்வாகிய "விஞ்ஞானப் புரட்சியின் கட்டுமானம்" என்பதன் முதலாவது வரைபினைச் சமர்ப்பித்தார். ஜோன் றோல்ஸ் அவர்கள் "நீதியின் கோட்பாடு" என்ற புகழ்மிக்க ஆக்கத் தைச் சமர்ப்பித்தார். முது ஆய்வாளர்களுக்கு மட்டுமன்றி இளம் ஆய்வாளர்களுக்கும் இந்த நிறுவனத்திலே சந்தர்ப்பங்கள் வழங்கப் பட்டன. ஆய்வு நிறுவனங்கள் வழியாகக் கல்வியாக்கங்களை எவ்வாறு முன்னெடுத்தல் வேண்டுமென்ற நடைமுறை மாதிரிகளையும் உருவாக்கிக் காட்டினார். இந்த வகிபங்கினால் "நாட்டுப்பற்றாளர்" என்ற நிலைக்கும் மேலுயர்த்தப்பட்டார்.

நவீன கலைத்திட்ட வடிவமைப்புக்கள் பற்றிப் பேசப்படும் பொழுது தவிர்க்கப்பட முடியாத ஆளுமை கொண்டவராக இவர் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி சார் நிபந்தனைப்பாட்டைக் கற்பித்தலியலில் அறிமுகப்படுத்திய பி.எவ். ஸ்கின்னர்
# (BURRHUS FREDERIC SKINNER) (1904-1990)



நடத்தைவாத உளவியலை வகுப்பறைக்குக் கொண்டுவந்த ஸ்கின்னர் ஆசிரியத்துவம் தொடர்பாக முன்வைத்த ஒரு சிறப்பார்ந்த கருத்து வருமாறு, "ஆசிரியர் இன்றியும் மாணவர்களாற் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஆசிரியர் கற்பதற்கான சூழலையும் ஏற்பாடுகளையும் நன்கு வடிவமைக்கும்பொழுது மாணவர்களால் வேகமாகவும் வினைத்திறனுடனும் கற்றுக்கொள்ள முடியும்."

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பென்சில் வேனிய மாநிலத்தில் பிறந்த இவரின் மூதாதையர் இங்கிலாந்திலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள். கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தை விரும்பிக் கற்ற இவருக்குக் கிடைக்கப்பெற்ற ஆசிரியர் ஆங்கில இலக்கியத்தில் அதீத விருப்பையும் சுவையையும் ஏற்படுத்தினார். இதனடியாக கற்றலில் ஆசிரியத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டார். அந்த ஆசிரியர் மீது கொண்ட விருப்பின் காரணமாக 1968ஆம் ஆண்டிலே தாம் எழுதிய "கற்பித்தலியல் தொழில்நுட்பம்" என்ற நூலை அவருக்குக் காணிக்கையாக்கினார்.

ஆக்க இலக்கிய எழுத்துத் துறைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு ஓர் எழுத்தாளராக வரவேண்டுமென விரும்பினார். நவீன இலக்கியங்களுடன் கிரேக்க மொழியையும் ஆழ்ந்து கற்று அம்மொழியில் எழுதப்பெற்ற இலியட் உட்பட்ட செவ்வியற் படைப்புக்களை ஆர்வத்துடன் கற்றார். பல சிறுகதைகளையும், கவிதைகளையும் எழுதியதுடன், எழுத்தாளர்களுடன் தொடர்புகளையும் வளர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். சமகாலத்தில் வாழ்ந்த பிரபல ஆங்கிலக் கவிஞர் றொபேட் புறொஸ்டு (Robert Frost) இவருக்கு வழங்கிய அறிவுரையில் "எழுத்து துறையைத் தொழிலாகக் கொள்ளும் உங்கள் முடிவைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்று குறிப்பிட்டார்.

அந்த ஆலோசனைகளைத் தொடர்ந்து உயர்கல்வி கற்பதற்கு ஹாவார்ட் பல்கலைக்கழகத்துக்குச் சென்றவர் உளவியற் கற்கையைத் தெரிந்தெடுத்தார். நடத்தைவாதம் தொடர்பான தமது ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு முன்னதாக பவ்லோவ், வாட்சன் முதலியோரது தொல்சீர்நடத்தைவாத ஆக்கங்களை வாசித்து அறிந்தார். **1929** ஆம் ஆண்டில் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த உலகமாநாட்டில் பவ்லோவ் அவர்கள் வந்து கலந்துகொண்டு உரையாற்றியமையை இவர் நேரிலே கண்டு அறிந்து கொண்டார்.

அல்பிரட் நோர்த் வைற்கெட் மற்றும் பேர்ரண் ரஸல் முதலாம் மெய்யியலாளர்களின் தொடர்பும் செல்வாக்கும் இவரது சிந்தனைகளை வளமாக்கின. ஹாவார்ட் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப்பட்டத் தைப் பெற்ற பின்னர் இண்டியானாப் பல்கலைக்கழகத்திலும், மின்னசொற்றா பல்கலைக்கழகத்திலும் இணைப்பேராசிரியராகப் பணியாற்றினார். அவற்றைத் தொடர்ந்து ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் முழுப்பேராசிரியரானார்.

அங்கு பணியாற்றிய வேளை தொழில் நிபந்தனைப்பாடு (Operant Conditioning) தொடர்பான தமது கோட்பாட்டை உருவாக்கினார். மரபுவழியான நிபந்தனைக்கோட்பாட்டுக்கும் தொழிலி நிபந்தனைப் பாட்டுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஓர் உயிரி தானாகவே தொழிற்பட்டு வெகுமதியைப் பெற்றுக்கொள்ளல் தொழிலி நிபந்தனைப்பாட்டிலே வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் பழைய நிபந்தனைப்பாட்டிலே உயிரி தானாக முயன்று தொழிற்படுதல் குவியப்படுத்தப்படவில்லை. ஸ்கின்னரின் சோதனைகளில் நிபந்த னையை வலுப்படுத்தும் விளைவு உயிரியாலேயே தோற்றுவிக்கப் படுகின்றது. பழைய நிபந்தனைப்பாட்டில் தூண்டி வழியான நிபந்தனைப்பாடு (Type-s) வலியுறுத்தப்படுகின்றது. ஸ்கின்னருடைய தொழிலி நிபந்தனைப்பாட்டில் துலங்கல் வழியான நிபந்தனைப்பாடு (Type-r) குறிப்பிடப்பட்டுள்ளது. துலங்கலை வலுப்படுத்துதல் தொழிலி நிபந்தனைப்பாட்டிலே சிறப்பிடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நிபந்தனைப்பாட்டில் தூண்டி-துலங்கல் இணைப்பைக் கொண்டே நடத்தை விளக்கப்படுகின்றது. ஆனால் ஸ்கின்னர் தூண்டி - துலங்கல் இணைப்புக்கு முக்கியத்துவம் வழங்காது உயிரி செய்யும் செயலை அடிப்படையாகக் கொண்டு நடத்தையை விளக்கினார்.

ஸ்கின்னர் நடத்தை உளவியலுக்கும் கற்பித்தலுக்கும் வழங்கிய மிகப் பெரிய பங்களிப்பு "மீள வலியுறுத்தல்" என்பதாகும். மீள வலியுறுத்தல் இரண்டு வகைப்படும். ஒன்று நேர்மீள வலியுறுத்தல், மற்றையது எதிர்மீள வலியுறுத்தல், வெகுமதி வழங்கல் நேர் மீள வலியுறுத்தலாகின்றது. தண்டனை வழங்கல் எதிர்மீள வலியுறுத்தலாகின்றது. நேர்மீள வலியுறுத்தல் கற்றலை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக அமைகின்றது.

ஆசிரியர் சரியான விடையைத் தெரிந்தெடுத்து மீள வலியுறுத் தலை மேற்கொள்ளல் தெரிவு மீளவலியுறுத்தலாகும் (Selective Reinforcement) என ஸ்கின்னர் குறிப்பிட்டார். கற்பித்தலியலிலே தொடர்மீள வலியுறுத்தலின் அண்மைநிலை அடுக்குகள் பற்றியும் (Successive Approximination) அவர் விளக்கியுள்ளார். ஒரு பெரிய விடயத்தை ஒரே தடவையில் முழுமையாக மாணவர்களுக்குக் கற்பித்தல் கடினமான செயலாகும். அந்நிலையில் அந்தப் பெரிய விடயத்தை பொருண்மை கொண்ட சிறு சிறு பகுதிகளாக வகுத்துக் கற்பித்தலும், அவற்றை விளங்கி மாணவர் துலங்கும் போது வெகு மதியளித்து மீளவலியுறுத்தும் பொழுது மாணவர்கள் முழுவிட யத்தையும் வெற்றிகரமாகக் கற்று முடித்து விடுவர். இதன் வழியாகவே நடத்தை உருவாக்கத்தையும் மேற்கொள்ள முடியும்.

மீள வலியுறுத்தலின் அளவுத்திட்டங்கள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டார். அதாவது வெவ்வேறு அளவுத்திட்டங்களில் துலங்கலை மீளவலியுறுத்தும் பொழுது ஏற்படும் விளைவுகள் நோக்கப்பட்டுள்ளன. அளவுத்திட்டங்கள் (Sche Dules) பின்வருமாறு அமையும்.

மாறாத கால அளவுத்திட்டம்

மாறும் கால அளவுத்திட்டம்

மாறாத விகித அளவுத்திட்டம்

மாறும் விகித அளவுத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர அளவை அடிப்படையாகக் கொண்டு வெகுமதி வழங்கல் கால அளவுத்திட்டமாகும். நேரத்தைக் கருத்திற் கொள்ளாது, உயிரி தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வெகுமதி வழங்கல் விகித அளவுத்திட்டமாகும்.

சில எடுத்துக்காட்டுக்களினால் மேற்கூறிய எண்ணக்கருக்களை விளக்கலாம்.

(1) நேர அளவை மாற்றாது ஒவ்வோர் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை வெகுமதி தருதல் மாறாத கால அளவுத்திட்டம்.

(2) ஐந்து நிமிடம், மூன்று நிமிடம், ஒரு நிமிடம், ஆறுநிமிடம் என்றவாறு மாறும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு வெகுமதியளித்தல் மாறும் கால அளவுத்திட்டம்.

(3) உயிரி தொழிற்படும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாறா நிலையில் வெகுமதி தருதல் மாறாத விகித அளவுத்திட்டம். எடுத்துக்காட்டாக ஒரு மாணவன் ஒவ்வொரு மூன்று வசனங்களையும் எழுதி முடித்த பின்னர் வெகுமதியளித்தல்.

(4) தொழிற்படும் அலகுகளின் எண்ணிக்கையைச் சமனாகப் பேணாது வெகுமதியளித்தல் மாறும் விகித அளவுத்திட்டம் - எடுத்துக்காட்டாக, மூன்றுவசனம், ஒருவசனம், நான்கு வசனம் என்றவாறு சமனற்ற ஆற்றுகையின் போது வெகுமதியளித்தல் இதன் விளக்கமாகின்றது.

தூண்டிப் பொதுமையாக்கல், பின்னூட்டல் அல்லது விளைவு-களை அறிந்துகொள்ளல் முதலாம் எண்ணக்கருக்களையும் இவர் முன்மொழிந்தார். மாணவரின் கற்றலை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு இவை நேரடியாகப் பயன்படுகின்றன. ஒத்த விடயங்களைப் பொதுமைப்படுத்தல் தூண்டிப் பொதுமையாக்கலாகின்றது. உதாரணமாக பெரியவட்டம், சிறியவட்டம் என்பவற்றில் வட்டத்துக்குரிய பொதுப்பண்புகள் இருப்பதை மாணவர்கள் அறிந்துகொள்ளல் வேண்டும்.

மாணவர்கள் தாம் மேற்கொண்ட செயல்கள் சரியானவையா, பிழையானவையா என்பதை அறிந்துகொள்ளும் பொழுதுதான் கற்றல் விசையுடன் முன்னெடுக்கப்படும். இவை பற்றிய தீர்மானம் எடுப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னூட்டல் துணைசெய்கின்றது. ஆசிரியர் அச்செயல் சரியென்று பாராட்டு வழங்கும் பொழுது, அது பின்னூட்டலாகின்றது. மாணவரின் துலங்கலைத் தொடர்ந்து உடனடியாகப் பின்னூட்டல் கிடைக்கப் பெறும்பொழுது, கற்றல் விரைந்து நிகழும். பிரதான மீளவலியுறுத்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய துணை மீளவலியுறுத்திகளும் கற்றற் செயற்பாடுகளை வளமுடையதாக மாற்றும்.

கற்றலின் போது சரியான விடைகளைக் கண்டறிவதற்கான அறிசுட்டிகளை (Cues) ஆசிரியர் வழங்குதல் உண்டு. ஆரம்ப நிலையில் கூடுதலான அறிசுட்டிகளை வழங்கினாலும். பின்னர் அவற்றைப் படிப்படியாக குறைத்துக் கொள்ளல் வேண்டும். இது அறிசுட்டிகளின் குறைப்பு நடவடிக்கை (Reduction of Cues) எனப்படும். ஸ்கின்னர் உருவாக்கிய நிகழ்ச்சித் திட்டமாக்கப்பட்ட கற்பித்தலில் அல்லது நிரலித்த (Programmed) கற்பித்தலில் இந்த நுட்பம் மேற்கொள்ளப்படுகின்றது.

அழிதல் அல்லது வெளியேற்றம் (Extinction) என்ற செயற்பாடும் நடத்தைவாதத்திலே குறிப்பிடப்படுகின்றது. அதாவது தூண்டிக்கும் துலங்கலுக்குமுள்ள இணைப்பு மீளவலியுறுத்தலுக்கு உள்ளாக்கப்படாதுவிடில் அது மங்கி மறைந்துவிடும். இவையனைத்தும் கற்பித்தலிலே நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்களாகும்.

ஒருநாள் ஸ்கின்னர் அவர்கள் தமது மகள் படித்துக்கொண்டிருந்த நான்காம் வகுப்பு நடவடிக்கைகளைப் பார்க்கச் சென்றார். அந்த வகுப்பிலே பொருத்தமான முறையிலே பின்னூட்டல் வழங்கப்படாமையைச் சுட்டிக்காட்டினார்.

தொழிலி நிபந்தனைப்பாட்டைப் பயன்படுத்தி அவர் 1950ஆம் ஆண்டில் உருவாக்கிய நிரலித்த கற்பித்தல் முறை வரவேற்பைப் பெற்றது. இருபது ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் இருந்து இது உருவாக்கப்பட்டது. கற்க வேண்டிய பகுதிகள் நெடுங்கோட்டு அமைப்பிலே சிறிய சிறிய பகுதிகளாகப் பிரித்து வடிவமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிப்புக்களுக்குமிடையே சிறிய இடைவெளிகள் விடப்பட்டிருக்கும். நெடுங்கோட்டுப் பாட அமைப்பு எளிதிலிருந்து கடினம் நோக்கியதாக இருக்கும். சரியான விடை தரப்பட்டதும் சரியென்ற மீள வலியுறுத்தல் வழங்கப்பட்டிருக்கும். குறித்த ஓரிடத்திலே மாணவர்கள் சரியான விடையைக் கண்டறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவிடத்து மீண்டும் எளிமை மட்டத்துக்குச் சென்று கற்றலைத் தொடர முடியும்.

1961ஆம் ஆண்டில் கொப்பன் கெகன் நகரில் நிகழ்ந்த பிரயோக உளவியல் மாநாட்டில் ஸ்கின்னர் மீது ஒரு கேள்வி தொடுக்கப்பட்டது. அவர் உருவாக்கிய நிரலித்த கற்பித்தலும், கற்பித்தற் பொறியும் ஆசிரியரின் தேவையை இல்லாமற் செய்து விடுகின்றனவா என்பதே அந்த வினா. ஆசிரியரின் வகிபாக செயலை எந்தப் பொறியாலும் நீக்கிவிட முடியாது. ஆசிரிய, மாணவ இடைவினை என்றும் வேண்டப்படுவதொன்றாகும் என ஸ்கின் விடையளித்தார்.

ஹாவார்ட் பல்கலைக்கழகத்து மரபை அடியொற்றி பெருந் தொகையான எழுத்தாக்கங்கள் இவரால் எழுதப்பெற்றன. "உயிரிகளின் நடத்தை", "விஞ்ஞானமும் மனித நடத்தையும்", "விஞ்ஞானமும் கற்பித்தற்கலையும்" "சொல் சார்ந்த நடத்தை", "கற்பித்தற் பொறிகள்", "திரள் பதிவேடு", "உயர் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பித்தல்", "கற்பித்தல் தொழில்நுட்பம்", "விடுதலைக்கும் நற்பண்புக்கும் அப்பால்", "விடுதலையும் மகிழ்ச்சியுமுடைய மாணவர்", "எனது வாழ்வின் விபரங்கள்", "நடத்தை வாதம் மற்றும் சமூகம் பற்றிய தெறிப்புக்கள்", "நடத்தை வாதி ஒருவரின் உருவாக்கம்" முதலான ஆக்கங்கள் சிறப்பிடம் பெருகின்றன. இந்த ஆக்கங்கள் அனைத்தும் நடத்தைவாத விளக்கத்தைச் சிறப்பாகக் கொண்டுள்ளன.

நடத்தை வாதம் மட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு கோட்பாடாகும். மனித செயற்பாடுகளை வெறும் பொறி முறையான கட்டமைப்புக்குள் அது கொண்டுவந்து விடுகின்றது. இந்தப் பெரும் குறைபாடு ஒருபுறமிருந்தாலும் கற்பித்தலியலில் புதிய புலக்காட்சியைத் தோற்றுவித்த இவரது முயற்சிகள் நவீன கல்வியுகத்தின் பதிவுகளாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி இலக்குகளின் பகுப்பாய்வை முன்மொழிந்த பெஞ்ஜமின் புளூம்

## (BENJAMIN S BLOOM) (1913-1999)



கல்வியிற் கணிப்பீட்டு முறையில் இன்றுவரை செல்வாக்குச் செலுத்துபவையாக புளூமின் கருத்-துக்கள் அமைகின்றன. கணிப்பீடுகளின் அறிவு மேலாண்மை *(Authority)* கொண்டவராக அவரது ஆளுமை மேலுயர்த்தப்பட்டுள்ளது. கல்வி உளவியலிலே "மீக்கற்றல்" *(Mastery)* தொடர்பான இவரது ஆய்வுகள் கற்பித்தலியலிலே புதிய காட்சிகளை ஏற்படுத்தியுள்ளன.

பென்சில்வேனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் பெற்றோர் ரூசியாவிலிருந்து ஐ.அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்து வந்தவர்கள். இவரது தந்தையர் ஓர் ஏழைத் தையற்காரர். புளூமுக்கு ஆசிரியத் தொழிலைப் பெற்றுக்கொடுத்தால் சமூகத்தில் மேலோங்கி உயரலாம் என எண்ணினார். பெற்றோரின் ஊக்கத்தால் பென்சில்வேனிய அரச கல்லூரியில் முதலாவது பட்டத்தையும், சிக்காகோ பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர் அதே பல்கலைக்கழத்திலே கல்வியியற் பேராசிரியரானார்.

கல்வி அடைவுகளை மதிப்பீடு செய்வதற்கான அனைத்துலகக் கழகத்தின் நிறுவுனர்களுள் ஒருவராக விளங்கியதுடன், இந்தியா, இஸ்ரேல் முதலாம் நாடுகளிலும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அமெரிக்க கல்வியியல் ஆய்வுக்கழகத்தின் தவிசாளராக இருந்து மதிப்பீடுகள் தொடர்பான ஆழ்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டார்.

கல்வியின் இலக்குகளை வலியுறுத்திய ரெயிலர் அவர்களின் ஆற்றுப்படுத்தலின் கீழ் ஆய்வாளராகப் பணியாற்றிய வேளை மதிப்பீட்டியலில் ஆழ்ந்து ஈடுபடுவதற்குரிய வாய்ப்பினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்டார். திட்டவட்டமான நடத்தைகளை கணிப்பீட்டின் கருவிகளாக் கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். கல்வியியல் இலக்குகளின் பகுப்பாய்வுக் குழுவுக்குத் தலைராக இருந்து, ஆட்சிகள் *(Domain)* என்ற எண்ணக்கருவின் நடைமுறை முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார்.

டேவிட் காத் வோல் என்பவருடன் ஒன்றிணைந்து இவர் எழுதி வெளியிட்ட "கல்வி இலக்குகளின் பகுப்பாய்பு" *(Taxonomy of Education Objectives)* என்ற நூல் மாணவரின் அடைவுகளை மதிப்பீடு செய்யும் துறையிலே புதிய புலக்காட்சிகளை ஏற்படுத்தியது. (தமிழ் மரபில் பகுப்பாய்வு என்பது வகைப்பாடு என்றும் குறிப்பிடப்படும்.)

கல்வியின் இலக்குகளைத் தெளிவாக வகைப்படுத்திக் காட்டும் பொழுதுதான், ஆசிரியர்கள் தெளிந்த இலக்குகளுடன் தொழிற்பட முடியும். வீண் அலைச்சல்களையும் அவஸ்தைகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும். திட்டவட்டமாக வரையறுக்கப்பட முடியாத இலக்குகள் பயனற்றவை. கற்றலையும் கற்பித்தலையும் ஆற்றலுடன் ஒழுங்கு படுத்தியமைப்பதற்கு இலக்குகள் பற்றிய தெளிவான வகைப்பாடு முக்கியமானதாகும். கலைத்திட்டத்திலே பொருத்தமான அனுபவங்களை ஒழுங்கமைப்பதற்கும் இலக்குகள் பற்றிய துல்லியமான வகைப்பாடு அவசியமாகின்றது.

கல்வியின் இலக்குகளை இவர் மூன்று பெரும் ஆட்சிகளாக *(Domains)* வகைப்படுத்தினார். கற்பித்தலியல், தருக்கவியல், நடத்தையியல் ஆகியவற்றின் ஒன்றிணைப்பில் ஆட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

அறிகை ஆட்சி

எழுச்சி ஆட்சி

இயக்க ஆட்சி

அறிகை ஆட்சியை மேலும் திட்டவட்டமான பிரிவுகளாக்கி அவர் வகைப்படுத்தினார். அவை:

பொருளறிவு (Knowledge)

கிரகித்தல் அல்லது விளைப்படுத்தல் (Comprehension)

பிரயோகித்தல் அல்லது விளைப்படுத்தல் (Application)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தாராய்தல் (Analysis)

தொகுத்தாராய்தல் (Synthesis)

மதிப்பீடு செய்தல் (Evalution)

இவை ஒவ்வொன்றும் மேலும் தெளிவான உள் இலக்குகளாகப் பாகுபடுத்தியும் விளக்கினார். பொருளறிவு பின்வருமாறு மேலும் வகைப்படுத்தப்படும். குறித்த விபரங்கள் பற்றிய அறிவு, கலைச் சொற்கள் பற்றிய அறிவு, தகவல்களை முறைப்படுத்தி அமைக்கும் வழிகள் பற்றிய அறிவு, நிகழ்ச்சிகளின் செல்நிலைகளையும், தொடர்ச்சிகளையும் கண்டறியக் கூடிய அறிவு, தகவல்களை வகைப் படுத்தும் அறிவு, தராதரங்கள் (Criteria) பற்றிய அறிவு, பொதுவிதிகள் பற்றிய அறிவு, கோட்பாடுகளும் பொதுமையாக்கலும் பற்றிய அறிவு முதலியவை இடம்பெறும்.

எழுச்சிசார் ஆட்சியும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டது. ஏற்றல், அல்லது கவனித்துக் கொள்ளல், துலங்கல், மதிப்புணர்தல், அமைப்பாக்கம் செய்தல் என்றவாறு அதன் உட்பிரிவுகள் இடம் பெறும். இயக்க ஆட்சி உடற்றொழிப்பாடுகளுடன் இணைந்தது.

தசைநார்களின் உறுதி, ஒருங்கிணைப்புத்திறன், இயக்கத்திறன், நெகிழ்ச்சிப்பாங்கு, துலங்கும்திறன், சமநிலை பேணும் திறன் முதலியவை இயக்க ஆட்சியில் நோக்கப்படுகின்றன. உடல் இயக்கம் (Motor) என்பதன் பொருள் செயலை அல்லது வினைப்பாட்டைப் புரிதலாகும். (Produces Action) ஏட்டுக்கல்வியிலே அதீதகவனம் செலுத்துவோர் இயக்கக் கல்வியின் முக்கியத்துவத்தை அறியாதிருந்தவேளை, புளூமினுடைய கல்வி இலக்குகளின் பகுப்பாய்விலே அதற்குரிய இடம் வழங்கப்பட்டது.

1960ஆம் ஆண்டிலே புளூம் அவர்கள் "மீக்கற்றல்" கோட்பாட் டினை உருவாக்கினார். போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டால் பெரும்பாலான மாணவர்களால் (95%) அடிப்படையான கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும், திறன்களையும் கற்றுக்கொள்ளப்பட முடியும். பொதுப் பரீட்சைகளில் அடைவுகளை வேறுபடுத்தும் பிரதான காரணிகளுள் ஒன்றாக "நேர அளவு" அமைகின்றது. போதிய நேரமும், தனிப்பட்ட கவனமும் வழங்கப்படும் பொழுது எந்த ஒரு மாணவரும் குறிப்பிட்ட அடிப்படை அலகுகளிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டித்தியம் பெறமுடியும். மீக்கற்றல் தொடர்பான விரிவானதும் தொடர்ச்சியானதுமான பல ஆய்வுகளை அவர் மேற்கொண்டார்.

நீண்ட ஆய்வுகளுக்குப் பின்னர் மீக்கற்றல் தொடர்பான எளிமையான மூன்று குறிப்புக்களை வழங்கியுள்ளார். அவரது ஆய்வு பின்வரும் எடுகோள்களைக் கொண்டது.

(1) நன்றாக கற்போரும் இருக்கின்றனர், நன்றாகக் கற்க முடியா தோரும் இருக்கின்றனர்.

(2) வேகமாகக் கற்போரும் உள்ளனர், மெதுவாகக் கற்போரும் உள்ளனர்.

(3) கற்கும் ஆற்றலைப் பொறுத்தவரை மாணவரிடத்துப் பெரும்பாலும் ஒத்த இயல்புகளே காணப்படுகின்றன.

பொருத்தமான கற்றல் சூழலை ஒழுங்கமைத்துக் கொடுத்து மேலும் கற்பதற்கான ஊக்கலை வழங்கும்போது கற்கும் விகிதம் அதிகரிக்கும்.

மாணவர்களைத் தரம்பிரித்துத் தெரிவு செய்தல் முக்கியமன்று. அவர்களை ஆற்றலுள்ளவர்களாக வளர்த்தெடுத்தல் வேண்டும். வகுப்பறைக் கற்பித்தலில் புரட்சிகரமான நடவடிக்கைகளை ஆய்வு களை அடியொற்றி முன்மொழிந்தார். வினைத்திறன்மிக்க குழுச் செயற்பாடுகள் வாயிலாகவும், ஒவ்வொருவரையும் குவியப்படுத்திக் கற்பித்தல் வாயிலாகவும், அனைத்து மாணவரையும் கற்றலில் முன்னேற்றம் பெறச் செய்ய முடியும்.

1980 ஆம் ஆண்டில் மீத்திறன் மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஐந்து ஆண்டு ஆய்வுச் செயற்றிட்டத்தை முன்னெ டுத்தார். நூற்று இருபது மீத்திறன் மாணவரின் ஆற்றல் வெளிப்பா டுகளைக் குவியப்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார். அவர்களுக்குக் கிடைத்த கற்றல் நிலவரம், சூழமைவு, பெற்றோர் ஊக்குவிப்பு, கடின உழைப்பு முதலியவற்றினால் அவர்கள் மீத்திறன் பெற்றவர்களாக மேலுயர்ச்சி பெற்றமையைக் கண்டறிந்தார்.

கற்றலின் சிறப்பார்ந்த பரிமாணமாகிய தரமேம்பாடு பற்றிய எண்ணக்கருவையும் வலியுறுத்தினார். தரமேம்பாட்டுக்கு அடிப் படையாக கல்வி இலக்குகளின் பகுப்பாய்வு அமைத்தலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துல்லியமாக விளக்கினார். பொருத்தமான கற்றல் நிலவரங்களை அமைத்தல், ஊக்குவித்தல், தனிநபர்களைக் குவியப்படுத்துதல் முதலியவை தரமுன்னெடுப்புக்களுடன் தொடர்புபட்டு நிற்றலைத் தெளிவுபடுத்தினார். கற்றலில் வீட்டுச் சூழல் என்ற மாறியின் முக்கியத்துவத்தை நீண்ட ஆய்வுகளுக்குப் பின்னர் தெளிவுபட விளக்கினார். வீட்டுச்சூழல் மாற்றமடையும் பொழுது, கற்றலிலும் அடைவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுதலை வரன்முறைப்படுத்தி வெளியிட்டார்.

இணைந்த கூட்டு ஆய்வு முயற்சிகளிலே உற்சாகம் காட்டினார். ஆய்வாளர்களுடன் இணைந்து பதினேழு நூல்களை வெளியிட்டார். "கல்வி இலக்குகளின் பகுப்பாய்வு", "மனிதக்குணவியல்புகளின் உறுதியும் மாற்றமும்", "மாணவர் கற்றல் தொடர்பான உருவாக்கம் மற்றும் தொகுப்பு மதிப்பீடு தொடர்பான கையேடு", "எங்கள் அனைத்துக் குழந்தைகளும் கற்கின்றார்கள்", "பாடசாலை அடைவுகளிலே தனியாள் வேறுபாடுகள் - ஒரு மறையும் குறிப்பு", "இளம் மக்களின் ஆற்றல்களை வளர்த்தல" முதலாம் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

ஐ.அமெரிக்காவில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் இவரின் கல்வி இலக்குகளின் பகுப்பாய்வுச் சிந்தனைகள் செல்வாக்குகளை ஏற்படுத்தியுள்ளன. பின்வந்த ஆய்வுகளில் இந்த அணுகுமுறை மேலும் விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. அவ்வாறே "மீக்கற்றல்" முன்மொழிவும் உலகம் முழுவதுமான கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றது. அனைத்து மாணவரையும் மீக்கற்றல் நிலைக்குக் கொண்டுவர முடியும் என்பது ஒருவகையிலே புரட்சிகரமான கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிகை உளவியலில் இருந்து பண்பாட்டு உளவியலுக்குப் பெயர்ந்த புறூனர்

## (JEROME. S.BRUNER) (1915)



கல்வி என்பது வெறுமனே தகவல் நிரற்படுத்தல் முகாமை தொடர்பான தொழில்நுட்பத் தொடர்பாடல் அன்று அல்லது கற்றற் கோட்பாடுகளை வகுப்பறையிலே பிரயோகம் செய்யும் எளிமையான செயற்பாடும் அன்று - அடைவுப் பரீட்சைகளைப் பயன்படுத்தி பாடப் பொருளின் கற்றல் விளைவுகளைக் கண்டறியும் செயல் முறையும் அன்று - கல்வியின் சிக்கலான செயல்முறை பற்றியும், குறித்த பண்பாட்டில் உள்ளடங்கியிருப்போரின் தேவைகளை நிறைவேற்றும் பன்முக வினைப்பாடுகள் கொண்ட பண்புகள் பற்றியதுமான பண்பாட்டு உளவியற் கருத்தை புறூனர் முன்வைத்தார்.

**புறூனரின் பங்களிப்பு:**

அறிகை உளவியலை முழு வீச்சுக்குக் கொண்டுவந்த புறூனர் நியுயோர்க் நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பன்முகமான வாண்மைத்திறன்களை அவர் கொண்டிருந்தார். இரண்டாம் உலகப் போரின் போது, மக்களின் பொதுசன அபிப்பிராயங்களைச் சமூக உளவியல் நோக்கிலே விசாரணைக்குட்படுத்தினர். பிரசார நடவடிக்கைகள், சமூக மனப்பாங்குகள் தொடர்பாகவும் சமூக உளவியல் நோக்கிலே ஆய்வுகளை மேற்கொண்டார். உலகப்போரின் பின்னர் இவரது ஈடுபாடு "அறிகை" உளவியலை நோக்கித் திரும்பியது.

புலக்காட்சி தொடர்பான ஆய்வுகளில் இருந்து அறிகை உளவியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். டியூக், ஹாவார்ட், ஒக்ஸ்போட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பல்கலைக்கழகங்களிலே ஆய்வுகளை மேற்கொண்ட புறூனர் 1970ஆம் ஆண்டின் பின்னர் சிறாரின் அறிகை தொடர்பான பல்வேறு ஆழ்ந்த விசாரணைகளை மேற்கொண்டார். சிறப்பாக சிறாரின் மொழி விருத்தி பற்றி ஆராய்ந்த இவர் பண்பாட்டு உளவியல் *(Cultural Psychology)* என்ற ஆய்வுப் புலத்தை முக்கியத்துவப்படுத்தினார்.

கல்வியியல் தொடர்பான பரந்து விரிந்த சிந்தனைப்பாங்கை அவர் கொண்டிருந்தார். அதாவது, கற்றலையும் கற்பித்தலையும் ஒடுங்கிய தனிவழியில் நோக்காது, பல பரிமாணங்கள் வழியாக அணுக வேண்டிய தேவையை வலியுறுத்தினார். மனித ஆற்றல்கள் அனைத்தினதும் கண்ணோட்டத்தின் அடிப்படையில் கற்றலும் கற்பித்தலும் நோக்கப்பட வேண்டியதன் முக்கியம் எடுத்துக்கூறப் பட்டது. அதாவது புலக்காட்சி, சிந்தனை, மொழி, குறியீடுகளின் தொகுதி, ஆக்கத்திறன், உள்ளுணர்வு, ஊக்கல், ஆளுமை முதலாம் பல தளங்கள் வழியாகக் கற்றலும் கற்பித்தலும் நோக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவரது பெரும்பாலான ஆய்வு முயற்சிகள் பண்பாட்டு உளவியலைக் கட்டியெழுப்பும் வகையிலே இடம்பெற்றன. இதன் தொடர்பில் இத்தாலியப் பண்பாட்டுப் பின்புலத்தில் உருவாக்கம் பெற்ற முன்பள்ளிச் சிறார்களை இவர் தீவிர ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். பண்பாட்டு உளவியலை விளங்கிக்கொள்வதற்கு கல்வி ஒரு பொருத்தமான "சட்டகமாக" இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

ரூசியநாடு முதன்முதலில் ஸ்புட்னிக் என்ற செய்மதியை அனுப்பியதைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கக் கல்வியில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் முதலாம் பாடங்களுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்படலாயிற்று. கல்வியியல் நடத்தை உளவியலின் முக்கியத்துவம் கைவிடப்பட்டு அறிகை உளவியலுக்குக் கூடுதலான இடம் வழங்கப்படலாயிற்று. ஒருவித அறிகைப் புரட்சி *(Cognitive Revolution)* முன்னெடுக்கப்பட்டது. அறிகைப் புரட்சியின் தலைமைத்துவம் புறூனருக்கு வழங்கப்பட்டது.

இவர் எழுதிய நூல்களுள் கல்வியின் செயல்முறை *(The Process of Education)* என்பது முக்கியமானது. பாடத்தகவல்களை வெறுமனே மனத்தில் பதித்துவைப்பதனால் பயனில்லை. அறிதலும், அறிவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பாக்கத்தைத் தெரிந்துகொள்ளலும் பிரச்சினை விடுவித்தலும் முக்கியப்படுத்தப்பட வேண்டியுள்ளன. இதனை முன்னெடுப்பதற்கு எண்ணக்கருவாக்கத்தை முன்னெடுக்கும் "சூழல் ஏணிக்கலைத்திட்டம்" *(The Spiralcurriculum)* என்ற வடிவமே பொருத்தமானது என வலியுறுத்தினார். இதன் அடிப்படையாகவே, **எந்தப் பாடத்தையும் எந்தப் பிள்ளைக்கும், எத்தகைய வளர்ச்சி மட்டத்திலும் நுண்மதி நேர்மையுடன் வினைத்திறன் படக் கற்பிக்க முடியும்.** என்ற கருதுகோளை முன்வைத்தார். இதனை விளக்கி எழுதப்பெற்று ஹாவார்ட் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட நூல் பதினைந்து மொழிகளிலே மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. அதிக விற்பனையாகிய அறிகை உளவியல் நூல் என்ற பெயரையும் பெற்றது. அறிவின் மீப்பெருக்கத்தின் பின்னணி யிலும், பின்கைத்தொழில் (Post industrial) நுட்பப் பின்னணியிலும் பொருத்தமான அறிகை இயல்புகளைக் கொண்டதாக அந்நூல் அமைந்தது.

இவரது ஆய்வு நூலாக்களில் "மனிதனைப் பற்றிய கற்கைநெறி" (Man : A Cours of Study) முக்கியமானது. இதில் அவர் மூன்று சிறப்பான வினாக்களை எழுப்பினார். அவை

(1) மனிதரைப் பற்றிய ஆய்வில் எவை மனிதத் தனித்துவ-முடையவை

(2) அவை எவ்வாறு செயல்வழியைப் பெற்றன?

(3) அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம்?

மேற்கூறிய வினாக்களை அவர் கலைத்திட்டத்துடன் தொடர்புபடுத்தி நோக்கினார்.

"போதனை தொடர்பான ஒரு கோட்பாட்டை நோக்கி...." என்ற நூலிலும், "கல்வியின் பொருத்தப்பாடு" என்ற நூலிலும் மாணவரின் உளச் செயற்பாடுகளையும், அனுபவங்களால் மேம்பாட்டை நோக்கிய அறிகையை அவை முன்னெடுத்தலையும் விளக்கியுள்ளார். அனுபவங்களால் மாணவரின் உயர்வு நோக்கிய அறிகைச் செயற்பாடு மூன்று நிலைகளிலே இடம்பெறுகின்றது. அவை:

(1) உள்ளத்திலே அறிவைக் கட்டுமை (Comstruct) செய்தல்.

(2) கட்டுமையை விரிவாக்கம் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) உயர்வு நோக்கி அவற்றை நிலை மாற்றம் செய்தல்.

ஒழுங்கமைந்த மூன்று வழிகளில் சிறார்கள் அறிகையை உயர்வு நோக்கிய நிலைமாற்றம் செய்கின்றனர். அவை:

(1) முதலாவதாக அமைவது செயல்வழி ஆற்றுகை - உதார ணமாக ஒரு பந்தை உருட்டி விளையாடுவதனால் அதன் இயல்புகளை விளங்கிக்கொள்ளல் - இது "செவ்வுருவப் பாங்கு" எனப்படும்.

(2) அதனைத் தொடர்ந்து நிகழ்வது பட வடிவிலும் உளப்படிம வடிவிலும் கற்றுக்கொள்ளலாகும். குறித்த பந்தைப் படமாக வரையும் பொழுது மனப்படிமம் விளக்கம் பெறுகின்றது.

(3) அதனைத் தொடர்ந்து பலவகைக் குறியீடுகளினாலே கற்றுக் கொள்ளலாகும். உதாரணம் : "பந்து" என்றும் 'Ball" என்றும் எழுதிக் கற்றல்.

பெரும்பாலான கற்றல் மேற்கூறிய செயற்பாடுகளின் இணக்கப் பாடுகளினாலும், சிலசமயங்களில் முரண்பாடுகளினாலும் நிகழ் கின்றது. இந்நிலையில் இவரிடத்து ரூசிய உளவியலாளர் வைகோட்சியின் செல்வாக்கு காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

காலங்காலமாக மனித சமூகத்தால் உருவாக்கப்பட்ட ஊட கங்கள் வழியாகவும் கருவிகள் வழியாகவும் மேற்கொள்ளப்படும் உளச் செயல்முறையின் ஏற்பாடாகவே கற்றல் இடம்பெறுகின்றது. உளவியலாளர்கள் மனத்தின் உள்ளமைந்த செயற்பாடுகள் வழியாகவே கற்றலை விளக்கியமையின் மட்டுப்பாடுகளை இவர் வெளிப்படுத்தினார். சூழவுள்ள பண்பாடு, வறுமை, அந்நியமாதல் முதலியவை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமை பற்றியும் விளக்கியுள்ளார்.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறிகை உளவியலின் மட்டுப் பாடுகளை வெளிப்படையாக விமர்சனம் செய்யலானார். ஒடுங்கிய எண்ணக்கரு இடைவெளியில் அறிகை உளவியல் கட்டுப்பட்டு நிற்பதாக வெளிப்படுத்தினார். இந்தப் புள்ளியில் இருந்துதான் அவர் பண்பாட்டு உளவியலுக்கு நகரத் தொடங்கினார். மனித வரலாற்றுத் தொடர்ச்சிக்கும் பண்பாட்டுக் காரணிகளுக்கும் உளவியலிலே கூடுதலான செறிவு வழங்கப்படல் வேண்டுமென்ற கருத்தை முன்மொழிந்தார். அறிகை மானிடவியல், பண்பாட்டு மானிடவியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியியல் முதலாம் துறைகளில் பெறப்பட்ட முடிவுகளை உளவியலுக்குப் பயன்படுத்தப்படலின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார். இவற்றினூடாக உளவியலின் பொருண்மைநிலை மேம்பாடு மேலுயர்த்தப்படும்.

கல்வி உளவியலின் பண்பாட்டுத் தொடர்பை விளக்கி 1996 ஆம் ஆண்டில் "கல்வியின் திகழ்பண்பாடு" (The Culture of Education) என்ற நூலை எழுதினார். தனிமாணவரின் உள்ளத்தைக் குவியப்படுத்தி உருவாக்கப்பட்ட பாடசாலையின் தொழிற்பாடுகளை அடிப்படையாக வைத்துக் கல்வியை விளக்குதல் தகாது. கல்வியில் உள்ள பிரச்சினைகளுக்குப் பாடசாலைகள் விடை தரமாட்டா. மாறாக பாடசாலைகளே பிரச்சினைகளின் பகுதியாக அமைந்துவிட்டன. கல்வியைப் பரந்த பண்பாட்டுத் தளத்தின் பின்னணியில் நோக்குதல் வேண்டும். தனிமாணவரைக் குவியப்படுத்தி உருவாக்கப்பட்ட பியாசேயின் அறிகை உளவியல் அணுகுமுறை காலாவதியாகிவிட்டதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெற்றி பெற்ற மாணவர்கள் தாம் எவ்வாறு உலகை விளங்கிக் கொண்டனர் என்ற அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். கூட்டு நிலையிலும் தனிநிலையிலும் தமது உள்ளம் தொழிற்பாடு கொள்ளும் அனுபவங்களைப் பரிமாற்றம் செய்து-கொள்ளல் வேண்டும். அவற்றின் தொடர்ச்சியாக சமகாலச் சமூகப் பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்குரிய உளவியற் கருத்து வினைப்பாடுகளை (Discourses) முன்னெடுத்தார்.

இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய உளவியல் பற்றிச் சிந்திப்பதற்குரிய விசைகளை புறூனர் வழங்கியுள்ளார். உளவியற் சிந்தனையாளராக மட்டுமன்றி மாணவராகவும், ஆசிரியராகவும், ஆய்வாளராகவும் தொடர்ந்து செயற்பட்டுவந்தார். நுண்மதித் தொழிற்-பாடு எங்கும் எதிலும் எப்போதும் தொழிற்பாடு கொள்ளும் பரந்த நிலைப்பாட்டை முன்மொழிந்தார். அறிவின் முன்னரங்கிலும் அது தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் அடித்தளத்திலும் அது இயக்க-முற்றவண்ணமிருக்கும். மெல்லக் கற்கும் ஒரு வகுப்பறையிலும் அது இயங்கிக்கொண்டிருக்கும். இவ்வாறாக அவர் பல அவதானிப்புக்களை முன்வைத்தார். புறூனருக்கு ஈடிணையாக எவரும் இலர் என்று கூறுமளவுக்கு (Palmer, A, 2004) அவரின் சிந்தனை வீச்சுக்கள் மேலெழுச்சி பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வியிற்
# பொருண்மிய முனைப்புக்களை
# முன்னெடுக்கும் கிளார்க் கேர்
# (CLARK KERR) (1911-2003)



பொருளாதாரம் மற்றும் முன்னேற்றகரமான சமூக வளர்ச்சிக்குப் புதிய அறிவு அடிப்படைக் காரணிகளுள் ஒன்றாக அமைகின்றது. பிரதேசங்களின் எழுச்சிக்கும் நாடுகளின் எழுச்சிக்கும் அறிவே துணையாகின்றது என்ற உரையாடலை கேர் முன்னெடுக்கின்றார். இருபத்து ஓராம் நூற்றாண்டுக்கான பல்கலைக்கழகத் தொழிற்பாட்டுச் சிந்தனைகள் பற்றிப் பேசும் பொழுது கேருடைய கருத்துக்கள் தவிர்க்க முடியாதவையாக அமைகின்றன.

1911ஆம் ஆண்டில் பென்சில் வேனியாவிலே பிறந்த கிளார்க் கேர் அவர்கள் தாயின் அரவணைப்பாலும், கடின உழைப்பாலும் மேலோங்கல் கொண்டார். பன்முகப்பாங்கு, பயன்கொள்வாதம், வினைப்பாட்டுவாதம், தனிமனிதருக்கும் குழுக்களின் செயற்பாடு-களுக்குமிடையே சமநிலைபேணல் முதலாம் கருத்துக்களில் தீவிர ஈடுபாட்டையும் உற்சாகத்தையும் காட்டினார். கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் தொழிலாளர் தொடர்பு கள் துறையில் கலாநிதிப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டவேளை, தொழிலாளர் இயக்கங்களிலும், சுய உதவிக்கூட்டுறவுச் செயற்பாடு களிலும் ஈடுபாடு கொண்டார். அவற்றை உயர்கல்வியில் ஒன்றிணைக்கவும் முயன்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தி, புலமைச்சுதந்திரம், தீவிர அறிதலை மேம்படுத்தும் விசாரணைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம், இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளின் பன்மைப்பாங்கு, கலைத்திட்ட அனுபவங்களின் ஒருங்கிணைப்பு முதலியவற்றிலே கவனம் செலுத்தினார். சமநிலையான ஆளுமை கொண்டவர்களையும் அதேவேளை குறித்த பாடப் புலங்களின் அறிவோடு சிறப்பாகத் தொழில் புரியக்கூடியவர்களையும், மக்களாட்சி மரபுகளை வழுவாது கடைப்பிடிக்கக் கூடியவர்களையும் உயர்கல்வியால் உருவாக்கம் செய்யப்படல் வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தார்.

பல்கலைக்கழகக் கல்வியின் வழியான செழிப்பை ஏற்படுத்தும் இலக்குகள் அவர் வழி முனைப்பாக்கம் பெற்றன. புதிய வளாகங்களைத் திறத்தல், குறைந்த செலவில் உயர்ந்த தரம் மிக்க உயர்கல்வியை வழங்கல் முதலிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. உயர்கல்வியைப் பொறுத்தவரை கலிபோர்னிய மேலோங்கல் திட்டத்தை (Masterplan) உருவாக்குவதிலே முக்கிய பங்கு வகித்தார். உயர்கல்வியின் மூன்று பெரும் பிரிவுகளுக்கிடையே காணப்பட்ட அதிகாரப் போட்டிகளையும் முரண்பாடுகளையும் தீர்த்து வைக்குமுகமாக அந்தத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதாவது, கலிபோர்னியாப் பல்கலைக்கழகம் அரச உயர்கல்லூரி, கனிஷ்ட கல்லூரிகள் முதலியவை உயர்கல்விச் செயற்பாடுகளிலே ஈடுபட்டு வந்தன. அவற்றுக்கிடையே காணப்பட்ட போட்டிகளைத் தீர்த்து முரண்பாடுகளை முன்னெடுக்க திட்டம் உதவியது.

அந்தத் திட்டத்தின் பிரதான பண்புகள் வருமாறு:

(1) ஒவ்வொரு நிறுவனத்தினதும் தொழிற்பாட்டின் வேறுபாடுகளை விளக்குதலும், கனிஷ்ட கல்லூரிகளின் அமைப்புக்கு சட்ட வலுவை வழங்குதலும் உயர்கல்வி வழங்கலின் ஏறுநிலை நிரலமைப்பை உறுதிப்படுத்தலும்.

(2) நுழைவுத்தரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறுபட்ட தெரிவு அமைப்புக்களை உருவாக்குதல்.

(3) மூன்று நிறுவனங்களுக்குமுரிய அந்தஸ்தைப் பராமரிக்கும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(4) பணம் செலுத்த முடியாமல் இருக்கின்றது என்ற காரணத்துக்காக எந்த ஒரு மாணவரும் எந்த ஒரு நிறுவனத்திலும் சேர முடியாதிருக்கும் நிலையை நீக்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களின் பிரதான பணியாக ஆராய்ச்சிகள் அமைய வேண்டுமென வலியுறுத்தினர். ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் கொட்கின் நினைவுரைத் தொடரில் உரையாற்றும் பொழுது, பல்கலைக்கழகத்தைப் "பலநிலைகள் கொண்ட கழகம்" எனக் குறிப்பிடும் ("Multi Versity") எண்ணக்கருவை அறிமுகம் செய்தார். பல்வேறு இயல்புகள் கொண்டவர்களின் தொகுதி என்பதே இதன் பொருளாகும். பட்டதாரிகள், பட்டப்பின் படிப்புக்களைப் பயில் வோர், சமூக விஞ்ஞானிகள், இயற்கை விஞ்ஞானிகள், புலமைசாரா ஆளணியினர் என்றவாறு பெருந்தொகையான ஓரினப்பாங்கற்ற வர்களின் விரிந்த தொகுதியாக பல்கலைக்கழகங்கள் வளர்ச்சியடைந் துள்ளன.

உயர்கல்வியை மேம்படுத்துதல் தொடர்பான "கார்னியி ஆணைக் குழுவின்" தவிசாளராக இருந்து பயனுள்ள முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். இதனால் உயர்கல்வி தொடர்பான 175 ஆவணங் கள் வெளியிடப்பட்டுள்ளன. கைத்தொழிற் சமூகத்துக்குரிய பொருத்த மானதும் வினைத்திறன் மிக்கதுமான உயர்கல்வியை ஒழுங்கமைத் தல் தொடர்பான இவரது கருத்துக்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. "வினைப்பாடு கொண்ட புலமையாளர்" என்றவாறு இவருக்குப் புகழாரம் சூட்டப்பட்டது.

உயர்கல்வியில் இவர் தாராண்மைக் கருத்துக்களை வலியுறுத் தினார். வளர்ந்து வரும் கைத்தொழிற் சமூகத்துக்குரிய உயர்கல்வியிற் பின்வரும் பண்புகள் இருத்தல் வேண்டுமென வலியுறுத்தினார்.

(1) முதலீட்டுச் சுதந்திரம்

(2) விஞ்ஞான முறைமைகள்

(3) தாராண்மைவாதப் பன்முகப்பாங்கு

(4) மாணவர்களுக்குச் சமத்துவமான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

(5) உயர்கல்வியினால் உருவாக்கப்படத்தக்க விளைதிறன்களை அதிகரித்து தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

உயர்கல்வி நிறுவனங்களுக்குத் தலைமை தாங்குவோர் தலைமைத்துவ ஆற்றல் கொண்டவர்களாயும், திட்டமிடுவோராயும், ஊடிசைவு செய்வோராயும், மனச்சான்றைக் கட்டியெழுப்புவோராயும், நீண்ட தரிசனமுடையோராயும், பயன்கொள்வாதிகளாயும் இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென வலியுறுத்தினார். உயர்கல்வி நிறுவனத்தில் உறுதிப்பாட்டை மேற்கொண்டு அதனை முன்னோக்கி வழிநடத்திச் செல்லல் வேண்டும். விமர்சனம் செய்வோருக்கும் விமர்சனம் செய்யாது விசுவாசிகளாயிருப்போருக்குமிடையேயுள்ள செவ்விய பாதையில் நகர்ந்து செல்லல் வேண்டும். தனது சொந்தக் கருத்தையும் நிறுவனத்தின் கருத்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஆற்றல் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

பலநிலைகள் கொண்ட பல்கலைக்கழகம் பல்வேறு இலக்கு களையும், பல்வேறு தொழிற்பாடுகளையும், முரண்பாடுகளையும் கொண்டது. அதனை வளப்படுத்துவதற்குரிய சொல்லாடல்களும், முகாமையும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். கேர் முன்வைத்த இக்கருத்து பாரம்பரியமான புனிதமான பல்கலைக்கழக ஆசாரங் களை வலியுறுத்தியோருக்கு மாறுபாடானதாக அமைந்தது. ஆயினும் மாற்றமடைந்துவரும் பல்கலைக்கழகத் தொழிற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கருத்தை அவர் முன்வைத்தார். பொருண்மிய நோக்கை பல்கலைக்கழக செயற்பாடுகளுடன் இணைத்த அவரின் நோக்கு இன்று மிகப் பெரிய வடிவத்தை எடுத்துள்ளது.

"வாழ்நாள் முழுவதும் கற்றல்" என்ற எண்ணக்கருவை அவர் பல்கலைக்கழகத்துடன் இணைத்தார். மனித அந்நியமயப்பாட்டை ஒழிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் உதவ முடியும் என்று கருதினார். கல்வியால் மனிதர் சமூக உணர்வுள்ளவர்களாக ஒன்றிணைக்கப்படும் பொழுது, அந்நியமயப்பாடு நீங்கி விடும். மனிதருக்கும், குழுக்களுக்கும், சமூக வர்க்கங்களுக்குமிடையேயுள்ள முரண்பாட்டைக் குறைப்பதற்குக் கல்வி உதவ முடியும். கைத்தொழிற் புரட்சியி னால் உற்பத்தி அதிகரித்தது. வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகின்றது. இந்நிலையில் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்குரிய புதிய அறிவையும், புதிய திறன்களையும் கல்வியால் உருவாக்கித் தருதல் வேண்டும். அதேவேளை மக்களாட்சிப் பண்புகளைப் பராமரித்து வளர்ப்பதற்குரிய சுதந்திரத்தை உருவாக்குவதற்கும் கல்வி துணைநிற்றல் வேண்டுமென முன்மொழிந்தார்.

உயர்ந்தோர் குழாத்தினருக்குரியதாக விளங்கிய உயர்கல்வி அனைவருக்குமுரியதாக மாற்றமடைந்துள்ளது. முன்னேற்றகரமான ஆய்வுகளை மேற்கொள்ளும் பேராசிரியர்கள் உலகப் பிரசைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவருகின்றனர். சந்தைகளின் தேவைகளையொட்டிக் கல்விச் செயற்பாடுகள் நகர்த்தப்படுகின்றன.

கோளமயக் கல்வி பற்றியும் சந்தை நிலவரங்களை நோக்கிய கல்வி பற்றியும் முதலாளியக்கண்ணோட்டத்தில் விளக்கி, இருபத் தோராம் நூற்றாண்டுக்குரிய உயர்கல்வித் தரிசனத்துக்கு நுழைவாயி லமைத்தார். உலக அரங்கில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தைக் கல்விவாயிலாக மீள வலியுறுத்தும் கருத்துக்களையும் முன்னெடுத்தார்.

தமது கருத்துக்களை வலியுறுத்தும் நூலாக்கங்களைத் தனித்தும், ஆய்வாளர்களுடன் இணைந்தும் மேற்கொண்டார். அவற்றுள், "பல்கலைக்கழகத்தின் பயன்கள்", "கலிபோர்னியாவின் பொதுக்கல்வி - அடுத்த கால் நூற்றாண்டுக்குரியது", "அமெரிக்க உயர்கல்வியின் பிரச்சினைக்குரிய காலங்கள், 1990ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும்", "மார்சல் மற்றும் மார்க்சும் நவீன காலங்களும்" முதலாம் நூல்கள் குறிப்பிடத்தக்கவை. எம்.சி.ஸ்ருவர்ட் என்பவர் கேரின் கல்விப்பணிகளையும், வினைப்பாடுகளையும் அடிப்படையாக வைத்து கலாநிதிப் பட்டத்துக்குரிய ஆய்வை மேற்கொண்டார். அந்த ஆய்வில் கேர் அவர்கள் "வினைப்படும் நுண்மதியாளர் (Action Intellectual)" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

கோள மயமாக்கலின் விரிவும், உலக வங்கியின் மூன்றாம் உலக நாடுகளுக்கான உயர்கல்வி தொடர்பான விதந்துரைகளும், கேரின் உயர்கல்வி சிந்தனைகளை ஒருவகையிலே பிரதிபலித்து வருகின்றன. இவ்வகையில் "சந்தைகளைக் குவியப்படுத்தும் உயர்கல்விச் செயற்பாடுகள்" குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னவீனத்துவ கல்விச் சிந்தனைகளை வழங்கிய லியோதார்த்

## (JEAN FRANCOIS LYOTARD) (1924-1998)



பிரான்சின் நவீன நுண்மதியாளர் வரிசையில் லியோதார் தனித்துவம் மிக்கவராகக் கருதப்படுகின்றார். அவர் எழுதிய "பின்னவீனத்துவ நிலவரம் - அறிவு பற்றிய ஓர் அறிகை" (1984) என்ற நூல் அறிவு, விஞ்ஞானம், கல்வி ஆகிய துறைகளிலே தனித்துவம் மிகக் கருத்துப் பங்களிப்பாகக் கொள்ளப்படுகின்றது. மேலைப் புலக்கல்வியிலும், அறிவுத்துறைகளிலும் நிலவும் "பெரும் உரையங்களை" (Meta Narratives) திறனாய்வுக்கு உட்படுத்துதலே இவரது பிரதான முன்னெடுப்பாக அமைந்தது. பெரும் உரையம் என்பது கண்மூடித்தனமான திரட்டிய நோக்கை வலியுறுத்துகின்றது. எங்கும் அது பிரயோகிக் கத்தக்கது என்ற தீவிரமான பொதுமைப்பாட்டையும் மையப்பாட்டையும் அது கொண்டுள்ளது. அதனிடத்தே மேலாதிக்கப்பண்பு உட்பொதிந்துள்ளது என்றவாறு அவரது முன்மொழிவுகள் எழுச்சி பெறுகின்றன.

மெய்யியல், கற்றல், கற்பித்தல் ஆகிய பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தவேளை தீவிர மார்க்சியவாதியாகவும், அரசியல் வினைப்பாடு கொண்டவராகவும் அவர் மாறினார். புரட்சிகர தொழிற்சங்க இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டு உழைத்தார். அதனைத் தொடர்ந்து பல உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். மாணவரது போராட்டங்களில் உட்பொதிந்திருந்த நியாயப்பாட்டைத் தருக்க பூர்வமாக விளக்கி உதவினார்.

மார்க்சியப் பிடிப்பிலிருந்து விலகத் தொடங்கிய அவர் பரிஸ் பல்கலைக்கழக மெய்யியற் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் வருகை விரிவுரையாளர் பதவிகளை ஏற்றுப் பணிபுரிந்தார். பின்னவீனத்துவம் தொடர்பான அவரது கருத்தாக்கங்களும் முன்மொழிவுகளும், சமூகவியலிலும் மெய்யியலிலும் பல கருத்து வினைப்பாடுகளை உருவாக்கி வருகின்றன. பின்கைத்தொழில் சமூகங்களிற் கல்வி, தொழில்நுட்பம், விஞ்ஞானம், அறிவு முதலானவற்றின் தோற்றமும், மாற்றமும் முதலாம் துறைகளில் அவர் முன்வைத்த பின்னவீனத்துவக் கருத்துக்கள் அறிகை நிலையில் பரவலான தாக்கங்களை ஏற்படுத்தின.

விளைவுப் பண்டமாக மொழியும் கல்வியும் நிலைமாற்றமடைந்து வந்துள்ளன. கல்வி உற்பத்திப் பண்டம் போன்ற பரிமாற்ற நிலையைப் பெற்றுள்ளது. இந்த எண்ணக்கருவினை அவர் ஆற்றுகை தத்துவத்தினால் *(Performity Principle)* விளக்கினார். அதாவது கல்வியின் விளைவுகள் உள்ளீடு மற்றும் வெளியீடு ஒப்புமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. "பிறகாரணிகளைக் கைவிட்டு, "வினைத்திறன்" என்ற காரணியே கல்வியில் முன்னெடுக்கப்படுகின்றது. மொழியிலும் கல்வியிலும் முன்னெடுக்கப்படும் இந்த அணுகுமுறை பன்மை நோக்குப்பாதகமாக அமைகின்றது. சமூகத்தின் நடைமுறை ஆற்றலை மட்டும் மேம்படுத்துதல் கல்வியின் ஆற்றுகைச் செயற்பாடாகக் கொள்ளுதல் தவறானது. எது உண்மை என்பதையும் எது சரியானது என்பதையும் அறிந்துகொள்வதற்கு இந்த அணுகுமுறை துணை செய்யமாட்டாது. இங்கே கல்வியின் பயன்பெறுமானத்தி லும் *(Use Value)* பார்க்க பரிமாற்றப் பெறுமானமே *(Exchange Value)* வலியுறுத்தப்பட்டுள்ளது என்று திறனாய்வு செய்தார்.

பன்மை இயல்புகள் பொருந்திய அணுகுமுறைகளாலும், புத்தாக்கங்களினாலும், ஆக்கமலர்ச்சியினாலும், விரிந்த கற்பனை-களாலும் மட்டுமே கல்வியின் யதார்த்த நிலைப்பாட்டினைத் தெளிவு படுத்தி விளக்க முடியும். புதிய கருத்துக்களையும் புதிய கண்டு-பிடிப்புக்களையும் உற்சாகப்படுத்தாத வெறுமனே பரிமாற்றச் செயல்முறை கொண்ட கல்வியால் பயனேதுமில்லை.

அறிவு எவ்வாறு இருப்புக் கொள்கின்றது, எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றது, எவ்வாறு அங்கீகரிப்புக்கு உள்ளாக்கப்-படுகின்றது. முதலானவற்றை அவர் ஆய்வுக்கு உட்படுத்தினார். அறிவு தொடர்பான எந்தக் கோட்பாடும் எப்போதும், எந்தக் காலத்திலும், எவ்விடத்திலும் சரியானதாக இருக்கமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு புலமை நெறியும் தமக்குரிய "மொழி விளையாட்டை" அடிப்படையாகக் கொண்டது. அந்த மொழி விளையாட்டின் வழி யாகத் தமது உரையங்களை *(Narratives)* உருவாக்கிக் கொள்ளுகின்றன. இதன் வழியாக விஞ்ஞான அறிவே அனைத்துக்கும் மேலானது என்ற கருத்தேற்றம் நிகழ்த்தப்படுகின்றது. இதனை நிறுத்துவதற்குரிய "பெரும் உரையங்களை" அவை உருவாக்கிக்கொள்ளுகின்றன. பெரும் உரையங்கள் "பெரும் கதையாடல்கள்" என்றும் குறிப்பிடப்படும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து அறிவின் மூலவூற்று விஞ்ஞானமே என்ற வலியுறுத்தல் மேலோங்கி வருகின்றது. விஞ்ஞான நோக்கு, தருக்க நோக்கு ஆகியவையே உண்மையைக் கண்டறிவதற்கான வழி முறைகள் என்பன மேலெழத்தொடங்கின. விஞ்ஞான அறிவே முன்னேற்றகரமானதும் முழுமையானதுமென வலியுறுத்தப்படுகின்றது. இந்த இலக்கு நோக்கியே அனைத்து விஞ்ஞானத் துறைகளும் இயங்கிய வண்ணமுள்ளன. விஞ்ஞான அறிவால் உருவாக்கப்பட்ட பயங்கர அழிவாயுதங்களும், சூழலின் கட்டற்ற மாசுபடலும், அழிப்பு நடவடிக்கைகளும் விஞ்ஞான அறிவின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கியது.

விஞ்ஞானப் புலத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கிய "குவாண்டம் பொறிமை" *(Quantam Mechanics)* அணுகுமுறைகள் அளவீடுகளின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்கின. விஞ்ஞானத்தின் "புறவயப்பாங்கு" என்ற எண்ணக்கருவை ஏற்கனவே தோமஸ் கூன் அவர்கள் கேள்விக்குறியாக்கினார்.

விஞ்ஞானம் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்குரிய தொழிற்பாடுகளை மேலும் நுட்பமாக முன்னெடுக்கத் தொடங்கியுள்ள-தென்று லியோதார்த் குறிப்பிடுகின்றார். விஞ்ஞானம் பற்றிய பின்னவீனத்துவ அணுகுமுறை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

(1) அனைத்துக்குமுரிய பொதுவான தீர்வு என்று எதுவுமில்லை.

(2) விஞ்ஞானத்தினால் பெறப்பட்ட முடிவுகள் தற்காலிகமானவை. குறிப்பிட்ட சூழலுக்கு மட்டும் உரியவை.

(3) விஞ்ஞான முடிவுகள் பிரதியீடுகள் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ஒவ்வொரு விஞ்ஞானத்துறையும் தனக்குரிய விளையாட்டு விதிகளைக் (Rules of the Game) கொண்டுள்ளது.

(5) விஞ்ஞானம் உருவாக்கும் பெரும் உரையங்கள் அதிகாரத் தின் நிலை நிறுத்தலாகவே அமையும். அது ஒடுக்குமுறைக் குத் துணை போதலை முன்னெடுக்கும்.

(6) விஞ்ஞானமே மேலான அறிவு என்ற மையவாதம் தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

இணங்கிச் செல்வதைக் காட்டிலும் வேறுபாடு கொள்ளலே பயனுடையது. வேறுபாடு கொள்ளலிலிருந்தே கண்டுபிடிப்புக்கள் மேலெழுகின்றன . இந்நிலையில் அனைத்துலகப் பெறுமானங்கள் என்ற இணக்கப்பாட்டிலும் முரண்படும் போக்குகளே உற்சாகப்படுத்தப்பட வேண்டியுள்ளன.

உண்மைபற்றிய மரபுவழிக் கருத்தை லியோதார்த் திறனாய்வுக்கு உட்படுத்தியுள்ளார். குறிப்பிட்ட கருத்து வினைப்பாடுகளுடன் *(Discourses)* உண்மை கட்டுப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மொழி விளையாட்டுக்களினால் உண்மை கட்டுமை செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட உரைப்போரால் நிறுவப்படும் தற்காலிகப் பண்பு கொண்டதே உண்மையென நிறுவப்படுதலை அவர் நிராகரிக்கின்றார் அகிலப் பண்புமிக்க நித்திய உண்மை என்று எதுவுமில்லை. குறித்த ஊன்றிய விருப்புக்களை அடிப்படையாகக் கொண்டே உண்மை உருவாக்கப் படுகின்றது. கடந்தகால உண்மைகள் பற்றிய நோக்குகள் கட்டுக் கதைகளாகவே அமைந்துள்ளன.

இவரது நோக்கிலே தருக்கம் என்பது வன்முறையாகவே கருதப்படுகின்றது. அறிவு இப்படித்தான் அணுகப்பட வேண்டுமெனத் தருக்கம் வலியுறுத்தி நிர்ப்பந்திக்கின்றது. தருக்கத்துக்குப் பொருந்தி வராதவை நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட தருக்கத்துக்குப் பொருத்தமற்ற உண்மைகள் அறியப்படாது மறைக்கப்பட்டு விடுகின்றன.

ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான கல்வியை இவர் முன்மொழிந் தார். அது எதிர்வடிவங்களை வற்புறுத்துகின்றது. தொடர்ச்சிகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறடிக்கின்றது. மையப்பட்டு நிற்கும் அதிகாரத்தை சிதைத்து நிற்கின்றது. முறைப்படாததும் மூடப்படாததுமான அணுகுமுறைகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. கருத்து வேறுபாடுகளை வளர்த்தெடுத்தல் ஆதிக்க அழுத்தங்களை எதிர்ப்பதற்கான வழிமுறையாகின்றது.

கலைப்படைப்புக்கள் வரையறுக்கப்பட்ட விதி மேலாதிக்கங்களுக்கு உட்படாதிருத்தலால் அவை நூலியம் (Text) என்ற வடிவைப் பெறுகின்றன. நூலியத்தின் இயல்பு பல்வேறு கருத்துக்கோடல்களுக்கு இடமளித்தலாகும். முடிந்த முடியான எந்தவொரு கருத்தை யும் நூலியம் கொண்டிருக்க முடியாது.

நவீன நுகர்ச்சிச் சமூகத்துக்குரிய கல்வி முறைமையையும், கல்வி நிறுவனங்கள் தமக்குள்ளே வரித்துக்கொண்டுள்ள ஒருமைத்தன்மையையும், திறனாய்வு செய்வதற்கு லியோதார்தின் கருத்துக்கள் பயனுள்ளவையாக இருக்கின்றன.

இருபதுக்கு மேற்பட்ட நூல்களையும், பல ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். அவற்றுள் "பின்னவீனத்துவ நிலவரம்", "பின்னவீனத்துவம் விளக்கப்பட்டுள்ளது", "அல்மானிடப் பண்பு: நேரம் பற்றிய தெறிப்புக்கள்", "பின்னவீனத்துவத்தை நோக்கி","லிபி டினல் பொருளாதாரம்", "வித்தியாசப்படுத்தல்" முதலியவை முக்கியமானவை.

பிரச்சினைகளையும், அழுத்தங்களையும், வன்முறைகளையும் இவர் விதந்து பேசினாலும், அவற்றை மாற்றியமைப்பதற்கான செவ்விய வழிமுறைகளை லியோதார்த் முன்மொழியாமலிருத்தல் அவரது ஆய்வுகளின் மிகப் பெரிய இடைவெளியாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துக்கும் அறிவுக்குமுள்ள தொடர்புகளைத் தெளிவுபடுத்திய மிசேல் பூக்கோ

## (MICHEL FOUCAULT) (1926-1984)



பின்கட்டமைப்பு வாதம், பின்னவீனத்துவம் முதலாம் கண்ணோட்டங்களில் பூக்கோ கல்வியை அணுகினார். லூயி அல் துஸ்சே மற்றும் மொறிஸ் மேர்லேயு பொன்ரி ஆகியவர்களின் மாணவராக இருந்து அறிவின் மெய்யியலை ஆராய்ந்தவர். "வரலாற் றின் மெய்யியல்" அவரது சிறப்பு ஆய்வுப்புலமாக அமைந்தது. இருப்புவாதியாகிய நித்சே, உளப்பகுப்புவாதியாகிய பிராய்ட், பொதுவுடைமைவாதியாகிய மார்க்ஸ் ஆகியோரின் சிந்தனைகள் பூக்கோவிடத்து தாக்கங்களையும் இடை வினைகளையும் ஏற்படுத்தின.

சிறுவனாயிருக்கும் பொழுது தீவிர கட்டுப்பாடுகள் நிறைந்த கத்தோலிக்கப் பாடசாலையிலே பயின்ற அனுபவங்கள் அவரது சிந்தனை ஆக்கங்களிலே தாக்கங்களை ஏற்படுத்தின. 1950 ஆம் ஆண்டளவில் மனநோயாளர் மருத்துவமனையில் பணியாற்றிய பொழுதுபெற்ற அனுபவங்களும் அவரது சிந்தனைகளிலே தாக்கங்களை ஏற்படுத்தின. அந்த அனுபவங்களை அடியொற்றியே அவர் "உளநோயும் உளவியலும்" என்ற நூலை எழுதினார். உளநோய்க்கான அணுகுமுறைகள் இருப்பியம் மற்றும் தோற்றப்பாட்டுவாதம் அல்லது நிகழ்மியத் (Phenomenology) தளங்களில் அமைந்தன. உளநோயை அடிப்படையாகக் கொண்ட ஆய்வை மேற்கொண்டு 1959ஆம் ஆண்டில் அவர் கம்பேர்க் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தொல்சீர் காலங்களிலே மருத்துவக் காரணிகளால் அன்றி சட்டக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டே ஒருவர் மனநோயாளி என்று வரையறுக் கூறப்பட்டமையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டினார். மனநோய், மற்றும் அறிவுக் கட்டுமானம் முதலியவற்றை ஆராய்வதற்கு அவர் பயன்படுத்திய ஆய்வுமுறை "அகழ்வாய்வு" அல்லது தொல்பொருள் ஆய்வு (Archaeology) எனப்படும். பழைய அறிவுக் கட்டுமானங்களின் இயல்பைக் கிளறி ஆய்வுக்கு உட்படுத்துதலே இதன் கருத்தாகும்.

சிந்தனை ஒழுங்குமுறையின் வரலாற்றை இவர் ஆழ்ந்து தேடலானார். "பொருள்களின் ஒழுங்கமைப்பு" (The Order of Things) மனித சிந்தனை ஒழுங்கமைப்பின் மூன்று செயலமைப்புக்களை இனங்காட்டியுள்ளார். அவை

தொல்சீர் காலம்

மறுமலர்ச்சிக் காலம்

நவீன காலம்

இவற்றை சிந்தனையின் தொகுதிகள் அல்லது அறிவுக் குவியங்கள் (Epistemes) என்று குறிப்பிட்டார்.

அதிகாரம், அறிவு, மனித உடல் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். அதிகாரம் மனித உடலை நோக்கிக் குவியப்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரத்தின் தண்டனை நுட்பங்களையும் ஒழுக்க வலியுறுத்தல்களையும், சிறைச்சாலைகளின் கட்டமைப்பையும் தொடர்புபடுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார். அதிகார வழியான ஒழுக்கக்கட்டுப்பாடுகள் மூன்று நிலைகளிலே மேற்கொள்ளப்படுகின்றன.

அவை:

(1) மனிதவுடலைப் பணிவுடலாக (Docile Body) மாற்றுதல்.

(2) பொருத்தமானதும் நுட்பமானதுமான பயிற்சிகளினூடாக அதிகாரத்தை நிலைநாட்டுதலும் அடிபணிய வைத்தலும்.

(3) அனைத்தும் தழுவிய மாறல்முறை நடவடிக்கைகளால் (Panopticism) அடிபணியச் செய்தல்.

பாடசாலைகள், சிறைச்சாலைகள், மருத்துவமனைகள் முதலியவற்றில் மேற்கூறிய வழிகளினூடாக அதிகாரத்தின் வழியான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பாடசாலையில் இருந்தே குழந்தைகளின் செயற்பாடுகள் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. நேரசூசிகை, அணிநடை ஆசிரியரின் உடல் மொழி முதலியவற்றால் குழந்தைகளிடத்தே கட்டுப்பாடுகள் திணிக்கப்படுகின்றன. வகுப்பறை ஒழுங்கமைப்பு, அதிகார நிரலமைப்பு, பள்ளிக்கூடக் கட்டமைப்பு, கற்பித்தல் பொறிமுறைச் செயற்பாடுகள், பரீட்சை முறைகள் முதலியவை அதிகாரத்தின் வலிய கரங்களாகச் செயற்பட்டு வருகின்றன.

அறிவு நடுநிலையானது, புறவயமானது, உண்மையை உணர்த்துவது என்ற உரைகளை பூக்கோ நிராகரிக்கின்றார். அறிவின் இயல்பை விளக்குவதற்கு அவர் மையம் *(Centre)*, ஓரம் *(Periphery)* என்ற எண்ணக்கருக்களை முன்வைக்கின்றார். குறிப்பிட்ட கருத்துக்களும், அபிப்பிராயங்களும் ஓரங்கட்டப்பட வேண்டுமென்பதை மையம் வலியுறுத்தியவண்ணமிருக்கும். தனக்கு ஒவ்வாதவற்றை தரமற்றது, முறையற்றது, உண்மையற்றது, பொறுப்பற்றது என்றவாறு மையம் ஓரப்படுத்திக்கொண்டிருக்கும். தனது பாதுகாப்புக் கவசங்களாக ஓரம் பற்றிய மதிப்பீடுகளை அறிவு வடிவிலே மையம் கட்டுமானம் செய்தவண்ணமிருக்கும். மனித உடலையும் தனக்குச் சாதகமாக வடிவமைத்துக்கொள்ளும் செயல் முறைகளிலே மையம் ஈடுபட்டவண்ணமிருக்கும்.

அதிகாரத்தை நிலை நிறுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் வகுப்பறைச் செயற்பாடுகள் "பணிவுடலாக்கம்" என்பதை மிகவும் சாதுரியமாக முன்னெடுக்கின்றன. வகுப்பறையின் மேசையைப் பயன்படுத்தும் முறை, கதிரையில் இருக்கும் முறை, மேசைகளுக்கிடையேயுள்ள தூர வரையறுப்பு, உயிரில்லாத கதிரைக்கும் மேசைக்கும் ஏற்றவாறு உயிருள்ள மாணவரைப் பணிய வைக்கும் நிலை முதலியவை பணிவுடலாக்கச் செயல்முறையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பூக்கோவின் கல்வி மற்றும் அறிவு பற்றிய ஆய்வுகளில் கருத்து வினைப்பாடு *(Discourse)* என்ற எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. நிறுவனங்களும் சமூக நடைமுறைகளும், கருத்து வினைப்பாடுகளும் சிக்கல் பொருந்திய நிலையில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளமையை அவர் விளக்கியுள்ளார். சமூக ஆக்கத்துடன் இணைந்த அதிகார ஆக்கிரமிப்பு வரிசையுடன் பின்னிப்பிணைந்த மொழியின் வெளிப்பாடுகளை உரைவினைப்பாடுகள் கொண்டிருக்கும். அதிகார அணியினரின் கருத்து வினைப்பாடுகளில் வகுப்பு, தேசியம், பால் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் எண்ணக்கருக்கள் அவர்களுக்குச் சார்பான முறையிலே தெளிவாகக் கட்டுமானம் செய்யப்பட்டிருக்கும்.

அதிகாரக் குவிப்புக்களை அழித்தொழிக்கும் செயற்பாடு "மையம் அழித்தல்" என்ற எண்ணக்கருவினாற் புலப்படுத்தப்படும். மையக்கட்டமைப்பு அதிகாரத்தின் வலியுறுத்தலுடன் தொடர்புபட்டு நிற்கும். அறிவின் ஆக்கம், அறிவின் கையளிப்பு ஆகியவற்றை உட்கொண்ட பண்பாட்டு விதிகள் ஆகிய அனைத்தும் அதிகாரத்தில் உள்ளோருக்குச் சாதகமான மையத்துடன் தொடர்புபட்டு நிற்கும்.

கருத்து வினைப்பாடு என்பது தனக்குரிய பலத்தையும் அதே வேளை பலவீனங்களையும் கொண்டிருக்கும். கருத்து வினைப்பாடு ஒன்று தன்னைத்தானே பலம் செய்வதற்கான அடிப்படைகளைக் கொண்டிருக்கும் வேளை தன்னைத்தானே பலவீனப்படுத்தும் இயல்புகளையும் கொண்டிருக்கும். கருத்துவினைப்பாட்டினை வெளியில் இருந்து ஆராயும்பொழுது அதன் பலவீனங்களை மேலும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

மேலாதிக்க அதிகாரத்துக்கும் அறிவுக்குமுள்ள தொடர்புகளை விளக்குவதற்கு "அறிவுக் குவியங்கள்" என்ற எண்ணக்கரு அவராலே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு கால கட்டங்களிலும், அதிகார அணியினர் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்குரிய அறிவுக் குவியங்களை உருவாக்கி வைத்திருப்பர். "பொருள்களின் முறைமை", மற்றும் "அறிவின் தொல்லியல்" முதலாம் நூல்களில் அறிவுக்குவியங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

அதிகார நிலைப்பட்ட மாற்றங்களுக்கும் அறிவுக் குவியங்களின் மாற்றங்களுக்குமிடையே நேரடியான தொடர்புகள் காணப்படும். மேலைப்புல அறிகை முறைமைகளும், அறிவுக் குவியங்களும், மெய்யியற் சிந்தனைகளும் ஒடுக்குமுறைப் பண்புகளையும், வன்முறைப் பண்புகளையும் உள்ளடக்கியவாறு வளர்ந்து வந்துள்ளன.

ஒவ்வொரு காலத்திலும் அதிகாரத்தில் உள்ளோரால் உருவாக்கம் செய்யப்பட்ட அறிவுக்குவியங்கள் அதற்கு முந்திய காலத்து அறிவுக் குவியங்களின் அறை கூவல்களுக்கு விடை தருவதாக அமைந்தன. இந்த முன்னேற்றத்தை உண்மையைக் கண்டறிதல் தொடர்பாக நிகழ்ந்த முன்னேற்றம் என்று கொள்ள முடியாது. ஒவ்வொரு காலகட் டத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும் அதிகாரமும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தமை தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து மனிதரைக் கட்டுப்படுத்தும் தண்டனை முறைகளைத் திட்பநுட்பமாக உருவாக்கியுள்ளன. "ஒழுக்காறும் ஒறுத்தலும்" *(Discipline and Punish)* என்ற நூலில் தண்டனை முறைமையின் இயல்பையும் நுண்ணுபாயங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். ஒருவருக்குத் தண்டனை வழங்குவதைக் காட்டிலும், தண்டனைகளின் குரூரமான இயல்புகளைச் சுட்டிக்காட்டியும் கூறியும் பயமுறுத்தல்களை விடுக்கும் பொழுது அவை கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் என விளக்கியுள்ளார்.

சிறைக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள், பாடசாலைகள் முதலியவற்றின் கட்டடக்கலை நுட்பங்களைப் பகுத்தாராய்ந்து பார்க்கையில் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு அவற்றில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். நடுக் கோபுரத்தில் இருந்துகொண்டு சிறையில் உள்ள கைதிகளைக் கண் காணிக்கக் கூடியவாறு கட்டடக்கலை அமைப்பாக்கம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. தாம் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உள்ளாக் கப்படுகிறார்கள் என்ற அச்சத்தையும் பதகளிப்பையும் அந்த அமைப்பு ஒடுக்கப்படுவோரிடத்து ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொருவரும் அவதானிக்கப்படும் நிலையில் உள்ளனர் என்ற பய உணர்வு ஏற்படுத்தப்பட்டு அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய வைக்கப்படுகின்றனர். அதிகாரத்தின் வீச்சை மனத்திலே உள்வாங்கி அடக்கி வாழவைப்பதற்கு ஏற்றவாறு மனக்கட்டுமானத்தை மேற்கொள்ள வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மனிதரைத் தனிமைப்படுத்தும் தன்னிலையாக்க நடவடிக்கைகள் இச்செயற்பாட்டை மேலும் மீள வலியுறுத்தி வலுவூட்டுகின்றன. அதிகாரம் செலுத்தப்படுவோரது உள்ளத்திலே அதிகாரம் உட்பொதிந்து செயற்படுமாறு செய்வதற்கு அறிவு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அதிகாரத்தினால் ஒடுக்கப்பட்டு, எல்லைப்படுத்தப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களின் கல்வி பற்றிய சிந்தனைகள் மீது கருத்துப் பாய்ச்சலை ஏற்படுத்தினார். மனநோயாளர், விலகல் நடத்தை கொண்டோர், கைதிகள், அலிகள் முதலியோரின் குரலை ஒலிக்கச் செய்யும் கல்வி நடவடிக்கைகளை இவர் மீள வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் பலவாறான கருத்து வினைப்பாடுகளை நிகழ்த்திய வண்ணமுள்ளது. அது ஒற்றைப்பொருள் அன்று. அது பல நுண் அலகுகளைக் கொண்டுள்ளது. அறிவு என்ற அமைப்பின் செயற்பாடுகள் அதிகாரத்தை மீளவலியுறுத்துகின்றன. அதிகாரம் சமூக ரீதியாக முறைப்படுத்தப்பட்டுள்ளது. அது சட்டமாகவும், சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகவும் மாறி விடுகின்றது.

பாடசாலை, மருத்துவமனை, சிறைச்சாலை என்ற அனைத்து நிலையங்களிலும் அதிகார நுண் அரசியலின் *(Micropolitics of Power)* ஊடுருவலும் செயற்பாடுகளும் நிகழ்ந்தவண்ணமுள்ளன.


ஒவ்வொருவரும் தன்னிலை இழந்த நிலையில் வாழ்ந்து கொண் டிருக்கின்றனர். தன்னிலை என்பது அதிகாரத்தின் தாக்கங்களுக்கு உள்ளாகின்றது. இதனால் முழுமையான தன்னிலை (Self) என்பது இல்லாத பொருளாகின்றது. தன்னிலை ஒருவருக்கு உரிய பொருள் அல்ல என்ற நிலைக்குத்தள்ளப்படுவதற்குக் கல்வி உதவுகின்றது.

அதிகாரத்தின் உரையாடல்களைக் கல்வி வெளிப்படுத்தி நிற்றலை விறைப்பான மொழியாட்சியினூடாக வெளிப்படுத்திய ஆற்றல் கொண்டவராக பூக்கோ விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலனித்துவ ஒடுக்கு முறைக்கு எதிரான கல்விக் கருத்தியலை உருவாக்கிய போலோ பிறேறி (PAULO FREIRE) (1921-1997)



காலனித்துவக்கல்வி முறைமையைத் தீவிர திறனாய்வுக்கும் நிராகரிப்புக்கும் உட்படுத்தியோர் வரிசையில் போலோ பிறேறி தனித்துவமானவர். பிரேசிலின் வடகிழக்குப் பிரேசிலில் உள்ள றெசிபி என்ற கிராமத்திற் பிறந்த இவர் சிறுவயதில் பொல்லா வறுமைச் சூழலிலே சிக்கி வாழ்ந்தார். காலனித்துவ சுரண்டலுக்கும், வறுமை உருவாக்கத்துக்குமுள்ள தொடர்புகளை அனுபவ நிலையிலும், அறிவு நிலையிலும் விளங்கிக்கொண்டு தமது வினைப்பாடுகளை முன்னெடுத்தார்.

காலனித்துவ நிலை நிறுத்திய ஆட்சியாளர் ஒடுக்கு முறைக்குச் சாதகமான கல்வி முறைமையை உருவாக்கி வைத்துள்ளனர். ஒடுக்கு-வோருக்குச் சாதகமாகவும், ஒடுக்கப்படுவோருக்குப் பாதக மாகவும் அந்தக் கல்விமுறை அமைந்துள்ளது. கல்வி இயக்கம், சமூக வினைப்பாடு, பிரேசில் நாட்டின் பண்பாட்டுக் கோலங்கள் முதலியவற்றை ஒன்றிணைக்கும் வினைப்பாடு மிக்க கருத்துக்களை முன்மொழிந்தார். விவசாயக் கூலியாட்களுடன் ஒன்றிணைந்து வேலை செய்தவேளை அவர்களிடத்து எழுத்தறிவைக் கற்பிப்பதற் குரிய பொருத்தமான முறையியல்களை அவரால் இனங் கண்டு உருவாக்கிக்கொள்ள முடிந்தது.

1964ஆம் ஆண்டில் பிரேசிலில் உருவான இராணுவ சர்வாதிகாரி வன்முறை அரசு போலோ பிறேறியின் முற்போக்கு வினைப்பாடு களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அவரை நாடு கடத்தியது. பிரேசிலில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலி நாட்டுக்குச் சென்ற அவர் தென் - அமெரிக்க நாடுகள் பலவற்றிலே தமது கல்விப்பணிகளைத் தொடர்ந்தார். அவரது கல்வியாற்றல்களைக் கண்டறிந்த யுனெஸ்கோ, உலகத் திருச்சபைப் பேரவை முதலியவை பிறேறியின் சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்கின.

1979ஆம் ஆண்டில் பிரேசில் அரசு புரட்சிகர வினைப்பாட்டாளர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியது. பிறேறி தமது தாய் நாட்டுக்கு மீண்டு வந்தார். ஹாவார்ட் உட்பட்ட பல்வேறு பல்கலைக் கழகங்களின் கௌரவிப்புக்களுக்கு உள்ளான அவர் பிரேசிலின் தொழிலாளர் கட்சியில் இணைந்து தீவிரவினைப்பாட்டாளராக இயங்கினார். 1989ஆம் ஆண்டில் கல்விச் செயலர் பதவியைப் பெற்றுக்கொண்டு வளர்ந்தோர் கல்வி, கலைத்திட்ட மீள்வடிவமைப்பு, கல்வியிலே சமூகப்பங்குபற்றல் முதலாம் துறைகளில் வினைப்பாடுகளை முன்னெடுத்தார்.

கல்வியில் மாற்றுச்சிந்தனைகளை முதன்மைப்படுத்திப் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டவேளை அவை உலகளாவிய முறையிலே வரவேற்பைப் பெறலாயிற்று.

சமூகத் தொடர்புகளின் வழியாகவே கல்வி முறைமை உருவாக்கப்படுகின்றது. எத்தகைய ஒரு கல்விச் செயற்பாட்டையும் யாருக்கு? ஏன்? எப்படி? எதனால்? முடிவு என்ன? முதலாம் வினாக்களுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. அனைத்துக் கல்விச் செயற்பாடுகளும் சமூக ஊடுருவல் கொண்டவை.

முதலாளிய சமூகங்கள் சுரண்டப்படுவோரை ஒடுக்குவதற்குரிய கல்வி முறைமையினை திட்பநுட்பமாக உருவாக்கி வைத்துள்ளன. அந்தக் கல்வி முறைமை ஒடுக்குவோருக்குச் சாதகமாகவும் ஒடுக்கப்படுவோருக்குப் பாதகமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. ஒடுக்கப்படுவோர் கல்வி முறைமையினூடாக "மௌனித்து வாழும்" பண் பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். "தலையாட்டி மாடுகள்" போன்ற நிலைக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர். தம்மீது திணிக்கப் படும் அவலங்களைப் பகுத்தாராய்ந்து முன்னெடுப்பு வினைப்பாடுகளை மேற்கொள்ளாதவர்களாக உருவாக்கப்பட்டு வருகின்றனர். இந்தச் செயற்பாட்டினை ஒடுக்குமுறைக்கான கல்வி மிகவும் நுட்பமாக உருவாக்கிய வண்ணமுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகூலமடைந்தவர்களுக்கான கல்வியிலும் கற்பித்தலிலும் கூடுதலான கவனம் செலுத்தினார். கற்பித்தல் என்பது வகுப்பறைக்குள் மட்டும் கட்டுப்பட்டதன்று. கல்வியின் வழியான பொருத்தமான மீள் உற்பத்தியையும், நிலைமாற்றத்தையும் வலியுறுத்தினார். கல்வியானது நடப்பியலைத் தெளிவுபடுத்துவதாக அமைவதுடன், அறியாமையை மாற்றியமைப்பதாகவும், ஒடுக்குமுறைகளைத் தகர்ப்பதற்கு உதவுவதாகவும் அமைதல் வேண்டும்.

தகவல்களைக் கையளித்தல் மட்டும் கல்வியாகாது. திரட்டிய அறிவுக் குவியல்களைக் கையளித்தலும் கல்வியாகாது. இந்த எண் ணக்-கருவை அவர் வங்கி முறை (Banking) என்பதால் விளக்கினார். ஆசிரியர் மாணவர் மீது அறிவை வைப்புச் செய்தலும், பரீட்சை களிலே மீளப் பெறுதலும் என்ற செயற்பாடுகள் வங்கி முறைமைக்கும் கல்வி முறைமைக்கும் ஒப்புமையாக குறிப்பிட்டன. ஒடுக்குவோரால் கட்டமைக்கப்பட்ட கல்வி முறைமை வங்கி முறை மைக் கல்வியாகவே வலிமை பெற்றுள்ளது. திறனாய்வுச் செயற் பாட்டுக்கும் தெறித்தற் செயற்பாட்டுக்கும் அங்கு இடமில்லை. செய லூக்கமற்ற வெறுமைநிலையை அது உருவாக்கிய வண்ணமுள்ளது.

மரபு வழியான "எழுத்தறிவு" என்பதற்கு மாற்றுவகையான விளக்-கத்தை இவர் கொடுக்கின்றார். வாசிப்பு என்பது நூலியத்தை வாசித்தல் அன்று - உலகை வாசித்தலாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

மனிதர்கள் பண்பாட்டை உருவாக்குபவர்கள் மட்டுமல்ல - வரலாறும் அவர்களால் உருவாக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஒடுக்குமுறை அழுத்தங்களை உதறி வீழ்த்தும் ஆற்றல் ஒடுக்கப்படுவோருக்கு உண்டு என்பதைக் கல்விச் செயல்முறையாற் கையளிக்க வேண்டும்.

ஆசிரியரும் மாணவரும் முழுமை பெறாத முடிவுப் பொருள் களாயுள்ளனர். கல்விச் செயல்முறையின் வாயிலாக அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் பல உண்டு. இதனால் ஆசிரியர் குறைத்து மதிப்பிடப்படுகிறார் என்று பொருள் கோடல் தவறானது. கல்விச் செயல்முறையின் போது ஆசிரியர் திறனாய்வுக் கருத்தாடல்களை மாணவரிடத்து உருவாக்கி மாணவருடன் கூட்டாக ஒன்றிணைந்து அறிவைக்கட்டியெழுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் ஆக்கத்தில் ஆசிரியரும் மாணவரும் பங்காளி களாகின்றனர் என்பது யதார்த்தமாகும்.

பண்பாட்டு வேலையாட்களாகத் தொழில் புரியும் ஆசிரியர்கள் ஒடுக்குமுறைப் பண்பாட்டுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ளும் பொழுது அவர்கள் வகுப்பறையையும் கடந்து செய்பட வேண்டியுள்ளது. தாழ்வுக் கருத்திய லுக்கு எதிரான செயற்பாடுகளை ஆசிரியர்கள் முன்னெடுத்து வழிப்படுத்துதல் வேண்டும். தளை நீக்கத்துக்கான கல்வியை ஆசிரியரும் மாணவரும் ஒன்றுசேர்ந்து முன்னெடுத்தல் வேண்டும்.

ஒடுக்குமுறைக்கு எதிரான கோட்பாடு மற்றும் நடைமுறை களை வலியுறுத்திச் செல்கையில் ஆசிரியச் செயல்முறை (Pedagogical Process) மீது அதீத கவனம் செலுத்தப்படுகின்றது. இந்நிலையில் "மனச்சான்று மயப்படுத்தல்" (Conscientization) என்ற எண்ணக்கருவைக் கற்பித்தலியலில் முன்வைத்துள்ளார். பொருத்த மானதும் ஒடுக்குமுறைக்கு எதிரானதுமான அறிதலைப்புக்களைத் தெரிவு செய்தல், உள்ளடக்கத்தை வடிவமைத்தல் முதலியவற்றை ஆசிரியரும் மாணவரும் ஒன்றுசேர்ந்து மேற்கொள்வர்.

மனச்சான்று மயப்பட்ட கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டது.

(1) ஆற்றல்மிக்குடையதும், தூண்டற்பேறு தரவல்லதுமான அறிதலைப்புக்களை (Generative Themes) தெரிவு செய்தல்.

(2) சமூகத்துடன் இடைவினை கொள்வதனால் அறிதலைப்புக்களின் முகிழ்த்தெழலைக் இனங்காண முடியும்.

(3) நேர்நிலைகளிலும் எதிர்நிலைகளிலும் அறிதலைப்புக்களைப் பரிசீலனை செய்தல்.

(4) பயன்பாட்டிலுள்ள மொழிச் செழுமையின் அடிப்படையில் தூண்டற்பேறு தரவல்ல அறிதலைப்புக்களை வடிவமைத்தல்.

(5) குறிப்பிட்ட சமூகத்தினருக்குப் பொருந்தக்கூடிய சொற்களஞ்சியத்தை அடியொற்றியே கற்பித்தல் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) வாசித்தலை எழுத்து நிலைக்கு நிரற்கோடல் செய்யக்கூடியவாறு பாட ஒழுங்கு இடம்பெறல் வேண்டும்.

கல்வியை அரசியற் பிரச்சினையின் ஒரு பகுதியாக முன்மொழிந்த இவர் தமது கருத்துக்களைப் பின்வரும் நூல்களிலே விரிவாக விளக்கினார்.

(1) ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஆசிரியம்

(2) விடுதலைக்கான பண்பாட்டுவினைப்பாடு

(3) திறனாய்வு மனச் சான்றுக்கான கல்வி

(4) முன்னேறிச் செல்லும் ஆசிரியம்

(5) நம்பிக்கைக்குரிய ஆசிரியம்

(6) பண்பாட்டு வேலையாட்களாக ஆசிரியர்கள்

பிறேறியினுடைய ஒடுக்கு முறைமைக்கு எதிரான சிந்தனைகள் கலை இலக்கியங்கள், அரங்கியல், இறையியல் முதலாம் துறைகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கின. கல்வி, அரசியல், பண்பாடு, பொருளியல் முதலாம் துறைகளை ஒன்றிணைத்து அவர் மேற்கொண்ட வினைப்பாடுகள் காலனித்துவத்துக்கெதிரான பெரும் கருத்துத் தளத்தையும், மனவெழுச்சிக் கட்டமைப்புக்களையும் ஏற்படுத்தின. இந்தியாவின் காலனித்துவப் பின்புலத்தில் உருவான மகாத்மாகாந்தியோடு பிறேறியை ஒப்புமை செய்யும் ஆய்வு முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒடுக்குவோர் பயன்படுத்தும் கவர்ச்சிமிக்க அறிதலைப்புக்களின் உட்பொருளை ஒடுக்கப்படுவோர் அறிந்து கொள்ளல் வேண்டும். எடுத்துக்காட்டாக அவர்கள் பயன்படுத்தும் ஒரு அறிதலைப்பின் உட்பொருளை நோக்கலாம்.

**"மக்களாட்சியில் எல்லாரும் சமத்துவமானவர்கள்"** கவர்ச்சிமிக்கதாக இது அமைந்திருந்தாலும், அந்தஸ்து நிலையிலும், பொருளாதார நிலையிலும், அதிகார நிலையிலும் வேறுபாடு காணப்படுதலை ஒடுக்கப்படுவோர் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடக் கலைப்புச் சமூகத்தை முன்மொழிந்த இவான் இலிச்

## (IVAN ILIICH) (1926-2002)



வரலாற்றாசிரியராக, சமூக திறனாய்வாளராக, திருச்சபை பங்குத் தந்தையாக, பல்கலைக்கழக நிர்வாகியாக, விரிவுரையாளராக, பேராசிரியராக, நூலாசிரியராக என்றவாறு பல வகிபாகங்களுக்கு உரியவராக விளங்குபவர் இலிச் அவர்கள். பள்ளிக்கூடக் கலைப்புச் சமூகம் தொடர்பாக அவர் எழுதிய நூல் பெரும் கவன ஈர்ப்பைப் பெற்றது. பள்ளிக்கூடங்களின் பாதிப்புக்கு உள்ளானவர்கள் அந்நூலைத் தேடி வாசிக்கத் தொடங்கினர்.

ஒஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் பிறந்த இலிச்சுக்கு இளமைக் காலத்தில் அயலிலுள்ள பெரியார்களின் துணையுடன் பலமொழிகளைக் கற்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது. பல்வேறு மொழிகள் வாயி லாகக் கிடைக்கப்பெற்ற அறிவூட்டம் காரணமாகக் கல்வியைப் பல கோணங்களிலே தரிசிக்க முடிந்தது. புகழ்பூத்த புலமையாளர்களுடன் இடையுறவு கொண்டு அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப் புக் கிடைக்கப் பெற்றமையால் பள்ளிக்கூடங்களின் முக்கியத்து வத்தை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை. பள்ளிக்கூடத்தைக் காட்டிலும் புலமையாளர்களிடமிருந்து அறிவுத் தேட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என எண்ணினார்.

1938ஆம் ஆண்டு ஹிட்லரின் படையணி ஒஸ்திரியாவைக் கைப்பற்றியது. ஹிட்லரின் நாசிக் கொள்கைக்கு இணங்காத இவரும் குடும்பத்தினரும் இத்தாலிக்குப் புலம்பெயர்ந்தனர். இக்கால கட்டத் திலேதான் அவர் சமய ஈடுபாட்டுடன் பாதிரியாராக இணைந்து- கொண்டார். ரோமா புரியில் உள்ள கிறகேரியன் பல்கலைக்கழகத் தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியலிலும் மெய்யியலிலும் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சால்ஸ் பேர்க் பல்கலைக்கழகத்தில் இணைந்து மெய்யியல் வரலாற்றிலே கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். வரலாற்று முறையியலை ஆர்வத்துடன் கற்ற துடன், பழைய நூலியங்களுக்கு வியாக்கியானம் கொடுப்பதிலும் ஆர்வம் காட்டினார்.

இறையியல் ஆய்வுகளில் "வேதனைப்பாடு" (Suffering) அல்லது துன்ப உழற்சி என்பதுடன் தொடர்புடைய ஆய்வுகள் இருபதாம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இத்துறையிலும் அவரது செயற்பாடுகள் மேலிட்டன. வரலாறு மற்றும் மெய்யியல் துறைக ளில் அவரது ஆய்வுமுயற்சிகள் முன்னேற்றமடைந்ததுடன், இரசாயனவியலைக் கற்பதிலும் ஈடுபட்டார். இதற்குப் புளொறென்ஸ் பல்கலைக்கழகம் வாய்ப்பு வழங்கியது.

அவரிடமிருந்த திறமை ஆற்றல் மற்றும் புலமை காரணமாக திருச்சபையில் அவருக்கிருந்த கணிப்பு ஏற்றம் பெற்றது. ஆயினும் திருச்சபையின் நிறுவனக் கட்டமைப்பு அவரால் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் பின் கலா நிதிப்பட்டப் படிப்பை மேற்கொள்ள ஐ.அமெரிக்காவுக்குச் சென்ற அவர் பூற்றோறிக்கன் பிரச்சினையில் ஈடுபாடு கொண்டார். அப்பிரச்சினைக்கு முகங்கொடுத்து அங்கு இறைபணியாற்ற விரும்பினார். அமெரிக்காவில் குடியேறிய பூற்றோரிக்கன் மக்களை அமெரிக்க மேலாதிக்கப் பண்பாட்டு மயப்படுத்தலில் ஈடுபடவைத்தல் பாவகரமானது என எண்ணிச் செயலாற்றலானார். இஸ்பானிய மொழியைக் கற்று அந்தமக்களிடம் நேருக்குநேர் உரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டது. அவ்வாறே செயற்படத் தொடங்கினார். அதனால் அந்த மக்களின் நன்மதிப்பைப் பெறுதல் இலகுவாக அமைந்தது.

அவர் மேற்கொண்ட அணுகுமுறைகளாலும் ஆழ்ந்த புலமைத்துவ நடவடிக்கைகளாலும் பொன்சிலுள்ள புற்றோறிக்கோ பல்கலைக் கழகத்து துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அவர் மேற்கொண்ட புரட்சிகரமானதும், மாறுபட்டதுமான அணுகுமுறைகள் காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். ஒருபுறம் புலமையாற்றலும் மறுபுறம் புரட்சிகரமான செயற்பாடுகளும் அவரது ஆளுமையின் பரி மாணங்களாக அமைந்தன. அங்கிருந்து தென்னமெரிக்காவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்ரியாகோ, சில்லி, வெனிசுலா முதலாம் இடங்களுக்கு நகர்ந்து சென்று தமது இலட்சியங்களுக்குரிய புதிய நிலையமொன்றை அமைப்பதற்குரிய இடத்தைத் தேடலானார். பல்கலைக்கழகத்துக்கும் நகரத்துக்கும் அணித்தான இங்கிதமான ஓர் இடத்தைத் தெரிவு செய்து மாணவர்கள் இறையியலைப் பயிலக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினார். அமெரிக்கப் பண்பாட்டு ஆதிக்கத்தையும், மேலாதிக்கப் போக்கினையும் திறனாய்வுக்கு உட்படுத்தி மறுதலித்தார். பாரம்பரியமான திருச்சபையினரும் பழைமைவாதிகளும் இவரது இறைபணிக்கும் சமூகப் பணிக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மறுப்புக்காட்டி மேலிடத்தில் முறையீடு செய்தனர்.

பள்ளிக்கூடக் கலைப்புச் சிந்தனைகள் அவற்றை முற்றாக ஒழித்து விடுதலை நோக்கமாகக் கொள்ளவில்லை. ஆயின் அந்த நிறுவன கோப்பை சிதறடிப்பதே அவரின் நோக்கமாக அமைந்தது. இதன் விளக்கம் யாதெனில், பொது நிதியீட்டம் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கப்படலாகாது என்பதாகும். மாறாக, பள்ளிக்கூடங்கள் அரசுக்கு வரி வழங்கல் வேண்டுமெனவும் வலியுறுத்தினார். அதனால் பள்ளிக்கூடம் ஓர் ஆடம்பரப்பொருளாக இனங்காணப்படும். இக்காரணத்தால் பள்ளிக்கூடக் கல்வியைப் பெறாதவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பாடசாலையையும் அரசையும் பிரித்துவைப்பதற்கும் இது துணைசெய்யும். ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பில் அரசையும் திருச்சபையையும் பிரித்து வைத்த செய்றபாட்டுக்கு இது ஒப்பானதாகும். இதன் வழியாகக் கல்வித்தர முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். கல்வியைக் கட்டாயப்படுத்த விடாது செயற்பாட்டால் மட்டுமே மெய்யானதும் யதார்த்தமானதுமான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதனால் கற்போர் கட்டாயத்துக்கு உட்படாது மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கல்வியில் ஈடுபாடு கொள்வர். இலிச்சின் இறையியல் அனுபவங்களும் வாழ்வியற் பட்டறிவும் பள்ளிக்கூடக் கலைப்புச் சிந்தனைக்கு வலுவூட்டின. இறையியல் நோக்கில் இலட்சிய சமூகம் ஒன்றை உருவாக்கும் சிந்தனைகளின் இந்தத் தோற்றப்பாட்டுக்கு வளமூட்டின. பள்ளிக்கூடங்கள் சமூகத்தின் தொன்மங்களுக்கும் மாறாத எதிரிடையான மனப்பாங்குகளுக்குமுரிய களஞ்சியங்களாக மாறிவிட்டன. நிறுவனப்பாங்குடன் இயங்கும் பள்ளிக்கூடத்துடன் இணைந்த முரண்பாடுகள் தொன்மத்துக்கும் நடப்பியலுக்குமுரிய ஏற்றத்தாழ்வுகளை மீள மீள உற்பத்தி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துக்குப் பாதகமான நிலைமைகளை உருவாக்கிய வண்ணமுள்ளன.

மக்களின் ஈடேற்றத்துக்குத் திருச்சபை சமய பாடத்தைக் கட்டாய பாடமாக்கியுள்ளது. அதுபோன்று பள்ளிக்கூடமும் "புதிய உலகின் சமய நிறுவனமாக" மாறி வருகின்றது. சமூகத்திலே பங்குபற்றுவதற்குரிய சடங்குகளை அது பயிற்றுவித்து வருகின்றது. கற்றவர்கள் **"சமயம் சாராத மோட்சத்தை"** அடைவதற்குப் பள்ளிக் கூடம் வழிவகுத்து வருகின்றது.

கட்டாயப் பள்ளிக்கூடக் கல்வி தேவையற்ற எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதே அவரின் அவதானிப்பாகவுள்ளது. பள்ளிக்கூடங்கள் அளவுக்கு அதிகமான முறையில் சமூகத்திலே வற்புறுத்தப்படுவதால் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் ஏனைய வழி-முறைகள் புறந்தள்ளப்பட்டு வருகின்றன.

வானொலி, தொலைக்காட்சி, பயிற்சி வகுப்புக்கள், களஆய்வுகள், செயலமர்வுகள் ஆய்வறிவாளர்களுடனான இடைவினைகள், கருத்தரங்குகள் மற்றும் சமகாலத்தைய இணையத்தளம் முதலியவற்றால் வளமான அறிவைப் பெறமுடியுமாயினும் அவை பள்ளிக்கூடங்களிலும் **"வேறுபட்ட" கல்வியை** வழங்குகின்றன என்ற மனோபாவமே மேலோங்கியுள்ளது.

பள்ளிக்கூடங்களின் தோற்றப்பாட்டுச் செயல்முறையிலிருந்து விடுபட்டு அதன் பண்பாட்டு அறிபரவற் செயற்பாட்டின் மீது அவர் தமது கவனக் குவிப்பை ஏற்படுத்தத் தொடங்கினார். கல்விக்கு மக்கள் எவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டார்கள் என்ற வினா எழுப்பப்பட்டது. பொருளாதார நிலவரங்களும் வேட்கைகளுமே கல்வியை ஒரு தவிர்க்க முடியாத தேவை என்ற நிலைக்கு உந்தி யுள்ளன. பற்றாக்குறை விதியின்படி மனிதரது தேவைகள் அதிகரித்த வண்ணமுள்ளன. ஆனால் அவற்றை நிறைவு செய்வதற்குரிய வழிவகைகள் அரிதாகவுள்ளன. கற்றல் என்ற தேவைக்கும் இது பொருத்தமான விளக்கமாகும்.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கல்விக்குரிய தேவைகள் அதிகரித்து வந்தமையை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தி கல்விக்குரிய வழங்கலைச் செய்வதில் திருச்சபைகள் மேற்கொண்ட பணிகளையும் ஆய்வு செய்தார். பிழைப்பூதிய வாழ்க்கையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனம் மேலோங்கி வந்த வளர்ச்சியைத் தெளிவுபடுத்தினார். மாறுபடும் சூழலுக்கேற்ப மக்கள் தம்மை மாற்றியமைப்பதற்கான திறன்களைக் கற்றுக்கொண்டனர். இறைவனின் கைகளில் இருந்த உலகம் மனிதரின் கைகளுக்கு நிலை மாற்றம் பெற்றதாக விளக்கிய இலிச்சினுடைய அணுகுமுறைகளிலே இருமைப்பாங்குகள் காணப்படுகின்றன. அவை:

(1) சமயவாதியாகவுமுள்ளார் - சமயம் தொடர்பான மாற்றுச் சிந்தனைகளை முன்வைப்பவராகவுமுள்ளார்.

(2) தொழில்நுட்பவியற் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பாளராகவுமுள்ளார், அதேவேளை தொழில்நுட்பவியல் எதிர்ப்பு மெய்யியலாளர்களிடமிருந்து வேறுபடுபவராகவுமுள்ளார்.

(3) பள்ளிக்கூடங்கள் மற்றும் சமூக நிறுவனங்களை எதிர்ப்பவராகவுமுள்ளார், அவற்றை ஆதரிப்பவராகவுமுள்ளார்.

தமது கருத்துக்களை விபரித்து விளக்கிப், பின்வரும் நூலாக்கங்களை முன்வைத்தார்.

(1) "பள்ளிக்கூடக் கலைப்புச் சமூகம்"

(2) "வலுவும் சமகணிப்பும்"

(3) "தேவைகள் பற்றிய வரலாற்றை நோக்கி"

(4) "பால்நிலை"

(5) "வேலையின் நிழல்"

(6) "வெகுசன உள்ளத்தை அகரவரிசைப்படுத்துதல்" (சன்டேர்ஸ் என்பாருடன் இணைந்து எழுதப் பெற்றது)

(7) "மகிழ்ச்சிக்குரிய சாதனங்கள்"

(8) "மருத்துவவியல் வினைப்பயன்" - மருத்துவத்தை ஆராய்ந்தறிதல்

இடப்பெயர்வுகள், யுத்தங்கள், நாசி இயக்கத்தின் எதிர்மறைத் தாக்கங்கள், ஒடுக்குமுறை, பண்பாட்டு ஆக்கிரமிப்பு, வறுமை, முதலாளியம், திருச்சபையினரின் இறுகிய அணுகுமுறைகள் முதலியவை இலிச்சின் மாற்றுச் சிந்தனைகளுக்குரிய விசைகளாக அமைந்தன. ஆயினும் அவரது அணுகுமுறைகள் எதிர்மறைத்தாக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உருவாக்கிக் கொண்டிருக்கும் சமூகக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் விளிம்புகளை நோக்கியோ அடியாதாரங்களை நோக்கியோ நகர்ந்து செல்லவில்லை. நிலைத்த சமூக இருப்பில் இருந்த வண்ணம் அன்பையும் சகோதரத்துவத்தையும் வளர்க்க முயன்ற இலட்சியப் பாங்கே அவரிடத்து மேலோங்கியுள்ளது. சமூகத்தை அசைக்க முயன்றாரேயன்றித் தகர்க்க முயலவில்லை.

மேலைப்புலச் சமூக வளர்ச்சியின் அடிக்கட்டுமானங்களை நோக்காது, அவற்றின் மேலமைந்த வடிவமாகிய பாடசாலையை மட்டும் சீர்திருத்தத்துக்குரிய குவியமாக்கியமை இவரது அணுகுமுறையின் பலங்குன்றிய தளமாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிகாரத்துக்கும் பாடசாலைகளுக்குமுள்ள தொடர்புகளைத் தெளிவுபடுத்திய செய்மோர் சராசன் (SEYMOUR B.SARASON) (1919-2010)



கல்விச் செயற்பாடுகளை அறிமுகம் செய்தல், பராமரித்தல், வளர்ச்சியைக் கணிப்பீடு செய்தல் ஆகிய அனைத்தும் அரசியல் மயப்பட்டவை. கல்வியின் மாற்றம் அதிகாரத் தொடர்புகளுக்குப் பயமுறுத்தலாக இருப்பதனால் மிகுந்த எச்சரிக்கையோடுதான் மாற்றங்கள் அரசினால் முன்னெடுக்கப்படும். கல்வி மாற்றங்களுக்கும் பள்ளிக்கூடப் பண்பாட்டுக்கும், அரசியற் செயற்பாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை விரிவாக ஆராய்ந்தவர்களுள் சராசன் சிறப்பிடம் பெறுகின்றார்.

சிறுவர்களுக்குரிய ஆடைகளைத் தயாரிப்பதற்குரிய துணிகளை வெட்டும் யூத இன மத்தியதரக் குடும்பத்தில் நியூயோர்க்கில் உள்ள புறூக்லின் என்ற இடத்தில் பிறந்த இவர் யூதப்பண்பாட்டு ஊட்டத்தில் வளர்ந்து வரலாயினார். உடலை ஊனமுறச் செய்யும் நோய்க்கு இளம் வயதிலே தாக்கப்பட்ட இவர், ஊனமுற்றோருக் குரிய கல்வியில் தீவிர கவனம் செலுத்திய சிந்தனையாளராயும் வினைப்பாட்டாளராயும் விளங்கினார். இரண்டாம் உலகப் போரின் போது உடல் ஊனமுற்றோர் தொடர்பான அரசின் கொள்கைகளை யும், உளவியல் அணுகுமுறைகளையும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். கட்டிளைஞர்களின் உடற்பலத்தை வெளிப்படுத் தும் போட்டிகளில் உடல் ஊனமுற்றோர் புறந்தள்ளப்படும் அவலங் களை நேரிலே கண்டு அனுபவிக்கும் தாக்கத்துக்குத் தள்ளப்பட்டார்.

மார்க்சிய சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டு சோசலிச தொழிலாளர் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார். பொருளாதாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிப்பு, சமூகச் சுரண்டல் முதலிய அவலங்களில் இருந்து மீள்வதற்குரிய கருத்தியலாக மார்க்சியத்தை தரிசித்தார்.

மெசூட்சில் உள்ள கிளார்க் பல்கலைக்கழகத்திலே உளவிய லைச் சிறப்பாகக் கற்று உளவியற்கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இருதுறைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். வோ செஸ்டர் மனநோயாளர் அரச மருத்துவமனையிலே பணியாற்றி, உளவியல் தொடர்பான நடைமுறை அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்.

அரசியல் நோக்கங்களுக்காக நுண்மதி ஈவுச் சோதனைகளைத் தவறாகப் பயன்படுத்துதலை மார்க்சிய சமூகவியல் நோக்கில் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தினார்.

உளநலக் குறைபாடுடையோர் அனுபவிக்கும் உளவியற் பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தல் வேண்டுமென்பதன் தேவையை உணர்ந்து, அத்துறையில் முனைப்புடன் ஈடுபடலானார்.

ஆசிரியர் கல்வியில் அறியப்படாத விடயங்கள் மீது கவனம் செலுத்துவதன் வாயிலாக ஆசிரியர் தயாரிப்பை வளம்படுத்தலாம் என்று கருதி அத்துறையிலும் ஒழுங்கமைந்த ஆய்வுகளை மேற்கொண்டார்.

கல்வி உளவியலுக்கு இவர் தந்த முக்கிய பங்களிப்பாகக் கருதத்தக்கது யேல் நகரில் நிறுவிய உளவியற் மற்றும் கல்விச் (Psycho Educational Clinic) சிகிச்சை நிலையமாகும். உற்றுநோக்கல், தெறித்தல், வினைப்படல், ஊடுதலையீடு முதலாம் பணிகளை உளவியல் நோக்கில் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் நடவடிக் கைகள் அந்நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டன. ஓர் உளவியல் ஆய்வுத் தொழிற்சாலையை அவர் நடத்தினார் என அவரது செயற் பாடுகள் குறிப்பிடப்பட்டன.

உளப்பிணியாளர் தொடர்பான அமெரிக்க உளவியல் அணுகுமுறைகளை திறனாய்வுக்கு உட்படுத்தினார். உளப்பிரச்சினைகளைத் தனியாளை நடுநாயகப்படுத்தி ஆய்வதன் மட்டுப்பாடுகள் வெளிப் படுத்தப்பட்டன. சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு பின்புலத்தில் தனிநபரின் உளவியற் பிரச்சினைகளை ஆராயும் பொழுதுதான் உளப் பிரச்சினை பற்றிய தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்த முடியும் என்ற மார்க்சியக் கருத்தை அமெரிக்க சூழலில் முன்வைத்தார்.

அமெரிக்கக் கல்வி முறைமையும், பாடசாலை முறைமையும் தீவிர திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. கல்விசார்ந்த நேர்விளைவுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் ஏற்படுத்த முடியாமலிருந்தன. கல்வியின் "கீழமைந்த நாய்களால்" (Underdogs) பாடசாலையின் நேர்விளைவுகள் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார். ஆசிரியர்கள் புலமைத்துவத்தை மறுதலிக்கின்றனர். பண்பாட்டு விசைகளுக்கு எதிராக தொழிற்படுகின்றனர். உள ஆற்றல் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் எட்டாத இலக்குகளை நோக்கி வலிந்து தள்ளப்படுகின்றனர். அவற்றை ஆழ்ந்து அவதானித்து ஆசிரியப் பணியிலும், உளப்பிணி நீக்கும் பணியிலும் இவர் ஆற்றல்மிக்க வினையராகத் (Activist) தொழிற்பட்டார். உளவியலையும், மெய்யியலையும் திறனாய்வுப் பாங்குடன் நோக்கினார்.

கல்வியின் மாற்றங்கள் பற்றியும், பாடசாலையின் பண்பாட்டு ஒழுங்கமைப்பு பற்றியும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. பாடசாலை ஒழுங்கமைப்பு, வகுப்பறைக்கட்டுமானம், ஆசிரியரின் தனிமைப்பாடு முதலியவை திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. கற்றலுக்கும் கற்பித்தலுக்குமுரிய வறுமையெய்திய நிலையமாகப் பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் மாற்றங்கள் பற்றிய சிந்தனைகள் அவரால் முதன்மைக்குக் கொண்டுவரப்பட்டன. தரமான மாற்றங்களே அவரின் முன்மொழிவுகளாக அமைந்தன. கல்வியியலில் "தரமான மாற்றங்கள்" என்ற எண்ணக்கரு ஐக்கிய அமெரிக்காவில் மட்டுமன்றி உலகெங்கணும் வரவேற்புக்கு உள்ளான கருத்தாக்கமாக வளர்ச்சி கொண்டது. பல்வேறு கருத்து வினைப்பாடுகளுக்குரிய எண்ணக்கருவாக்கமாக அது எழுச்சி கொண்டது.

பாடசாலைப் பண்பாடு அரசியற் சார்பற்றது என்பது வெறும் தொன்மமான கருத்தென அவர் சுட்டிக்காட்டினார். அரசின் கொள்கை வகுப்போரே மாற்றங்களை உருவாக்கியும் திசைமுகப்படுத்தியும் வருகின்றனர். மாணவர் விரும்புவதை வழங்க முடியா நிலையில் ஆசிரியர் இருக்கும் அவல நிலையையும் அவர் தமது எழுத்தாக்கங்களிலே சுட்டிக்காட்டியுள்ளார். அந்த இடர்பாடான நிலை ஆசிரியர்களிடத்துக் குற்றவுணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பொருத்தமான புத்தாக்கங்களைப் பாடசாலைகளிலோ உள மருத்துவநிலையங்களிலோ செயற்படுத்த முடியாதிருத்தலுக்கு அரசின் அதிகாரத்துடன் இணைந்த கொள்கையாக்கங்களே காரணங்களாகவுள்ளன. புதிய மாதிரிகையான பாடசாலைகள், முன்னோடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள், முன்னோடிக் கல்வித்திட்டங்கள் முதலியவை பராமரிக்கப்படாது வீழ்ச்சியடைவதற்கு அரசின் கொள்கைவகுப்பும், புதிய மாற்றங்களை விரும்பாதோரின் விடாப்பிடியான சிந்தனைகளுமே காரணங்களாகின்றன. சமகாலக் கல்விப் புத்தாக்கங்களின் நடைமுறைச் சிதைவுகளை அறிந்து கொள்வதற்கு அவரது எழுத்தாக்கங்கள் அனுபவப் பயன்களைத் தெறித்துக்காட்டியுள்ளன.

பாடசாலை முறைமையின் ஆழ்ந்த கட்டுமானங்களில் *(Deepstructures)* இயல்புகளை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தி னார். பாடசாலையின் ஒவ்வொரு கூறுகளும் மற்றைய கூறுகளுடன் கொண்டிருக்கும் இடைவினைகள் ஆழ்ந்த அணுகுமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அந்தக் கூறுகளைத் தனித்து நோக்கி முடிவு களை மேற்கொள்ளும் பொழுது அவை தவறுகளையே தருகின்றன. அத்துடன் புதிய மாற்றச் செயல் முறைகளும் இலக்குகளை எட்ட முடியாது இடறி விடுகின்றன.

அதிகார உறவுகளின் பிடிக்குள் பாடசாலைகள் அகப்பட்டு அவல நிலைக்கு உட்பட்டுக் காணப்படுகின்றன. அதனால் பாடசாலையால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கநிலைக் கற்றல் *(Productive Learning)* எட்டப்பட முடியாமற் போய்விடுகின்றது. ஆசிரிய ருக்குரிய வாண்மைநிலைப்பட்ட வாய்ப்பு வசதிகளும் கிடைக்கப் பெறாத அவலமும் காணப்படுகின்றது.

ஆசிரியர், கல்வி கற்பித்தற் கலை முதலாம் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு வகுப்பறையில் ஆற்றுகைக்கலையின் *(Performance Art)* முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்தினார். கற்பித்தல் ஓர் ஆற்றுகைக் கலையாகின்றது. நேரடியானதும், நாடகப்பாங்கானதுமான செயற்பாடாகக் கற்பித்தல் அமைகின்றது. இந்நிலையில் ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் மிகுந்த நிதானமாக வேண்டியுள்ளது. வாண்மை ஆற்றல் உள்ளவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் பதவி வழங்கப்படல் வேண்டும். தரத்தை திணிப்போராக ஆசிரியர்கள் தொழிற்படாது, மகிழ்ச்சியும், தூண்டலும், நம்பிக்கை யும் ஊட்டுவோராக அவர்கள் தொழிற்படல் வேண்டும்.

அமெரிக்கக்கல்வியில் மாற்றுச் சிந்தனைகளை முன்வைத்து இவர் பின்வரும் முக்கியமான நூலாக்கங்களை மேற்கொண்டார்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 418



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) உள ஆற்றல் குறைவின் உளவியற் பிரச்சினைகள்

(2) சிகிச்சை நிலைய இடைவினைகள்

(3) ஆசிரியர்களின் தயாரிப்பு: ஆசிரியர் கல்வியில் ஆராயப்படாத பிரச்சினைகள்

(4) சமுதாய ஆக்கத்தில் உளவியல்

(5) எதிர்கால சமூகங்களுக்குரிய நிலைமைகளை ஆக்குதல்

(6) பாடசாலையின் பண்பாடும் மாற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளும்

(7) அமெரிக்காவின் பாடசாலை நிலவரங்கள்

(8) அமெரிக்க உளவியலாளர் ஒருவரின் உருவாக்கம் - தன்வரலாறு

(9) கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் தோல்வி

(10) மாற்றங்களுக்கான தேவை - கல்வித் தயாரிப்புத் தொடர்பான மீள் சிந்தனை

(11) சமூக மாற்றத்தின் அளவுகோல்கள்


(12) கற்பித்தலை ஆற்றுகைக் கலையாகக் கொள்ளல்

பாடசாலைப் பண்பாட்டின் பன்முகப்பாடு, ஒன்றுடன் ஒன்று இணைந்த பாங்கு, கல்விமாற்றங்களும், சீர்திருத்தங்களும், ஆசிரியர் கல்வி கற்றல் கற்பித்தலிலே கலைப்பாங்குகளின் முக்கியத்துவம், உளவளர்ச்சிப் பின்னடைவு, சீர்மியம், ஆற்றுப்படுத்தல் போன்ற பலதுறைகளில் விரிவான ஆய்வுகளை வித்தியாசமான கருத்தாடல்களையும் முன்வைத்த இவரது பங்களிப்பு நவீன கல்வியியலின் புலக்காட்சிகளை விரிவுபடுத்துவதற்குத் துணையாகவுள்ளது.



Class No:
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் கல்விச் சிந்தனைகளை முன்மொழிந்த மிசேல் டபிள்யு அப்பிள் (MICHAEL W. APPLE) (1942-)



மனித உரிமைகள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. சூழல் உருக்குலைக்கப் பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றது. பொருண்மை கொண்ட எதிர்காலம் ஏக்கம் நிரம்பியதாக இருக்கின்றது. இந்த அவலங்களை ஆழ்ந்து நோக்கும் தரிசனமற்றதாகக் கல்விச் செயற்பாடுகள் மௌனித்து நிகழ்ந்து கொண்டிருத்தலை அப்பிள் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர் வர்க்கக் குடும்பத்தில் பிறந்த இவர் இடதுசாரி அரசியலிலே தீவிர ஈடுபாடு காட்டியதுடன், கல்வியைத் திறனாய் வுப்படுத்தல் துறையில் (Critical Education) தீவிர கருத்தாடல்களை மேற்கொண்டார். திருப்பலதனார் சிறுவயதிலே வறுமையில் வாழ்ந்தும், பிழைப்புக்காகச் சிறிய வேலைகளை மேற்கொண்டும் தொழிற்பட்ட-வேளை தமது இக்கட்டான வாழ்வியற் சூழலிலும், கல்வியைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். நியுஜேர்சியில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பட்டம் பெறாத நிலையிலும் பத்தொன்பதாம் வயதில் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். இராணுவத்தில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் துணை யாக அமைந்தன. நாற்பத்து ஆறு மாணவர்களைக் கொண்ட பெரிய வகுப்பறையில் கற்பித்தலுக்கு முதலில் அமர்த்தப்பட்டார்.

கறுப்பு இனத்தவர்கள் மீதும் தொழிலாளர் வகுப்புப் பிள்ளை கள் மீதும் ஆழ்ந்த ஈடுபாடும், அவர்களது பிரச்சினைகளை வென்றெடுப்பதற்கான வினைப்பாடுகளும் கொண்டவராக துணி வுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கினார். இனத்துவச் சமத்துவத்தை வற்புறுத்திய பேராயத்தின் (Congress) நிறுவுனர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். ஆசிரியர் தொழிற்சங்கங்களிலும் இணைந்து தீவிர வினைப்பாட்டாளராக முன்னேறிச் சென்றார்.

ஆசிரியராகத் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது கற்றலை இடைவிடாது மேற்கொண்டு பல்கலைக்கழகப்பட்டத் தைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமாணிப்பட்டத்தையும் கலாநிதிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். விஸ்கொன்சின் மெடிசன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவியைப் பெற்றுக்கொண்டு கலைத்திட்ட ஆய்வுகளிலே தீவிர ஈடுபாடு காட்டினார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று கல்வியியல் தொடர்பான மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தார்.

அமெரிக்காவினதும் உலகநாடுகளினதும் கல்விச் செயலமைப் பைக் கட்டுடைப்புக்கு *(Deconstruction)* உட்படுத்தினார். கல்விக்கும் அதிகாரத்துக்குமுள்ள தொடர்புகள் தெளிவுபடுத்தப்பட்டன. தொழில்நுட்ப அறிவை வெறுமனே ஒரு தொழில்நுட்ப எழுபொருளாக *(Issue)*க் கொள்ளாது, சமூக பொருளாதார பண்பாட்டுப் பின்புலத் தில் அது அவரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

கருத்தியலைப் பொறுத்தவரை இவர் பிராங்போர்ட் சிந்தனா கூடத்தினர் முன்வைத்த நவமார்க்சிய சிந்தனைகளுடன் உடன்பாடு கொண்டவராகக் காணப்பட்டார். மாறிவரும் முதலாளிய சமூகங்கள் மக்கள் மீதும் நிறுவனங்கள் மீதும் செலுத்திவரும் செல்வாக்குகளை பிராங்போர்ட் சிந்தனா கூடத்தினர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினர். தனியாட்களை வேறுபடுத்துவதிலும் புதிய வடிவான ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதிலும் மாறிவரும் முதலாளிய சமூகங்கள் மேற்கொள்ளும் நுண்ணுபாயங்கள் குறிப்பிடத்தக்கவை.

திறனாய்வுக் கல்விச் சிந்தனை மரபில் வந்த இவர் கல்விவாயி லான சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என நம்பினார். பாடசாலை கள் நிலைக்குத்து சமூக அசைவியத்தை (Mobility) ஏற்படுத்தாது ஏற்றத்தாழ்வுள்ள சமூகத்தை மீளமீள உருவாக்கிக் கொண்டிருந்தன. மாணவர்களை "நுகர்ச்சியாளர்களாக"ப் பாடசாலைகள் மாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிற் பாடசாலைக் கலைத்திட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், சமூகவியல், பொருளியல், இனக்குழுமவியல் முதலான வற்றின் ஒன்றிணைப்பின் பின்புலத்தில் நோக்குதலுற்றார். அமெரிக் காவின் பல்லினப் பண்பாட்டுக் கோலங்கள் கலைத்திட்ட ஆக்கத்திலே கருத்திற் கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப் பட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் பொதுக் கல்வியில் பாரிய ஏற்றத் தாழ்வுகள் காணப்படுதலை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார். "அனைவருக்கும் கல்வி" என்ற தத்துவம் ஆழ்ந்து வலியுறுத்தப் பட்டது. கல்வி வழங்கலின் ஏற்றத்தாழ்வுகள் சமகணிப்புத் தத்துவத்தைப் பாதிப்படையச் செய்கின்றன.

சமூகத்தின் ஏற்றத்தாழ்வுக்கு ஏற்றவாறு கல்வி வேறுவேறு விதமாக வழங்கப்படும் அவல நிலை காணப்படுகின்றது. தெரிவை மேற்கொள்ளும் மரபுக்குக் கலைத்திட்டம் தொடர்ந்து முக்கியத்து- வமளித்து வருகின்றது. சமூகத்தின் அதிகாரம் மிக்க குழுவினரே கலைத்திட்டம் பற்றிய தீர்மானங்களையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொள்கின்றனர். வளரும் சந்தைக் கோலங்கள், நுகர்ச்சிக் கோலங்களுக்குரிய கல்வியை உருவாக்குதலே அவர்களின் குறிக்கோ ளாகவுள்ளது. இந்நிலையிற் பாடசாலைகள் யதார்த்தமான மக்க ளாட்சிப் பண்பையும் சமத்துவத்தையும் இழந்து வருகின்றன. சந்தைப்படுத்தல் அல்லது விற்பனைப் பண்டமாக்கப்படுதல் என்ற செயற்பாடுகளையே பாடசாலைகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. அறிவும் ஒருவித மூலதனமாக மாற்றப்படுகின்றது.

ஏற்றத்தாழ்வுமிக்க பண்பாட்டை மீள மீள ஆக்கிக் கையளிக்கும் செயற்பாடுகளிலே பாடசாலைகள் வினைத்திறனுடன் இயங்கி வருகின்றன. இந்நிலையில் பாடசாலைகள் சமத்துவத்தை ஏற்படுத்த முயல்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கல்விச் செயற்பாடுகளிலே தனியாரை ஈடுபட வைத்தலின் தாக்கங்களையும் சுட்டிக்காட்டினார். தனியார் நிறுவனங்கள் தமது நலன்களை முதன்மைப்படுத்தியே கல்விச் செயற்பாடுகளைக் கையாளமுயலும். மாணவர்களின் நலன்களைக் காட்டிலும், வர்த்தக நிறுவனங்களின் நலன்களே அங்கு மேலோங்கி நிற்கும். சந்தைச் செயல்முறைகளுக்கேற்றவாறு கல்விச் செயற்பாடுகளும் வடிவமைக்- கப்படும். அனைத்துலகுமயப்பட்ட இலாப நோக்கம் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கியிருக்கும். பறிப்பும் சுரண்டலும் கொண்ட பெரும் சமூகத்தின் இயல்புகள் கல்விமுறைமை மீதும் பாடசாலைகள் மீதும் தொடர்ந்து அழுத்தங்களைச் செயற்படுத்திய வண்ணமிருக்கும். பெரும் சமூகத் தைத் திறனாய்வுக்கு உட்படுத்துவதன் வாயிலாகவே பாடசாலை களின் இயல்புகளை விளங்கிக்கொள்ள முடியும்.

வசதி மிக்கோர் வளம்மிக்க தனியார் பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப, தொழிலாளர்களும் ஏழைகளும் பொதுக்கல்வி நிலையங்களை நம்பியே தமது பிள்ளைகளை அனுப்புகின்றனர். வசதிமிக்கோருக்கு விரும்பிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும் "தெரிவுச் சுதந்திரம்" காணப்படுகின்றது. ஆனால் தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் அந்தச் சுதந்திரம் கிடைக்கப்பெறுவதில்லை. அதேவேளை பொதுக் கல்வி நிறுவனங்கள் இறுகிய மத்திய கட்டுப்பாடுகளுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை நலிவடைந்தோருக்குப் பாதகமாகவுள் ளன என்றவாறு மாற்றுக்கருத்துக்கள் அவரால் முன்வைக்கப்படு கின்றன.

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப எழுத்தறிவு பற்றிய திறனாய்வுக் கருத்துக்களையும் முன்மொழிந்தார். நவீன தொழில்நுட்பம் வகுப்பறைகளை தமக்குரிய படிமமாக மாற்றிவிடுகின்றது. தொழில்நுட்பத் தருக்கம் முக்கியப்படுத்தப்படுமளவுக்கு அரசியல் மற்றும் அறவியல் விளக் கங்கள் மாணவர்களுக்குத் தரப்படுதல் இல்லை. வகுப்பறையின் கருத்து வினைப்பாடுகள் தொழில்நுட்பத்தை மையப்படுத்தி நிகழ்கின்றதேயன்றி அறிபொருள் உள்ளடக்கத்தை அல்லது செறிபொருளை (Substance)ப் பெரிதுபடுத்துவதாகத் தெரியவில்லை.

கல்விப் பிரச்சினைகள் பல்வேறு பரிமாணங்களில் பலநிலை களில் நோக்கப்பட வேண்டியுள்ளன. பல்வேறு அழுத்தங்களில் இருந்து மாணவர்களை விடுவிப்பதற்குரிய செயற்பாடுகளைக் கருத்தூன்றி நோக்க வேண்டியுள்ளது. கல்வியின் பழைமை பேணும் ஆதிக்கத்திலிருந்து மாணவர் விடுவிக்கப்படல் வேண்டும். போட்டி யிடும் சமூகப் பார்வைகளுக்குக் கல்வி உட்பட்டுவிட்டது. இந்நிலை யில் நவ பழைமை பேணும் கருத்தியலால் சமத்துவமும் வினைத் திறனும் மிக்க கல்வியை வழங்கி விடமுடியாது. அதேவேளை நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராண்மைவாதத்தினாலும் சமத்துவமும் மக்களாட்சியும் வழங்கக் கூடிய கல்விச் செயல்முறையை உருவாக்கிவிட முடியாது. அகன்ற சமூகப் பார்வையும் அகன்ற சமூக வினைப்பாடுகளும் பயனுள்ள தும், சமத்துவமயப்பட்டதுமான கல்வியைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படைகளாகக் கொள்ளப்பட வேண்டியுள்ளன.

சமத்துவத்தை உருவாக்கும் கல்விச் செயற்பாடுகள் என்று கூறும்பொழுது திறமைகளைப் புறக்கணித்தல் அன்று என்பதைக் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு முற்போக்குச் சிந்தனையாளர்கள் இவரது கருத்துக்களை மேற்கோளாகக் காட்டித் தமது கருத்துக்களுக்கு அணிசேர்த்துள்ளனர்.

அப்பிள் அவர்கள் தனித்தும் கூட்டாக இணைந்தும் கல்வியியல் சார்ந்த பின்வரும் நூலாக்கங்களை வெளியிட்டார்.

(1) கருத்தியலும் கலைத்திட்டமும்

(2) அதிகாரமும் கல்வியும்

(3) ஆசிரியரும் நூலியமும்

(4) அதிகாரபூர்வமான அறிவு

(5) பண்பாட்டு அரசியலும் கல்வியும்

(6) அதிகாரம், கருத்து மற்றும், இனங்காணலும்

யதார்த்த நிலையில் மக்கள் தழுவியதும் மக்கள் மயப்பட்டது-மான கல்வியை உருவாக்குவதில் இவரது கருத்துக்கள் ஐக்கிய அமெரிக்காவிலும் அகிலமெங்கும் நேர்விசைகளாக எழுந்தன. தொழிலாளர்களின் குழந்தைகள் நிராகரிப்புக்கு உள்ளாகாத தரமான கல்வியைப் பெறவேண்டும் என்பதற்கான கருத்தியலையும் நடை முறைச் சாத்தியப்பாடுகளையும் தெளிவாக விளக்கினார். கறுப்பின மக்கள் பொதுக்கல்வியின் வாய்ப்புக்களை தரச்சிறப்புடன் பெற்றுக் கொள்வதற்குரிய திறனாய்வுகளை முன்வைத்தார்.

ஐக்கிய அமெரிக்காவின் சமூக பொருளாதாரச் சூழலில் இவ்வா றான மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பதற்குரிய அறிவுப் பலத்தையும் வினைப்பாட்டுப் பலத்தையும் அப்பிள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவுடையோரை மேலும் வலுவூட்டும் கல்விச் செயற்பாடுகளை வெளிப்படுத்திய ஹென்றிகிறொக்ஸ்

## (HENRY GIROUX)(1943-)



கிறொக்கஸ் அவர்கள் கல்வியில் சமத்துவம், சமசந்தர்ப்பம், மக்களாட்சி, மனிதாபிமானம் முதலியவை கேள்விக் குறிகளாக மாறியுள்ளமையை வீரியத்துடன் வெளிப்படுத்தி னார். தொடக்க காலங்களில் பிராங்போர்ட் சிந்தனா கூடத்தின் தரிசனங்களாற் கவரப்பட்ட கிறொக்ஸ் அவர்கள் கருத்தியல் தழுவிய நீண்டதரிசனம் கல்வியிற் தவிர்க்க முடியாது வேண்டப்படுதலை வலியுறுத்தினார்.

கார்னேஜி பல்கலைக்கழகத்தில் கல்வியியற் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு கல்விச் சமூகவியல், கலைத்திட்டக் கோட்பாடு முதலாம் துறைகளில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள லானார். தமது ஆய்வுகளின் வழியாக ஆசிரியத்துவத்தின் மாண்புகளை வெளிக்கொண்டு வந்தார். கல்வி வழியாகச் சமூகத்தை நிலைமாற்றம் செய்யும் நுண்மதியாளர்களாகவும் மனித மாண்பை மேலுறச் செய்யும் வினைப்பாட்டாளர்களாகவும், ஆசிரியர் தொழிற்படுவதை வலியுறுத்தினார். கல்வியில் சமத்துவ வீழ்ச்சி, நியாய வீழ்ச்சி மற்றும் ஒடுக்கு முறைக்கு எதிரான நடவடிக்கைகளை முக்கியத்துவப்படுத்தினார். கல்விக்கும் ஏனைய பண்பாட்டு உற்பத்திகளுக்கும் *(Cultural Productions)* இடையேயுள்ள பன்முகத் தொடர்புகளை வெளிப்படுத்தினார்.

பிரங்போர்ட் சிந்தனா கூடத்திலிருந்த கோர்கிமர், அடோர்னா, மார்க்கஸ், கேப்பர் மாஸ் முதலியோரின் சிந்தனைகளில் தீவிர ஈடுபாடு காட்டினார். சமூகத்திலே காணப்படும் சமத்துவமற்ற இயல்புகள் எதிர்மானிடப்படுத்தலை வளர்க்கின்றன. சமூக நீதி இல்லாதொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றது. சமூகத்தில் வலுப்பெற்றோரை மேலும் வலுவூட்டும் செயற்பாட்டினை *(To Empower The Already Emowered)*க்கல்வி மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை வலுக்குன்றியோரைத் தொடர்ந்து ஓரப்படுத்தியும் எல்லைப்படுத்தியும் வருகின்றது.

வலுமிக்கோருக்குச் சாதகமான பாடசாலையின் செயற்பாட்டு வட்டத்தை உடைத்தெறிய வேண்டும் என்பதே இவரது பிரதான நோக்காக அமைந்தது. சுரண்டுவோருக்கும் பறிப்போருக்கும் எதிரான கவசங்களாகப் பாடசாலைகள் செயற்படல் வேண்டுமென வலியுறுத்தினார். பண்பாட்டு மேலாதிக்கத்துக்கு எதிராக அவை அறைகூவல் விடுத்து இயங்குதல் வேண்டும். பெருந்தொகையான மக்களை ஓரங்களுக்குத் தள்ளிவிடும் செயற்பாடுகளைப் பாடசாலைகள் தடுத்து நிறுத்துதலே ஏற்புடையது.

பாடசாலைகளை மீள் உற்பத்தி செய்யும் *(Reproduction)* நிலையமாக அல்லாது உற்பத்தி செய்யும் *(Production)* நிலையமாக மாற்றம் பெறச் செய்தல் பொருத்தமான நடவடிக்கையாகும். சமூகத்தின் பன்முகப்பாங்குகளை அனுசரித்து நலிந்தோருக்குரிய வலுவூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். பங்குபற்றல் மக்களாட்சிச் செயல்முறையின் வழியாக அவர்களை வினைப்பட்டு எழச் செய்தல் வேண்டும். மக்களாட்சி என்பது பன் முகப்பாடுகளுக்கும் மாறுபட்ட சிந்தனைகளுக்கும் உறுதியும் உற்சாகமும் வழங்குவதாக உருவாக்கப்படல் வேண்டும். தனித்து மேலோங்கியோருக்கு மட்டும் சேவகம் செய்தலை இல்லாதொழித்தலே சிறந்தது. மக்களாட்சி என்பது நிலைமாற்றத்துக்குரிய திறனாய்வு மயப்பட்ட மக்களாட்சியாக்கப்படல் வேண்டும். நியாயபூர்வமான சமத்துவம் அனைவருக்கும் கிடைத்தலே ஏற்புடையதாகும்.

நடப்பு நிலவரங்களிலே காணப்படும் வறுமை, அவலம், நம்பிக்கைவரட்சி, வேலையின்மை, இளைஞர்கள் வீணடிக்கப்படுதல், வெகுசனப்பண்பாட்டின் அவலங்கள், இனத்துவ மேலாதிக்கம், பால்நிலை மேலாதிக்கம், பொருளாதாய நோக்கு, எதிர்மானிடப்படல், இராணுவ மயப்பட்ட கருத்தியல், நகர எதிர் மறைப்பாங்கு முதலிய அவலங்கள் கல்விச் செயற்பாடுகளால் இல்லாதொழிக்கப்படல் வேண்டுமென்பது அவரின் மேம்பட்ட கருத்தாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு மொழிப்பாங்கை "இயலுமாதலின்" மொழிப்பாங்குடன் இணைக்க முயன்றார் - அதாவது, விமர்சனங்களை முதன்மைப்படுத்தலுடன் நடைமுறைச் சாத்தியங்கள் பற்றியும் சிந்தித்தார். கல்வியிலே பொருத்தமானதும் முற்போக்கானதுமான நடைமுறைகளின் நிகழ்ச்சி ஒழுங்குகளை வகுக்க முயன்றார்.

வினைப்பட்டு எழுதலை முன்னெடுக்கும் இவரது சிந்தனைக ளிலே பின்வரும் சிறப்பியல்புகள் காணப்பட்டன.

(1) முன்னைய வரலாற்று நிலவரங்களினால் உருவாக்கப்பட்ட அழுத்தங்களை நிராகரித்தல்.

(2) தீவிர பன்முகப்பாடுகளின் மத்தியில் ஒற்றுமை உணர்வை வளர்க்கும் பொருட்டு ஆளிடைத் தொடர்புகளை வளம்படுத்தும் அரசியல் மயப்படுத்தலை மேற்கொள்ளல்.

(3) திறனாய்வுகளினூடே சாத்தியப்பாடுகளின் அடிப்படையி லும் உயிர்ப்புமிக்க குடியுரிமைப் பண்புகளை வளர்த்தல்.

(4) தீவிர மக்களாட்சிச் சமூகத்தை உருவாக்கும் வகையில் பாடசாலைகளை மீள்வடிவமைத்தல்.

தீவிர மக்களாட்சிப்படுத்தல் என்று கூறும்பொழுது தெளிவான கருத்தாக்கம் பெறுதல், உரிமைக்குரல் கொடுத்தல், விடுதலையை வலியுறுத்தல், வினைப்பாடுகொண்டெழுதல் முதலியவை இடம் பெறும். கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்துக் குழுவின ரதும் உரிமைகளை அங்கீகரித்தல், பாடசாலையில் மக்களாட்சி நடத்தைகளுக்கு உற்சாகமளித்தல், கல்வியியலாளர்கள் பாடசா லைக்கு வெளியேயுள்ள முற்போக்குச் சக்திகளை ஒன்றிணைத்துச் செயற்படுத்தல் முதலிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டுமென்பதை வலியுறுத்தினார்.

அரசியலைக் கல்வி மயப்படுத்தல் வேண்டும். கல்வியை அரசியல் மயப்படுத்துதல் வேண்டும். பாடசாலையின் இயல்பு, இலக்கு உள்ளடக்கம் முதலியவற்றை உள்ளாக்குதல் திறனாய்வுக்குரிய கல்வியின் பரிமாணங்களாகின்றன. பாடசாலைக் கலைத்திட்டமும் ஆசிரியத்துவ நடவடிக்கைகளும் கேள்விக்கும் மறுபரிசீலனைக்குமுரியவை. சமூகத்தின் அதிகார வலுவோடு பாடசாலைகள் சங்கமித்து நிற்கும் கருத்தியலை இனங்காட்ட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நிகழும் எவ்வகையான பறிப்புக்களுக்கும் எதிரான உறுதிமிக்க வலுவைக் கல்வியால் உருவாக்கித்தரல் வேண்டும்.

திறனாய்வுக்குரிய ஆசிரியத்துவத்தின் (Critical Pedagogy) பரிமாணங்களாக அவர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

(1) மரபு வழியான ஆசிரியத்தில் மாற்றங்களை உட்புகுத்திப் பாடசாலையை மக்களாட்சி மயப்படுத்துதல்.

(2) சமத்துவமின்மை, சுரண்டல், மனித அவலம் முதலியவற்றுக்கு எதிரான கல்வி சார்ந்த வினாக்களை எழுப்பி நீதியை நிலைபெறச் செய்தல்.

(3) மக்களாட்சியில் இடம்பெற்றுள்ள வேறுவேறுபட்ட கருத்துக்களின் அரசியல் உட்பிரயோகங்களை அறிந்து கொள்ளல்.

(4) ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கும் அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்குமுரிய மொழியாட்சியை விருத்தி செய்தல்.

(5) சமூகத்திலே பல்வேறு விதப்பட்ட பறிப்புகளும் ஒடுக்குமுறைகளும் காணப்படுவதால் வேறுபட்ட உரைவினைகளை (Narratives)ப் பயன்படுத்துதல் வேண்டும். தனித்த ஓர் அணுகுமுறையினால் அல்லது தனித்த ஓர் பெரும் உரைவினையினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. (இச்சந்தர்ப்பத்தில் இவரிடத்து பின்னவீனத்துவத்தின் செல்வாக்கு ஊடுருவியுள்ளமையைக் காணலாம்.)

(6) பாடசாலைக்கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுப் பிரதிநிதித்துவப்படுத்தல் அதிகாரத்தின் பிரதிநிதித்துவப்படுத்தலாயிருத்தல் முதலியவை கருத்து வினைப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு சமச்சீரற்ற போக்குகள் இனங்காட்டப்படல் வேண்டும்.

(7) கலைத்திட்டம் ஒரு பண்பாட்டுப் பிரதியாக அல்லது நூலியமாகக் காணப்படுவதால் அது திறனாய்வுக்குரியதாகின்றது.

(8) ஒடுக்கப்பட்ட குழுவினருக்குக் கல்வியில் அங்கீகாரம் கிடைக்கப்பெற வேண்டுமாயின் பன்முகப்பட்ட அரசியற் குரல்கள் வேண்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைகளின் பண்புகளையும் அதிகாரத்தின் பண்புகளையும் மாணவரிடத்து உணர்வுப்படுத்தும் நிலைமாற்றம் செய்யும் நுண்மதியாளர்களாய் ஆசிரியர்கள் இயங்குதல் வரவேற்புக்குரியது. மாணவர்களைத் திறனாய்வுப் பாங்கான முகவர்களாகக் (Critical Agents) ஆசிரியர்கள் முன்னெடுத்தல் வேண்டும். அவர்களை வினைப்படுவோராய் மாற்றும் கருத்தியல்களை வழங்குதலுடன் தெளிவுக்கும் உள்ளாக்குதலே சிறந்தது. சமூகத்தில் ஒரு குழுவினர் அதிகாரம் மிக்கோராயும் இன்னொரு பிரிவினர் அதிகாரமிழந்து ஒடுக்கப்படுவோராயிருக்கும் சமச்சீரின்மை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது. இந்த அவலத்தைக் கல்வியலாளர்கள் கவனிக்காதுவிட முடியாது. இதனை மாணவர்க்கு உணர்த்தும் செயற்பாடுகளிலும் ஒதுங்கி நிற்க முடியாது பங்குபற்றும் மக்களாட்சியின் குரல்களாக மாணவர்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

சமூகத்திலே சமத்துவம் உருவாக்கப்படல் வேண்டுமானால், அதிகாரம் செலுத்தலுக்கு உள்ளாக்கப்படும் கல்விமற்றும் கலைத்திட்டம் ஆகியவற்றின் இயல்புகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படுதலே ஏற்புடையது. அவற்றை நிலைமாற்றத்துக்கு உள்ளாக் காது சமத்துவத்தை அடையமுடியாது. இச்சந்தர்ப்பத்தில் கிறொக்ஸ் அவர்கள் **"அகல் நிலை ஆசிரியம்"** (Broder Pedagogy) என்ற எண்ணக்கருவை முன்வைக்கின்றார். இச்செயற்பாட்டில் ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து கலைத்திட்டத்தின் பாரம்பரிய எல்லைப்படுத்தல்களைக் கடந்துசெல்லல் வேண்டும். ஏனெனில் கலைத்திட்டம் அதிகாரத்தின் தீர்மானப்படுத்தலுடன் ஒன்றிணைந் துள்ளது. அதிகாரத்தின் ஒடுக்குமுறை சமூகத்தின் சமத்துவமற்ற ஏற்றத்தாழ்வுகள் முதலியவற்றைக் கண்டு ஆசிரியரும் மாணவரும் மௌனித்து இருக்க முடியாது.

சமத்துவத்துக்கு எதிர்ச்சொல் சமத்துவமின்மை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ள கிறொக்ஸ் சமத்துவமின்மையை "வேறுபாடுகள்" (Differences) என்ற எண்ணக்கருவால் அமெரிக்க ஆய்வாளர்கள் குறிப்பிடுதல் எளிமைப்படுத்தும் செயற்பாடு என்பதைச் சுட்டிக்காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினரிடையே கல்வி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தனித்த ஒரு பெரும் உரை-வினையைப் பயன்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இக்கருத்தை வலியுறுத்தும் பொழுது அவர் முன்னைய பிராங்போர்ட் சிந்தனாகூடப் பிடியிலிருந்து விடுபட்டு பின்னவீனத்துவச் சிந்தனைகளை நோக்கி நகர்ந்து செல்கின்றார். பிராங்போர்ட் சிந்தனையாளர்கள் பன்முகப்பாடுகள் மீது உரிய கவனம் செலுத்தவில்லை என்று கருதினார். பின்னவீனத்துவத்தளத்தில் நின்று அமெரிக்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் தரிசிக்கலானார். அதே தளத்தின் செல்வாக்கினுக்கு உட்பட்ட அலங்கார மொழி நடையையும் தமது எழுத்தாக்கங்களிலே பயன்படுத்தலானார்.

தனது கருத்துக்களைப் பரப்பியும் விரித்தும் பின்வரும் நூல்களை வெளியிட்டார்.

(1) "கருத்தியல், பண்பாடு மற்றும் பாடசாலைச் செயல்முறை"

(2) "கல்வியிற் கோட்பாடும் எதிர்ப்பு உறுதியும்"

(3) "நுண்மதியாளர்களாக ஆசிரியர்கள்"

(4) "மக்களாட்சிக்கான பாடசாலை முறைமை"

(5) "பாடசாலையும் பொது வாழ்க்கைக்கான போராட்டமும்"

(6) "பின்னவீனத்துவம், பெண்ணியம் மற்றும் பண்பாட்டு அரசியல்"

(7) "அகல்நிலைக் கடத்தல் - பண்பாட்டு வேலையாட்களும் கல்வியின் அரசியலும்"

(8) "மகிழ்ச்சியைப் பங்கீடு செய்தல் - வெகுசனப் பண்பாட்டைக் கற்றல்"

(9) "ஓட்டநிலைப் பண்பாடுகள் - வன்செயல்களும் இனத்து வமும் இளமையும்"

(10) "கர்ச்சித்த எலி - டிஸ்னியும் அறியாமையின் முடிவும்"

அமெரிக்கப் பண்பாட்டு நெருக்குவாரங்களின் மத்தியில் சமத்துவம், மக்களாட்சி பண்பாட்டு அரசியல், ஒடுக்குமுறைகள் முதலாம் துறைகளில் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தவர்கள் மத்தியில் இவருக்குத் தனித்துவமான இடமுண்டு. ஒடுக்குமுறைச் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்திலும் கல்விச் செயற்பாடுகள் ஊடுருவி நிற்றலைத் தமது ஆய்வுகளிலே தெளிவாக வெளிப்படுத்தினார். அனைத்துத் துறைகளிலும் நிகழும் ஒடுக்குமுறைகளை இல்லாதொழித்தலை இலக்குகளாகக் கொண்டு எழுத்தாக்கலை முன்னெ டுத்துச் சென்றார். தமது கருத்துக்களை வெளியிடுவதில் ஒரு வன்மை யான புலமையாளராகத் தொழிற்பட்டார். அதன் காரணமாக வித்தியாசமானதும் அடித்துச் சொல்லும் (Dazzling) மொழியாட்சி யைப் பயன்படுத்தியும் கருத்தியல் உள்ளடக்கத்தை வலுப்படுத்தி னார். இவரது கருத்துக்களை ஏற்க மறுப்பவர்களும், கல்வியியலில் இவர் பயன்படுத்திய மொழி நடையைக் கண்டு வியந்தனர்.

சமூகத்தின் பல்வேறு எதிரிடையான விசைகளை மாற்றிய மைக்க பாடசாலைகள் முக்கிய இடம் பெற்று விளங்குதலை இனங் காட்டினார். அதேவேளை கல்விச் செயற்பாடுகளை பாடசாலைக்கு வெளியிலும் முன்னெடுத்துச் செல்லும் பொழுதுதான் ஒருங்கிணைந்த முறையிலே இலக்குகளை அடைய முடியும் என வலியுறுத்தினார். பாடசாலைக்கு வெளியே நிகழும் பண்பாட்டு உற்பத்தி மற்றும் மீள் உற்பத்தி ஆகியவற்றின் மீது கவனக்குவிப்பை ஏற்படுத்தினார்.

பின்மார்க்சியக் கண்ணோட்டம், பின்னவீனத்துவக் கண் ணோட்டம் முதலியவை இவரது கல்வி தொடர்பான மாற்றுச் சிந்தனைகளிலே ஆழ்ந்து விரவியுள்ளன. கல்வியியல் தொடர்பான மாற்றுச் சிந்தனைகள் மூன்றாம் உலக நாடுகளுக்கும் உடனடியான அறிகைத் தேவைகளாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலில் நுண்மதிக்காரணிகளைத் தொடர்புபடுத்திய சிறில் லொடோவிக் பேட்டின் ஏமாற்றுத்தனம்

## (CYRIL LODOVIC BURT) (1883-1971)



இலண்டன் மாநகரில் வறியோர் வாழும் சூழலில் சிறில் பேட்டின் வாழ்க்கையின் இளமைக்-காலம் இடம்பெற்றது. சேரி வாழ்க்கையின் வாழ்புலத்திற் கல்வி எதிர்நோக்கும் நெருக்கடிகளை அவரால் எதிர்மறை நோக்கிற் பட்டறிவு பெற முடிந்தது. பேட்டின் தந்தையார் வசதிமிக்க ஒரு மருத்துவராக இருந்தமையால் தொடர்ந்து கல்வி கற்கக்கூடிய வளத்தையும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டார். புகழ்பெற்ற உளவியலாளராகிய மக்டுகலிடம் கற்கும் வாய்ப்பை ஒக்ஸ்போட்டில் இவர் பெற்றுக்கொண்டார். உளவியற் சோதனைகளைத் தரப்படுத்தும் பணி இவருக்கு வழங்கப்பட்டது. அங்கே இவர் பியர்சன் என்ற புள்ளி விபரவியல் ஆய்வாளரைச் சந்தித்து இணைப்புக் குணகம் பற்றிய அறிமுறையை வளர்த்துக் கொண்டார்.

இந்த அனுபவங்களைத் தொடர்ந்து லிவப்பூரிலுள்ள செறிங்டன் ஆய்வுத் துறையில் பரிசோதனை உளவியலாளராக நியமனம் பெற்றார். தொடர்ந்து இலண்டன் மாநகரக் கழகத்தில் வாண்மை உளவியலாளராகவும், அதன் பின்னர் இலண்டன் கல்வி நிறுவகத் தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். தொடர்ச்சி யாக இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஸ்பியர்மன் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆய்வுத்துறையின் தவிசாளராகவும் செயலாற்றி னார். அமெரிக்க உளவியற் கழகத்தின் **"தோண்டைக்"** விருதைப் பெற்ற முதலாவது வெளிநாட்டவர் என்ற கௌரவமும் இவருக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோக உளவியலாளர் என்ற வகையில் கல்விச் செயற்பாடு களில் இவரின் பங்களிப்பு முக்கியமானது. கல்வியின் நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்மறைநோக்கில் ஆய்வுச் செறிவுக்கு உட்படுத்தி னார். பெருந்தொகையான மாணவர்களை ஆய்வுக்கு உட்படுத்திப் புனைகோளாக்கம் செய்ய முயன்றார். நெறி பிறழ்ந்தோர் பற்றிய வரன்முறையான உளவியல் தகவல்களை பெருமளவிலே தொகுத்த உளவியல் முன்னோடியாகவும் விளங்கினார். நெறிபிறழ்தல் என்பது பல்வேறு காரணிகளால் உருவாக்கப்படுதல் ஒழுங்குபடுத்தப்பட்ட புள்ளிவிபரவியல் ஆய்வுகளினாற் கண்டறியப்பட்டது. உளவாழ்க்கை யினால் நல்ல நடத்தையும் ஒவ்வாத நடத்தையும் தீர்மானிக்கப்படுதல் சுட்டிக்காட்டப்பட்டது. தமது அனுபவங்களை அடியொற்றி வளர்ச்சியிலே பின்னடைவு கொண்ட சிறார்க்கான பாடசாலையையும், சிறார் ஆற்றுப்படுத்தல் நிலையங்களையும் அமைத்தார்.

உளவியலாளர் காஸ்டன் மேற்கொண்ட தனிமனித வேறுபாடு கள் தொடர்பான ஆய்வுகளில் பேட்டுக்குத் தீவிர ஈடுபாடு ஏற்பட்டது. தனிமனித வேறுபாடுகளை இனங்காட்டுவதற்கு காஸ்டன் மிகுந்த எளிமையான அறிகைச் செயல்முறைகளாகிய புலன்சார் வேறுபடுத் தும் திறன் மற்றும் எதிர்வினை வழங்க எடுக்கும் நேரம் முதலியவற் றுடன் தனித் தேர்வுகளையும் வலியுறுத்தினார். ஆனால் பேட் அவர்கள் மேலும் முன்னேற்றகரமான அறிகை முறைமையை வலியுறுத்தினார். உயர்நிலையான உளத் தொழிற்பாட்டின் மீது பேட் அவர்கள் கவனம் செலுத்தலானார். இது தொடர்பாக அவர் **"உளத்தாயம்"** (Psycho-metrics) என்பதற்கு உயரிய பங்களிப்பை வழங்கினார். இதன் தொடர்ச்சி வழியாகத் தனியாளின் பண்புகளைப் பரிசோதனை வழியாக வெளிப்படுத்தத் துணிந்தார்.

காரணங்காணுதல், வசனங்களை முடித்துவைத்தல், புதிர்ப்பரீட் சைகள், படங்களை இனங்கண்டு முடித்துவைத்தல், முதலான வற்றை அடிப்படையாகக் கொண்டு பெருந்தொகையான மாணவர்களுக்கு அவர் பரீட்சைகளை நடத்தினார். அவர் வைத்த அத்தனைப் பரீட்சைகளின் புள்ளிகளுக்கிடையே நேர் இணைப்புக்கள் காணப் பட்டதாகக் குறிப்பிட்டார். அதாவது, ஒரு குறிப்பிட்ட மாணவருக்கு மேற்குறிப்பிட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட பல பரீட்சைகளை வைத்தபொழுது ஒவ்வொரு பரீட்சையிலும் குறிப்பிட்ட மாணவர் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளில் அதிக வேறுபாடுகள் காணப்படவில்லை. இதிலிருந்து மனிதரின் உளவெளியின் (Mental Space) பரிமாணங்களைக் காரணிப்படுத்தி விளக்கு உளத்தாயத்தை வளர்த்தெடுத்தார். இவ்வாறாகக் காரணிப்படுத்தும் நுட்பத்தை அடியொற்றி நுண்மதித் தேர்வை பேட் உருவாக்கினார்.

இவரது நுண்மதி மாதிரிகை நான்கு காரணிகளை அடிப்படைகளாகக் கொண்டிருந்தது. இந்தக் காரணிகளை விளக்குவதற்கு அவர் அட்சரகணித நுட்பங்களைப் பயன்படுத்தினார். இதனடிப்படையில் கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமிடையே இணக்கப்பாடு காணப்பட்டது. எதுவித சிரமங்களுமின்றி வகுப்பறையிலே நடைமுறைப் படுத்தப்படக்கூடிய நுண்மதிச் சோதனையைப் பேட் உருவாக்கி னார். நவீன நுண்மதிச் சோதனைகளிலே பயன்படுத்தப்படும் நுட்ப வியல்களுக்கு அவரது அறிகை ஆக்கமே முன்னோடி முயற்சியாக அமைந்தது. நுண்மதிச் சோதனைகளை அடியொற்றி மாணவரின் ஆற்றல்களை இனங்காண்பதற்கும், கற்பித்தலை ஒழுங்கமைப்பதற் கும், தரம்பிரிப்பதற்குமுரிய நடவடிக்கைகளுக்கு பேட் வழியமைத்தார்.

நுண்மதிக்கு அவர் விளக்கம் தருகையில் அது மாணவரின் **"பிறப்போடு கூடிய உள்ளார்ந்த அறிகை வினைத்திறன்"** என்று குறிப்பிட்டார். நுண்மதிப்பற்றிய விளக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவர் ஒரேமாதிரியான இரட்டையர்களை ஆய்வுக்கு உட்படுத்தினார். மரபுவழிக் காரணிகளுடன் சிறிதளவு சூழற்காரணிகளும் நுண்மதியிலே செல்வாக்குச் செலுத்துதல் அவரால் சுட்டிக்காட்டப் பட்டது.

ஒத்த இரட்டையர்களை வெவ்வேறு சூழலில் வளரவிட்டு அவர்களிடத்து நுண்மதிச் சோதனைகளை வைத்து, மரபுவழிச் செல்வாக்கு ஓரளவு இடம்பெற்றுள்ளமையைச் சுட்டிக்காட்டினார். நுண்மதியில் எண்பது சதவீதமான பங்கு உயிர் மரபுக் காரணிகளினாலே தீர்மானிக்கப்படுகின்றது என்றும், மிகுதி இருபது சதவீதம் மட்டுமே சூழற் காரணிகளாலே தீர்மானிக்கப்படுவதென்பதும் அவரின் ஆய்வுகளின் முடிவாயிற்று. இந்நிலையில் அவர் தீவிர திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டார். "வல்லதே வாழும்" என்ற டார்வினுடைய தெரிவுக்கோட்பாட்டை நுண்மதிக்கும் பிரயோகித்து நுண் மதியாற்றல் மிக்கோரே மேம்படுவோர் என்றவாறான கருத்துக்கு ஆதரவளித்தல் ஒரு வகையில் தனியுரிமைப் பொருளாதாரம் மற்றும் முதலாளியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றுக்கு அறிவு ரீதியான பலம் தேடும் முயற்சிக்கு அவர் வழங்கிய செயற்பாடுகள் தீவிர விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. ஆயினும் முதலாளிய எழுச்சிக்கு ஆதரவு வழங்கிய நாடுகளில் பேட்டின் நுண்மதிக் கட்டமைப்புக்கு வலுவான ஆதரவு கிடைக்கப் பெற்றது. நுண்மதித் தேர்வுகளின் பிரதிகூலங் களை நோக்காது பல்வேறு தேவைகளுக்கும் அதனை அதீதமாகப் பயன்படுத்தும் மரபுக்கும் பேட் வலுவூட்டியமை குறிப்பிடத்தக்கது.

பேட்டின் நுண்மதிச் சோதனைகள், மாணவரின் ஆக்கத்திறன் களையும், மனவெழுச்சி இயல்புகளையும், சமூகப் பிரக்ஞைகளை யும் அளவிடத் தவறிய பின்னடைவுகள் சமீப காலங்களில் விரிவாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தொழில் வழிகாட்டல், தொடர்தொழில் ஆற்றுப்படுத்தல் முதலாம் துறைகளிலும் பேட் அவர்கள் கணிசமான பங்களிப்பைச் செய்த முன்னோடியாகவும் கருதப்படுகின்றார். 1994ஆம் ஆண்டிலே பிரித்தானியாவில் உருவாக்கப்பட்ட பட்லர் கல்விச் சட்டத்தின் ஆக்கத்திலும் பேட்டின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. பதினொராம் வயதில் நுண்மதிச் சோதனையின் அடிப் படையாக மாணவரைத் தரம் பிரித்தல் பட்லர் கல்விச்சட்டத்தின் முக்கியமான பரிமாணங்களுள் ஒன்றாகும். இந்தச் செயற்பாட்டுக்கு பேட்டின் ஆய்வுகளே பின்புலமாக அமைந்தன. மேலும், வாய்ப்பு வசதிகள் கொண்ட சூழலில் வாழும் குழந்தைகளுக்கு இது அனுகூல மாகவும், ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இந்தத் தெரிவுமுறை பாதகமாகவும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. நுண்மதிச் சோதனைகளின் அடிப்படையில் வாய்ப்பு வசதிகள் மிக்க குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களே உயர்தர "இலக்கணப் பாடசா லைகளுக்குச்" செல்லும் நிலை பிரித்தானியாவிலே காணப்பட்டது.

காரணிப்பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட நுண்மதித் தேர்வை மேலும் முன்னெடுத்துச் செல்லக் கூடிய மாணவர் பரம் பரையினரையும் பேட் உருவாக்கினார். இவ்வகையில் கலாநிதி ஐஸ்னாக் மற்றும் கலாநிதி கற்றெல் போன்ற மாணவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**நுண்மதித் தேர்வுகள் தொடர்பாக பேட் மிகப் பெரிய ஏமாற்று வித்தைகளையும் மோசடிகளையும் செய்தார் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.** நுண்மதியைத் தீர்மானிப்பதில் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியக் காரணியே முதன்மையானது என்பதை நிறுவுவதற்கு அவர் பொய்யான புள்ளிவிரபங்களைப் பயன்படுத்தினார் என்பதை **லெஸ்லி கெர்ன்சோ என்ற ஆய்வாளர் ஆதாரங்களுடன் வெளிப் படுத்தினார்.** இதற்கு ஆதாரங்களாக அவர் பேட்டின் நாட்குறிப்புகளையும் கடிதங்களையும் பயன்படுத்தினார். நுண்மதிச் சோதனைகள் தொடர்பாக பேட் மேற்கொண்ட தில்லுமுல்லுத் தனத்தையும் மோசடியையும் பிரித்தானிய உளவியற் கழகமும் ஏற்றுக் கொண்டது. *(Jim Ridgway, 2004)*

நுண்மதிச் சோதனைகளைக் கருவிகளாக்கி ஏழை உழைப்பாளிகளின் குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைப்பதை நிராகரிப் புக்கு உள்ளாக்கிய பேட்டின் நடவடிக்கைகளை பிரித்தானிய தொழிற்கட்சியின் புலமையாளர்கள் துல்லியமாகச் சுட்டிக்காட்டி னர். நுண்மதிச் சோதனைகளின் உள்ளமைந்த போலித் தனங்களையும் ஏமாற்று வித்தைகளையும் இன்னும் பலர் அறியாதிருத்தல் குறிப்பிடத்தக்கது.

பேட் மேற்கொண்ட ஏமாற்று நடவடிக்கைகளுக்குப் பின்னர் விஞ்ஞானச் சமூகவியல் பற்றிய விமர்சனங்கள் மேலெழுந்தன. விஞ்ஞான ஆய்வுகள் சமூக ஒடுக்கு முறைகளுக்காக எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்றும், ஆதாரங்கள், எவ்வாறு திரிபுபடுத் தப்படுகின்றன என்றும் ஆராயும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. சொத்துடையவர்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கு விஞ்ஞானத்தை எவ்வாறு கையாளுகின்றனர் என்பதும் வெளிச்சத்துக்கு வரலாயிற்று. ஒடுக்குமுறை அரசியலுக்கும், விஞ்ஞா னத்துக்குமுள்ள தொடர்புகள் வெளிப்படத் தொடங்கின.

பேட் மனிதரைத் தவறாக அளவிடமுயன்றார் என்பதை கவுல்டு என்ற ஆய்வாளர் தாம் எழுதிய *The Mismeasure of Man* என்ற நூலில் *(Gould,S,1981)* தெளிவாக விளக்கினார். பேட் மேற்கொண்ட எதிர்ப்புலமைச் செயற்பாடுகளை கேர்ண்சோ தாம் எழுதிய *(Hearnshow,L 1979)* "உளவியலாளராகிய சிறில் பேட்" *(Cyril Burt Psychologist)* என்ற நூலிலே தெளிவுபடுத்தினார். அமெரிக்க சமூகத் தில் நுண்மதிக்கும் சமூக வர்க்கத்துக்குமுள்ள தொடர்புகளை கேர்ண் ஸ்ரெயின் மற்றும் மறே ஆகியோர் தாம் எழுதிய "மணிவடிவ வளையி" *(The Bell Curve, 1994)* என்ற நூலில் விளக்கியுள்ளார். மக்கின்ரோஸ் என்ற ஆய்வாளரும் சிறில் பேட்டின் எதிர் ஆய்வுத் தனத்தை ஒளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவின்றி வெளிப்படுத்தினார். பிலெட்சர் என்ற ஆய்வாளர் விஞ்ஞானத்துக்கும், கருத்தியலுக்கும் பேட்டின் ஏமாற்று வித்தைகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை விரிவாக விளக்கினார். *(Fletcher,R,1991)*

சிறில் பேட்டின் சிறப்பார்ந்த நூலாக்கங்களாகப் பின்வருவன முக்கியத்துவம் பெறுகின்றன.

(1) "கல்வி ஆற்றல்களின் பரவலும் தொடர்புகளும்"

(2) "உளம் சார்ந்ததும் புலமை சார்ந்ததுமான பரீட்சைகள்"

(3) "இளம் நெறிபிறழ்ந்தவர்"

(4) "உளப்பின்னடைவுகளுக்கான காரணங்களும், சிகிச்சை முறைகளும்"

(5) "பின்னடைவுக்குள்ளான சிறுவர்"

"பின்னடைந்த சிறுவர்" *(The Backward Child)*, "பாலியக் குற்றவாளிகள்", "நெறிபிறழ்ந்தவர்கள்" முதலாம் குரூரமான சொற்களைப் பயன்படுத்தியமை மனிதம் தொடர்பாக அவர் கொண்டிருந்த எதிர்மறைக் கருத்தியலைப் புலப்படுத்துகின்றது.

நுண்மதித் தேர்வுகளை அடிப்படையாக வைத்துஅரச உயர்பதவிகளுக்குரிய ஆளணியினர் தெரிவு செய்யப்படுகின்றனர். ஆனால் அவர்களின் செயற்பாடுகளிலே வினைத்திறன் காணப்படவில்லை என்ற திறனாய்வுகளை ஆட்சியாளர்கள் முன்வைக்கின்றனர். அதேவேளை தனியார் துறையினர் தமக்குரிய ஆளணியினரை நடத்தை அவதானிப்புக்கள் வாயிலாகத் தெரிவு செய்கின்றனர். நுண்மதிச் சோதனைகளை அவர்கள் தமது ஆட்சேர்ப்புக்களுக்குப் பொதுவாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால் அவர்கள் வினைத்திறனுடன் தொழிற்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த அவதானிப்பு நுண்மதிச்சோதனைக்குச் சவாலாக அமைகின்றது.

இந்நிலையில் நுண்மதிச் சோதனைகளைத் திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. "பல்துறை நுண்மதித் தேர்வு", மற்றும் "மனவெழுச்சி நுண்மதி", "படைப்பாற்றல் நுண்மதி" முதலியவை ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்டன. பயிற்சிகளினால் நுண்மதித்தேர்வின் புள்ளிகள் அதிகரித்தலும் கண்டறியப்பட்டுள்ளமை பேட்டின் கருத்துக்களைப் பொய்மைப்படுத்தியுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைக் கல்விச் சிந்தனைகள்


பெஸ்டலோசி


புரோபல்


ஹேர்பேட்


மொன்ரிசோரி


பியாசே

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளின் சமூக பொருளா தார நிலவரங்களும், சிறார்களின் உரிமைகளுக்கான வலியுறுத்தல் களும் மார்க்சிய சிந்தனைகளின் எழுச்சியும் சிறார் கல்வியிலே மாற்று வகையான சிந்தனைகளைத் தோற்றுவித்தன. அந்நிலையில் முகிழ்த்தெழும் புதிய சிந்தனையாக்கங்களை மேற்கொண் டவர்களுள் பின்வருவோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெஸ்டலோசி *(1766-1827)*

புரோபல் *(1782-1852)*

ஹேர்பேட் *(1776-1841)*

மொன்ரிசோரி *(1870-1952)*

பியாசே *(1896-1980)*

1. ரூசோவின் சிந்தனைகளால் கவரப்பட்ட பெஸ்ட்லோசி நிராகரிப்புக்கு உள்ளான சிறாரின் கல்வியிலே கவனம் செலுத்த லானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைத்தாமே பராமரிக்கக்கூடிய தற்சார்பு உள்ளவர்களை உருவாக்கும் நோக்குடன் சுவிசில் உள்ள சூரிச் நகரில் ஓர் இல்லத்தை ஆரம்பித்தார்.

சிறாரின் உடல், உள்ளம், அறவொழுக்கம் அனைத்தையும் ஒன்றிணைத்து வளர்க்கக்கூடிய கல்வியை உருவாக்க விழைந்தார். சிறாரிடத்து உட்பொதிந்துள்ள தன்னுள்வலுவை *(Self Power)* க் கல்வியால் வளர்த்து வெளிக்கொண்டு வருவதற்குரிய ஏற்பாடுகள் பற்றிச் சிந்தித்தார்.

குறியீட்டு வழியான கற்றலுக்கு முன்னதாக அனுபவக் கல்வி அமைய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். திறன்களையும் ஆற்றல்களையும் வளர்ப்பதன் வாயிலாகவே நுண்மதியையும் அறிநெறி சார்ந்த ஒழுக்கத்தையும் மேம்படச் செய்ய முடியும் என்பது அவரின் கருத்தாகும். சிறார் கல்வியிலே எண், எழுத்து, வாசிப்பு ஆகியவற்றைக் கற்பதற்கு முன்னதாக உடல் தொழிற்பாடுகள் வாயி லான அனுபவத் திரட்டல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மனித இயல்புகளை அடியொற்றியே கற்றலும் கற்பித்தலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். மார்க்சிய சிந்தனைகளாற் கவரப்பட்ட அவர், வறியவருக்குரிய கல்வி பற்றிச் சிந்தித்தார். ஆரம்ப காலத்தில் அவரது சிந்தனைகளுக்கு மேலையுலகம் ஆதரவு வழங்கவில்லை. "கல்வி தொடர்பான இலட்சியக் கனவு காண்பவர்" என கிண்டல் செய்யவும் பட்டார்.

அழுத்தங்கள் நிரம்பியதாகக் காணப்பட்ட சிறார் கல்வியை பயனும் மகிழ்ச்சியும் கொண்ட அனுபவ வழிக் கல்வியாக மாற்றி யமைப்பதிலே அவரின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

2. குழந்தைகள் பூங்கா *(Kindergarten)* என்ற கல்வி அமைப்பியல் புரோபலால் தோற்றுவிக்கப்பட்டது. புரோபல் இயற்கை அருள் நிலையில் *(Nature Mystic)* ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். தமது கல்விக் கருத்துக்களை அவர் 1826ஆம் ஆண்டில் வெளியிட்ட "மனிதனின் திகழ் கல்வி" என்ற நூலிலே விளக்கி எழுதினார்.

1837ஆம் ஆண்டிலே அவர் சிறார் கல்வி தொடர்பான பரிசோதனைப் பாடசாலையாகிய "குழந்தைகள் பூங்காவை" அமைத்தார். அவர் உருவாக்கிய கல்வி அருள்நிலை சார்ந்ததாகவும் அதீத பௌதிகப் பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் அமைந்தது. மனிதரின் தனித்துவத்தை வளர்க்கும் கல்வி, பன்முகத் தன்மைக்குரிய கல்வி, அனைத்துப் பொருள்களையும் ஒன்றிணைக்கு சர்வ வியாபகமான பொருளை அறியும் கல்வி முதலியவற்றை அவர் முன்மொழிந்தார்.

சிறாரின் சுய தொழிற்பாடுகள் தன்னிலை மேம்பாடு ஆகியவற்றுக்குரிய தடைகளையும் குறுக்கீடுகளையும் ஆசிரியர் நீக்கிவிடல் வேண்டும். ஆசிரியர் சிறார் மீது எத்தகைய திணிப்புக்களையும் மேற்கொள்ளலாகாது. அமைதியின்றி அங்கலாய்த்துக் கொண்டிருக் கும் சிறாரின் துடிதுடிப்பான இயல்பை ஆசிரியர் அறிந்து கொண்டு அவர்களின் ஆக்க மலர்ச்சி வெளிப்பாடுகளுக்குரிய தடைகளை நீக்கிவிடல் வேண்டும்.

கிறீஸ்தவத்திலே கூறப்படும் உண்மை, நன்மை ஆகிய எண்ணக்கருக்களை அவர் கல்வியிலே வலியுறுத்தினார். மாணவரின் விருப்புக்கும் மகிழ்ச்சிக்குமுரியதாகக் கல்வி அமைக்கப்படல் வேண்டும். திணிப்புக்கு எவ்வகையிலும் இடமளிக்கப்படலாகாது. உண்மை நன்மை ஆகியவை கல்வியால் ஈட்டப்படல் வேண்டும்.

விளையாட்டு வழியான கல்விக்கு அவர் அதிக முக்கியத்துவம் வழங்கினார். பாடங்கள் போன்று விளையாட்டும் முக்கியமானது. விளையாடுதல் நேரவிரயம் அன்று. சிறார் விருத்தியில் அது அடிப்படையானதும், அவசியமானதுமாகும் என வலியுறுத்தினார்.

சிறாருக்குரிய விளையாட்டுப் பொருட்களை அவர் "வெகுமதிகள்" *(Gifts)* அல்லது "பரிசுகள்" என்று குறிப்பிட்டார். பந்து, கோளம், உருளை, தட்டு, மரவுருவங்கள், மடிப்புக்கடதாசி, விதைகள், பொத்தான்கள், மரத்துண்டுகள் முதலியவை விளையாட்டுப் பொருள்களாக அமைந்தன. வண்ணம், வடிவம், முதலாம் வகைகளிலே இணைத்தல், பிரித்தல், குழுவாக்குதல் என்றவாறான விளையாட்டுக்கள் வாயிலாக சிறார் அடிப்படையான அறிவையும் தீர்மானிப்புத் திறன்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

சிறார் பூங்காவின் கலைத்திட்டம் பின்வருமாறு அமைக்கப் பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பரிசுப் பொருட்களுடன் விளையாடல்

(2) மனிதப் பண்புகளை மேம்படுத்தும் வகையில் கூட்டாக ஆடுதலும், பாடுதலும் விளையாடலும்

(3) பூஞ்செடிகளையும், விலங்குகளையும், வளர்த்தல், பராமரித் தல் முதலியவற்றால் அவற்றின் மீது இரக்கத்தை மேம்படுத்தல்.

அவரது கல்விச் சிந்தனைகள் உலகளாவிய செல்வாக்குகளை விளைவித்தன. இன்றும் அவை பின்பற்றப்படுகின்றன.

3. ஹேர்பேட்டின் சிந்தனைகள் "தத்துவ நடப்பியல்" *(Philosophical Realism)* என்ற பிரிவுக்கள் அடக்கப்படுகின்றன. கல்வி யானது சமூக ஊடாட்டங்களால் உருவாக்கம் பெறுகின்றது. அறிவொளி சார்ந்த சித்தவலுவை உருவாக்கி அதன் வழியாக அறவொழுக்கங்களை மேம்படுத்துதல் வேண்டும்.

கற்றலின் உன்னத இலக்கு அறவொழுக்க மேம்பாடாகும். கல்வியின் வழியான எழுநகர்வு *(articulation)* பற்றி அவர் விளக்கு கின்றார். நான்கு விதமான எழுநகர்வுகள் அவரால் குறிப்பிடப்படு கின்றன. அவையாவன.

(1) எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவு கொள்ளல்

(2) புதிய எண்ணக்கருக்களைப் பழையவற்றுடன் இசைவுறத் தொடர்புபடுத்துதல்

(3) வரன்முறைப்படுத்தலும் நிரலாக்கம் செய்தலும்

(4) கற்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய முறையியலாக் கம் செய்தல்

கற்றல் என்பது வெறுமனே அறிவுத்திரட்டலாக இருத்தலாகாது. அதன் வழியாக சீரிய அறவொழுக்கக் கட்டுமானம் நிகழ்த்தப்படல் வேண்டுமென்பதே அவரின் இலக்காக அமைந்தது. "கல்வியின் திகழ் விஞ்ஞானம்" (1892) என்ற அவரின் நூல் தனிச்சிறப்பு வாய்ந்தது.

4. மொன்ரிசோரியின் குழந்தைக் கல்விச் சிந்தனைகளிலே ரூசோவின் இயற்பண்புவாதமும் அக்காலத்தைய மானிடவாதமும் செல்வாக்குகளை ஏற்படுத்தியுள்ளமை புலப்படுகின்றது. வளர்ந்தோ ரின் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட கல்வி முறையின் வலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையிலே சிறார் இருத்தலை மொன்ரிசோரி அம்மையார் சுட்டிக்காட்டினார். தமது சுயாதீனத்தையும் தம்மியல்பையும் பாதுகாப்பதற்குரிய எதிர்ப்பு வழிவகைகளைச் சிறார் பயன்படுத்தத் தொடங்குகின்றனர்.

சிறாருக்குக் கற்பிப்போரைக் குவியப்படுத்தியே கல்விச் சீர்திருத்தத்தை முதலில் முன்னெடுத்தல் வேண்டும். வளர்ந்தோரிடத்துக் காணப்படும் மேலாதிக்க எண்ணங்களை நீக்குவதற்கு அவர்களுக்கு அறிவொளியூட்டுதல் முக்கியமானது.

சிறார் தமக்குரிய வாழ்வை இங்கிதமாக மேற்கொள்வதற்குரிய சுவிநிலையை அடுத்ததாக உருவாக்குதல் வேண்டும். அவருடைய கற்பித்தலிலே புலப்பயிற்சி முக்கியமானதாக அமைந்துள்ளது. பொருத்தமான வழிவகைகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தி சிறாரின் புலன்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான பயிற்சி வழங்கப்படல் வேண்டும். சாதனங்களைப் பயன்படுத்தி நாளாந்த வாழ்க்கைக்குரிய அடிப்படைத் தேர்ச்சிகளையும் பெற்றுக் கொள்ளச் செய்தல் சிறப்பார்ந்த பணியாகின்றது.

மொன்ரிசோரி அம்மையாரின் கல்விச் சிந்தனைகள் ஆரம்பத் தில் மந்தபுத்தியுள்ள சிறுவர்களை அடியொற்றியதாக அமைந்தன. அவர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறை அபரிமிதமான வெற்றியை வழங்கியது. அதனால் அவர்களின் திறன்களும் தேர்ச்சி களும் விரைந்து மேலோங்கின. அதே கற்பித்தல் முறையைச் சாதாரண குழந்தைகளுக்கும் பயன்படுத்த முடியுமென்று துணிந்தார்.

குழந்தைகள் காட்டிய வழியையும் வழங்கிய அனுபவங்களை யும் அடியொற்றி அவர் "குழந்தை இல்லங்கள்" என்ற கல்வி நிலை யங்களை அமைத்தார். குழந்தைகளிடத்தே பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் முக்கியமானது. அதன் வழியாக அவர்கள் சுயநெறிப் பாட்டை உருவாக்கிக்கொள்வர். சுயாதீனமாக நடமாடி ஒழுங்கு கட்டுப்பாடுகளைத் தாமே உருவாக்கிக் கொள்ள உதவுதலும், தமக்குத் தாமே கல்வியூட்டுபவர்களாகக் குழந்தைகளுக்கு வழிகாட்டுதலும் இக்கற்பித்தலிலே சிறப்பிடம் பெறுகின்றன.

குழந்தைகளின் ஐந்துபுலன்களையும் உரியமுறையிலே வளர்ப் பதற்குரிய பலவகையான கற்றல் கருவிகளையும் *(Appratus)* அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கித் தந்துள்ளார். அக்கருவிகளைப் பயன்படுத்துதல் வாயிலாக பின்னர் இடம்பெறும் கற்றற் செயற்பாடுகள் வளமுற முன்னேற்றம் பெறுதலை நிகழ்த்திக் காட்டினார். முன்னைய அடித் தளம் பின்னைய வளர்ச்சிக்கு ஆதாரமாகின்றது.

மொன்ரிசோரி முறையும் டெக்ரோலி *(Decroly)* முறையும் இன்று உலகளாவிய முறையிலே விரவிப் பரந்துள்ளன. டெக்ரோலி முறை மூன்று முக்கியமான வேலைகளை உள்ளடக்கிய குழந்தைகளுக் கான நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டது. அவை

உற்றுநோக்கல்

இணைத்தல்

வெளிமலர்ச்சி கொள்ளச் செய்தல்

என்பனவாகும். அவை கல்வி சார்ந்த விளையாட்டுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். குழந்தைகளின் விருப்பு சார்ந்த மையங் களை *(Centres of Interest)* அடியொற்றியதாக அவை அமையும். அதாவது உணவு, இருப்பிடம், வேலை, தொழிற்பாடு, பாதுகாப்பு முதலியவற்றை உள்ளடக்கியதாக அமையும். தனித்தனியான விடயங் களிலன்றி முழுமையானவற்றிலே கவனம் மேற்கொள்ளப்பட்டும் அனுபவ வழிக்கற்றல் முன்னெடுக்கப்படும்.

5- சிறார் கல்வியை முற்றிலும் அறிகை உளவியல் மயப்படுத்தும் முயற்சியை சுவிஸ் உளவியலாளராகிய பியாசே மேற்கொண்டார். உயிர் மரபு அறிவாய்வியலையும், அமைப்பியற் கோட்பாட்டையும் அடியொற்றி அவர் தமது கருத்துக்களை முன்மொழிந்தார்.

சிறாரின் வளர்ச்சியானது திட்டவட்டமான படிநிலைகளைக் கொண்டதாக அமைந்திருத்தலை உற்றுநோக்கல் வழியாக அவர் வெளிப்படுத்தினார். சூழலுடன் இடைவினை கொண்டு சிறார் தமக் குரிய அறிகைக் கட்டமைப்பை மூளையில் உருவாக்கிக் கொள் கின்றனர். புதிய அனுபவங்கள் எதிர்கொள்ளப்படும் பொழுது முன்னைய அறிவுக்கட்டமைப்பு அல்லது அனுபவங்களின் திரண்ட வடிவம் மாற்றியமைக்கப்படுகின்றது. இந்த மாற்றத்தை அவர் "தன்னமைவாக்கல்" என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக் கட்டமைப்பை மாற்றிக்கொள்ளாது ஏற்கனவே பழக்கப்பட்ட அனுபவத்துடன் எதிர்கொள்ளப்படும் அனுபவத்தை ஒன்றிணைத்தலைத் "தன்மயமாக்கள்" என்று பெயரிட்டார்.

அவர் குறிப்பிடும் விருத்திப் படிநிலை மட்டங்கள் அல்லது மேம்பாட்டுப் படிநிலை மட்டங்கள் வருமாறு:

(1) புலன் இயக்கப்பருவம் - அண்ணளவாக 0-2 வயது

(2) முன் உளத் தொழிற்பாட்டுப் பருவம் 2-7 வயது

(அ) முன் எண்ணக்கருப்பருவம் 2 -4 வயது

(ஆ) உள்ளுணர்வுப்பருவம் 4-7 வயது

(3) தூல உளத்தொழிற்பாட்டுப் பருவம் 7-12 வயது

(4) நியம உளத் தொழிற்பாட்டுப் பருவம் 12-16 வயது

சிறாரின் மூளை மற்றும் நரம்பியல் சார்ந்த விருத்திக்குரியவாறு அனுபவங்களை ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வாயிலாகவே பொருத்தமான கற்றலை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற கருத்து அவரால் முன்வைக்கப்படுகின்றது. அந்த அந்தப் பருவங்க ளுக்குப் பொருத்தமான விளையாட்டுக்கள், செயற்பணிகள், பன்முக அனுபவ ஒழுங்கமைப்புக்கள் முதலியவற்றிலே கவனம் செலுத்திக் கற்பித்தலை முன்னெடுக்க வேண்டியுள்ளது. மாற்றுவகையான சிறார் கல்வி நடவடிக்கைகள் சோசலிசக் கல்வி முறையிலும், இஸ்ரேலின் கிபூட்சிலும் *(Kibbutz)* வெளிப்படுகின்றன.

சிறாருக்குரிய கல்வி தொடர்பான முன்னேற்றகரமான சிந்தனைகள் மேலெழுந்தாலும் ஆரம்பக் கல்வியிலிருந்தே வெடித்தெழத் தொடங்கியுள்ள பரீட்சை முறைகளும், தனிநபர் போட்டிகளும், கணிப்பீடுகள் வழியாக அந்தஸ்துப்படுத்தும் உளப்பாங்குகளும் மீண்டும் சிறார் மீது அழுத்தங்களையே சுமத்துகின்றன.

கோளமயமாதலும், மூலதனமுடைய பெரும் முதலீட்டாளர்கள் மேற்கொள்ளும் கல்வி நடவடிக்கைகளும் சிறார் கல்வி மீது நவீன அழுத்தங்களை உட்புகுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலரதும் விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள்



ஆறுமுக நாவலர்



விபுலானந்தர்

பின்காலனியச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் கல்விவடிவிலே எவ்வாறு எழுச்சி கொண்டன என்பவற்றைக் கண்டறிவதற்கு ஆறுமுக நாவலரதும் (1822-1879) சுவாமி விபுலானந்தரதும் (1892-1947) சிந்தனைகள் சான்றாகவுள்ளன. காலனிய மறுதலிப்பினதும் எதிர்ப்பினதும் கல்விசார்ந்த செயல் வடிவங்களை அவர்கள் முன்னெடுத்தனர். நாவலரது கல்விச் சிந்தனைகள் சைவ சித்தாந்தக் கருத்தியலையும், சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள் வேதாந்தக் கருத்தியலையும் அடியொற்றி எழுந்தன. அவர்களின் கருத்தியலின் தெரிவு நடைமுறைகளிலே நேரடியான வெளிப்பாடு கொண்டது.

இருவரும் ஆங்கில மொழிப் புலமையுள்ளவர்களாக இருந்த மையால் பழையநோக்குகளையும், கல்வியிற் புதுமைகளையும் உராய்வின்றி ஒழுங்கிணைத்துக் கொண்டனர். நாவலர் நவீன மரபு தழுவிய பாட நூலாக்க முயற்சியை மேற்கொண்டார். சுவாமி விபுலானந்தர் நவீனப்பாட்டுக்குரிய இலக்கியங்களையும் அறிவியலையும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரின் கல்விக் கருத்தியல் சைவசித்தாந்தம் தழுவி மேலெழுந்தது. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மை சைவத்தின் உள்ளடக்கம். அவை நித்தியப் பொருட்களாக விளக்கப்படுகின்றன. பதி என்பது சிவனைக் குறிப்பிடுகின்றது. பசு உயிர்களை யும் பாசம் உயிர்களைப் பீடித்திருக்கும் மலங்களையும் குறிப்பிடு கின்றன. உயிர்கள் அனுபவிக்கும் துன்பங்களை ஒழித்து பேரின்பம் தருவதற்கென இறைவனால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் புரியப்படுகின்றன. உயிர்கள் அநாதி யாக இருப்பதனால் இறைவன்அவற்றைப் படைத்தல் இல்லை. உயிர்களுக்குரிய உடலே இறைவனாற் படைக்கப்படுகின்றது. மலங்களில் இருந்து ஈடேற்றம் பெறுவதற்குரிய வழிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை குறித்துரைக்கப்படுகின்றன. அவற்றை அடியொற்றிக் கடவுள் வழிபாடு, வையத்துள் வாழ்வாங்கு வாழுதல், தொண்டு செய்தல் முதலியவற்றை மேற்கொண்டு உயர் நிலையை அடைவதற்குரிய சாதனமாக ஆறுமுகநாவலர் கல்விச் சிந்தனையைக். கட்டமைப்புச் செய்துள்ளார். "இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது அவரது கூற்று.

சுவாமி விபுலானந்தரின் கல்விக் கருத்தியல் வேதாந்த நெறி தழுவி மேலெழுந்தது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் விரிவடைந்த இந்து மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு வேதாந்தக் கருத்தியல் வலுவூட்டியது. இனம், மொழி, சமூகநிலை என்பவற்றில் வேறுபட்டிருந்த மக்களை ஒன்றிணைப்பதற்கும் வேதாந்தக் கருத்தியல் துணை நின்றது. "மனிதத் தன்மையில் தெய்வத் தன்மை உள்ளடங்கி நிற்கின்றது" என்ற வேதானந்தக் கருத்து அவ்வாறான ஒன்றிணைப்புக்குரிய கருத்தியற் பலம் வழங்கியது.

அனைவரையும் கல்விச் செயற்பாடுகள் வாயிலாக ஒன்றிணைப்பதற்குரிய பலமாக வேதாந்தக் கருத்தியலைச் சுவாமி கண்டார். அந்த ஈர்ப்பு அவரை முழுநேரத் துறவியாக்கியது. வேதாந்தத்திலே குறிப்பிடப்படும் ஞானயோகம், பக்தியோகம், கருமயோகம், ராஜயோகம் அனைத்தும் பற்றிய தெளிவைக் கையளிப்பதற்குக் கல்வியை உன்னத நிலையிலே பயன்படுத்த முடியும் என்ற நிலைக்கு உட்பட்டவராக சுவாமி விளங்கினார். அவர் உருவாக்கிய கல்வி நிலையங்களிலே சாதிமத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடற்ற சமத்துவம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்தியாலயத்திலே தலித்துக்கள் சேர்க்கப்பட்டனர். மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலே இஸ்லாமி யர்களுக்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

கல்வியை நிறுவனமயப்படுத்தி வழங்குதல் வாயிலாகவே சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அறிவைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற அறிவுத் தாராண்மைக் கருத்தியலை இருவரும் கொண்டிருந்தனர். ஆறுமுக நாவலர் வரன்முறையான கல்விச் செயற் பாட்டுக்குரிய வைசப் பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார். சுவாமி விபுலானந்தர் காரைத்தீவு சாரதாவித்தியாலயத்தையும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தையும் நிறுவினார்.

முறைசாராக் கல்வியிலும் இருவரும் கவனம் செலுத்திய வேளை அவற்றினூடாக நாவலர் சைவக் கருத்தியலையும் சுவாமி விபுலானந்தர் வேதானந்தக் கருத்தியலையும் முன்னெடுத்தனர். முறைசாராக் கல்வியில் பிரசங்கமரபு அக்காலத்தில் வலிமையான சாதனமாயிற்று. சமய மறுமலர்ச்சியை மக்கள் மயப்படுத்த அந்த மரபு உறுதுணையாயிற்று. சமயக் கருத்தியலையும் சமூகக் கருத்தியலையும் ஒன்றிணைத்துக் கையளிப்பதற்குரிய செயற்பாடுகளிலே இருவரும் அச்சு ஊடகத்தை வளமாகப் பயன்படுத்தினர்.

ஐரோப்பிய அறிவொளி இயக்கம், மற்றும் மறுமலர்ச்சி ஆகியவை பற்றிய அறிவும் அனுபவங்களும் இருவருக்கும் கிடைக்கப்பெற்றன. அதேவேளை காலனித்துவ நிலவரங்களாற் கைவிடப்பட்டிருந்த கலை இலக்கியங்கள் பற்றிய மறைபொருள்கள் சார்ந்த ஆழ்ந்த அறிவும் இருவரிடத்தும் நிலை பெற்றிருந்தன. ஏட்டுச் சுவடிகள் பலவற்றை ஆறுமுக நாவலர் தேடிப் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டார். சுமார் எண்பது நூல்கள் வரை அவரால் வெளியிடப்பட்டன.

பழந்தமிழர் இசைக்கருவிகளாகிய யாழையும், தொன்மையான தமிழ் இசை வடிவங்களையும் சுவாமி விபுலானந்தர் தேடியறிந்தார். அறிவொளி *(Englightment)* இயக்கத்தினதும் அதன் வழி எழுந்த விஞ்ஞானச் சிந்தனைகளினதும் செல்வாக்கினுக்கு உட்பட்ட சுவாமி யவர்கள் புறவய அணுகுமுறைகளை அடியொற்றிய விஞ்ஞானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் ஈடுபட்டார். பௌதிகவியலின் ஒரு கூறாகிய ஒலியியலை அடியொற்றி யாழின் இயல்பையும் வகைகளையும் விளக்கினார்.

தமிழ்மொழியின் ஆளுமை வளர்ச்சியையும் கல்வியின் விரிவாக்கத்தையும் இருவரது நடவடிக்கைகளும் ஒன்றிணைத்தன. கல்வியின் உன்னத நோக்கங்களாகப் படைப்பாற்றல் மலர்ச்சியையும், புத்தாக்கங்களையும் இருவரும் வலியுறுத்தினர். நாவலரின் ஐம்பெரும் புத்தாக்கங்கள் வருமாறு.

(1) தமிழில் முதன்முதலாகப் பிரசங்கம் என்ற கலையை உருவாக்கியமை.

(2) கட்டுரை இலக்கியத்தைத் தமிழில் உருவாக்கியமை.

(3) தமிழில் பாடநூல்களை எழுதியமை.

(4) தமிழ் வசன நடையிற் குறியீட்டு முறையைப் புகுத்தியமை.

(5) சைவ ஆங்கிலப் பாடசாலை என்ற அமைப்பைத் தோற்றுவித்தமை.

சுவாமி விபுலானந்தர் மேற்கொண்ட புத்தாக்கங்களை அடுத்து நோக்கலாம்.

(1) கலைச் சொல்லாக்க முயற்சியைத் தமிழில் முன்னெடுத்தமை

(2) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் திட்பநுட்பங்களை உருவாக்கியமை

(3) தரவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ் வகைகளை உருவாக்கியமை

(4) அநாதைச் சிறுவர்களுக்கான வதிவிடக் கல்வி இல்லத்தை வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தமை

(5) சமநிலைக் கலைத்திட்டத்தை சிவானந்தா வித்தியாசாலையில் அறிமுகம் செய்தமை

இருவரும் தமது ஆக்க மலர்ச்சியைக் கவிதைகள் வாயிலாக வெளியிட்டு மாணவருக்கு வழிகாட்டினர். எழுத்தறிவு பரவலாக வளர்ச்சியடையாத காலகட்டத்தில் அறிவுக் கையளிப்பில் இசைப்பா வின் முக்கியத்துவம் இருவராலும் உணரப்பட்டது. எடுத்துக்காட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமசுவாமி மீது சாவேரி இராகத்திலும் ஆதிதாளத்திலும் நாவலர் புனைந்த கீர்த்தனை ஒன்றைக் குறிப்பிடலாம்.

பல்லவி : உன்னிருபாதந் தெரி சனஞ்செய்த பின்னரே யுவகைக்
கடலு லாழ்ந்தேனே.

அனுபல்லவி : தன்னிகரில் கதிரை தன்னில் வாழும் போதனே
சற்குண்ய பரிபூரண சண்முகநாதனே (உன்)

சரணங்கள் : அதி நடு விறுதி நீங்கினோய் - சித்தோ
டசித்தாம் பிரபஞ்ச முற்றுந் தாங்கினோய்
சோதி வடிவாய் நின்ற சூலபாணி புதல்வா
சூரனாதி மூவரைத் தொலைத்தருளும் முதல்வா (உன்)
சனன மரணத்துயரத் தாழ்கின்றேன் - இன்னுஞ்
சஞ்சலச் சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பாரமுஞ் செய்யா தெனக்குருகுவா
யேதிலாத முத்தியின்பந்த தருவாய் (உன்)

அருளுங் கருணைக் கடலல்லையோ - முன்ன
ரமரரிடரகற்ற வில்லையோ
ஒரு விலெனது நோயை யோட்டுதலருமையா
உன்னையே நம்பி வந்தேனுக்குருகாமை
பெருமையா (உன்)

சுவாமி விபுலானந்தரின் இசைப்பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

நீநீ - சாச-ரீ-நீலவானிலே

நீசரி-காக-மா-நிலவுவீசவே

மாம-பாப-தா-மாலைவேளையே

மபத-நீநி-சா-மலைவுதீருவோம்

சாச-ரீரி-சால நாடியே

சரிக-மாம-பா-சலதிநீருளே

பாப-தாத-நீ-பாலைபாடியே

பதநி-சாச-ரீ-பல ரொடாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் மேற்கொண்ட மரபுவழி இசையின் மீட்டுருவாக்கம் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான பண்பாட்டுக் காப்பரணாகவும் அமைந்தது. காலனித்துவத்தை மறுதலித்து இருவரும் மேற்கொண்ட கல்வி நடவடிக்கைகள் வருமாறு:

(1) தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமை. 1848ஆம் ஆண்டிலே நாவலர் தாம் ஆரம்பித்த சைவ வித்தியாசாலையிலே தாய்மொழியைப் பயிற்று மொழியாக்கினார். யாழ்ப்பாண இளைஞர் கழகக் கால்கோள் விழா கீரிமலையில் நிகழ்ந்த வேளை சுவாமிகளும் அதே கருத்தை வலியுறுத்தினார்.

(2) கட்டணம் அறவிடப்படாது கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டும் என்ற திட்டத்தை 1846ஆம் ஆண்டிலே நாவலர் ஆரம்பித்து வைத்தார். சுவாமி அவர்களும் தாம் ஆரம்பித்த பாடசாலைகளிலே இலவசக் கல்வியை ஏற்படுத்தினார்.

(3) பாடத்திட்டத்திலே சுதேச உள்ளடக்கம் இடம்பெறல் வேண்டு மென்ற கருத்தை இருவரும் வலியுறுத்தினர் நாவலரின் பாலபாட ஆக்கம் சுதேச உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. மேலைத்தேய அறிவியலை சுதேச அறிகை மரபுகளோடு ஒன்றிணைத்து சுவாமி கற்பித்தார்.

கல்வியின் நிறைவான நோக்கமாக நல்லொழுக்கம் அமையப் பெறுதல் வேண்டும் என்ற பொதுக் கருத்தியல் இருவரிடத்தும் காணப்பட்டது. ஒழுக்கம் பொதுநல நோக்கிலிருந்து மேலெழுதலை நாவலரின் பின்வரும் வசனம் சுட்டிநிற்கின்றது. "தன் பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனு பவிப்பான். அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது"

கல்வியின் இலக்கு நல்லியல்பு கொண்ட மனித ஆக்கம் என்பதையும் நல்லொழுக்கக் கட்டுமான ஆக்கம் *(Character Building)* என்பதையும் சுவாமி தெளிவுபடுத்தினார். அக்கருத்தியலின் வளர்ச்சியில் இன நல்லிணக்கம், பண்பாட்டு நல்லிணக்கம், சமய நல்லிணக்கம் முதலியவை வலியுறுத்தப்பட்டன. அந்த நிலைப் பாட்டுக்கு வேதாந்த நெறியே பொருத்தமானதாக இருத்தலையும் அவர் கண்டறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடும் நடைமுறையும் இருவரதும் கல்விச் செயற்பாடு களிலே இணைந்திருந்ன. எளிமையிலிருந்து சிக்கலுக்கு நகர்ந்து செல்லல், காட்சிப் பொருட்களிலிருந்து அருவப் பொருட்களுக்கு நகர்ந்து செல்லல் என்ற கற்பித்தல் முறையை இருவரும் பயன்படுத் தினர். நாவலரின் பாலபாட ஆக்கமும் சைவ வினாவிடையும் எளிமை தழுவிய கற்பித்தலைப் புலப்படுத்தும் சுவாமிகளின் "வெள்ளைநிற மல்லிகையோ" கவிதையாக்கம் அவர் பயன்படுத்திய எளிமை வடிவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதேவேளை இருவரும் உயர்ந்த வாசிப்புக்குரிய சிக்கலான மொழிநடைகளையும் பயன்படுத் தினர். அந்த நடவடிக்கைகள் அறிவுக் கையளிப்பின் பன்மைத் தளங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது, அறிவுக் கையளிப்பு ஒற்றைப் பரிமாணம் கொண்டது அன்று என்பதை இருவரது செயற் பாடுகளும் துல்லியமாகப் புலப்படுத்துகின்றன. மேலைப்புல அறிவுச் செல்வத்தைத் தாய்மொழித் தளத்தில் நின்று நுகர்தலும், வெளிப் படுத்தலும் இருவரதும் கல்வி நோக்கில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்புக்குரிய கல்விக் கோட்பாடு

இதுவரை கல்வியியல் தொடர்பான மேலைப்புலக் கோட்பாடுகளும் மாற்றுக் கருத்துக்களும் கூறப்பட்டன. இந்நிலையில் எங்களுக்குச் சொந்தக் கருத்து எதுவும் இல்லையா என்ற கேள்வி எழலாம். கல்வியியலை உயர்நிலைகளிலே கற்பிப்போர் மேலைப் புல அறிவாதிக்கத்துக்கு உட்பட்டு தன்னிலைக் கருத்தற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இது ஒருவகையிலே பின் காலனித்துவத்தின் தோற்றப்பாடு என்றும் கூறலாம்.

இந்தியப் பின்புலத்திற் காந்தியும், தாகூரும் வெளியிட்ட கல்விக் கருத்துக்களில் தேசிய முதலாளிய வலுவூட்டல்கள் உட்பொதிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நடப்புநிலையில் எட்டப்பட முடியாத கல்வி தொடர்பான எண்ண முதல்வாதம் அவர்களிடத்து மேலோங்கியிருந்தமையால் தம்மைத்தாமே வலுவிழக்கச் செய்யும் விசைகளை அவர்களது கல்விக் கோட்பாடுகள் கொண்டிருந்தன.

இந்நிலையிற் கல்வி தொடர்பான எமது அவதானிப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன.

(1) அரசியல் வர்க்கச் சார்புடன் தொழிற்படும் இயந்திரமாக்கக் கல்விச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

(2) சமூக நிரலமைப்பைத் தொடர்ந்து தக்க வைப்பதற்குரிய நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வலுத்தொகுதியாகக் கல்வி நிறுவனங் கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(3) ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான கட்புலனாகா யுத்தத்தை கல்விச் செயற்பாடுகள் நாகரிகமாக நிகழ்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) மாணவர்கள் நெருக்கடிகளையும் தோல்விகளையும் சந்திக்கும் பொழுது கல்வி நிறுவனங்களின் கையாலாகத்தனம் வெளிப்படுகின்றது.

(5) கல்வியிலே சமத்துவம், சமசந்தர்ப்பம், இலவசக்கல்வி முதலியவை நடப்பு நிலைதழுவாத மாயவித்தை எண்ணக்-கருக்களாகவேயுள்ளன.

(6) பல்தேசிய நிறுவனங்களின் தேவைக்கேற்ப கல்விச் செயற்பாடுகள் செதுக்கியெடுக்கப்படுகின்றன.

(7) கல்வித்தர மேம்பாட்டுத் திட்டங்களிற் சமூகப் பிரக்ஞையும் சமூகத்துக்கான பொறுப்பியமும் சேர்க்கப்படாத ஒற்றை வழிப்-போக்கே மேலோங்கியுள்ளது.

(8) குரூரமான அகமனவோங்கல் (Ego) கல்வியின் மறை பொருளாக வளர்க்கப்படுகின்றது. இதனாற் கற்றவர்கள் சுயநலப் போக்குகளுக்கு அடிமையாதல் வலுவூட்டப்படுகின்றது.

(9) பகுத்தறிவற்ற வர்த்தக நுகர்ச்சிக்குக் கல்விச் செயற்பாடுகள் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

(10) கல்வி உருவாக்கும் சமூக சமத்துவப் பிறழ்வுகள் மேலும் மேலும் விரிவடைந்து செல்கின்றன.

(11) சமூகத்தில் வாய்ப்பு வசதிகள் மிக்கோருக்கு மேலும் வாய்ப்பு வசதிகளை வழங்கும் சாதனமாகக் கல்விச்செயற்பாடு மீண்டெ-ழுந்து செயற்படுகின்றது.

(12) ஆசிரியத்துவத்தின் செயற்பாடுகளை வலுவிளக்கச் செய்த லும், நிர்வாகப் பொறியை வலுப்படுத்துதலும் கல்விச் செயல் முறைகளிலே முன்னெடுக்கப்படுகின்றன.

(13) பன்முகப்பட்ட இனத்துவ அடையாளங்களை நிராகரிப்பதற்கும், அழித்து விடுவதற்கும் கல்வி கருவியாக்கப்படுகின்றது.

(14) இருப்பை மாற்றியமைக்கும் கருத்தியல் உபாயங்களுக்குப் பாட உள்ளடக்கங்களில் இடமளிக்கப்படுதல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) மனித அவலங்களைக் கணியப்படுத்தவோ, தீர்வுகளை முன்வைக்கவோ முடியாத அவலமான நிலைக்குக் கல்வி உள்ளாக்கப்பட்டுள்ளது.

சமூகம் சிக்கலான அமைப்பியல் வடிவானது. சமூகத்தளத்திலிருந்து எழும் கல்வியும் அளவிலடங்காக் கூறுகளைக் கொண்டிருப்பதுடன், அளவிலடங்காப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையிற் சமூகத்தையும் கல்வியையும் வெறும் "ஒற்றை வடிவிலே" புரிந்துகொள்ள முடியாது. சமூகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் ஒடுக்கு முறைக்கருத்தியலை உடைப்பதற்குரிய மாற்று வலுக்களைக் கலைத்திட்டத்திலே முன்னெடுக்க வேண்டியுள்ளது. கல்வியினதும் கலைத்திட்டத்தி னதும் நடுவன் குவிப்புக்களைத் தகர்ப்புக்கு உள்ளாக்க வேண்டிய தேவை சமகாலத்தில் மேலோங்கியுள்ளது. ஒடுக்கப்பட்டவர்களைத் தகுதியுடையவர்களாக மாற்றும் கருத்தியலை நேர்க்கலைத்திட்டச் செயற்பாடுகள் வாயிலாகவும் மறைகலைத்திட்டச் செயற்பாடுகள் வாயிலாகவும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

சமூகத்தின் மேலோங்கியவர்களாற் கல்வி பற்றிய கொள்கை வகுப்பும் திட்டமிடலும் மேற்கொள்ளப்படுவதனால், ஒடுக்கப்பட்டவர்கள் என்றுமே நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அடிப் படைக்காரணிகளை நோக்காது துணைக்காரணிகளை உருப்பெருக் கிக் காட்டல் அவர்களினாற் பொதுவாக மேற்கொள்ளப்படும் அணுகுமுறையாகின்றது.

நாடுமுழுவதற்கும் பொதுவான கலைத்திட்டம், பொதுவான பரீட்சைகள், பொதுவான மதிப்பீட்டுத் திட்டம் முதலியவை அதி காரத்தினதும், மேலாதிக்கத்தினதும் கல்வி சார்ந்த வடிவங்களாகும். இவற்றைத் தகர்ப்புக்கு உள்ளாக்காது கல்வியிலே சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது. இவற்றால் தேசிய இனங்களது அடையாளங் களும் தனித்துவங்களும் அழிக்கப்படுகின்றன. பொதுவான சொற்களஞ்சிய வடிவங்களை முன்வைக்கப்படும் நடவடிக்கையால் பிரதேசங்களில் நிலவும் தனித்துவமான சொற்களும் வழங்குகளும் அழிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. (அண்மையில் நடைபெற்ற ஒரு தேசியப் பரீட்சையில் கிரிக்கட் ஆட்டத்தைத் துடுப்பாட்டம் என்று எழுதிய மாணவர்களுக்குப் புள்ளி வழங்கப்படாமை குறிப்பிடத் தக்கது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளவாத்தியத்தோடு இணைந்தது தாளவாத்தியம் என எழுதியவர்களுக்கும் புள்ளி வழங்கப்படவில்லை)

கலைத்திட்டத்திலும், பொதுப் பரீட்சைகளிலும் கல்விசார்ந்த நேர்மையுடைய நெகிழ்ச்சிப் பாங்கினை ஏற்படுத்தாது கல்வியிலே சமத்துவத்தை நிலைநிறுத்த முடியாது. தேசிய இனங்களினதும், தனிநபர் ஆளுமையினதும் அடையாளங்களைப் பேணி வளர்ப்பதற்குரிய கலைத்திட்ட ஏற்பாட்டில் பன்முகப்பாட இணைப்புகள் அவசியமாகின்றன.

பொது மீத்திறன் *(General Giftedness)* என்ற மையம் தகர்க்கப்பட வேண்டியுள்ளது. இந்த மையம் கல்வியின் அதிகார வடிவமாகும். இதனைவிடுத்து ஒவ்வொரு மாணவரிடத்தும் உட்பொதிந்துள்ள தனித்துவ மீத்திறனை வளர்ப்பதற்குரிய பன்மைநிலைக் கலைத் திட்டத்தை *(Plural Curriculum)* பாடசாலைகளில் அறிமுகப்படுத்தும் பொழுதுதான் கல்விச் செயற்பாட்டை மேலாதிக்கத்திலிருந்தும் ஒடுக்கு முறையிலிருந்தும் விடுவிக்க முடியும்.

ஒன்றுக்கு மேற்பட்ட அணுகுமுறைகள் கற்பித்தலிலும் பரீட்சை களிலும் உண்டு என்ற பன்மை நோக்கை அங்கீகரிக்காதவிடத்துக் கல்வியிலே சமத்துவம் என்பது பேச்சளவில் மட்டும் கால்கோள் கொண்டிருக்கும். பொதுப் பரீட்சைகளில் மேற்கொள்ளப்படும் பல்தேர்வு வினாக்கள், அமைப்புக் கட்டுரைகள், முதலியனவும் அடிமைப்படுத்தும் கல்வி அதிகாரத்தின் வடிவங்களாகும். இந்த அமைப்புக்களாற் சிறைப் பிடிக்கப்படாத மாணவர்களின் ஆற்றல் கள் கவனிப்பாரற்று வீணடிக்கப்பட்டு விடுகின்றன. தேசிய பொதுப் பரீட்சைகளுக்கு இழப்பீடு செய்யக் கூடிய மாற்றுப் பரீட்சைகளை வைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படா திருத்தல் மேலாதிக்கப் பண்பை மேலும் புலப்படுத்துகின்றது.

பரீட்சைகளில் அதிக புள்ளிகளை ஈட்டிய திரட்டிய விளக்கத்தில் (Total Explanation) பலகுறைபாடுகள் காணப்படுகின்றன. அவை மேலெழுந்த வாரியான கல்விசார்ந்த கதையாடலாக அல்லது அதிகார உரையமாக அமைகின்றன. அனைத்து ஆற்றல்களிலும் திறன்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர் மேம்பட்டவர் அல்லர் என்பதை முதற்கண் நினைவிற்கொள்ளல் வேண்டும். பரீட்சை முறையில் உட்பொதிந்துள்ள தவறுகளை வைத்துக் கொண்டு மாணவரை ஓரங்கட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலும் கல்விச் செயல்முறை தகர்ப்புக்கு உள்ளடக்கப்படுதலே சமூக நீதியானது.

புறநிலைப்படுத்திய தேர்வு (*Objectivetest*) என்பதில் உள்ளடங்கிய பொய்மையைப் பலர் அறிந்து கொள்வதில்லை. அவை மேலாதிக்கத்தின் வடிவமாக அமைந்து, குறிப்பிட்ட ஆற்றல்களை இனங்காணவும் குறிப்பிடப்படாத ஆற்றல்களை ஓரங்கட்டிவிடவும் வல்ல வகையிலே உருவாக்கப்பட்டுள்ளன. புறநிலைத்தருக்கம் வன்முறையின் வடிவமாகின்றது. அதுவே கருத்தாடலுக்குரிய ஒரேவழி என்று வாதாடுதல் வன்முறையின் பிறிதொரு பரிமாணமாகின்றது.

பொதுப் பரீட்சைகளின் "இரகசியத்தன்மை" என்பதும் அதிகாரத்தின் பிறிதொரு வடிவமாகும். ஒவ்வோர் அலகையும் ஒவ்வொரு மாணவரும் செம்மையாக விளங்கிப் படித்ததை உடனுக்குடன் மேற்கொள்ளும் கணிப்பீட்டுக்களின் வாயிலாக அறிந்துகொள்ளலாம். இந்நிலையில் கற்கைநெறி முடிவில் வைக்கப்படும். இறுதிப் பரீட்சை தேவையற்றதாகிவிடும். ஒவ்வோர் அலகையும் ஒவ்வொரு மாணவரும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளாது கற்கைநெறி முடிவில் "பயமுறுத்தும்" பரீட்சைகளை வைப்பதும், இரகசியத்தன்மை என்பதைப் பேணுவதும் அதன் முடிவுகளைப் பூதாகரமாக்கிக் காட்டும் உளவியல் அழுத்தங்களைப் பிரயோகிப்பதும், மேலாதிக்க அதிகாரப் பிரயோகத்தின் துல்லியமான வெளிப்பாடுகளாகும். அதிகாரத்தின் வடிவமாக இருக்கும் பரீட்சையே அதிகாரமாக்கப்பட்டுள்ளது. ஓரங்கட்டப்பட்ட மாணவர் மீது மேலும் அழுத்தங்கள் சுமத்தப்படுகின்றன.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

புதிது புதிதாக மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் அனுகூலம்மிக்க சமூக வகுப்பினருக்கே மேலும் அனுகூலங்களை வழங்குகின்றன. கல்வி மேலும் மேலும் வர்த்தகமாக்கப்பட்டு வரும் நிலையில் கொள்வனவு வலுமிக்கோரே தரமான கல்வியை நுகர்ச்சி செய்யும் அனுகூலங்களைப் பெறுகின்றனர்.

Class No:
Acc No:

புதிய சந்தைப் பொருளாதாரம், நுகர்ச்சிப் பொருளாதாரம் மற்றும் உலகமயமாக்கல் நடவடிக்கைகள் முதலியவை கல்வியிலே சமத்துவமின்மை என்ற இடைவெளிகளை மேலும் விரிவாக்கிய வண்ணமுள்ளன. கல்வியில் மறைமுகமான நிராகரிப்பு மிகுந்த அவதானத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாடுகளை விளக்குவதற்குக் கல்வியியலிலே தற்பொழுது பயன்படுத்தப்படும் சொற்கள் போதுமான வலுவினைக் கொண்டிராத நிலையிலே புதிய புதிய சொற்களை ஆக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

கல்வியில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் மேல்மட்ட மெழுகல் சீர்திருத்தங்களாக இருப்பதனால், அவற்றால் அடிப்படை மாற்றங்ளை மேற்கொள்ள முடியாத அவலமான நில்லைகள் காணப் படுகின்றன. இனத்துவ அடிப்படையிலும், பண்பாட்டு அடிப்படை யிலும், மொழி மற்றும் சமய அடிப்படையிலும் "பன்மை நிலையே" உலக நாடுகள் அனைத்திலும் காணப்படுகின்றன. இவ்வாறான பன்மை நிலையைக் கருத்திற்கொள்ளாத "ஒற்றைவழி" சீர்திருத்தங்கள் ஆக்கிரமிப்பின் வடிவங்களாகவே மேலெழுகின்றன.

கல்வி என்பது சமூகத்தின் அடிநிலை அமைப்புடன் இணைந்த மேலமைந்த வடிவமாகையால், சமூகத்தின் ஒடுக்குமுறை அடிக்கட்டு-மானத்தைத் தகர்க்காது சமத்துவத்தையும் சமநீதியையும் ஏற்படுத்த முடியாது. இந்நிலையில் சமூகத் தகர்ப்புக்கான வலுக்கஎளயும் விசைகளையும் ஒன்றிணைக்க முயலும் ஆரம்ப நடவடிக்கையை மேற்கொள்ளும் பொழுதே உடனடியாகக் கல்வியில் மாற்றங்கள் முகிழ்த்தெழத் தொடங்கும். இந்நிகழ்ச்சி "முன் அருட்டல்" என்று கூறப்படும். இந்த நிகழ்ச்சியே இன்றைய உடனடித் தேவை யாகவுமுள்ளது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 418



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

418

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 418

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர்.

இவர் கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது.

தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது. இன்றுவரை தமிழ்சார்ந்த அறிவுலகில் சபா. ஜெயராசா உயிர்ப்புமிகு புலமையாளராகவே திகழ்கின்றார்.

ISBN 978-955-685-000-0

**சேமமடு பதிப்பக**

**விலை: 560.00**

EPAB/02/18578

…BCN: 2011-09-01-101

PBD
473020006
KALVI KODPADUKALUM...
01-11-2018
Rs. 560.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org